விநாயகன்றுணை.

# அநுபவாநந்த தீபிகை.

(முதற்றிருமுறை)

இஃது

ஸ்வகியாநந்த யோகிகளெனும்

பொதிகைமலைச்சித்தர் பொன்னடிக்காளாகிய

ஞானாநந்த, நாதமுனிஸ்வாமிகளவர்கள்மாணாக்கரும்

பெங்களூர் இராயபஹதூர்

ஆ-நாராயணசாமி முதலியாரவர்கள்

திருவெவ்வுளூர்

திருவூர் இராஜா அவர்கள்

ஹைஸ்கூல்களில் தமிழ்ப்பண்டிதருமாயிருந்து

பிறகு

சென்னைமாநகரம் ஹிந்துதியலாஜிகல் பாடசாலையில்

அத்வைதப்பிரசங்கத்தை நடாத்திவந்தவருமாகிய

**ஸ்ரீமத். ல-நாராயணசாமிநாயகர் அவர்களால்**

இயற்றப்பட்டது.

இதற்கு௸ நாயகரின்பிரதம மாணாக்கரும்,

திருவெவ்வுளூர் திருவூர் இராஜா அவர்கள்

ஸ்கூலில் தமிழ் உபாத்தியாயருமாயிருந்து

பிறகு

மேல்கண்ட ஹிந்துதியலாஜிகல் பாடசாலையில்

தற்காலம் அத்வைதப்பிரசங்கம் நடத்திவரும்

**ஸ்ரீமத். பு-ஜயராம்பிள்ளை அவர்களால்**

பதவுரை இயற்றப்பட்டு

௸ நூலாசிரியரால் பார்வையிடப்பட்டு

சாதுஜனங்கள்செய்த பொருளுதவியால்

சென்னை

பூலோகவியாசன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1912

Copy-Right Resarved.

# விளம்பரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அனுபவாநந்ததீபிகை முதற்றிருமுறை மூலம் | 0 | 4 | [illegible] |
| 2. | ஷெடி யின் மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| 3 | ஷெடி இரண்டாந்திருமுறை குருவருட்பேறு | 0 | 4 | |
| 4. | ஷெடி மூன்றாந்திருமுறை பராத்பரவிளக்கம் | 0 | 12 | 0 |
| 5. | தேசிகநாராயணர் திருவருட்டிப்பா | 0 | 3 | 0 |
| 6. | சற்குருநாராயணஸ்தவம் | 0 | 2 | 0 |
| 7. | பாலாமிர்தபோதகம் வித்தியாவித்யா சரித்திரம் | 0 | 4 | 0 |

(இவைகள் விற்குமிடங்கள்.)

1. சென்னை ரிப்பன்பிரஸ் தம்புசெட்டிவீதி
2. மேற்படி கலாரத்நாகரம் பிரஸ் மேற்படி வீதி
3. மேற்படி கோமளீஸ்வரன்பேட்டை சச்சிதாநந்தம் பிரஸ்
4. மேற்படி பெத்துநாய்க்கன்பேட்டை ஷண்முகராயன்தெருவு 41-வது நெம்பர்வீடு ஸ்ரீமதி சுப்பம்மாள் அவர்களிடம்
5. சென்னை கோவிந்தநாய்க்கன் வீதி 202 நெ காபிமண்டி சா. துரைசாமி பிள்ளை யவர்களிடம்
6. சென்னை "பூலோகவியாஸன்" பிரஸில்
7. சிவன்வாயல் கிராமம் பு ஜயராமப்பிள்ளையிடம் திண்ணனூர் போஸ்டு
8. கிளாம்பாக்கம் கிராமம் சாமிமுதலியார் ஸ்ரீ வேலுப்பிள்ளை யவர்களிடம் பேரம்பாக்கம் போஸ்டு
9. கொளத்தூர் கிராமம் கணக்கு இரத்தினப்பிள்ளை யவர்களிடம் ஸ்ரீபெரும்பூதூர் போஸ்டு
10. சென்னை குளோ பிள்ளையார்கோவிலிலிருக்கும் பூ. பாலம்பாள் அம்மாளிடம்
11. சென்னை ராயப்பேட்டை நல்லண்ணமுதலிவீதி 24 - வது நெம்பர் வீட்டிலிருக்கும் கோ முனிசாமிப்பிள்ளையவர்களிடத்தில்

ஓம்-தத்-சத்.

## ஸ்ரீமத்-தேசிக நாராயணர்

# விஜயம்.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த (விந்துநாதகலாதீத) சொரூபரான (தேசிக ஆதி) நாராயணரே ஜனகசக்கிரவர்த்தியாய்ப் பிறந்து சுகப்பிரமரிஷிக்கு ஞானோபதேசஞ்செய்து, பிறகு கிருஷ்ணமூர்த்தியாய் அவதரித்து அருச்சனனுக்கு ஆன்மாநுபவ முறைமாறு பகவற்கீதை, உத்திரகீதைகளை யுபதேசித்துப் பிறகு முனிவர்களுக்கு அரசாகிய அகத்தியமுனிவராகி சங்கரருக்கு மந்திரலய ஹடராஜயோகங்களையும் சித்திமுத்திகளைப்பெறும் உபாயங்களையும் உபதேசித்துப் பிறகு திருப்பெருந்துறையில் சிவவேடப் பண்டாரவடிவமாய் எழுந்தருளி மாணிக்கவாசக சுவாமிகளுக்கு சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப்பிராப்தியுண்டாகுமாறு சிவஞானபோதம் உபதேசித்துப், பிறகு தத்துவராய சுவாமிகளாக அவதரித்து உலகுய்யுமாறு பாடுதுறை அடங்கல் முறைகளைச்செய்வித்துப் பிறகு ஜகந்நாதத்திலிருந்த இங்கிலீஷ்காரரிட சுபாய்கள் பட்டாளத்தில் ஜமேதாராயிருந்த இலக்ஷ்மமைய நாயகரென்பவருக்கு இராயவேலூரில் சென்ற சாதாரண வருஷத்திற்குச் சரியான 1851ஸு ஜனவரிமாதத்தில் தேசிக ஆதிநாராயணசாமி நாயகரெனப் பெயர்பூண்ட ஜகத்குருவாக அவதாரஞ்செய்தனர்.

அவரிட ஒன்பதாவதுவயதில் தந்தை பரமபதம் அடைந்தார். இவர் தேகபந்துக்களைத்துறந்து, ஆன்மபந்துக்களை இரந்து, தன்சொந்தக் கிருத்தியத்தால் தாயைப்புரந்து, ஒருவர்தயவுக்கெதிர்பாராது சிறந்து வெளிசஞ்சாரம் செய்தனர். ஒரு ஸ்ரீமத் இராமசாமிநாயுடு காரிடமிடாகிய சுப்பையசெட்டியாரி

டம்சேர்ந்து அவர் உத்திரவால் அவ்விருவரிடம் தெலுங்குபா ஷையைக்கற்று சிறிதுதமிழும் அப்பியாசஞ் செய்துவந்தார்.

அத் தெலுங்குபாஷையில் வேதாந்தநூல்கள் அதிகப்கிட் டாதென தமிழும் சமஸ்கிருதமுங்கற்று வேதாந்த விசாரணை செய்துவந்தனர் 1867௵ முதலில் ஆற்காடுக்கடுத்த வேலூரில் சிலகாலம் வசித்துவந்தார். ஆங்கொருவைணவாசிரியர் தமசிடக் குழாங்கட்கு சமாஸ்ரயணம் (முத்திரைதானம்) செய்துக்கொண் டிருந்தசமயத்தில் இவர் ஆங்குசென்று, அச்சனக்கூட்டத்தைப் பார்த்துச்சிரித்து, தலைமீது கைகூப்பிநின்று கூத்தாடி "போடித லுமொட்டி புஜமுனுகாலிஸ்தே வேதுமுத்தி லேது" என்று உரத்தகுரலாய்க் கூச்சலிட்டார். அந்தநேரர்க்குங் கோபா மூண்டு தடிகொண்டடிக்க ஓடிவர இவர் அவ்விடம்விட்டு ஓடா மல் தைரியத்துடன் சிரித்துக்கொண்டு நின்றிருந்தார். இதைக் கண்ணுற்ற கருணாநிதியாகிய பொதிகைமலைச்சித்தர் பொன்னடிக் காளான ஞானாநந்த நாதமுனிசுவாமிகள் எழுந்தோடிவந்து, இச் சிறுவரைத்தான் சேரவணைத்துக்கொண்டு; அடிக்கவந்தவர்களை யடிக்கவொட்டாமல்தடுத்து, சிறுவரைத் தன்வீட்டுங் கழைத் துச்சென்று புத்திமதிகூறினார். பிறகு இவர் சரிதையைக்கேட்டு ஆநந்தமடைந்து "நானுஜீவனாதக் கட்டளையை எடுத்துப்பாடஞ் சொல்லிவைத்தார். அன்றுமுதல் இச்சிறுவர் தமிழ் தெலுங்கு சமஸ்கிருத பாஷையிலுள்ள சகல வேதாந்த சித்தாந்த நூல் களைச் சந்தேகமறத் தாமேகற்றுணர்ந்தார். 1871 வருஷத்தில் பெங்களூருக்குச்சென்று அங்கு வசித்திருந்தார். அவ்விடத்தில் வேதாகமங்களைக் கற்றுணர்ந்த ஒரு பிராமணர் இந்துமதத்தை வெறுத்து, மகம்மதியமதத்திற் புகுந்து, மகம்மதியராகி, அம்ம தத்தைப்பற்றிக்கூறும் "குரான்" முதலிய வேதநூல்களைவாசித்து, அம்மதமே சிறந்ததென்றும் இந்துமதம் இழிவுடையதென்றும் பிரசங்கித்துவந்தார். அப்பிரசங்கத்தில் இவ்வாதி நாராயணதே சிகர்சென்று, அப்பக்கிரியின் எதிர்நின்று, ஓய் பக்கிரி! தான் கெட்டதுமல்லாமல் பிறரையும் கெடுக்கப்பார்க்கும் மூக்கறையன் கதையைப்போல் நீர் உபதேசிக்கிறீரே? உம்முடைய தெய்வத்தின் சொரூபலட்சணமும், அதில் தேகாதிபிரபஞ்சம் தடித்தவிதமும், ஜீவர்கள் பந்தப்பட்டவிதமும், அச்சீவர்கள் பந்தத்தினின்று

விடுபட்டு மோசநடையையும் விதத்தையும் சுருதியுக்தி யனுபவ
மொக்க கூறுவீராகில் நானும் உம்மிடமதத்தில் சேர்ந்துவிடுகி
றேனென்றார்.

அப்பிரசங்கியாரும் மற்றப்பக்கிரிகளும் பதில்சொல்லத்
தோன்றாமல் மயங்கி, நாளையதினம் சந்தைவீதியில் நடக்கும்பிர
சங்கத்தில் பதில்கூறுவதாய்க் கூறினார்கள் மறுநாள் அம்மகம்ம
திய பக்கிரிகள் ஒன்றாய்ச்சேர்ந்து கடைவீதியில் பிரசங்கிக்க சபை
சேர்த்துவிட்டு, இவர் இருக்கும் இடத்திற்கு கோச்சுவண்டியு
டன் ஒருபக்கிரிவந்து இவரை அவ்வண்டியி லேற்றிச்சென்று
பிரசங்கசபையில் நிறுத்தினார்கள். இவ்வாசிரியர் ஒருநர்சகாயம்
எதிர்பாராமல் தனியே நின்று எதிரிட்டுக்கேள்விகேட்கத் தொடங்
கினார் அதாவது. 1. கடவுளின் சொரூபம்-தடத்தம் பந்தம் விமு
க்தி என்று நேற்றுகேட்டகேள்விகளுக்கு விடையென்ன? 2 மகம்
மதியமதத்தில் விக்கிரகபூஜை செய்யக்கூடாதென்பதோடு, வீட்
டில்படம்முதலியவைகளை மாட்டிவைத்தால் அப்படங்களின் உரு
வம்பார்ப்பவர்மனதில்பதிந்து, நினைப்பூட்டுமாதலால் வீட்டில்படம்
மாட்டப்படாதென்னும், நீங்களே மொகரம்பண்டிகையில்பஞ்சா
விக்கிரக பூஜைபண்ணுவதற்குக் காரணமென்ன? 3 நீங்கள்
கிறிஸ்து மதத்தில்கூறும் விதங்கள்யாவும் ஒப்பிக்கொண்டீர்,
அம்மாதிரி எழுதிவைத்திருக்கும் குரானையும் நீங்கள் வாசித்து
இருந்தும், அவர்களோடுசேராமல் நீங்கள் நீங்கியிருப்பதற்கு
காரணம் என்ன? 4. திராட்சைரசமாகிய ஒயினைக்குடிப்பதும்,
வேண்டாமென்ற பன்றியின் மாமிசத்தைப்புசித்தும், சுன்னத்
தென்னும் தீட்சையைக் கைவிடுவதும், மகம்மதியை நபிநாயக
மாக ஏற்றுக்கொள்ளாதிருப்பதும் கிறிஸ்தவர்கள்மீது குற்ற
மென்று அவர்களை நீக்கினீர்களோ அல்லது வேறோ? 5. மகம்
மதியரால் சிருஷ்டிக்கத ஜனங்கள்யாவரும் ஒரேஜாதியெனும் நீங்
கள் இந்துக்களைப்போல ஷேக்-சைத்-மொகல்-பட்டாணி-
என்று நான்குஜாதிகள் ஏற்படுத்திக்கொண்டு உயர்வு தாழ்வைக்
காட்டி, அவர்களோடு சம்பந்தஞ்செய்யாதிருப்பதற்கு காரண
மென்ன?

6, அநாதியான இந்து மதக்கொள்கைகளை நேராக அநுஷ்
டித்தால் நாம் புதிதாக ஏற்படுத்திய மகம்மதிய மதத்திற்கு ஹா

னிவருமென்று சில காரியங்களை இந்து மதத்திற்கு எதிரிடையாகச்செய்து வருகிறீர்களோ? என்ற கேள்விகளைக்கேட்க அவர்கள் சரியான பதில் கூறவில்லை, பிறகு இவர் இந்துமதக்கொள்கைகளை எடுத்துக் காட்டி இந்து மதமே முதன்மையானதென நிலைநாட்டினர்,

இவர் கலியாணம் வேண்டாமென்று வெறுத்திருப்பதையுணர்ந்த தாயானவர் இவரிட சிநேகிதரிடம் இச்சேதியைச்சொல்லிக்கொண்டார். சிநேகிதர்கள் இவருக்கு இதம் சொல்லி தங்களிட சொந்த செலவால் ஒரு பதிவிரதா சிரோன்மணியாகிய ஸ்ரீமதி சுப்பம்மாள் என்பவளை பாணிக்கிரஹணஞ்செய்வித்தார்கள், அந்த அம்மாள் இவருக்கு ஒற்றுமையாயிருந்து நடந்த விஷயங்களை என்னால் எழுத முடியாது.

1876 வருஷத்தில் பெங்களூரில் கிறிஸ்தவர்கள் செய்யும் பிரசங்கத்தில் இவர் சென்று அவர்களுடன்வாதமிட்டு அடியிற்கண்ட கேள்விகளைக்கேட்டார். அதற்கவர்கள் பதில் சொல்லத்தோன்றாமல் விழிக்க அவர்களையுஞ் சயித்து இந்து மதமே முதன்மையான மதமென்று நிலை நாட்டினர், அதே கேள்விகளை சென்ற 1907 வருஷத்தில் அச்சிட்டு வண்ணையம்பதி டி. முருகேசம் பிள்ளையவர்கள் மூலமாய் சென்னையிலும் வெளிதேசங்களிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கும் அவர் பாதிரிமார்களுக்கும் அனுப்பினர். ஒருவரும் இதுவரையில் பதில் அனுப்பவில்லை, கேள்விகள் வருமாறு. 1. உங்கள் கிறிஸ்தவ மதம் நம்பிக்கைமதமா? அன்றி ஆராய்ச்சிமதமா? 2, நம்பிக்கை மதமாயின் இதர நம்பிக்கைமதங்களோடு வாதிடுங் காரணமேன்? 3. ஆராய்ச்சிமதமாயின் இதனடியிற் கேட்கும் வினாக்களுக்கெல்லாம் தக்கவிடை தந்து நீங்கள் மதத்தை நிலைநாட்டக்கேட்டுக் கொள்ளுகிறேன் அப்படி நிலைநாட்ட சக்தியில்லாமல் தேவரகசியமென்றும், கடவுள் நாமம் வீணில் உச்சரிக்காதே என விதியிருக்கிறதென்றும் சாக்குபோக்குகள் சொல்லாதீர்கள். 1. மோசே எழுதின ஆதியாகமத்தில் சொல்லப்படுகிற கடவுள் சிருஷ்டியை ஆதாம் வம்சத்தில் அநேக காலத்திற்குப்பின் பிறந்த மோசே எவ்வாறெழுதினார்

2. சாபம்பெற்ற ஆதாம் வம்சத்திற் பிறந்த மோசே பாப மற்றவுனோ? 3 மனிதக்கொலை செய்தமோசேயைக் கடவுள் நல்லவனாகக்கொண்ட காரணமென் ? 4. கடவுளுக்குத் தாரதம்மிய குணமுண்டா ? 5. நீங்கள் சொல்லுஞ் சிருஷ்டி மறைந்திருந்த பொருள்களை வெளியாக்குவதா ? இல்லாத பொருள்களையுண்டாக்குவதா ? 6 இல்லது வராது உள்ளது போகாது எனும் வழக்கம் உண்மையல்லவா ? 7. இல்பொருள் தோற்றுவதற்கு அநுபவமும் திருஷ்டாந்தமுங்கூறுக? 8. எதன்பொருட்டு கடவுள் உலகைசிருஷ்டித்தார்? அதனாலவர்க்குப்பயன்யாது? 9. மோக்ஷமென்பது பொருளா, இடமா, காலமா, கடவுளா?10 மோக்ஷம் பெறுவதுதேகமா? ஆவியா? 11. சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களெல்லாம் அறிவனவோ? சிறிதறிவனவோ? 12. உயிர் அறிபொருளா? அறியாப்பொருளா? அறிபொருளாயின் மோக்ஷம்பெறுவர்ரார்? அறியாப்பொருளாயின் அதற்கொரு நன்மைதேடுதல் விவேகமாகுமா? 13. பாபமென்பது தேசாசாரமதாசார ஆசாரக்கிரிகளை மீறிநடப்பதோ? வேறோ? 14. கடவுளாணையைக் கடக்கவுயிராலாமோ? 15 நித்திய நரகவேதனைகொடுப்பது கடவுள் தன்மைக்கு நியாயமாகுமா? 16 இரங்சாவன்னெஞ்சர் நீதிபரராவரோ? 17. மரித்துயிர்த்த ஏசு உலகில் என்றும் நிலைத்திராமைக்குக் காரணமென்? 18. சந்திரவம்சத்தரசனாகிய பரதனாலாளப்பெற்ற பரதகண்டத்தவர்களாகிய இந்துக்கள் உண்மையெனக்கொண்டாடும் வேதம் ஆகமம்-புராணம் - இதிகாசங்களைக்கற்று அதை மறுக்கின்றீர்களா? அறியாமையக்க அறியர்திருந்துங் கேள்விகள் கேட்கிறீர்களா? 19. நியாயத் தீர்ப்புக்காலத்திற்குப் பின் உலகம் இருக்குமோ? இராதோ? இருக்கின் எவ்வாறிருக்கும், இல்லையாயின் மிக்கிருப்பது எது? 20. கி-பி 1907வது ஆரம்பவரையில் மரித்தவர்களுடைய தேகங்களை மண்ணிலடக்கஞ் செய்ததையும், அத்தேகங்க ளழிந்துவிட்டதையும், அழிந்து போகுமென்பதையும் யாவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனாலத் தேகங்களோடு கூடியிருந்த ஆவி நியாயதீர்ப்புகாலபரியந்தம்எந்த இடத்தில் என்னரூபமாக எந்த நிலையிலிருக்கும்? 21. உடலழியும்போது ஆன்மாவு மதனோடழிந்துபோய் மீளவுண்டாமெனின் ஆன்மா நித்தியஜீவனாதற் பொருந்துமா? 22. என்றுமரு

யமாகிய கடவுளைபாவராயினும், இக்காயினும், மோக்ஷமுதலிய மற்றெங்காயினும் காணக்கூடுமோ? என்பதே.

இந்நாராயணதேசிகர் 1880 வருஷத்தில் பெங்களூரிலுள்ள இராயபஹதூர் ஆ-நாராயணசாமி முதலியாரிட ஹைஸ்கூலில் நடந்த தமிழ்ப்பண்டிதர்களிட பரீட்சையில் சேர்ந்து, எல்லாருக்கும் முதன்மையாகத்தேறி, அதே ஸ்கூலில் 25-ரூபா சம்பளமுள்ள தமிழ்முன்ஷிவேலையைப் பெற்றார்.

திருப்பவ்வளூரிலிருந்த ஸ்ரீமான் பொன்னுஞ்சணி பரதேசியார் அவர்கள் அத்திருப்பவ்வளூரில் ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்தி நடத்திவந்தார் அதற்குத்தகுந்த தமிழ்முன்ஷியார் வேண்டுமென்று தேடிக்கொண்டு பெங்களூருக்குப் போயிருந்தபோது இந்த ஆதிநாராயணதேசிகரைச் சந்தித்தார். பரதேசியார் இவருடன் சித்தர்களின் பரிபாஷைவிஷயங்களைப் பேசினார். பரதேசியார் அனுபவத்திற்கு மேலான அனுபவங்களை இவர் கூற சந்தோஷித்து, தன்னிடஹைஸ்கூலுக்கு இவரைத் தமிழ்ப்பண்டிதராகதான்ஒப்புக்கொண்டதாயும், அவ்விடம் வந்தால் ஜபசீர்-முப்பூ-முதலிய அற்புதமானவேலைகளை முடிக்கலாமென்றும் தெரிவித்தார். அவ்வாறே இவர்சம்மதித்ததால், உடனே திருப்பவ்வளூருக்குப் பரதேசியார்வந்து யோசித்து இவரைவரும்படி கடிதம்தெரிவித்தார் அவ்வாறே இவர் 1890 வருஷம் வந்து சொல்பசம்பளத்திற்கு ஒப்பி அந்தஸ்கூலில் வேலைபார்த்துவந்தார் பிறகு இவரும் பரதேசியாரும் ஜபசீர் முப்பூமுதலிய வேலைகளை முடித்துவரும்போது, சிலவற்றை இவரால் தானுணர்ந்தும் தனக்கு முன்னமே தெரிந்ததைப்போல் பரதேசியார் நடித்தார். இதையுணர்ந்த இவர் அப்பரதேசியாரை விட்டுவிலகி "உலகம் ஓக்காளமென்றா தடாகாளம்" எனும் தத்துவராய சுவாமிகளிட வாக்கியத்தைச் சிந்தித்து, உலகதந்திரத்தில் உத்தபேடகாரிகளும் வசப்படலாமாவென வெறுத்து "அனுபவானந்ததீபிகை முதற்றிருமுறை" எனும் உயர்வொப்பிலாத வித்தாரநூலை இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்தி வித்வான்கள் சமூகத்தி லறங்கேற்றினர்.

திருப்பவ்வளூர்ஸ்கூல்"வேலையை" விட்டுவிட்டு சென்னையில் 1894ல் போய்ச்சேர்ந்து வேதாந்தப்பிரசங்கம் செய்துக்

கொண்டிருந்தனர். 1896௵த்தில் தனது ஆசிரியராகிய நாத முனிசுவாமிகள்மீது பாணிபாடி அதற்கு அநுபவானந்ததீபிகை இரண்டாந் திருமுறையாகிய "குருவருட்பேறு" என நாமகரணஞ்சூட்டி அச்சிட்டு வித்வான்கள் சபையில் அரங்கேற்றஞ் செய்தார். ஒடியின் மூன்றாந்திருமுறை "பராபரவிளக்கம்" எனும் ஒருநூலை வசனநடையாயிப்பற்றி 10-பாரம் அச்சிட்டிருந்தார்மற்றப்பாரங்களை அவர் (விதேககைவல்லியமான) பிறகு அவரிட மனைவியார் தன் சொந்தச்செலவால் அச்சிடத்தொடங்கி அவரிட பிரதமசீடர் ஸ்ரீமத். பு. ஜயராமப்பிள்ளை யவர்களைக் கொண்டு புரூப்பார்த்து அச்சிட்டுமுடித்தனர்.

1897௵த்தில் சென்னையில் மகம்மதியர்-கிறிஸ்தவர்-வைணவர்-தாந்திரிக சைவர்-வைதிகசைவர்-பௌத்தர் இவர்களெல்லோரும் ஒருமஹாசபைசேர்ந்து, இத்தேசிக நாயகரை சபாநாயகராக நியமித்து, இவர்முன்னிலையில் அவரவர்மதங்களின் சிறப்பையும், ஜாதிமதபேதங்களையும், விக்கிரக ஆராதனை சிலர் கூடுமென்பதையும், சிலர் கூடாதென்பதையும்பற்றி பிரசங்கித்தனர். முடிவில் இச்சபாநாயகரெழுந்து மிருகம்-பட்சி முதலிய ஜந்துக்களுக்கு அவ்வவற்றின் தன்மைகள் பொருந்தியிருக்குமாறுபோல, எல்லா ஜாதிமனிதர்களுக்கும் ஒரேவித மானுஷீகத தன்மை பொருந்தியிருப்பது சத்தியமாகையால் யாவரும் ஒரே ஜாதியினரென்றும், சடைமுடிவளர்த்தவனை சாமியாரென்றும் தலையை மொட்டையடித்தவனை பரதேசியென்றும், தலையைமொட்டையடித்து தாடிவளர்த்தவனை மகம்மதியனென்றும், தலையில்குடுமியும் மீசையும்வைத்தவனை லௌகீககுடும்பியென்றும், தலையை மொட்டையடித்துமீசையும் எடுத்துவிட்டவனை சாதானிஅய்யர் என்றும். தலையில்குடுமிவைத்து மீசையை அடித்துவிட்டவனை வைதிககுடும்பி அய்யர் அய்யங்கார் குருக்கள் தீட்சதர்களென்றும், தலையில்மயிர்களைக் கத்திரித்து டொப்பியிட்டவரை துரைகள் என்றும், கிருதாமீசைகளை வைத்தவனை க்ஷத்திரியனென்றும் முன்குடுமியை மலையாளி யென்றும் மயிரால்ஜாதிபேதங்கள் காட்டுகிறார்களேயொழிய வேறல்லவென்றும், ஏசுகிறிஸ்துவைத் துதிப்பதும் மகம்மதியரைத்துதிப்பதும், கிருஷ்ணனைத் துதிப்பதும், விநாயகனைத் துதிப்பதும்'' பௌத்தர் லாமவைத்துதிப்பதும்

விக்கிரக ஆராதனையாகையால் யாவரும் விக்கிரக ஆராதனை செய்
பவர்களேயென்றும், இவ்விதசகுணோபாசனையினால் சித்தசுத்தி
யும் பதமுக்தியும் வருமேயல்லது பரமுக்தி வாராதென்றும், நிர்க்கு
ணோபாசனையெனும் சிரவண-மனன-நிதித்தியாசத்தால் அஞ்
ஞான-சந்தேக-விபரீதங்கள் நீங்கிசாட்சாத்காரமெனும் பரமுக்தி
யுண்டாமென்றும் நிலைநாட்டினர்.

சென்னையில் 1898வருஷத்தில் கூடிய விசிஷ்டாத்வைத மகா
சபையில் மத்தியஸ்தராக வீற்றிருந்த ஸ்ரீமத். சதாவதானி ஸ்ரீனி
வாசாசாரியார் 1. கோபால கிருஷ்ணமுதலியார் B A. 2. ஸ்ரீமான்
[illegible] டான் சுவாமிகள் 3. குப்புசாமிநாயுடுகாரு அவர்கள்
[illegible] முன்னும், இன்னும் அவ்விடம்வந்திருந்த பலசமய
[illegible] ரும், சபாநாயகராக வீற்றிருந்த ஸ்ரீமான். சங்கி
[illegible] பூண்ட ஏகாங்கிசுவாமிகளோடு இத்தேசிக நாராய
[illegible] ணவமதத்தைப்பற்றி 4. 5 வாரம் வாதாடினர். இவர்
[illegible] க்குச் சரியானபதில்சொல்லி, விசிஷ்டாத்வைத மதத்தை
[illegible] டிக்கொள்ளாமல் ஏகாங்கிசுவாமியார் தவறிப்போனார்.
[illegible] ங்கவறினவர் இவரைக்கேலிசெய்யவெத்தனித்ததால் அவ
ரைக் கேட்டகேள்விகளை அச்சிட்டு சென்னைமுழுதும் விளம்ப
ரஞ்செய்ததோடு, அவருக்கும் வெளிதேசங்களுக்கும் அனுப்பி
னர். அக்கேள்விகளுக்கு நாளதுவரையில் அவரும் அவரிடசிஷ்ட
களும் இன்னும்மற்ற வைஷ்ணவக்கூட்டங்களும் யாதும்பதிலெழுதி
னரில்லர்.

கேள்விகள் வருமாறு 1. ஏகாங்கிசுவாமிகாள்! தாங்கள் பாஷி
யக்காரர் எனப்புகழ்ந்துகூறும் ஸ்ரீமத் இராமானுஜாசாரியர் வேத
ங்களைச்சார்ந்த தசோபநிஷத்துகளுக்குப் பாஷியம் எழுதியிருக்
கின்றனரா? 2. அரங்கராமானுஜ ஜீயரென்பவர் எழுதியபாஷி
யத்தை யாதாரமாக வைத்துக்கொண்டே கீதைக்கு இராமானு
ஜாசாரியர் பாஷியமெழுதினரா? அல்லது தாமே முதலிலெழுதி
னரா? 3. விஷஜந்துவாகிய ஆதிசேடன் தலைவால் தோலெலும்பு
முதலிய உறுப்புகளிலொரு அம்சமாக அவதரித்த ஸ்ரீமத். இரா
மானுஜாசாரியருக்கும் "அவர்மதப்பின்பற்றியதங்களுக்கும் தங்க
ளைச்சார்ந்தாருக்கும் அரங்க இராமானுஜஜீயருக்கும் சுவானுபவ
முண்டா? 4. உங்கள்மதம் நம்பிக்கைமதமோ, ஆராய்ச்சிமதமோ?

5. ஆராய்ச்சிமதமாயின் ஏன் யுக்தியனுபவங்களை யொப்பிக் கொள்ளோமென்கிறீர்கள்? 6. நம்பிக்கைசமதமாயின் நீங்கள் சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளைகளே யாகவேண்டியிருக்க, அனுபவிகளாகிய வேதாந்த அத்வைதிகளை அங்ஙனங்கூறல் பிசகல்லவா? 7. சுவானுபவமில்லார் சத்தசத்தின் இலக்கணத்தைப் பகுத்துக்கூற அதிகாரிகளல்லரென்று பகவற்கீதை யிரண்டாம் அத்தியாயம் 16-வது சுலோகத்திற் சொல்லப்பட் டிருக்கிறதே இதற்கெது விடைபகருங்கள்? 8. விசிஷ்டாத்வைதமென்பது தங்கள் இலக்கணமா அல்லது தாங்கள் கொண்டாடும் கடவுளினிலக்கணமா? 9. கடவுளிலக்கணமேயாயின் வேதத்தில் இவ்வாக்கியம் எங்கேயுபயோகிக்கப்பட் டிருக்கின்றது. அதைக்குறிப்பிடுங்கள்? 10. வேதத்தில் சாந்தம், சிவம், அத்வைதம், என்றிருக்குட்வார்த்தைகளின் கதியென்ன? 11. ஐயா விசிஷ்டாத்வைதமென்றாலென்ன? ஜீவன்வேறு-உலகம்வேறு-ஈஸ்வரன்வேறு என்றுரைக்கும் நீங்கள் ஏன் துவைதிகளெனச் சொல்லிக்கொள்ளுகிறீர்களில்லை? 12. ஜீவேசஜகத்தநிர் வசனியமேபிரமமே நித்தியம் என்கிற அத்வைதிகளைப்போல அத்வைதமெனும் சொல்லையும் உபயோகித்துக்கொள்வது ஆணும் பெண்ணுமல்லாப்பேடி ஆணணிகலந்தரித்து ஆடவனெனச் சொல்லிக்கொள்வது போலல்லவோவிருக்கிறது. 13. அப்படித்தங்களை யாவரும் நினையாதிருக்க தாங்கள் தங்கள் மதத்தின் பெயருக்குரிய பொருளைவிரிவாய் விளக்குங்கள் பார்ப்போம்.

14. சுவாமிகாள்! அத்வைதிகளை கிறஸ்துவர்முதலெல்மதத்தினரும் வேதாந்திகள் அல்லது அத்வைதிகளென அழைப்பது போல் உங்களை நீங்களேயல்லாமல் உபயவேதாந்த பிரவர்த்தகாசாரிகளென அழைத்தார் அழைப்பவர்யாவர்? 15. "நித்யோநித்யோனும்" எனுஞ்சுருதிக்கு ஸ்ரீமத். ஆதிஜகத்குரு சங்கராசாரியாருஞ் சுவாமிகள்பாஷியம் பழுதாகவே எழுதினரென்றதோடு இலக்கணமும் வழுவியிருக்கின்றாரென்ற தாங்கள் அதைவெளியிடாது மறைத்துரைபாடுவது கருணையாகுமா? 16. கிருஷ்ணமூர்த்தி எல்லாம்யானேயென அர்ச்சுனனுக்கு உபதேசித்தது தோலென்புநரம்பு ரோமவுருவ சரீரத்தைக்குறித்தோ? சர்வவியாபகமாகிய அத்வைத ஆத்மாவைக்குறித்தோ? 17. கிருஷ்ண

மூர்த்தி அர்ச்சுனனுக்கு உபதேசஞ் செய்யுங்காலத்தில்அவருக்குடலாகிய அசித்துப்பொருளும் சுகதுக்கமனுபவிக்குஞ் சீவனும், தனுகரணபுவனபோக மனுபவிக்கச்செய்யு மீஸ்வரனும், இவற்றிற்கெல்லாம் ஆதாரமாகிய அத்வைத ஆத்மாவும், அர்ச்சுனனிடத்திருந்ததுபோல இருந்தனவோ இல்லையோ? 18. முத்திபெற்ற ஜீவன்முத்தர்களாகிய அத்வைதிகள் சித்தசித்து ஈஸ்வரன் என்கிற திரிபதார்த்தமும் ஆத்மாவைப்போல சத்தாமாத்ரமாக இல்லையென்றும், ஆத்மாவே தானென்பதல்லாமல் மற்றவைகளல்லவென்றும் தெரிந்துபதேசிப்பது போலவே கிருஷ்ணமூர்த்தியுங்கூறினரோ அல்லது வேறோ? 19. சரீரமில்லையெனில் அர்ச்சுனன் இரதத்தில் சாரதியாயிருத்தல்கூடுமோ? 20. ஜீவனில்லையெனில் பீஷ்மர்லக்ஷியம்பால்கொண்டு சத்தியந்தவறி சக்கரங்கையிலேந்தி சண்டைசெய்வரா? 21, ஈஸ்வரசொரூப மில்லையெனில் விஸ்வரூபங்காட்டுவரா? 22. நாம்வாதிட ஆரம்பித்தபோது சுருதியுக்தமாக கடவுளிலக்கணத்தையும், உலகம்வந்த வரலாற்றையும், பந்தவிலக்கணத்தையும், முத்தியிலக்கணத்தையும் குறிப்பித்துக்கொள்வோமென்று கேட்டதற்கு நீர்பதில்ஒன்றும் ஏன் சொல்லவில்லை? 23. தங்கள் மானத்தைக் காக்க ஸ்ரீமான் முதலியாண்டான் சுவாமிகள் எழுந்து உலகொடுங்குங்காலத்தில் மண் நீரிலும், நீர்தீயிலும், தீவளியிலும், வளிவானிலும், ஆகாயம் ஜீவன்முதலியனவும் பிரகிருதியிலும் அது நாராயணனிடத்திலும் ஒடுங்குமுடிவில் நாராயணன் ஒருவனே அழியாதனாகிஆம்பதியென்று கூறப்படுகிறானென்றும் அக்காலத்தில் உப்பானது ஜலத்தில் கரைந்து உருத்தோற்றிருக்குமாறு பிரகிருதியாதியவிருந்து மீளவும் சிருட்டிகாலத்து முறையே வெளிப்படுகின்றனவென்றும் கூறியதற்கு யான் தாங்கள்கூறிய உபமானம் பொருந்தாது எங்ஙனமெனில்; உப்பின் அணு இருந்தவிடத்து ஜலவணு இருந்ததில்லை. ஜல அணுவிருந்தவிடத்தில் உப்பின் அணு விருந்ததில்லை. உப்பதிகப்பட்டு ஜலம் குறையினும் ஜலம் அதிகப்பட்டு உப்புகுறையினும் ஒன்றினுரு தோற்றுவதில்லையென்பது உண்மையேயாயினும் இரண்டும் கண்டப்பொருள்களேயாகின்றமையானும், வேதத்தில் பிரமம் சுஜாதிவிஜாதியற்ற அகண்டபரிபூரண சச்சிதானந்தமென்னும் இலக்கணங்களைப் பொருந்தியதெனக் கூறப்பட்டிருப்பதால் பூரணவிலக்கணத்திற்குப் பழுது

வந்து சித்திக்கின்றது. அதனால் பிர்மம் கண்டப்பொருளாகிறது. உலகில் எம்மதத்தினரும் கடவுளைக்கண்ட ஸ்வரூபியென உரைக்கின்றனரில்லை. பூரணரென கிறிஸ்துவரும் உரைக்கின்றனர். ஆகையால் நீர்சொல்வது தோஷமே. பிர்மவியாபகத்தில் இப்பொழுது ஜீவேசுராதியர் அடங்காதிருக்கின்றனரா? இப்படி யடங்குவதற்கு லயகாலம் ஒன்றுவேண்டுமா?

24. பிரமத்தில் உலகம் உண்டாவது தாயினிடத்துபிள்ளையுண்டாவதுபோலா? விதையினிடத்து விருக்ஷம் உண்டாவது போலா? பால் தயிராவதுபோலா? மண்ணிற் குடந்தோன்றுவது போலா? சமுத்திரத்தில் அலைதிவலைநுரை உதித்தொடுங்குவது போலா? 25. திருமழிசைபிரான் "தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண்டடங்கடல் தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்-நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்-நின்னுளே யடங்குகின்ற நீர்மை நின்கணின்றதே" எனக்கூறியிருக்கின்றனரே. அதற்கொப்பாக நான் ஜலத்தைப்போல் பிரமத்தையும், திவலைகளைப்போல் ஜீவர்களையும், நுரையைப்போல் உலகத்தையும் வைத்துக்கொள்ளுங்கள். ஜலத்தையன்றி அலை-திவலை-நுரை என்பவைகளுக்கு எங்ஙனம் வேறுபொருள்களில்லையோ ஆங்கே சித்தசித் தீஸ்வரனென்கிற முப்பெயர்களுக்கும் வேறு பொருள்களில்லையென்றதற்கு தாங்கள் காற்றில்லாமல் சமுத்திரத்தில் அலையாதியவருமா அதனால் விசிஷ்டமே சமுத்திரத்தில் பஞ்சிகரணமில்லையா அதனால் விசிஷ்டமே என்றுரைத்தீர்களே. இவை தங்களை கற்றவராகமதிக்கத் தக்கவிடையாகுமா? இவை யான்கூறியவற்றிற்கு விடையாகமாட்டா எங்ஙனமெனில் உவமை ஏகதேசமேயொழிய முற்றுமன்று, ஒருவன் முத்தைப் போன்றவைபற்கள் என உவமைகூறின் வெண்மை நிறத்தைக் கொள்ளாது முத்தைப்போன்று பற்கள் விலையேற்றம்பெறுமா? முத்திலும் பற்களிலும்பஞ்சிகரணமில்லையா அதனால் விசிஷ்டமே யெனவும், நீலோற்பலம்போன்ற கண்களென்றவனைப்பார்த்து கண்களுக்குப் பலவிதழ்களும் தண்டும் மணமுமுண்டோ? அன்றியும் குவளைக்கிழங்கும், ஜலமுமில்லாமல் உற்பத்தியாகிப்பூக்குமா அது கண்களுக்கெப்படி சமதையாகும். கண்களிலும் நீலோற்பலத்திலும் பஞ்சிகரணமில்லையா ஆகையால் இருபொருள்

களும்விசிஷ்டமே எனவுரைப்பது ஞாயமாகுமா? இப்படி விடை பகர மூடனும் நாவெடானே கற்றறிந்தநீர் அவ்விடைகளைப்பகர்வது அழகாகுமோ "ஊகமுளதேல் சிறுவர் உரையுங்கொள்க" என்னும்பாடலே பெரியோர்கள் கூறியிருக்கின்றனரே. ஏன நான் விளக்கியதற்கு தாங்கள் இதுவரை சபையோரறியத்தந்த அல்லது தரும்விடைகள் யாவை?

26. வாதிட ஆரம்பித்தபோது இவருக்கு வடமொழி தெரியாது என்கிறார் அதினால்தான் வாதங்கெட்டுப்போனதாக தாங்கள் சொன்னதற்கு நான் தங்களைப்போல் இரண்டொருசுலோகம் வடமொழியிலறிவேனாயினும் ஒருபாஷையில் ஆறங்கமும் தெரிந்தாலொழிய அப்பாஷையால் வாதிடப்படாதென்றதற்கு அப்போது தமிழ்மொழியே போதுமென்று ஒப்புக்கொண்டு தாங்கள் தோற்றபிறகு நான்சொன்ன தமிழ்மொழி வடமொழிக்கு ஒத்தவையல்லவென்றீர், நீர்பேசும் தமிழ்மொழியும் "திருவாய்மொழி" எனும் தமிழ்ப்பாடலும் மாத்திரம் வடமொழிக்கு ஒத்தவைகள்போல் பாவித்து பேசுவதும் கோயில்களில் கோஷ்டிகள் பாடுவதுமா என்று நான்கேட்டதற்கு ஒன்றும்பதில் ஏன் கூறவில்லை? 27. தாங்கள் "த்வயோசுபர்ண" வென்ற சுருதியைக் கூறி அதற்குதங்களுக்கு உரைசொல்லத் தெரியாமல் மத்தியஸ்தராகவந்திருந்த ஐயங்கார் ஒருவரை அதன் உரையைப்படித்துக் காட்டுங்களென்றதற்கு அவர் "முண்டகோபநிஷத்தில் மூன்றாம் முண்டகம் முதலத்தியாத்திலுள்ள "இரண்டுபக்ஷிகள் எப்போதும் இணைபிரியாமல் துணையாக ஒரேமரத்தில் வசிக்கின்றன, அவற்றிலொன்று (பிப்பலமென்னும்) அரசம் பழத்தையுண்டு கொண்டும் மற்றொன்று உண்ணாமலே பலபக்கங்களைப் பார்த்துக்கொண்டும் இருக்கின்றன" என்றவரை படித்துக்காட்டினது உண்மையோ பொய்யோ? அதனால் தாங்களடைந்தவெற்றியாது நான் அதேமுண்டகோபநிஷத்தில், நீங்கள் முதலும்கடையும் விட்டீர்கள். அதைப்படிக்கின்றேனென ஷை யுபநிஷத் முதலத்தியாயத்தில் "சவுனகர் எதையறிந்தால் இதையெல்லாமறிந்ததாகும் என்றதற்கு அங்கிரசுபிர்ம்ம வித்துக்கள் அதாவது (பிரமத்தையறிந்தவர்கள்) இரண்டு வித்தைகளையறிய வேண்டுமென்கிறார்கள் (அவையாவன) "பரவித்தையென்றும் அபரவித்தையென்றும், சொல்லப்படுகின்றன அதில் அபரவித்தையானது

அதாவது பார்க்கக்கூடாமலும் கிரகிக்கக்கூடாமலும், கோத்திரமில்லாமலும், வர்ணமில்லாமலும் கண்களில்லாமலும், காதுகளில்லாமலும் கைகாலில்லாமலும், நித்யமாயும், வியாபகமாயும், ஸர்வகதமாயும், அதிஸூக்ஷமமாயும், அவிகாரியாயும் இருக்கிறது. இந்த பூதயோனியைத்தான் தீரர்கள் பார்க்கிறார்கள். பட்டுப்பூச்சி எப்படியானால் சிருஷ்டித்துக் கிரகிக்கின்றதோ, எப்படியானால் பூமியில் ஓஷதிகளுண்டாகின்றனவோ, எப்படியானால் ஜீவித்திருக்கிற புருஷனிடத்திலிருந்து நகங்களும் மயிர்களும் உண்டாகின்றதுகளோ, அப்படியே அக்ஷரத்திலிருந்து பிரபஞ்சமுண்டாகிறது" எனவும், அதேயுபநிஷத்து இரண்டாவது அத்தியாயத்தில் "இது சத்தியம் நன்றாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற நெருப்பிலிருந்து அதைப்போலிருக்கிற கணங்கள் ஸஹஸ்த்ரவிதமாய் எப்படியுண்டாகிறதுகளோ (அதாவது ஒரு தீபத்திலிருந்து அனேக தீபங்களுண்டாவதுபோல) அப்படித்தான் ஓ! ஸௌம்யனே அந்த அக்ஷரத்திலிருந்து நானாவிதமான பாவங்களும் உண்டாய் அங்கேயேபோய்ச் சேருகின்றதுகள்."

"இவனிலிருந்து பிராணமுண்டாயிற்று. மனதும் சமஸ்தமான இந்திரியங்களும், ஆகாயம், தேஜஸு, வாய்வு, அப்பு, சர்வசாதாரணமான பிருதிவியு முண்டாயின."

"புருஷன்தான் இந்தப்பிரபஞ்சமும், கர்மமும், தபஸும், உயர்ந்த அமிர்தமாகியபிரமமும்" எனவும், மூன்றாம் முண்டகம் முதலத்தியாயத்தில் இரண்டுபக்ஷிகள் எப்பொழுதும் இணைபிரியாமல் துணையாக ஓரேமரத்தில் வசிக்கின்றன. அவற்றில் ஒன்று அரசம்பழத்தை யுண்டுகொண்டும் மற்றொன்று உண்ணாமலேபல பக்கங்களைப்பார்த்துக்கொண்டும் இருக்கின்றன. அதேமரத்திலிருந்துகொண்டு மோகத்திற் காளானபுருஷன் முழுகிசக்தியின்மையால் துக்கிக்கிறான். மற்றொன்றாகிய மகிமையுள்ள ஈசனைச் சேர்ந்து பார்க்கும்போது சோகத்தினின்றும் விடுபட்டவனாகிறான். எப்போது சுவர்ணவண்ணமாயும், ஈசனாயும், கர்த்தாவாயும், பிர்ம்மத்துவாரமாயுமுள்ள புருஷனைக் காண்கிறானோ அப்போது அவன்வித்துவானாகிப் பாவபுண்ணியங்களைத் துறந்து மாசற்றவனாகிச் சிரேஷ்டமான சாம்யத்தை யடைகிறான். என்றும் "இந்தப் பிராணனானது சகலபூதங்களாலும் விளங்குகிறது. இதை அறியும்வித்துவான் வேறொன்றைக்குறித்தும் பேசுவதில்லை அவன்லீலை ஆத்மாவிலே அவன் இச்சை ஆத்மாவில் பரமஞானிகளுக்குள் அவன் சர்வசிரேஷ்டன் எனவும் மேற்படி மூன்றாவது முண்டகம் இரண்டாவது அத்தியாயத்தில் "15-கலைகளும் அதனிடத்தைச்சேர்ந்து, அந்தந்தப் பொறிகளும் அதனதன் அபிமானதேவதைகளினிடத்தைச்சேர்ந்து, காமங்களும் ஞான

மயமான ஆத்மாவும் நிர்விகாரமான பரதேவதையில் ஒன்றாய்ச் சேருகின்றன. பெருகும் நதிகள் சமுத்திரத்தைச் சேர்ந்து பேரும் உருவும்விட்டு அஸ்தமிக்கின்றவாறே வித்வானும் பேரும்உருவும் விட்டு பெரியோர்க்கும் பெரியோராகிய திவ்யபுருடனை அடைகிறான்.

அந்தப்பரப்பிர்மத்தையறிந்தவன் பிர்ம்மமாகவேயாகிறான்" என்று கூறப்பட்டிருப்பதினால் காரணமாகிய மண்ணைத்தவிர காரியமாகிய குடத்துக்கு எப்படி முக்காலத்தும் வேறுபொருளில்லையோ, அப்படியே பிர்ம்மத்தைத்தவிர நீர் எடுத்துக்காட்டிய இரண்டுபக்ஷிகளெனும் ஜீவேஸ்வரர்களுக்கு வேறு பொருளில்லையென்று ஆகிறதினால், மண்காரியப்படாமுன் அதிற்குடமிருந்ததுமில்லை. உடைந்தபின் அதிலிருந்தகுடம் வேறிடத்துக்குப்போயதும் இருந்ததும் இல்லை. இடையிலும் மண்ணைத்தவிர குடம்வேறாயிருக்கவும் இல்லை இருக்கிறதெனில் மண்வேறாகக் குடம்வேறாகப் பிரித்துக்காட்டுங்கள். அப்படி நீர் மண்ணைத்தவிரகுடமும் நூலைத்தவிரபடமும் பிரித்துக்காட்டாதவரை காரணமாகிய பிரமத்தைத்தவிர காரியமாகிய சித்தசித்தீஸ்வரன் என்கிறமுப்பெயர்களுக்கும்வேறுவேறானபொருள்களுள்ளனவெனக் கொள்ள நியாயமில்லையேயென்று நான் கூறியவற்றிற்கு இதுவரை தாங்களளித்தவிடைகள் அல்லது அளிக்கும் விடைகள் எனவையோ? அவற்றைவரைந்து வெளியிடுங்கள்.

28. ஏகாங்கி சுவாமிகாள்! தங்கள் முன்னோர்கள் தாங்கள் கூறும் குளறல்களாகிய உரையை எவராவது விசாரித்துக் கைவிடப்போகிறார்களென்று பயந்தல்லவோ சொன்னதைக்கேட்டுச் செத்தாப்போற் கிடக்கவேண்டுமென்பது. வேதத்தையாவது அதினுரையையாவது ஒருவன் சங்கித்தறிய லாகாதெனலேன், ஆயப்புகுந்தவன் மாத்ருயோனியைப் பரிக்ஷித்தவனுக் கொப்பாவானெனக் கூறல்நீதியோ?

29. வசைக்கஞ்சி உங்கள் நிபந்தனைக்குட்பட்டு எதைச் சொன்னாலும் அடியேன் அடியேனென மறுமொழிப்புகன்று மூடமேமோக்ஷம் தெளிவேநரகமெனநம்பிக் காலங்கழிக்கும் சில அறியாவைணவர்கள்முன், தாங்கள் "நித்யோ நித்யாநாம் சேதனஸ்சேதனானாம்" என்றும் த்வயோசுபர்ணவென்றும், "நத்வே ஜாதம் ஜாதுநாஸம்" என்றும், நான் சுருதிவாக்கியங்களைக் கூறவில்லையா சபையோர்களே! எனக் கேட்டுக்கொள்ளுகின்றீர்களே இப்பாடல்களால் நீங்கள் உங்கள்மதத்தை நிலைக்கச்செய்துவிட்டீர்களோ. விசிஷ்டாத்வைதம் இம்மூன்று பாடல்களாலும் ஜீவித்துவிட்டதோ? [illegible] விசாரித்தறிவோம்.

30 (a) நித்யோ நித்யானாம் என்பதை நித்யோ அநித்யானாம் எனப்பிரிப்பது கூடாது நித்யோ நித்யோனாம் எனவே பிரிக்கவேண்டுமென்கின்றீர்களே. நித்தியமென ஒருபொருளையுரைப்பின் மற்றவை யனித்யமென வாராவோ! ஜீவனும் ஈசனும் உலகமும் நித்யமேயாயின். அநித்தியமெவை அல்லதெது?

(b) அநித்ய மின்றியே நித்யமெனும் பெயர்வந்ததோ?

(c) யாவும் நித்யமேயெனில் நித்தியமாகிய ஜீவர்கள் நித்தியமாகிய ஈசனையும் உலகத்தையும் பந்தில் பதினொன்றாகமதியாது உயர்த்தித் தாழ்த்திக்கொள்ளவேண்டிய காரணமியாது?

(d) நித்யத்திலும் பெரியதுசிறியது என்கிற பேதமுண்டோ?

(e) நித்யமாகிய ஜீவர்களுக்கு கர்மமும் ஜனனமரணமும் பிராப்தமானவிதம் எவ்வாறு?

(f) ஒரு நித்தியன் தன்னைப்போன்ற மற்றொரு நித்யனை தன்னிலுஞ் சிறந்தோனென வேற்றுக்கொள்ளுதல் மூடமோ தெளிவோ!

(g) ஜீவன் நித்தியமாயிருப்பது சுபாவமெனவறிந்த நீருமுங்கள் முன்னோர்களும் கைங்கரியஞ்செய்து நித்யபதவியடைய வேண்டுமென மூடக்கொள்கையில் முயன்று பலனையும்முயலவைப்பது வேலைபற்றதாகிரியின் வேலையைப்போலவல்லவோ பயனற்றதாகக் காண்கிறது.

(h) ஈசனை யுயர்த்திக்கொண்டு அவன்ஜாயமான சடாக்ஷத்தால் நித்யத்வம் பெறவேண்டுமேயல்லது மற்றப்படி யாசாதெனப்பிரோ எப்பொழுதும ஜீவன் நித்யமெனக்கூறுதலில் பயனெது

31. இனிச் "சேதனஸ் சேதனானாம்" என்பதை யோசிப்போம். சேதனன் என்றாலென்ன? சித்துப்பொருளல்லவோ, ஓரறிவு மற்றோரறிவைப் பணியவேண்டிய காரணமியாது? ஜீவன் சிறிதேயறிவன் ஈசன் சர்வமுமறிவான். இவன் சுதந்தரஹீனன் அவன் சர்வசக்தனென்பீரேல், நீங்கள் சொல்லுகிறபடி குயவன் மண்ணும் தண்டசக்கரங்களும் காசமுதலிய வயவங்களுமிருந்து குடங்களைச் செய்வதுபோல் பிரகிருதிமுதலிய நித்யப்பொருள்களை வைத்துக்கொண்டே ஈசன் தனுகரணபுவன போகங்களையிழைக்கின்றானேயன்றி அவையின்றேல் செய்யானே. அவனை சர்வசக்தனென்பது பொருந்துமா?

32. ஓர் அறிவு தன்சிறுமையும் நீர்சொல்லும் ஈசனதுபெருமையும் அறிவானேல் எல்லாமறிந்தவனே எனல் என்பொருந்தாது?

33. ஜீவன் ஈசனையறிவானோ? ஈசன் ஜீவனையறிவானோ? ஜீவன் ஈசனையறிவானேல் ஈசன் அறிபடுபொருளாகியழிவன் ஈசனே ஜீவனையறிவான் ஜீவன் ஈசனையறியானெனில் மனாதிய இந்திரியங்களைப்போல ஜீவன் சடமாகவேண்டிவருகின்றது.

34. ஒரு ஜீவன் காண்பவையெல்லாம் நிலையில்லா நித்திரையிலழிகின்றமையைக்கண்டு இனி ஈசனொருவனே யழியாதவனாயிருப்பவன் எனநட்டி ஓ! சர்வேசா நீயொருவனே யழியாப்பொருளாகக் காண்கின்றாய் அதனால் நான் உன்னையேபெற்று நீயேநானாக நானே நீயாயிருக்க விரும்புகிறேனென விரும்புவானேல் அவன் காமியார்த்தங் கைகூடுமோகூடாதோ நிறைவேறாமைக்குக் காரணங்கூறுங்கள் பிறகதையாராய்வோம்.

35. "இரண்டுபக்ஷிகள் எப்பொழுதும் இணைபிரியாமல்துணையாக ஒரேமரத்தில் வசிக்கின்றன என்பதை விசாரிப்போம் ஒரேமரமெது? உலகமா? உடலா? பிரமமா? உலகெனில் அப்போது ஒரேயீசனும் ஒரேஜீவனுமிருக்கின்றார்களென வருமேயல்லது பல ஜீவர்களிருக்கின்றார்களென்பது செல்லாது. உடலெனில் எப்போதும் இணைபிரியாமலென்றிருப்பதால், ஒவ்வொரு சரீரத்திற்கொவ்வொரு ஜீவனிருப்பதுபோல ஈசனுமிருக்கவேண்டிவருமே அதனால் ஜீவர்களைப்போல ஈசனுமநேகராகல்வேண்டும். சர்வாதார பிரமமேயெனில் நான்காவதொரு பொருளுண்டெனவாகி அத்வைதிகள் கொள்கை மெய்யாகத் தடையிராது.

36. ஈசனொருவனேயெனச் சாஸ்திரங் கூறுகின்றதனால் அநேகராகார்களெனப் புகலத்துணிவீரேல் கடோப நிஷத்து 6-ஆம் வல்லியில் பிரமமே மரமெனவும், 3-ல் ஜீவேசர் சூரியன் நிழலைப்போலும் (அதாவது பிம்பபிரதிபிம்பம் போலுமெனக்) கூறியிருப்பதற் கென்னசெய்வீர்.

37. எல்லாச் சரீரத்திலும் ஈசனும் ஜீவனுமிருக்க ஒருவன் நான் ஜீவனேயெனப் பாவிக்கவேண்டிய கட்டாயமியாது?

38. அதேமரத்திலிருந்துகொண்டு மோகத்திற் காளான புருஷன் சக்தியின்மையால் துக்கிக்கிறான் என்பதாலும், மற்றொன்றாகிய ஈசனைச்சேர்ந்து பார்க்கும்போது அவன் சோகத்தினின்று விடுபட்டவனாகின்றான் என்றிருப்பதால் ஏனிவன் ஈசனேயானென்று ஆசையற்றிருக்கலாகாது.

39. ஆசையும் இருவினையும் விடாதார் வீடுபெறுவரென்றெங்கேனும் கூறப்பட்டிருக்கிறதோ?

40. சுவர்ண வண்ணமாயும், ஈசனாயும், கர்த்தாவாயுமுள்ள புருஷனைக்காண்கின்றானோ அப்போது அவன் வித்துவானாகி பாவபுண்ணியங்களைத்துறந்து சிரேஷ்டமான ஸாம்யத்தையடை

கிருனென்றிருப்பதால் என் சசனையறிந்து சசனாவிராமல் எக்காலத்திலும் ஜீவனுகவிருக்க உபதேசஞ்செய்யும் அறியாமையக்கப் பெரியார்வேடம்பூண்ட வெறியானைநம்பி கைங்கரியம்புரிந்து கொண்டே கெடவேண்டும்

ஸ்ரீமான். இராமலிங்கசுவாமிகள் செய்திருக்கும் திருவருட்பாவை மருட்பாவென்று குற்றங்கூறி சென்னையிலும் காஞ்சிபுரத்திலும் சபைசேர்த்து வழக்கிட்டுவந்த தாந்திரிகசைவராகிய கதிர்வேல்கவிராயர் அவர்களை 1908-வருஷத்தில் காஞ்சிபுரத்தில் நடந்த இவ்விவாதசபையில் சந்தித்து வாதிட்டுகடவுளைப் பற்றித் துதிக்குநூல்கள்யாவும் அருட்பாவேயொழிய மருட்பா அல்லவென்றும் "அபூதங் குறிப்பேற்றமாதிப் பொய்யாலங்கரித்துக்" கூறும்நூல்களே மருட்பாவென்று தெளிவித்து திருவருட்பாவை "அருட்பா" வென்றே நிலைநாட்டினார்.

இத்தேசிக நாராயணர் ஜீவதசையோடிருக்கும்போதே இவர்செய்த பொதுநன்மையை வெளிப்படுத்த இஷ்டங்கொண்டு இவர்சீடர்களுள் ஒருவராகிய மாதுஸ்ரீ பு. பாலாம்பாளம்மையாரெனும் பிராமண திருமேனியார் "ஸ்ரீ சத்குரு நாராயணஸ்தவம்" எனும் நூலை 1906-வருஷத்தில் வெளியிட்டனர், பிறகு 1909ஹு பாலாமிர்தபோதம் வித்தியாவித்தியா சரித்ரம் என்பதையும் வெளியிட்டனர். மற்றொரு சீடராகிய ஸ்ரீமத்-மஹான் கச்சபேசுவர சாஸ்திரியார் அவர்கள் தன்னைப்பழித்த தன் பந்துக்களுக்கு தனதாசிரியரிட தெளிவைக்காட்ட அவரால்செய்த குருவருட்பேறெனும் அனுபவானந்ததீபிகை இரண்டாந் திருமுறையின் நிந்தாஸ்துதிக்குப் பொழிப்புரையும் தனது முகவுரையும் எழுதி 1907-வருஷத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தி தன் பந்துக்களுக்குகொடுத்து சிறப்பித்தனர். வேறொரு சீடராகிய ஸ்ரீமத்-பு. ஜயராம்பிள்ளை யவர்களால் "தேசிக நாராயணர் திருவருட்டுதிப்பா, எனும் நூலை 1909ஹுதில் வெளியிட்டனர்.

1911ஹு ஜனவரிமீ 25உ க்குச் சரியான சாதாரணஹு தைமீ 12உ யாகிய உத்திராயண புண்ணியகாலத்தில் 60-வயதுள்ள வேதாந்த வித்வசிரோன்மணியாகிய ஸ்ரீலஸ்ரீ ல-நாராயண தேசிகரவர்கள் சிந்தையும்வாக்கும்செல்லா நிலைமைத்தாகியவிதேக முத்தி யடைந்தனர். குற்றமுளதேல் உலகம்பொறுக்க.

ஸ்ரீமத். ல-நாராயணதேசிகரிட உபதேசரத்நம்.

ஏதாய் விளங்குவது மென்னினைவே யென்னினைவு
மேதால் விளங்குமெனி னென்றாலே—யீதாலே
யென்னையன்றி யில்லை யேகபரங்க ளெங்காளு
மென்னையான் பெற்றிருப்ப னென்.

பு-ஜயராமப்பிள்ளை.

ஷை யார் பிரதமமாணக்கன் (அத்வைதப்பிரசங்கி.)

# முகவுரை.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த நித்தியானந்த கலாதீத ஆன்ம சிவமயமென்னும் பிரமமன்றி, அதற்கு வேறாக ஜகஜீவபரம் தோன்றியதும், தோன்றுகின்றதும், தோன்றுவதும் வாஸ்தவமா யில்லை யனந்த நியாயங்களானும் வேதாதி பதினெண்குகலை களைத்தக்கோர் பலவிதத்து நாட்டி, கிரமசிருஷ்டி, யுகபத்சிருட்டி, அஜாதசிருஷ்டி எனும் இம்மூன்றில் அஜாதசிருட்டியே யுண்மையென்று உணராது மடமைமதியால் ஜகஜீவபரம் வாஸ்தவமென்னும் பிராகிருதப் பிரத்தியக்ஷ வழுவுறாத மாறு பரமேசுவரனே குருநாதனாய்த் திருவுருவெடுத்து மூன்று வகை முதனூல், வழிநூல், சார்புநூல்களையும், இராமாயண பாரதாதி இதிகாசங்களையும், யுக்தியனுபவத்திற்கு ஒவ்வாப்பல இயற்றியருளினரென்பது பிரசித்தமாம். இவற்றனுள் கர்ம காண்டம், பக்திகாண்டம், ஞானகாண்டங்களைக் கற்றுணர்ந்த மதாந்தங்களில் சிலர் சரியையாதி நான்குபாதச் சாதனைகளால் பரமுத்தியடைவது வாமதேவமார்க்கமென்றும், வேறுசிலர் நித்தியாநித்தியாதி நான்குசாதனங்களால் ஆன்மானுபவமுற்று இத்தேகமுள்ளபோதே பரமுத்தியடைவது சுகமார்க்கமென் றும் கூறுகின்றார்கள்.

மேற்கூறிய முதநூல் வழிநூல் சார்புநூல்களைச்செய்த அவதாரபுருஷர்களாகிய முனிவர் ரிஷீசுவரர்களின் சொரூபமே மானிடவடிவாக அவதரித்த பிரஹ்ம ஸ்ரீ பொதிகைமலைச்சித்தர் பொன்னடிக்காளாகிய ஞானநந்த நாகமுனிகுருவின் சிஷ்யரான ஸ்ரீமத்-ல நாராயணசாமி தேசிகரவர்கள் இருக்குமுதலிய பதினான்கு வித்தைகளையும் செவ்விதினாராய்ந்து (சகடாக்கம சுவயமெனத்தெரிந்து) ஆன்மானுபவமுற்று, தம அனுபவத்திற்கிசைந்த தத்துவசாரங்களைத் திரட்டி அனுபவானந்ததீபிகை முதற்றிருமுறையென்பம், ௨-ஷ இரண்டாந்திருமுறை குருவருட்பேறு என்பமட, ௩-ஷ மூன்றாந்திருமுறை பரசுத்தவிளக்கமென்றும் மூன்று திருமுறைகளாகிய நூலியற்றி அனுபவிகட்கு உவப்புறுமாறு இயற்றி அளித்தருளினர்.

அம்மூன்று திருமுறைகளை வாசிப்போர்களை சர்வேதாவ சித்தராய்ப் புகழ்வதோடு மேற்படி மூன்று திருமுறைகளில் முதற்றிருமுறைக்குப் பதவுரை தெரிந்துகொள்வது கஷ்டமாயிருக்கிறதென்று மேற்படி நூலாசிரியர் காலத்திலேயே குறை கூறி வந்தார்கள் அப்போதுதான் அந்நூலுக்கு உரைசெய்வதாய் அந்நூலாசிரியரைக் கேட்டேன் அப்படியே உரைசெய்யும்படி உத்திரவு செய்தார். அவ்வாறு அவரிருக்கும்போதே உரையி

பற்றி அவரிடந்தந்தனன் அவர் பார்வையிட்டு அச்சிடுதற் பக்குவமாகத் திருத்தஞ்செய்துவிட்டு விட்டதைப் பூர்த்தி பண்ணினார். பிறகு அவரது மாணாக்கினியார் ஸ்ரீமதி குப்பம்மாளவர்களுடைய உதவியைப்பெற்றுக்கொண்டு அச்சிடுவித்தேன். குற்றமுளதேல் உலகமெய்யாளுக்க

பு. ஐயாசாமிப்பிள்ளை.

அருமைவந்த பாசகர்.

---

நூலாசிரியர்க்களித்த

## சாற்றுகவிகள்

ஸ்ரீ பாஷ்யகாராசார்ய பாதஸேவைக லம்படம்
வாதவிதண்ட வாசால குலனே
ஸ்ரீ பாஷ்ய வ்யாக்யான நாதபக்ஷ
கடிகா சத ப்ரபந்தகர்த்த

நடாதூர்
கோவிந்தாசார்ய விரசித
ஸ்துதிகாரிகேயம்

ஸ்ரீமந் நாராயண கவிரசிதம்
தமையந்தி போதம் ஸ்லோகபோதம்
சாந்தம விசித்ர பத்யம
வாத்ஸல்யோ கோவிந்த கோவிதஸ் தோஷதி

---

இராமாநந்த யோகிகளென்னுஞ் சிறப்புப்பெயர் வாய்ந்த
மஹாவித்வான
காஞ்சிபுரம் - இராமசாமி நாயுடு அவர்கள்
இயற்றியன.

மும்மையதென் றுணர்வுறினும் பல்லாயிரக்கிளையின் மொழியவீறும்
செம்மையுற நிறைமுடிவைக் கரதலாமலகமெனத் தெரிந்திந் நாளில்
இம்மையோர் தருபவார்த்தத் தீபிகையென் றுலொன்றை
அம்மையோ ரியம்புதற் கொளவளித்த விவன்கீர்த்தி யறைதற்பாற்றோ.

அன்னவன்யா ரெனிலுலக வாழ்வனைத்து மபெய்ததோர்ந் தவழிந்தமேலன்
நன்னயந்தென் மொழிக்கட்டேக் கண்ணறிவாம் புனைத்தீணையர் நலகைச்

யென்ற,டன்னுபகழ் நாதமுனி யோகியர்தம் மிணையடிக்கே யுரிமை பூண்டு
தன்னுதலாத் தொருநாரா யணசாமிப் பெயர்விளங்குந் தூயன் மாதோ.

---

அத்வைத ஸமாஜ வித்வத்ஜன சேகரர்
ஸ்ரீமான், மணிமங்கலம் அத்வைதாவதாரம்
திருவேங்கட முதலியாரவர்கள் இயற்றிய
அகவல்.

பாமுதன் மூன்றும் பண்பெனத் திரீஇயினன்
உரனெனச் சொருபத் துறுநா. னுண்மை,
யறிவா னந்த மபரோக்ஷ மான்மா,
சிறிதெனப் பெரிதெனச் செப்புவ ருபாதியான்
மறைமுடி யுபநிட மாண்பிது. வவ்வழி
கறையறு மாட்சியிற் காட்டக் கண்டோன்
மரையடி நாத முனிவழித் தொண்டன்
பெருமிதத் துலகம் பிரமை தீர
நவின்றனன் நாரா யணசாமி நாவலன்
கவின்பெறு மநுபவா நந்த தீபிகையெனும்
பேதம தகலப் பெருநூ லொன்றிதை
வேதமென் றுலகீர் விரைந்துபோற் றிடுமினே,

---

திருத்துருத்தி இந்திரபீடங் கரபாத்திர சுவாமிகள்
ஆதீனத்துக்குரிய ஈசூர் கணக்கு
சச்சிதானந்த சுவாமிகளவர்கள் மாணாக்கர்
ம-ள-ள-ஸ்ரீ பு. ஆறுமுக முதலியாரவர்கள்
இயற்றிய
வெண்பா.

அநுபவா நந்தமெனு மான்றதீபி கையொன்
றநுபவமா நிற்க வரைந்தான்—தநுவறியா
நாரா யணசாமி நாமமுடை யாஸ்றனது
தீராத வின்பதிற் றேர்ந்து

---

முத்தமிழ்க் கவியரசு சிவானந்த யோகியென்னும்
தஞ்சை - சண்முகம் பிள்ளை இயற்றிய
நிலைமண்டில நேரிசை யாசிரியப்பா.

அருட்பே ரொளியா லண்டாண்ட பிண்டம்
பொருட்பே றுற்றுப் பொலிந்து விரிந்த

வராயி லாங்காங்க ருந்தவம் புரிந்து
மராதிக ணிலைக்க மாமருந் தறிந்தோன்
மானத தத்வசம் பிரிதினி நூல்வளந்
தானவை யுணர்ந்த தத்துவப் புலவன்
ஈசையு மின்சொலு மிசையு நிறீஇனன்
சாசையாம் வேதத் தத்துவ முணர்ந்தவன்
அறிஞர் பலர்சே ரவைபா லிருந்தனோர்
பொறிபுலன் கதுவாப் புலமைசாலறிஞன்
போதத் தெளிவு பொங்கிமேலேற
காதப் பொலிவில் நண்ணுமானந்த
நாத முனிமா தவனிரு நாயகப்
பாதப் போதணி பண்ணவன்பாக்கியன்
உலகு பகார முண்மை ஞானியர்க்
கிலகியல் விவகர மிதெனை விளம்பும்
உரைப்பொரு ளுணர்ந்த வொருவ னெறியன்
தரைமுத லுலகந் தழைக்க வந்தவன்
காந்தங் கவர்தரூஉங் கரும்பொ னென்ன
சாந்தத்தெவரையுந் தன்வயப் படுத்தி
வேதாந்த நியாயம் விளங்கத் தெள்ளிய
போதாந்த நிலையைப் புகட்டுமொருவன்
பஞ்ச பூதியப் பகுதியா முலகென்
றஞ்சா நிலையி லமர்ந்த நெறியன்
சத்து வாந்தங்க டனித்தனி யேறி
வத்து நிலைதெரி மறையவன் மாணவன்
சித்தர் முனிவர் தேர்ந்த நூலறி
வித்தக னாயுள் வேதமு ணர்ந்தவன்
மாணா ராயணச் சாமி மாதவன்
றேனோர் பாகிற் றேருமமு தெனும்
சிரப்பொருள் வேதந் தேர்தரு பொருளைக்
கரப்பொரு ளெல்லியங் கனியெனக் காட்டும்
அழகிய வனுபவா நந்த தீபிகை
பழகிய வனுபவத் தோர்பண் பெறவே
இழைத் தளித்தவ னெம்மனோர் சாற்றித்
தழைக்க வுலகந் தான்மகிழ்ந் திடவே.

---

திருவருட் பிரகாச வள்ளலார மசபனரும்
மோட்சசாதன முதலிய நூல்களினா சிரியரு மாகிய
காஞ்சீபுரம்-நிச்சல-இராமானந்த சுவாமிகளவர்கள்
இயற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீரிலகும் பொதிகைமலைச் சித்தர்தம் மரபுதித்து திகழும் மோனப்
பேரிலகுந் தெருள்ஞானா னந்தகுரு நாதமுனிப் பெம்மான் றுட்க
ளேரிலகு மகத்திருந்தித் துவிதமரு பெருவாழ்வை யெளிதி லுற்ற
நேரிலகு மத்துவித சோளரியென் றறிஞர்புகழ் நிலவப் பெற்றோன்.

பொன்னிடத்தே பணிகளெலா முதித்தொடுங்கு முறைபோல பூத மாதி
யென்னிடத்தே யுதித்தொடுங்கு மெனக்கயலொன் றின்றென்பா னிலையிற்
சோதி, தன்னிடத்தே யமர்ந்ததுவாந் தாமுணர்ந்தோ னெவ்வுயிருந் தன்போ
ல்வீடு, மன்னிடவே யுறவுவக்கத் தேடியிடுங் காகமென வழங்கும் வள்ளல்.

அருள்விளங்கு மறையமுதை யுபநிடதக் குடநிறப்பி யான்றோர் வைக்கத்
தெருள்விளங்கு ஞானவனன் மூட்டிநவ நீதமதைத் திரட்டிக் காய்ச்சிப்
பொருள்விளங்க நிலைகொளுநற் றீபிகையொன் றுகந்தளித்தான் புவியின்
மாந்தர், மருள்விளங்கு மனமகன்று தனையுணர்ந்த நிதசுகம் மருவத்தானே

தானாகுந் தனக்குநிகர் தனையன்றித் துவிதமிலைத் தன்னைக் காண
தேனாறு பாயுமருட் டேசிகன்றா ளடைந்துய்யத் தெளிவீ றொன்றிப்
பானாறு மநுபவா நந்ததீ பிகையின்முதற் பாகஞ் சொல்லுங்
கோனாகி யொளிர்நாரா யணசாமி நாயகன்சீர் குறிக்கற் பாற்றே.

---

இஃது

சென்னைமாநகரம் ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ம-ள-ள-ஸ்ரீ, கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வாவிமலர் வண்டென்ன வாங்காது விடயத்து மன்னி யோடித்
தாவிவரு மகமகற்றித் தானேதா னாய்நின்ற சதுரப் பாட்டி
னாவியம்போ லொளிர்நாரா யணசாமி யுரைகலந்த வுணர்வு நூலென்
னேவித்து நேரார்தஞ் சமயமத மாவொழிக்கு மியல்பு மிக்கான்.

பத்தர்தமக் கருள்புரியும் பான்மையினான் பண்டைமறைப் பயன்கடோன்ற
நித்தநிமி டாநந்த நிலைநிற்கு நெறியெளிதாய் நிலவச் சொற்க
ளொத்துலவ வனுபவா நந்ததீ பிகையளித்தா னுலகம் போற்றி
வித்தமதின் வேறுபடு பொய்யவிச்சை யிருடொலைய வியப்ப மாதோ.

---

பிரமபீடம் ஸம்பத்கிரி அச்சுததாஸ சுவாமிகள் மாணாக்கர்
எலப்பாக்கம்
இராமசந்திர குருஸாமி தாசரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

சீராய நான்மறையுந் தெரிவறிய பரம்பொருளாத் திகழ்வான் வேண்டிப்
பேராய நாதமுனிப் பெம்மான்றன் திருவருளைப் பெருமா யோகி
பூராய நல்லனுப வானந்த தீபிகையாம் பொருவின் மெய்ந்நூ
னாராய னாக்குவயப் பெருந்தவத்தோ னுலகுவப்ப நவின்றான மன்றே.

---

திருமயிலை வித்வான், சண்முகம்பிள்ளை யவர்கள் மாணாக்கர்
கா. நமசிவாய முதலியார் அவர்கள் பாடியது
கலித்துறை.

முப்பாலி னும்மறி தற்கரி தாக மொழியவரும்
அப்பாலை யப்பாலி னுள்ளா ரனைவரு மார்ந்திடவே
ஒப்பா லநுபவா நந்தநற் றீபிகை யோர்ந்தளித்தான்
தப்பாப் புகழ்பெறு நாரணச் சாமி தயாநிதியே.

மஹா-ள-ள-ஸ்ரீ, புரசை அஷ்டாவதானம்
மஹாவித்வான் சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கர் திருமயிலை
மஹா-ள-ள-ஸ்ரீ சண்முகம்பிள்ளை யவர்கள்பாடிய
அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

சீர்பூத்த வருமறையின் செம்பயனை நாதமுனித் தேசி கேசன்
கார்பூத்த கரத்தினுணர்த் திடநாரா யணசாமி கவர்ந்தெம் போல்வார்.
பார்பூத்த பவத்துழலா தனுபவா நந்தநீ பிகையாம் பண்பார்
பேர்பூத்த நூலெனச் செய் துதவினன்மற் றவன்கருணை பேசற் பாற்றே.

---

வித்வான் தசாவதானம் மஹா-ள-ள-ஸ்ரீ, பேறை
ஜகநாதபிள்ளை யவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

அருநாத முனிக்களிப்பார்க் கதனூடு மறைமுடிவு மணியாப்போடு
பொருநாத முனின்சொல்லும் விரவனுப வாநந்தம் பொருணூற்சொற்றாய்
வருநாத முனியடிக ளடிபரசி யெவ்வுளூர் வயிற்பா வன்மை
தருநாத முனிலை கைம்மா றருணாரா யணசாமி தகயை நீயே.

---

பிரமபீடம் ஸம்பத்கிரி
அச்சுததாஸ ஸ்வாமிகளவர்களியற்றிய
எண்சீர்க்கழி நெடிலடி விருத்தம்.

வேதமுடி வாயவிழுப் பொருளாஞ் சோதி
விளங்குநிலை யுளங்குளிர விமலர்க் கோது
நாதமுனி யருட்குரவ னுபய பாத
நாடினனுத் தவம்புரிய நலத்தின் மிக்கா
னீதமுட னுலகமுயப் பரிவாற் சொற்றா
னிகழனுப வாநந்த தீபி கைப்பேர்
போதமுற மரும்பனுவ னிகாற் றேங்கும்
புகழ்நாரா யணசாமிப் புனிதன் மாதோ.

---

தத்துவ விவேசினி
மஹா-ள-ள-ஸ்ரீ; பு. முனிசாமிநாயகர் அவர்கள் இயற்றிய

# சிறப்புப்பாயிரம்

ஆசிரியப்பா.

உலகுயிர் புரக்கு மொருதனி முதலே
யலகிலாப் பரம்பொரு ளாகுவ தெனவே
நிலவிய ஞான நிதியுடை யொருவன்
தலைமைசே ரிராய வேலூர் தனிலே
பலரு தனை யெனப் பாவலர் மதிக்க
விலங்கிய விலகரு மையநா யகனெனும்

பெயர்புனைந் தில்லறம் பேணுறு வோன்வயின்
துயரிரு ளிரிந்தே தூய்மை மல்க
நயனுடை நாரண சாமிநா யகனெனும்
பெயருடைப் பெரியோன் பூமியி லுதித்தே
ஆதவ னெனவே யவனியோர் துதிக்கும்
நாதமு னீஸ்வர னல்லருள் புனைந்து
கலைபல வாய்ந்து கலைவலோர் துதிக்க
நிலைபெறு நீணில நீடு வாழ்த்தத்
தலைமையா மநுபவா நந்ததீ பிகையென
உயர்வொப் பில்லா வுத்தம நூலிதை
அயர்வற யாவரு மனுபவித் தின்பம்
அடைவுறும் பொருட்டே யமைத்தனன் றீஞ்சொல்
நடைதொடை யாதிய நயம்பெறத் தானே.

---

உரையாசிரியருக்களித்த

## சாத்துகவிகள்.

சென்னைக் கிறிஸ்டியன்காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதர்
உரையாசிரியர் சைவப்பிரசாரகர்
ம-ள-ள-ஸ்ரீ ஈக்காடு-இரத்தினவேலு முதலியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அருமறைத் துணி நான்குமா வாக்கிய மவனியிற் றெளிந்தோத
வருமவர்க் குணர்த் துறுமொரு தொன்மைசேர் மரபென வயங்குற்ற
பொருவில் சீர்ச்சுகீ யானந்த யோகியாம் பெரதியமா மலைச்சித்தர்
தருமலர்ப்பதந் துதிசெய்நா ராயண சாமியாங் குரவன்றான்.

கற்ற நூற்பொருள் கவினுறத் தன்புடை கற்பவர் தமக்கெல்லாம்
உற்ற தந்தைதாய் மைந்தருக் கமைத்திடு முயர்நிதி தமையானு
முற்ற வேயமை நூலென வன்னவன் முடித்திடு பலவற்றுள்
பெற்ற சீரநு பவாநந்த தீபிகைப் பேரொடு மொன்றுண்டால்.

அன்ன நூலினை யன்னவன் றண்ணடி யடைந்தமா ணவர்தம்மில்
முன்ன னூல்பயின் மாணவர் தலைவனும் முதிர்ந்தவத் துவிதக்கூழ்
சொன்ன லம்பெற வுன்னினர் செவியுறத் துளிர்த்திடப் பிரசங்க
மென்ன வேதிய லாஜிகல் சைஹஸ்கூ லினிலியற் றிடுவோனும்.

சூரி யன்றிசை மாறினுந் தொகைவிடாத் தொன்மர புதித்தோனும்
ஆரி யன்புடை யன்புசான் றவன்பணி யநுதினம் புரிவோனும்
வேரி யந்தொடை புனைஜய ராமவேள் விளங்குறு புலவோனும்
கூரி யங்குளத் தறிஞரோ ருரைவரை குறிப்பினின் றவனுகி.

உண்ட பல்பொரு டேக்கெடுத் தாலென வுரவனே செவியூட்டக்
கண்ட செம்பொருள் கண்டெனக் கண்டவர் கண்மனஞ் செவிமாந்த
விண்ட நல்லுரை விசேடமு முதாரண விளக்கமுந் துளக்குற்றே.
கொண்ட தனைய முதலிய விளக்கியே குயிற்றியீந் தனன்மாதோ.

ஷை முதலியாரவர்கள் ஜேஷ்டகுமாரர் வித்துவான்
ஸ்ரீமான் ஈகை-சபாபதிமுதலியா ரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நாராய ணஸ்வாமி தேசிகன்றன் பண்டைநா ணவில லுற்ற
பூராய மானவநு பவானந்த தீபிகைக்குப் புகழி னோடு
சீரான நச்சினுக் கினியனென வுரைபகர்ந்தான் சிறந்த வன்பர்
லேராள மாய்க்கல்வி கற்றஜய ராமனெனு மியல்வ லோனே.

---

சென்னை கோ-முனிசாமிபிள்ளையவர்கள் கூறிய
பன்னிருசீர் விருத்தம்.

ஒளியோசை சுவையூறு நாற்றவகை யுணர்ந்தனு ழலகு மேனை
யுயர்பரமுந் தன்னினைவே யநந்நினைவுந் தன்னிலெனு முயர்வா லஃதுங்
களிஜீவ ரிவையடக்க மெனத்தெளிந்த தன்மையினாற் கழறு மூன்றுங்
கண்டுவந்த நந்நியமாய்ப் படிநின்று விபரீதகயவ ராகுங்
களிறழித்த வபேதநிலை யேருவ னெளியேன்றன் கசடு நீத்த
கண்யகுரு நாராய ணஸ்வாமி பெரியோன்முன் கருணை நாடி
யளிநிறைந்த ஸ்வாநுபவத் துதித்தவற்றை யுலகுய்ய வடுக்கி மேலா
மநுபவானந்ததீ பிகையென்னு நாமமுட னளித்த வாதி

திருமுறையி னுட்கருத்தை யெளிதுணர்ந்தில் லாதவிடர் தீர்த்து சொந்த
தெவிட்டாத வின்பநிலை யமர்வதரி தெனவுமிதாற் செல்வ வாசா
னொருநாம மறையுமென வையுற்று நிலைநாட்ட வோர்ந்து மன்பா
லுள்ளதனை யுள்ளபடி யவன்மாட்டு கேட்டவண முயர்ந்த நூலி
னரும்பதங்க ளுரைதந்தா னென்னரிய நட்பேற்று னவனி போற்ற
வவதரித்த தேசிகன்றன் முதற்சீடன் மக்களெலா மைக்ய முற்று
கருப்பிணியை நீக்கிடுவான் பேதமொழி வீட்டுவதிற் கணக்கன் றக்க
கல்விநிறை பு. ஜயராம் பிள்ளைதனை குருபக்தி கணித்தற் பாற்றே.

---

சென்னைப் "பூலோகவியாஸன்" உபபத்திராதிபரும்
சோடச அவதானம்
ஸ்ரீலஸ்ரீ பூஞ்சோலை-முத்துவீர நாவலரவர்கள் மாணாக்கருமாகிய
S. வேதமாணிக்க ரவர்கள்கூறிய கலித்துறை.

அவாவறுத் தாட்குரு நாராய ணச்சாமி யார்ந்தவநு
பவாநந்த தீபிகை முன்முறைக் காணப் பயன்றரு நன்
னவாநந்த சீருரை செய்தளித் தேபுகழ் நாடினனால்
தவாநந்த முற்ற ஜயராம னென்னுந் தயாநிதியே.

---

சென்னைப் "பூலோகவியாஸன்" பத்திராதிபரும்
ல-நாராயணதேசிகர் மாணவருமாகிய சோடசவதானம்
பூஞ்சோலை-முத்துவீர நாவலரவர்கள் இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

ஆகமங்க ளெல்லா மாய்ந்தறியா மெய்ஞ்ஞானப்
போகமதை நெஞ்சப் புலன்வழியே புண்ணி

நீங்காத வானந்த நிட்டையுற்று நல்விரக்கப்
பாங்கா லடியவர்தம் பாசத் தளையறுப்பான்
மன்னும் பொதிகை மலையேவுஞ் சித்தரிரு
பொன்னடிக்கா ளாகிப் புகழ்நாட்டு நாதமுனி
செய்யவருண் மாணவகன் சென்னை இந்துத் யாலஜிகல்
ஹைஸ்கூ லிற்பலநா ளன்பர்க்கு நாயகமாய்
சாற்றருமத் வைதப்ர சங்க மழைபொழிந்து
மாற்றரிய மெய்ப்புகழை மாநிலத்தே யுற்றவன்கோ
ளாருந் துயர வருங்கடலை நீந்தியினைப்
பேறுங் கரைசேர்க்கும் பெற்றியுடை வங்கமன்னான்
சீராரு மென்றனருந் தேசிகன்கோ விந்திரன்வாழ்
பாராரும் போற்றுமுயர் பண்பினன்சொல் வேதாந்த
வித்துவசி ரோமணியான் வித்தகநா ராயணசா
மித்தகைபே ருற்ற விழுப்புலவன் முற்றுமன்பாற்
செய்யனுப வாநந்த தீபிகைமு றைமூன்று
ளுய்யுமுதற் றீபிகைக்கிங் கோருரையா யிலக்கமுட
னின்சுவையான் மற்றோ ரெளிதினுணர்ந் தந்நூற்சுண்
மன்சுவையா வுந்தெளிந்து மாண்பெய்த வேவருத்தான்
அன்னவனு ரென்னிலந்நூ லாசிரியர்க் கன்பாகத்
துன்னு முதற்சீடன் தூய புலிப்பாக்கம்
விஞ்சைபெறுங் கீர்த்தி வியாக்கிரபா தக்கோத்ர
செஞ்சௌரப் ராமண சிர்கருணீ கக்குலத்தான்
பணைபார் சிவன்வாயல் பச்சையப்பக் கோன்றந்த
நண்பார் ஜயராம நாமத்தான் வேதாந்த
சாரத்தை யூட்டுந் தகையுள்ளா னுத்தமவி
சாரத்தான் மேனிலையைச் சாதிப்பா னிச்சிறந்தோன்
மெய்யுரையை நோக்கும் விருப்பினர்முன் வீண்வாதப்
பொய்யுரைக ளொன்றும் புகல்.

---

## நூலாசிரியர் அவையடக்கம்.

முன்பி னிலையாத மூடமதி கொண்டழியாத்
தன்மையன் றன்மைமுற்றச் சாற்றுவரா—ரென்சொற்
பிழையாய வெண்ணாற் பெரியோரின் நூலிற்
கழிவவெவை நிற்பவெவை காண்.

---

## உரையாசிரியர் அவையடக்கம்.

அனுபவா நந்தமுற வாந்தீபி கையை
யனுபவ ரேனெவ்வா றாய்ந்தே—னுவறியா
நாரா யணசாமி நாமத்தார் தன்னடிமை
நேரா யுரைபுகல நேர்ந்து.

—()—

உ

கணபதி துணை.

# அநுபவாநந்த தீபிகை.

## முதற்றிருமுறை.

மூலமும் உரையும்.

### அடைக்கலப் பத்து.

உலகொடுயிர் பரமாகி யொளிருமொரு பொருளை
யுவமைகடந் தப்பாலுக் கப்பாலாம் பொருளைக்
கலகமிடுங் காமாதி பகைஞர்வலைப் பட்டுக்
கலக்கமுறு முயிர்ப்பறவை களைகளையும் பொருளைப்
பலகலையின் முடிவின்முடி வாயிலகு பொருளைப்
பாவபா வங்கடந்தோர் பங்கிலுறை பொருளை
யலகறுமா நந்தநிறை வேவடிவாம் பொருளை
யருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இதன்பொருள்) உலகொடு—உலகத்துடன், உயிர்—உயிரும், பரமாகி—பரமுமாகி, ஒளிரும்—விளங்குகின்ற, ஒருபொருளை— அத்விதீயவஸ்துவை, உவமைகடந்து—ஒப்பற்று, அப்பாலுக்கப்பாலாம்—முடிவின்முடிவாம், பொருளை—வஸ்துவை, கலகமிடும்—கலகம்விளைக்கும், காமாதி—காமமுதலாகிய, பகைஞர்—(ஆறு)பகைவரது, வலை—வலையில், பட்டு—அகப்பட்டு, கலக்கம்உறும்—கலக்கமுற்ற, உயிர்—உயிரென்னும், பறவை—பட்சியினது, களைகளையும்—ஆயாசத்தை நீக்கும், பொருளை—வஸ்துவை, பலகலையின்—ஸகல சாஸ்திரங்களின், முடிவின்முடிவாய்—வாக்கியார்த்தத்தின் லக்ஷியார்த்தமாய், இலகு பொருளை—பிரகாசிக்கும்வஸ்துவை, பாவஅபாவம்—உண்மை இன்மைகளை, கடந்தோர்பங்கில்—கடந்தவர்களிடத்தில், உறைபொருளை—வசிக்கும் வஸ்துவை, அலகுஅறும்—எல்லையில்லாத, ஆநந்தநிறைவே—பூரணஇன்பமே, வடிவாம்—சொரூபமாகவுடைய, பொருளை—வஸ்துவை, அருளுருவை—கிருபாசொரூபத்தை, மருளகமே—(நாமரூபங்களால்) மயங்குகின்றவென்மனமே, அடைக்கலம் — சரணாகதியை, அடைக — அடைவாயாக. (ஏ-ஈற்றசை) (என்றவாறு) 1.

அருவாகி யுருவாகி யருவுருவு மாகி
யன்றாகிச் சாக்கியா மறிவாகும் பொருளைக்
குருவாக வந்தடிமை கொண்டெளிமை நீங்கக்
குணங்குறிக ளறுதன்னைக் கோடன்முறை காட்டித்
தெருளாக்கு மொருபொருளை யன்பரக மூறுத்
தித்திக்கு மழிவிலாத் தெள்ளமுதாம் பொருளை
யரியாகி யரனாகி யயனாகும் பொருளை
யருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே (அழிபொருளாசையால்) மயங்குமென்மனமே அருவாகி-ரூபமற்ற வஸ்துக்களாகியும், உருவாகி-ரூபமாதிகுணங்களுடைய வஸ்துக்களாகியும், அருவு உருவுமாகி-பிராதிபாசிகப் பொருள்களாகியும், அன்றாகி-இம்மூன்றுமல்லாததாகியும், சாக்கியாம்-சாட்சியாகிய, அறிவாகும்பொருளை-ஞானமேவடிவாகிய வஸ்துவை, குருவாகவந்து-குருவடிவாகத்தோற்றி, அடிமைகொண்டு-(பக்குவியை) யடிமையாக்கி, எளிமைநீங்க-அறியாமைதீர, குணம்குறிகள்-எவ்விதகுணமும் எவ்விதகுறிகளும், அறுதன்னை-அற்றதன்னை, கோடன்முறை-கொள்ளும்முறையை, காட்டி-தெரிவித்து, தெருளாக்கும்-தெளிவாக்கும், ஒருபொருளை-ஒப்பற்றவஸ்துவை, அன்பர் அகம்-அன்பர்மனதில், ஊறு-பெருக்கெடுத்து, தித்திக்கும்-உருசைதரும், அழிவிலா-நாசமிலாத, தெள்ளமுதாம்-தெளிவாகிய அமுதுபோன்ற, பொருளை-வஸ்துவை, அரியாகி-(இரட்சிக்கும்)விஷ்ணுவாகியும், அரனாகி-அழிக்கும் (உருத்திரனாகியும்) அயனாகும்-(சிருட்டிக்கும்)பிரமனும் ஆகும், பொருளை-வஸ்துவை, அருளுருவை-அன்பேயுருவாகியவஸ்துவை, அடைக்கலம்-சரணாகதி, அடைக-அடைவாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று) 2.

என்றுமொரு படித்தாகித் தன்னையன்றி வேறொன்
றிலாதிருக்கச் சோதனையி லெஞ்சிநிற்கும் பொருளைப்
பொன்னையன்றிப் பூடணங்கட் குருவொடுபே ரல்லாற்
பொருளிலா வாறேபோற் புனிதமயப் பொருளை
யென்னையன்றி வேறாகா திலகிடுமெய்ப் பொருளை
யிரவுபக லறநின்றார்க் கின்பமயப் பொருளை
யன்னையொடு தமர்தார மாகவலர் பொருளை
யருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே(மண்பெண் பொன்னாசையால்) மயங்கும் மனமே, பொன்னையன்றி-சொர்னத்தை யல்லாமல், பூடணங்கட்கு-பணிதிகளுக்கு உருவு ஒடு-உருவத்துடன், பேரல்லால்-பேர்மாத்திர பேதமேயல்லாமல்

பொருள்-(முதற்காரணப்) பொருள், இலாவாறுபோல்-வேறாயின்றாவது போல, சோதனையில்-ஆராய்ச்சியில், தன்னையன்றி-தன்னையல்லாது, வேறு ஒன்றும்-வேறாகவோர்சத்தும், இலாதிருக்க-இன்மையாக, என்றும்-முக்காலத்தினும், ஓர்படித்துஆகி-திரியாத சத்தாமாத்திரமாகி, எஞ்சிநிற்கும்-ஸேடித்துநிற்கும், பொருளை-வஸ்துவை, புனிதமயம்-பரிசுத்தமயமாகும், பொருளை-வஸ்துவை, என்னையன்றி-யானெனும் பதப்பொருளையன்றி, வேறு ஆகாது-அன்னியமாகாமல், இலகிடும்-விளங்குகின்ற, மெய்ப்பொருளை-ஆஸ்தியாம்பொருளை, இரவுபகல்-ஸகலகேவலங்கள், அறநின்றார்க்கு-நீங்கினின்றவர்களுக்கு, இன்பவயம்-இன்பத்தை வசமாக்கும், பொருளை-வஸ்துவை, அன்னையொடு-தாயுடன், தமர்தாரம்ஆக-தம்மவர்களும் தாரமுமாக, அலர்-விகசிக்கும், பொருளை-வஸ்துவை, அருளுருவை - அன்புருவமாகிய வஸ்துவை, அடைக்கலம்-சரணாகதி, அடைக-அடைவாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று) 3.

கண்ணாகிக் கண்டனக்குக் கண்ணாகிக் காண்பான்
காட்சியாங் காண்பொருளு மாகியவொண் பொருளை
மண்ணாதி பூதபர வணுக்களையாண் பெண்ணாய்
மனிதரொடு தேவர்விலங் காதியெனக் காட்டி
யுண்ணாட வைத்தமா யையைமாய மாக்கு [ருளை
மொருபொருளாம் விழுப்பொருளை யுண்டிலையாம் பொ
யண்ணாவென் னரசேயென் றரற்றவரு பொருளை
யருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே(தோற்றமறை பொருளைச்சத்தென)மயங்கு மென்மனமே, அருளுருவை-கிருபாசொரூப மாகிய வஸ்துவை, கண்ணாகி-நயனமாகியும், கண்டனக்கு-பார்க்குங் கண்களுக்கு, கண்ணாகி-அந்தக்கரணமாகியும், காண்பான்-அறிவானாகிய ஜீவனும், காட்சியாம்-அறிதலெனுந் தொழிலோடு, காண்பொருளும்-அறியப்படும் பொருளும், ஆகியவொண் பொருளை-ஆகிய சுயம்பிரகாசத் தன்மையையுடைய வஸ்துவை, மண்ணாதி-பிரிதிவி முதலாகிய, பூத-பூதங்களாகும், பரவணுக்களை-பரமாணுக்களை, ஆண்பெண்ணாய்-ஆணாகவும் பெண்ணாகவும், மனிதரொடு-மனிதஜாதியோடு, தேவர்-தேவர்கூட்டமும், விலங்காதியென-மிருகமாதி எழுவகைக்கூட்டமுமாக, காட்டி-தோற்றுவித்து, உள்-மனதில், நாடவைத்த (உண்மைப் பொருள்களென்று அவைகளைக்) கருதச்செய்யும், மாயையை-பின்னாசக்தியை, மாயமாக்கும்-இலாதென வொழிக்கும், ஒருபொருளாம்-அத்விதீயமாம், விழுப்பொருளை-அகண்டயிக்கிய ரசமாம் விபுவை, உண்டு இலையாம்-உண்டாயிருந்தும் இல்லையென்கிற வழக்குக்கிடந்தரும், பொருளை-வஸ்துவை, என்-என்னுடைய, அண்ணா-உடன்பிறப்பே அரசேயென்று-ஆளு

தி நின்றென்னை யாட்கொளும் பொருளே யென, ஆற்ற-ஒருவனன்பு கொண்டழைக்க,வரு-பிரத்தியட்சமாகும், பொருளே-வஸ்துவை,அடைக்கலம்-சரணாகதி, அடைக-அடைவாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று) 4

ஒன்றாகிப் பலவாகி யொப்புயர்வு மில்லா
வொளியாகி வெளியாகி யோதரிய பொருளை
நன்றாய தன்றாகி நாளையின் றவனாய்
நானாகி நீயாகி நாதமொடு விந்தா
யன்றாகி யாமலவெ னும்பொருளு மாகி
யதீதமென் றருமறைக ளாய்ந்துரையி ழக்கார்க்
கன்றால மர்ந்தருள வந்தகுரு வடிவா
மருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே(இன்மை உண்மைப்பொருளாய்க் கொண்டு) மயங்கும் மனமே, ஒன்றாகி-ஒரேபொருளாகியும், பலவாகி-பலபொருளாகக் காணப்பட்டு,ஒப்பும்-சமானமும், உயர்வும்-உயர்ச்சியும்,இல்லா ஒளியாகி-இல்லாதசுயம்பிரகாசமாகி, வெளியாகி-சிதாகாசமாய்.ஓதரிய-பிறரறிந்துரைக்கலாகா, பொருளை-வஸ்துவை,நன்றாய்-நன்மையாகியும,அது,அன்றாகி-தீமையாகியும், நாளையின்றாய்-முக்காலமாகியும், அவனாய்-அவனவளவரவையது வெனும் படர்க்கைபொருளாகியும், நானாகி நீயாகி-தன்மை முன்னிலைப் பொருளாகியும், நாதமொடு-(அகார - உகார- மகார - வடிவாகிய)பிரணவமாகியும், விந்தாய்-பிரணவத்திற் கதிட்டானபொருளாகியும், அன்றாகி(ஆரோபமாகத் தோற்றுவன கற்பனையாகையால் இவையாவும்) அல்லாததாகி, ஆம்-அதிஷ்டானமே யாம் என, அல-(அதிஷ்டானத்தினும்வேறுபொருள்)ல, எனும் பொருளும் ஆகி-என்றுரைக்கும் வஸ்தும் ஆகிய பொருளை, அருமறைகள் - அருமையாகிய வேதங்களை, ஆய்ந்தும்-விசாரித்தும், உரை-வாய்வாதம், இழக்கார்க்கு-விட்டு நீங்கா ஜனகாதிகளுக்கு, அன்று ஆல் அமர்ந்து,முற்காலத்தில்கல்லாலடியிலிருந்து, அதீதமென்று-(குணார்த்தாவாத தத்துவ திருஷ்டியா லல்லாமல் பூதார்த்தசொல்வாதத்திற்)கெட்டாதென்று அருள்அவர்களுண்மையைககாட்ட,வந்த-திருவுருக்கொண்டெழுந்த,குருவடிவாம்-குருக்கோலமாம்,அருளுருவை-கிருபையேவடிவாகும்வஸ்துவை,அடைக்கலம்-சரணாகதி,அடைக-அடைவாயாக (ஏ-ஈற்றசை) எ-று 5

விண்ணாதி தருஞான விண்ணாகும் பொருளை
வேதாந்த வாச்சியத்திற் கிலக்கியமாம் பொருளைத்
தண்ணாருஞ் சாந்ததே வதையாகும் பொருளைச்
சராசரப் படிவங்க டங்குபடப் பொருளை

யெண்ணாத வெண்ணிமய லாலுள்ளு டைந்தாங்
கிடைந்தார்த மைச்சேர வெளிதின்வரு பொருளை
யண்ணலாம் பொருளேதிங் கதுவாகும் பொருளை
யருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே (உனது சொருப முணராது) மயங்கும் மனமே, விண்ணாதி—ஆகாய முதலாகிய பூதங்களும் அவற்றின் கலப்பாலாகிய பௌதிக சரீர சராசரப் பொருள்களும், தரு—(தனது பின்னாசக்தியால்)கொடுக்கின்ற, ஞானவிண்ணாகும்—சிதாகாசமாகும், பொருளை—வஸ்துவை, வேதாந்த வாச்சியத்திற்கு-வேத முடிவாகிய மகா வாக்கியங்களுக்கு, இலக்கியமாம்—இலட்சியார்த்தமாகிய, பொருளை—வஸ்துவை, தண்ணாரும்—பிரியமார்ந்த, சாந்த தேவதையாகும் பொருளை—உபசாந்த துவிதமற்ற மகிமை வடிவாகும் வஸ்துவை, சர அசரபடிவங்கள்—சராசர சித்திரங்கள், தங்கு—தங்குதற்கிடமாகிய படப்பொருளை—சித்திர வஸ்திரம் போன்ற வஸ்துவை, மயலால்—அஞ்ஞானத்தினால், எண்ணாத வெண்ணி—பெரியோர்கள் பொருளென்று உன்னாத தோற்றப்பொருள்களைமெய்ப்பொருளென வெண்ணி, உள்ளுடைந்து—அகநொந்து, இடைந்தார்தமை—விட்டு நீங்கினவரை, சேர—கலக்க, எளிதில் வரு—சுலபமாகச் சாக்ஷாத்கரிக்கச் செய்யும், பொருளை—வஸ்துவை, அண்ணலாம் (பொருளேது—மாண்டார்சென்றடைவதாகபரோக்ஷமாகக்கூறும்) பெருமையுடைய வஸ்து வெதுவோ, இங்கதுவாகும் பொருளை—இருந்திடத்திற்றானே அதுவாகவிளங்கும்பொருளை, அருளுருவை—அத்தகையகிருபை வடிவை, அடைக்கலம் — சரணாகதி, அடைக — அடைவாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று) 6.

மனனமெனுந் திரைமோதி மூவாசை நீரான்
மதர்த்துமா மாயையெனு மாழமுடைத் தாய
ஜனனசா கரம்வறள வடவையன லாகுஞ்
சதோதயப் பொருளைமன விருளகல ஞான
வினனான பொருளவித் தாதேகம் வீழ்வா
னெழுந்துரிய வருளைமல மற்றார்தந் தெருளை
யநகனச் சுதனமல னும்பொருளை நீங்கா
வருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே—மயக்கி லாழ்ந்த மனமே, மனனமெனும் (சங்கல்பம், வேட்கை—அனுசாந்தனமெனு மூவகைச்)சிந்தனை என்கிற, திரைமோதி—அலைகளை வீசி, மூவாசை நீரால்—மண்-பெண்-பொன்னெனும் மூவாசை நீரினால், மதர்த்து—நிறைவுற்று, மாமாயையெனும் (உலக மிப்படியுண்டாயதென நிச்சயிக்கக் கூடாத)பெரிய மயக்கமெனும், ஆழமுடைத்து

ஆய-அகாதமுடையதான, ஜனன சாகரம்-பிறவிக்கடல், வறள-சுவரிப் போக, வடவையனலாகும்-ஊழித்தீக்கொப்பாய், சத்உதயப்பொருளை-இருந்து விளங்கும் வஸ்துவை, மலம்-(விசாரமற்ற) மனத்தால் விளையும், இருள்-அஞ்ஞான விருளானது, அகல-நீங்க, ஞான இனன் ஆன-ஞான சூரியனாகிய, பொருளை-வஸ்துவை, அவித்தாதேகம் வீழ்வான்-தனதெதார்த்த மறியாவாதனையால் வந்த தேகம் கரைய, எழுந்தரிய வருளை-பூரணமாய் வியாபிக்கும்ஆதார ஞானகிருபா சொருபத்தை, மலமற்றார்தம்-ஆணவம்காமியம்மாய்கையென்னும்மும்மலங்களும் நீங்கினோரது, தெருளை-தெளிவேவடிவாகும் வஸ்துவை, அநகன்-பாவமற்றவனும், அச்சுதன்-நாசமற்றவனும், அமலன்-நிர்மலனும், ஆம்பொருளை-ஆகிய வஸ்துவை, நீங்கா-நீங்காத, அருளுருவை-அன்புருவை, அடைக்கலம்-சரணாகதி, அடைக-அடைவாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று)

7

கடவல்புவி யெண்குணமு மறிவிக்க வூறாய்க்
　களேபரமே யிடமாகிக் காதாகி யோசைக்
கிடனா சுவையாறு மறிநாவு மாகி
　யிருகந்த முணருமூக் காகியை வண்ணந்
திடனாக வறியவொளி கண்ணாகி மனமாய்ச்
　சீவனாய்க் கூடஸ்த னாய்ச்சிவனு மாகி
யடியாய சச்சிதா னந்தபர மாகு
　மருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே (முடிவறியாது)மயங்கும் மனமே, களேபரமே-சரீரமே, இடமாகி-இருப்பிடமாய்க் கொண்டு, (புவி-சித்விலாசத்தோற்றமாகிய) உலகத்தை,கடவல்-செலுத்தும் பொருட்டு, எண்குணமும் (வெம்மை குளிர்ச்சி இளகல் கடினம் கனம் லேசு, சுரசுரப்பு-வழுவழுப்பு எனும்)பொருட்குணமெட்டையும், அறிவிக்க-தெரிவிக்க, ஊறாய்-ஸ்பரிச ஞானமாகியும், காதாகி-காதேயிடமாக நின்று, ஓசைக்கு (கானம் வசை சொற்பொருளென்னும் மூவகை பேத மறியும்) சத்த ஞானமாகியும், நா-நாவிடமாகக் கொண்டு, ஆறும் (உப்பு-புளிப்பு-தித்திப்பு-கசப்பு-உவர்ப்பு-துவர்ப்பு) என்னும் ஆறுவித உருசியையும், அறிசுவை ஆகி-அறிகிய சுவைஞானமாகியும், மூக்கு-மூக்கிடமாக நின்று, இரு-இருமணமும்,உணரும்-அறியும்,கந்தமாகி-வாச ஞானமாகியும்,கண்-கண்களிடமாக நின்று, ஐவண்ணம் (வெண்மை-கருமை-செம்மை-பொன்மை-பசுமை) யென்னுமைந்து வண்ணங்களையும், திடனாக-நன்றாக, அறிய-தெரிவிக்க, ஒளியாகி-ரூபஞானமாகியும், மனமாய்-(இவற்றிற்காதாரமாகிய) மனமாகியும், ஜீவனாகி-(மேற்சொல்லியவற்றால் உலகசுக,துக்கானுபவங் கொள்ளும்) உயிராய், கூடஸ்தனாய்-பிரத்யகாத்மாவாய், சிவனுமாகி-(உயிர்க்குதனுகரண புவனபோகம் வினைக்

டாகவளிக்கும்) ஈசனும், அடியாய-(இவற்றிற்கெல்லா) மாதாரமாகிய,சச்சி தாநந்த•பரமாகும்—சத்து-சித்து-ஆநந்தமெனும் அவிகிருத குணங்களையுடைய உயர்ந்த வஸ்துவாகும், அருளுருவை—கிருபா சொருபத்தை, அடைக்கலம்—சரணாகதி, அடைக—அடைவாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று) 8.

பிறவாமை யிறவாமை பெயராமை பெற்றுப்
பிறங்குமன மாயையவை யேற்றிநட மாட்டி
விறலோடு கண்டுகளி கொள்பொருளை வேத
விதிநிடே தங்களற வித்தகரு ளத்திற்
கறனாய றப்பயனு மாகியழி வில்லா
வகண்டசின் மயமாகு மாதியாம் பொருளை
யறயாவை யும்விடுத் தார்தமை யருத
வருளுருவை மருளகமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே(அழிபொருளாசையால்) மயங்கும் மனமே, பிறவாமை—பிறவாமையும், இறவாமை—மரணமின்மையும், பெயராமை—நிலைபிரியாமையும், பெற்று—அடைந்துபூரணமாகி, பிறங்கு—வித்தையவித்தை வழிவாய்பிரகாசிக்கும், மனம்—மனத்தினை, மாயை அவை—மாயையெனுஞ் சபையில், ஏற்றி—ஏறச்செய்து, நடம்—ஜனனமரண சுகதுக்கக்கூத்து, ஆட்டி—புரிவித்து, விறலோடு—ஜயத்துடன், கண்டு—பார்த்து, களிகொள் பொருளை—புன்னகை கொள்ளும் வஸ்துவை, வேதம்—வேதத்தில் (கூறும்) விதிநிடேதங்கள்—விதிவிலக்குகள், அறவித்தகர்-விட்ட பெரியோர்கள், உளத்திற்கு—மனதிற்கு, அறனாய்—சகலத்தியாக தருமமாய், அறப்பயனு மாகி—அத்துறவறப்பிரயோசனமுமாகி, அழிவில்லா—கெடாத, அகண்ட—பின்னப்படாத, சின்மயமாகும்—ஞானமயமாகும், ஆதியாம்—முதன்மையாகும், பொருளை—வஸ்துவை, யாவையும் அற—யானெனதெனலற, விடுத்தார் தமை—விட்டவர்களை,அருத—விட்டுநீங்காத,அருளுருவை-கிருபாமூர்த்தியை அடைக்கலம்—சரணாகதி, அடைக—அடைவாயாக. (ஏ—ஈற்றசை) (எ-று) 9.

கருணைபொழி கருமுகிலைக் கருணைவா ரிதியைக்
கருணால யப்பொருளைக் களைகணும் பொருளைத்
தெருணயந் தாரையரு ளாக்கவரு பொருளைத்
தேஜோம யப்பொருளை நாவார வர்ழ்த்திப்
பொருணயந் தார்க்கதே யாகியழி வில்லாப்
போதம்வேண் டினரைமெய்ப் போதமய மாக்கு
மருணறு யஞ்ஞான திமிரமறு பொருளை
யருளுருவை மருள்கமே யடைகவடைக் கலமே.

(இ-ள்) மருளகமே(ஜீவேச ஜகத்பிராந்தியால்) மயங்கும் மனமே, கருணைபொழி—கிருபைமாரி பொழிகின்ற, கருமுகிலை—கரியமேகத்தையொத்த

வளை, கருணைவாரிதியை-கருணாசமுத்திரத்தை? கருணாலயப் பொருளை-கருணைக்கிருப்பிடமாகிய வஸ்துவை, கலைகளும்-யாவற்றிற்கும் ஆதாரமாகும், பொருளை-வஸ்துவை,தெருள் நயந்தாரை-ஞானம் விரும்பினரை, அருளாக்க-அருளுருவாக்க, வரு-வருகிற, பொருளை-வஸ்துவை, தேஜோன்மயம்-பிரகாசமயமாகும், பொருளை-வஸ்துவை, நாவார-நாத்தழும்பேற, வாழ்த்தி-துதித்து, பொருள் நயந்தார்க்கு-உலகப் பொருள் விரும்பிய காமியத்துவமுடையார்க்கு, அதேயாகி-அவர்விரும்பிய அழி பொருள்களாகிப்பலித்து, அழிவில்லா(அழியாத) கெடாத, போதம்வேண்டினரை-ஆன்ம ஞானம் விரும்பினரை, மெய்ப்போத மயமாக்கும்-உண்மை ஞானவடிவாக்கி, அஞ்ஞான திமிரம்-அஞ்ஞான விருளை, அறு-அகலச்செய்யும், அருணனும் பொருளை-ஞானசூரியனாகும் வஸ்துவை, அருளுருவை-அன்புருவை, அடைக்கலம்-சரணாகதி, அடைக-அடைவாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று) 10

[ஆக செய்யுள் 10]

---

## குருவணக்கம்.

---

இகபர மெங்குநி றைந்தொளிர் பொருளே
யிதுவென வெவருமி சைத்தற் கரிதாஞ்
சுகபரி பூரண மும்மலவி நாசச்
சுடர்கெழு கனசித் ஜோதிமெய் யடியா
ரகநக மீதுத யஞ்செயு ஞான
வருணனே பொதிகைம லைக்கர சருடேர்
பகவனே பவபய மறுபெரு வழிதேர்
பகமரு ளாரிய பதமலர் சரணே.

(இ-ள்) இகம்-இவ்வுலகத்திலும்,பரமம்-மறுமையிலும், எங்கும்-எவ்விடத்திலும், நிறைந்து-வியாபித்து, ஒளிர்-பிரகாசிக்கும், பொருளே-வஸ்துவே, இதுவென-இத்தன்மையதென, எவரும்-எத்தன்மையினரும், இசைத்தற்கு-சொல்லுவதற்கு, அரிதாம்-அருமையாகும், சுகபரிபூரண-பரிபூரணாநந்த, மும்மலவிநாச-மும்மலமற்ற, சுடர்கெழு-சுடர்வடிவாகும், கனசித்ஜோதி-ஒன்றாகிய ஞானஜோதிவடிவானவரே!, மெய்யடியார்-உண்மையடியார், அகநகம்மீது-அந்தக்கரணமாகிய உதயகிரிமீது,உதயஞ்செயும்-உதித்துத் தோற்றுவிக்கிற, ஞான-இந்திரியக் கிரணங்களுடைய, அருணனே-சூரியனே!, பொதிகைமலைக்கு அரசு-பொதிகைமலை யரசெனும் நாமமுடைய சித்தரின், அருள்-கிருபையினால்,தேர்-அறிந்த.பகவனே-ஞா

னவானே!, பவபயம்-பிறவிபயம், அறு-நீங்கின, பெருவழி-பெரியவழியை தேர்-தேர்ந்து, பகம்-உண்மைஞானத்தை, அருள்-அடியேனுக்கருளிய, ஆரிய-குருவே!, பதமலர்-உன்பாதங்களாகிய தாமரை மலர்களுக்கு, சரண்-அடைக்கலம் புகுகின்றேன், (ஏ-ஈற்றசை) (எ-று) 1,

முத்தியி னுருவே மூவா முதலே
　　முப்புர முச்சக மூசிரு ளகலச்
சித்துரு வாகித் திகழ்தின கரனே
　　சின்மய சிவசங் கரசீ பதியே
நித்த நிராமய நிருமல நினைவார்
　　நினைவக லாநிரு பாதிக னேசத்
பத்துறு பொதிகை மலைக்கர சருடேர்
　　பகமரு ளாரிய பதமலர் சரணே.

(இ-ள்) முத்தியினுருவே-முத்தியின் வடிவானவனே!,மூவா-கெடாத முதலே-ஆதிகாரணமானவனே!, முப்புரம்-(தூல- சூக்கும-காரணங்களென்கிற) மூன்று தேகங்களையும், முச்சகம்-(சொர்க்க மத்திய பாதாளம் என்கிற) மூன்று லோகதோற்றங்களாக்கி, மூசுஇருள்-நிறைந்த அஞ்ஞான விருளானது, அகல-நீங்க, சித்துருவாகி-ஞானசொரூபியாகி, திகழ்தின கரனே-பிரகாசிக்கும் சூரியனே!, சின்மய-ஞானமயமானவனே!, சிவ-மங்கலமானவனே!, சங்கர-(அடியார்க்கு) சுகத்தைக்கொடுப்பவனே!, சீபதியே-இலக்குமிமணாளனே!, நித்த-என்றுமிருப்பவனே!, நிராமய-நோயற்றவனே!, நிருமல-மலமற்றவனே!, நினைவார்-நினைப்பவர், நினைவு-மனதை விட்டு, அகலா-நீங்காத, நிருபாதிகனே (தேகோபாதி-அத்தியாசோபாதி-அவிச்சின்னோபாதியெனும் மூவகை) யுபாதியற்றவனே!, சத்பத்துஉறு-அழிவில்பொருளிடத்து அன்புபொருந்திய, பொதிகைமலைக்கரசு-பொதிகைமலைச்சித்தரின், அருள்தேர்-கிருபையினாலறிந்த, பகம்-உண்மைஞானத்தை, அருள்-எமக்குபதேசித்த, ஆரிய-சத்குருவே, பதமலர்-உன்பாதங்களாகிய தாமரைமலர்களுக்கு, சரண்-அடைக்கலம்புகுகின்றேன், (ஏ-ஈற்றசை) (எ-று). 2.

ஆயிர நாமா வசலா வமலா
　　வத்விதி யவாங் காவச் சுதனே
பாயிர மோதப் பழமறை யஞ்சும்
　　பங்கஜ பதபர மாத்மப யந்தீர்
மாயவ மாசே னனேமுக் குற்ற
　　மறுத்திடு பொதிகை மலைக்கர சருடேர்
தூயவ னேதுரி சறுதுரி யஞ்சேர்

சூழ்ச்சி யளிப்பவ துணைமலர் சரணே.

(இ-ள்) ஆயிரநாமா—அநந்ததிருநாமங்களுடையானே!, அசலா—சலனம ற்றவனே!, அமலா—நிர்மலமானவனே!, அத்விதீய—இணையற்றவனே!, அநகா—பாவமற்றவனே!, அச்சுதனே—நாசமில்லாதவனே!, பாயிரம் — உனது பிரதாபத்தை, ஓத—(முடிவுபெறச்) சொல்வதற்கு, பழமறை—பழமையாகிய வேதங்களும், அஞ்சும்—பின்னிடையத்தக்க; பங்கஜபத—தாமரைமலர்போன்ற பாதங்களையுடையானே!, பரமாத்ம — உயர்வாகிய ஆத்மசொரூபனே!, பயந்தீர் — (பிறவி) அச்சந்தவிர்க்கும்; மாயவ—மாயையில் வல்லவனே!, மாசேனனே—பெருமைமிக்க கருடவாகனனே!, முக்குற்றம் — (காமம்-வெகுளி-மயக்கமென்று) முக்குற்றங்களையும், அறுத்திடு—நீக்கிய, பொதிகைமலைக்கரசு—பொதிகைமலைச் சித்தரென்பவரது, அருள்தேர்—அருளால்தேர்ச்சியடைந்த, தூயவனே—பரிசுத்தமானவனே!, துரிசறு — (எவ்வகைக்) குற்றமும்நீக்கும், துரியஞ்சேர்—துரியத்தைச்சேரும், சூழ்ச்சி—உபாயத்தை, அளிப்பவ—கொடுப்பவனே!, துணைமலர்—உனது இரண்டு பாதங்களுக்கும், சரண்—நமஸ்கரிக்கின்றேன். (எ-ஈற்றசை) (எ-று). 3.

அண்டரு மமரு மறிதற் கரியா
யழுதழு தலமரு மடியர்க் கெளியாய்
தொண்டரை யுண்டவர் கண்டன மென்னச்
சொல்வகை யறமனம் வாக்குயிர் சோரக்
கண்டன வெவையுந் தன்னுரு வாக்கிக்
காலமி றந்தொளிர் கோலம தருளும்
பண்டைய னேபழ மறைப்பொருண் முடிவாம்
பகமரு ளாரிய பதமலர் சரணே.

(இ-ள்) அண்டரும் — (உனை) நிந்திப்போரும், அமரரும் — (காமியப் பயனால்மகிழும்) தேவர்களும், அறிதற்கு—தெரிந்துகொள்வதற்கு, அரியாய்—அருமையானவனே! அழுதழுது — (உனைவிரும்பி) இடைவிடாதழுது, அலமறும்—பிறவிக்கஞ்சும், அடியர்க்கு — அடியர்களுக்கு, எளியாய்—சுலபசாத்தியமானவனே!, தொண்டரை—உனதன்பரை, உண்டு—(ஐக்கியஞ்செய்து) கரைத்துக்கொண்டு, அவர் கண்டனம் என்ன—நாங்களறிந்தோமென்று, சொல்வகையற—சொல்லும் மார்க்கமின்றி, மனம்வாக்கு—அவர்மனமும் சொல்லும், உயிர்—அகங்காரஜீவனும், சோர — அவர்களிழக்க, கண்டனவெவையும்—காணப்படும் பொருள்களியாவும், தன்னுருவாக்கி—தன்மயமாக்கிக்கொண்டு, காலமிறந்து—காலபரிச்சேதங்கடந்து, ஒளிர்—பிரகாசிக்கும்; கோலம் அது—அகண்டக் உருவத்தை, அருளும்—அவர்க்குக் கொடுக்கும், பண்டையனே—என்று முள்ளானே!, பழமறைபொருள்—பழமையாகிய வேதங்களின்கருத்துக்கு, முடிவாம்—முடிவாகவிளங்குகிற, பகம்—ஐ ய்

ஞானத்தை, அருள்-உபதேசிக்கும், ஆரிய - மெய்யுணர்வுடையானே!, பதமலர்-உன்பாதங்களாகிய தாமரைமலர்களுக்கு, சரண்-நமஸ்கரிக்கின்றோம். (ஏ-ஈற்றசை) (எ-று). ௪.

சிந்தையு ருக்கொடு ஜகவடி வாகித்
திகழ்சிற் சுகவடி வேயடி யவர்தம்
புந்தியி லின்னமிர் தப்பெரு வெள்ளம்
புகவிடு வோயுட லுயிர்பொரு ளாதி
தந்திட வல்லா யவைகொள வல்லாய்
தன்னிய னேபொதி கைக்கர சருடோர்
பந்தமி றந்தா நந்தாம் புதிதோய்
பகமரு ளாரிய பதமலர் சரணே.

(இ-ள்) சிந்தை-மனத்தின், உருக்கொடு-உருவத்தைக்கொண்டு, ஜகவடிவாகி-உலகவடிவாகி, திகழ்-பிரகாசிக்கும், சிற்சுகவடிவே-ஞானாநந்த வடிவுடையானே!, அடியவர்தம்-அடியார்களுடைய, புந்தியில்-புத்தியில், இன் அமிர்தம்-இனிமையாகிய அழிவிலாமையெனும், பெருவெள்ளம்-மிக்கபிரவாகத்தை, புகவிடுவோய்-செலவிடுவோனே!, உடலுயிராதி-உடலுயிர்முதலாகிய, பொருள்-பொருள்களை, தந்திட-சிருஷ்டிக்க, வல்லாய்-வல்லவனே, அவை-அப்பொருள்களை, கொள-தன்னுளடக்க, வல்லாய்-வல்லவனே, தன்னியனே-பெரியோனே, பொதிகைமலைக்கரசு-பொதிகைமலைச்சித்தரெனுந் திருநாமமுடையவரின், அருள்தேர்-கிருபையினால் தேர்ந்து, பந்தமிறந்து-(தனுகரண புவனபோக ஆசையிலிருந்து) விடுபட்டு, ஆநந்த-ஸகஜாநந்தமென்னும், அம்புதிதோய்-கடலிலாழும், பகமருள்-அறிவைக்கொடுக்கின்ற, ஆரிய-சத்குருவே, பதமலர்-உன்பாதங்களாகிய தாமரைமலர்களை, சரண்-அடைக்கலம்புகுகின்றேன். (ஏ-ஈற்றசை) (எ-று) 5.

புறமக மெண்டிசை மேல்கீ ழென்னப்
புகலிட மதினிறை பொருள்களு மனுவா
யறநெடி யாயள வைகளறு நிலையாய்
யாவையு மாயன் றுஞ்சித் ஜோதி
மறமலி நெஞ்சற வாழியி னாழ்த்து
மாண்புடை யான்பொதி கைக்கர சருடோர்
செறலறு மறிவா நந்தம ளிக்குந்
திறனுடை யோய்திரு வடிமலர் சரணே.

(இ-ள், புறம் (என)-வெளியிலெனவும், அகம் (என)-உள்ளிலெனவும், எண்திசை (என)-எட்டுத்திக்குகளெனவும், மேல்கீழ்என்ன-மேலென

வுங் கீழெனவும், புகலிடம்-சொல்லுமிடங்களும், அதில்-அவ்விடங்களில், நிறை-நிறைந்து நிற்கும், பொருள்களும்-வஸ்துக்களும், அணுவாய்-அணுவாக, அறநெடியாய்-மிகவும் விபுவானவனே!, அளவைகள்-பிரமாணங்கள் எனும் ஆறு இந்திரியங்களாலும், அறு-அளந்தறியக்கூடாத, நிலையாய்-நிலைமையையுடையவனே, யாவையுமாய்-தோன்றும்யாவுமாகி, அன்றும்-அவைகளழிய வழியாது சேடமாகும், சித்ஜோதி-ஞான ஜோதிமயமானவனே, மறமலி-வன்மைநிறைந்த, நெஞ்சு-மனத்தினை, அறவாழியில்-தருமக்கடலில், ஆழ்த்தும்-ஆழ்ந்தவல்ல, மாண்பு உடையான்-பெருமைஉடையவராகிய, பொதிகைக்கரசு-பொதிகைமலைச் சித்தரது, அருள் தேர்-அருளாலறிந்த, செறலறும்-பிரதிபந்தகமில்லாத, அறிவாநந்தம்-ஞாநாநந்தத்தை, அளிக்கும்-உபதேசிக்கும், திறல்-வல்லமை, உடையோய்-உடையானே, திருவடிமலர்-அழகிய பாதங்களாகிய தாமரை மலர்களுக்கு, சரண்-அடைக்கலம் புகுகின்றேன். (ஐ-சற்றசை) (எ-று) 6.

பூதப் பொருளும் பொறிபுல னுடலும்
பொய்யறி வாஞ்சீ வனுமிரு வினையும்
வேதமு மதினுரை விதியும் விலக்கும்
விண்ணுல கொடுபா தலமதி லுறைவோர்
போத னரன்மா லவர்தரு கதிகள்
பூரண வெளிதரு பொய்ச்சித் திரமென்
றோத வெழும்பொதி கைக்கர சருள்தேர்ந்
துயரறி வருளுப யபதஞ் சரணே.

(இ-ள்) பூதப்பொருளும்-(பிரிதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயமெனும்) பஞ்ச பூதவஸ்துக்களும், பொறி-(மெய்-வாய்-கண்-மூக்கு-செவியெனும்) ஐந்து இந்திரியங்களும், புலனுடலும்-(சத்த-பரிச-ரூப-ரச-கந்தமெனும்) ஐந்து விடயங்களும்-சரீரமும், பொய்யறிவாம்-(எதிர்காண்) பொய்ப்பொருள்களின் விளக்கமுறும், ஜீவனும்-உயிரெனும் ஞாதாவும், இருவினையும்-பாவ புண்ணியங்களும், வேதமும்-(நான்கு) வேதங்களும், அதினுரை-அதிற்சொல்லப்பட்டிருக்கும், விதியும் விலக்கும்-விதிகளும் மாற்றும் விஷயங்களும், விண்ணுலகொடு-தேவவுலகத்துடன், பாதலம்-(நரகமும்) நிலையமும், அதிலுறைவோர்-அதில் வசிப்பவர்களும், போதன்-பிரமனும், அரன்-சிவனும், மால்-விஷ்ணுவும், அவர் தருகதிகள்-அவர்கள் கொடுக்கும் (சத்திய லோககைலாய வைகுண்ட) கதிகளும், பூரணவெளி-எங்கும் நிறைவாகிய சிதாகாசமானது, தரு-(சிற்சத்தியாற்) கற்பிக்கும், பொய்ச்சித்திரமென்று-மித்யா ஓவியமென்று, ஓத-உரைத்தறிவிக்க, எழும்-திருவுருக்கொண்டுவந்த, பொதிகைக்கரசு-பொதிகைமலைச் சித்தரவர்களது, அருள் தேர்ந்து-கிருபையால் தேர்ந்த, உயர் அறிவு-உயர்வாகிய மெய்ஞ்

ஞானத்தை, அருள்-அருளிச்செய்த, உபயபதம்-உமதிரண்டு பாதங்களுக்கு சரண்-அடைக்கலம் புகுகின்றேன், (ஏ-ஈற்றசை) (எ-று) 7.

நாய்நரி பேய்கழு காதிவி ருந்தா
நாறுடல் சோறுதி ரிந்ததி லொருகூ
றாய்மதி யாதிது நீயென விதனை
யாக்கின னுளனவ னடிதொழு வெனவே
பேய்மத வாதுபி தற்றுவ ரறியார்
பிரக்ஞா னம்பிர மமுமுல கெனுமென்
றாய்நிகர் பொதிகை மலைக்கா சருடேர்ந்
தறிவரு ளாரிய வடிமலர் சரணே.

(இ-ள்) அறியார்-(தன்னையும் ஈசனையும் விசாரித்) தறியாத மூடர்கள், நாய் நரி பேய் கழுகாதி-நாய்-நரி-பேய்-கழுகாதிய ஜீவன்களுக்கு, விருந்தாம்-விருந்தாக வளரும், நாறுடல்-நாற்றமிகுதியுமுடையவுடலை, சோறு திரிந்ததில்-உண்ணுஞ் சோறு வேறுபட்ட மனமல மாம்சங்களில், ஒரு கூறாய்-ஓர் பாகமாக, மதியாது-நினையாராகி, இது-இச்சரீரமே, நீயென-நீ யென்னும் சொற்குப் பொருளென்று, இதனை யாக்கினன்-இதனை சிருட்டித்தவன், உளன்-ஒருவனிருக்கிறான், அவனடிதொழு-அவன் பாதங்களை வணங்குக, எனவே-என்றே, பேய்மதவாது-அலைசலைத்தரும் துரபிப்பிராயவாதங்களை, பிதற்றுவர்-பினத்துவார்கள், பிரக்ஞானம்-பேரறிவே, பிரமமும்-ஆநந்தமும், உலகமும் எனுமென்-தோற்ற உலகமுமென்று சொல்லும் என்னுடைய, தாய்நிகர்-தாயது கருணையையொத்த, பொதிகைமலைக் காசு-பொதிகைமலைச் சித்தரவர்களது, அருள்தேர்ந்து-அருளால் தேர்ந்து அறிவு அருள்-மெஞ்ஞானத்தை அருளிய, ஆரிய-சத்குருவே, அடிமலர் சரண்-உன் பாதங்களாகியமலர்களுக்குநமஸ்காரம். (ஏ-ஈற்றசை) (எ-று) 8.

எதுவுல குயிர்பர மாய்க்கா மாதி
யெண்ணறு தீக்குண மாய்நற் குணமா
யதுவவ னவளவை யாய்முப் பொழுதா
யலகிமு தற்கோ ளமரர்கண் முனிவர்
விதுபது மனரன் றிசைபல கலையாய்
விளைபய னுமெயொன் றாகிவி ளங்கு
மதுவறி வதுநீ நானென வருளெம்
மத்தநி னம்புய வடிமலர் சரணே.

(இ-ள்) உலகுஉயிர்பரமாய்-ஜகஜீவ பரமாகவும், காமாதி-காம முதலாகிய, எண்ணறு-அளவிலடங்காத, தீக்குணமாய்-தீய குணங்களாகவும்,

சற்குணமாய்-நல்லகுணங்களாகவும், அதுவவனவளவையாய்-அது-அவன்-அவள்-அவை-அவரெனுமைம்பாலாகியும், முப்பொழுதாய்-இறப்பெதிர் நிகழ்வெனும் முக்காலமாகியும், அலரிமுதல்-சூரியன்முதலாகிய கிரகங்களும், கோள்-அசுவனிமுதலாகிய நட்சத்திரங்களும், அமரர்கள்-இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்-வசிஷ்டர்முதலிய முனிவர்களும், விதுபதுமன் அரன்-விஷ்ணு பிரமன் ருத்திரனும், திசை-தசதிக்குகளும், பலகலையாய்- வேதாதி* பதினான்கு வித்தைகளுமாகியும், வினை-மேற்சொல்லியவற்றால்வினையும், பயனாய்-பிரயோஜனமுமாகியும், ஒன்றாகி-ஏகமாகவேயிருந்து, விளங்குமெது-பிரகாசிக்குமதுயாது, அது-அப்பொருளே, அறிவு-உண்மைஞானம், அது-அந்த உண்மைஞானமே, நீநான்-நீயும்நானும், என-என்று, அருள்-அருளிச்செய்த, எம்அத்த-எங்கள்தலைவனே, நின்-உன்னுடைய, அம்புயமலர்-தாமரைமலர் போன்ற, அடி-பாதங்களுக்கு, சரண்-அடைக்கலம் (எ-ஈற்றசை) (எ-று), ௯

அறிவறி படுபொரு ளெனவிரு பொருளே
யலதிலை யறிவுற ழறிபொரு ளுளதே
லொருபொழு துளதொரு பொழுதில தாகி
யொழிவதெ னறிவிலை யெனிலிவை யுணர்த
லிருபொழு துங்கரி யாகவி ருந்திங்
கெதுவென வருள்பொதி கைக்கர சருடோர்ந்
தறிவுள தயலிலை யதுநீ நானென்
றருளிய வமலநி னடிமலர் சரணே.

(இ-ள்) அறிவு அறிபடு பொருள்-திருக்கு திரிசியம்,என-என்று,இருபொருளே-இரண்டு வஸ்துக்களே (உள்ளன,) அலது இலை-அல்லாது வேறில்லை, அறிவுறழ்-அறிவைப்போல, அறிபொருள்-அறியப்படுபொருள் உளதேல்-உளபொருளாகில், ஒருபொழுதுளது-நனவு கனவு காலங்களில் உளதாகவும், ஒரு பொழுதிலதுஆகி-சுழுத்தியிலில்லாததாகியும், ஒழிவது என்-நீங்குவதற்கு காரணம் யாது, அறிவு இலையெனில்-அப்பொழுது அறிவேயில்லையல்லாமல் உலக மிருந்ததெனில், இருபொழுதும்-உலகுள்ள பொழுதும் இல்லாத பொழுதும், கரியாகவிருந்து-நிலைத்து சாக்ஷியாக விருந்து,இங்கிவைஉணர்தலெது-ஈங்கிவை அறிந்து விவகரிப்பதெது.என-எ

---

*பதினான்குவித்தைகளாவன-இருக்கு-எஜுர்-சாமம்-அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும், மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோவிசிதம் நிருத்தம் சோதிடம் ஆகிய ஆறுவேதாங்கங்களும், மீமாஞ்சை தருக்கம் புராணம் தருமநூல் ஆகிய நான்கு உபாங்களுமாம்.

ன்று, அருள்—உபதேசித்த, பொதிகைக்கரசு—பொதிகைமலைச் சித்தரது, அருள்தேர்ந்து—அருளால் தேர்ச்சியடைந்து, உளது அறிவு—ஆஸ்திப்பொருள் அறிவே, இலை அயல்—அதனினும் வேறாக உலகம் நாஸ்தியே, (ஆகையால்) அது—அவ்வறிவே, நீ நானென்று—நீயும் நானு மென்று, அருளிய வமலை—உபதேசித்த நிர்மலனே, நின்—உன்னுடைய, அடிமலர்—பாதங்களாகிய தாமரை மலர்களுக்கு, சரண்—அடைக்கலம்அடைகின்றேன்(எ—சுற்றசை) (எ—று) 1

தனையல தயலணு வுளதெனு மளவுந்
தான்மா ளாதும னங்கெடு மளவும்
வினைகழி யாதத னற்சுக துக்க
மேவிடு முயிர்நிலை யாமத னானீ
யெனைவிட பரமா ணுவுமிலை யெனவே
யெண்ணுக மனமறு வகையிது விடினோ
கனமய லொழிவழி யிலையென வருளெங்
கற்பக மேபூங் கழலிணை சரணே

(இ-ள்) தனையலது—(அறிவாகிய) தன்னையல்லாமல், அணு அயல்—ஓரணுமாத்திரம் அயல் பொருள்கள், உளது எனும் அளவும்—உண்டு எனும் நினைவு உள்ளளவும், மனந்தான் மாளாது—மனோலயமாகாது, கெடுமளவும்—அம்மனோலயமாகும் பரியந்தமும், வினைகழியாது—பாப புண்ணிய இருவினை வாதனை கெடாது, அதனால்—அவ்வாசனையால், சுகதுக்கம்—சுகதுக்க பரம்பரைகள், மேவிடும்—வந்து பொருந்தும் (இதனால்), உயிர்—தேகாபிமான சிதாபாச ஜீவன், நிலையாம்—ஸ்திரப்படும், அதனால்—ஆகையால், நீ எனைவிட—நீ அறிவாகிய என்னைத்தவிர, பரமாணுவும்—ஓர் அதி சூக்கும வணுவும், இலை எனவே—அயலாக இல்லை யென்றே, எண்ணுக—(விசாரணை முடிவில் சேடித்த அனுபவப்படி) பழகக்கடவை, இது மனமறுவழி—மனோலய வழி இதுவே யாம், விடினோ—(மத்தியகால விபரீத பழக்கத்தால்) விடுவாயாகில், கனமயல்—(இலாதிருந்தும் மாயாமோகத்தால் உள்ளது போல கன்மத்தால் பலப்பட்டு நீங்காதவிப்) பிறவிமயக்கம், ஒழிவழி—நீங்கு மார்க்கம், இலையென—வேறு இல்லை யென்று, அருள்—உபதேசித்த, எம்—எம்மனோர்க்கு, கற்பகமே—(சிந்தித்த பொருள் கொடுக்கவல்ல) கற்பகத்தருவொத்தவரே, பூ—அழகிய, கழலிணை—உமது இரு திருவடிகளுக்கும், சரண்—அடைக்கலம் புகுகின்றேன். (ஏ—சுற்றசை) (எ—று) 11.

[ஆக செய்யுட்கள் 21.]

## நெஞ்சறிவுறுத்தல்.

---

### மாதரைப்பழித்தல்.

அநவரத முந்துயரி லாழ்குவதென் னெஞ்சே
யாதுவரி லின்புறுவை யாதுனது பிரியங்
கனதனநுண் ணிடைமாதர் போகமெனி லதினீ
கண்டதென் னசைதுக்க நீக்கமெனி லதுபொய்
தினமநுப வித்திடற் குடையதென் கெடுவாய்
தோலென்பு ரோமஞ்சு கந்தரா பிரமை
கனகிருமி வாழுமல பாண்டமிதை விட்டுக்
கனவினீ சுகமுறல் கண்டுதெளி வாயே.

(இ—ள்) நெஞ்சே—மனமே, அநவரதமும்—(யாவுமிருக்கும்) சதா காலமும், துயரில்—துக்கசாகரத்தில், ஆழ்குவது என்—முழுகிக்கிடத்தல் யாது காரணம், யாதுவரில்—எது கிடைக்கில், இன்புறுவை—நித்திய திருப்தியடைவாய், உனது பிரியம் யாது—உனக்கத்தியந்த பிரியமானதெது, கனதன—கனமாகிய குசங்களையும், நுண்ணிடை—நுட்பமாகிய இடையினையுமுடைய, மாதர்—அழகிய பெண்களின், போகமெனில்—புபக்கமெனக்கூறுவாயாகில், நீ யதில் கண்டதென்—நீ யதிலிதுவரையிலடைந்தபிரயோஜனம் யாது, நசை துக்க நீக்கம் எனின்—(இகபரபோகாதி நண்டாகிய) இராக துக்கக் கழிவென்னையேல், அது பொய்—அவ்வெண்ணம் பொய்யாம். (என்னில்) தினமநுபவித்திடற்குடையது—(இதுவரையில் நீ யநுபவித்திருந்தும் எதிலும் திருப்திவாராமையினாலும்) எப்பொழுது மிதையே அநுபவிக்க வேண்டு மென்னு மிச்சைமுற்றுமுருத்துயராய் வருந்துவதாலும், பிரமை என்—இவ்வெண்ணம் பிரமையென் று தெளிவாயாக, கெடுவாய்—(இவ்வெண்ணம் நீயொழியாயாகில்) அழிவாய், தோலென்பு ரோமம்—(நீவிரும்பும் மாதர்பாலிருந்து உனக்குப் புலப்படுவது தேகமிதிருக்கும்) தோலும், கூந்தலும், ரோமமும், பல், எலும்புமாம், சுகந்தரா—இவைகள் சுகந்தருமவையாமா? தரமாட்டா. கனகிருமிவாழுமலபாண்டம்—(அன்றியும்மாதருடலானது) மிக்க கிருமிகள் புழுத்து வாழ்ந்து வளரும் மலபாண்டத்தைப்போல் வது, (ஆகையால்), நீ இதைவிட்டு—நீ யிவ்வாசையொழித்து. கனவில்—உனது கனவில், சுகமுறலை—(மாதொருத்தியில்லாதிருந்தும் உண்டென்னு மெண்ணமுதிர்ச்சியால் பெண்ணுண்டாகிப்போகிக்க) இச்சுகமநுபவித்தலை, கண்டு—(ஆராய்ந்து நனவிலும் எனது பிரிய சுகமும் என்னிந்திரியஸ்கலன சுகமும்யானடைகிறேனேயல்லாதுமாதராற்சுகமுண்டாதலில்லையென)வறிந்து தெளிவாயே—தெளியக்கடவாய். (எ-று) 1.

கற்புடைய ரேற்சபிப் பார்கற்பி லாது
கண்டவரை யணைவர்பாற் றெண்டுசெய லழகோ
நற்குலப் பெண்ணொடெனி லதுகாறுந் துய்ப்பாய்
நமன்வருகை யறிவையோ நாசமுறு தேகங்
கூற்பவரை யழியாத சித்தனல வேநீ
கமலாச னனுமலாய் கண்டசுக மலவோ

வற்பமென லறியாய்கொ லாகெடுவை நெஞ்சே
யாதுபயன் மாதரா னோதலறி யாயே.

(இ-ள்) நெஞ்சே—மனமே, கற்புடையரேல் — (நீவிரும்பும்மாதர்கள்) கற்புடைய ராயின், சபிப்பார்—உன்னை வைவார்களன்றி இணங்கார்கள்; கற்பிலாது—நிறையின்றி, கண்டவரை — (இச்சித்த) பல புருடரையும்,அணை வர்பால்—சேருவோரை நம்பியவர்களிடத்திலிருந்து, தொண்டு—அவரிட்ட வேலைகளை, செயலழகோ—செயலுனக்குப் புகழாமா; நற்குலப் பெண்டொடு எனில்—(அப்படிச் செய்வானேன்)விதிப்படிஓர்மாதை மணம்புரிந்துசுகமனு பவித்தலாகாதோ வெனின் இது குற்றமற்றதேயாம், எதுகாறுந்துய்ப பாய்—இத்துச்சுகத்தையே எவ்வளவுகாலம் அனுபவிப்பாய், நீகண்டசுகமல வோ—நீயிதுவரையனுபவித்து அறிந்த சுகமேயல்லவோ, அற்பமெனலறி யாய்கொல்—இது சொல்ப நேரச்சுகமென்று யாவருஞ் சொல்வது நீயறி யாயோ? நமன் வருகையறிவையோ—எமனிவ்வுடலை யகற்றவருங்காலமிது வெனவறிவையோ? நாசமுறு தேகம்—பால்யமாதி மாறுதலைவிட்டகலாத வித்தேகம்,நூற்பவரை—கற்பகாலவளவு, அழியாத—கெடாத, சித்தனலவே— தேகசித்தி பெற்றவனுமலவே, கமலாசனுமலாய்—தாமரைக் கமலத்தை யிரு ப்பிடமாகவுடைய சிருட்டிக்கும் பிரமனுமலவே; ஆகெடுவை—ஐயோவீணி லழிகின்றாய், மாதரால்—மாதராசையால், நோதல் — (தேடும்பொருளும் தே கபலமுமிழந்து குறைகளாலும் நோயாலும் பேரின்பமடையத்தக்க முயற்சி தேடாமல் மரணகாலபரியந்திரம்) வருத்தப்படுதலில், பயன்யாது—என்ன பிரயோஜனத்தைக் கருதியோ? அறியாயே—இதை விசாரித்துத் தெளியா யே. (எ-று) 2.

மண்ணுனீரை யலதுபுற் பூடாதி யுண்டோ
மகன்மாடு மாதராய் மற்றவைகண் மாறக்
கண்ணாரவேகண்டு காதல்வைப் பதனாற்
காமாதி குணமெய்த லேமாறி டாதே
பெண்ணேவலர்சார்ந்தே வகராணை சேனை
பிதாமகன் முதற்சிலை யனுக்கூட்ட மலவோ
வுண்ணடி லுறவுபகை தமர்தார முண்டோ
வொருங்குபட் டுண்டெனீவு ணெழியாத மயலே.

(இ-ள்) மண்ணீரையலது—மண்ணும் நீருமாகிய பூதசாரமில்லாமல், புற்பூடாதி—புல்பூண்டு முதலிய விருட்சங்களும்,தானியங்களும்,உண்டோ —உண்டாகின்றனவோ? மகன்மாடு மாதராய்—மனிதன்-மாடு-மாதர் முதலிய [illegible] அவைகள்—அச்சாதரானியாதிகளே,மாற— [illegible]

களாகப் பார்த்திருந்தும்,காதல் வைப்பதனல்—(பொருளைப் பொருளென்று பாராது மருட்கொண்)டாசை வைப்பதனல், காமாதிகுணம்—காமமுதலிய துர்க்குணங்களின், எய்தல்—பரிணாம முன்பாலுண்டாகின்றன, பெண்ணேவல்—பெண்ணேவலுக் கிசைவதில், ஏமாறிடாதே—ஏமாறாதே, (அன்றியும்), அரசர்—வேந்தரும், சேவகர்—ஏவலாளரும், ஆனைசேனை—கஜங்களைமுதன்மையாகவுடைய சதுரங்கசேனைகளும், பிதாமகன் முதல்நிலை—பிரமதேவன் முதல்கல்லீறாகச்சொல்லப்படும் ஏழுவகைத் தோற்றப் பொருள்களும், அணுக்கூட்டமலவோ—பூதபரமாணுக்களின் கூட்டுறவல்லவோ, உன்னாடில்—இதை நீ நன்றாக விசாரித்தறியில், உறவு—கொள்ளத்தக்க உறவினரும், பகை—வெறுக்கத்தக்க அன்னியரும், தமர்—தம்மவர்களும்—சொந்தக்காரரும்; தாரம்—பெண்டீர் முதலானோரும், உண்டோ—உண்டாவரோ, உண்டென—உண்டென்று, ஒருங்குபடல்—அப்பரமாணுகூட்டப் பொருளோடுமயங்கி கூடிநிற்கை, உன்—உன்னுடைய, ஒழியாத—நீங்காத, மயலே—பூர்வவாசனை மயக்கமேயாமென அறிவாயாக. (எ-று) 3

யாக்கையைப்பழித்தல்.

நெஞ்சேயி தென்கொடுமை பலதுயர்க் கிடனாய்
நின்றுகண மேனுநிலை நில்லாது மாறு
நஞ்சாகு முடலையமு தாமெனவு முணர்வாய்
நடுக்கமறு நகைதரக் கொண்டதெது மரணத்
தஞ்சாமை யாபசியி லலையாமை பிணியா
லலறாமை குளிர்வெப்ப மண்டாமை முடிவிற்
றுஞ்சாமை சாம்பராய்த் தோயாமை யன்றே
சுகந்தரா திவைதாங்க நிலையாமை தெளியே.

(இ-ள்) நெஞ்சே—மனமே, பலதுயர்க்கு—பலதுக்கங்களும் வந்தடைந்திருத்தற்கு, இடனாய் நின்று—இடமாகியிருந்து, கணமேனும்—கணப்பொழுதானாலும், நிலைநில்லாது—முன்னிருந்தபடி யிராமல் சுக்கிலசுரோணிதக் கலப்பு காடொடங்கி பிணமாகி மண்ணாமளவும்,மாறும்—மாறுதலடைந்துக் கொண்டேயிருக்கும், நஞ்சாகும்—விஷத்தைப்போன்ற சுபாவமுடைய, உடலை—இத்தேகத்தை, அமுதாமெனவும்—இறப்பொழிந்து நிலையாக நிற்கும் பரம்பொருளொப்பாம் மருந்தாமென்று, உணர்வாய்—நினைக்கிருக்கின்றாய், இது என்கொடுமை—இது என்னகுரூரம், நடுக்கமறு—அச்சமற்ற, நகைதரக் கொண்டதெது—சந்தோஷத்தை யளிக்க நீயிதுவரைப்பெற்ற உறுதியெது, மரணத்து—மரணகாலத்திற்கு, அஞ்சாமையா—பயப்படாதிருக்குந்தன்மையா? பசியிலலையாமையா—பசியினா லலையாத்தன்மையா? பிணியாலலறாமையா—வியாதியினல் பிரலாபித்து ஐயோ அப்பாவெனக் கூவாததன்மையா? குளிர் வெப்பம்—சீதோஷ்ண துக்கங்கள்? அண்டாமை

யா-வர்தலடையாத்தன்மையா? முடிவில்-அந்தத்தில், துஞ்சாமையா-மரண மடையாத் தன்மையா? சாம்பாராய்-அனலிலிட சாம்பலாகி, தேயாமை யா-நிலத்திற் படியாத்தன்மையா? அன்றே-இவைகளி லொருதன்மையும ளியாமலிருக்கப்பட்டதன்றே? சுகந்தராது-(இத்தேகாபிமான முன்க்குச்) சுகத்தையளியாது, இவை-இத்துன்பங்கள், தூங்க-நீயுடலோடிருந்தும் அபிமானமின்றி இதை மறந்திருக்குந் தூக்கத்தில், நிலையாமை-இப்பிறவித் துன்பங்கள் புலப்படாதிருத்தலே, தெளி-யோசித்துத்தெளிவைப் பெறுவா யாக. (வி-ஈற்றசை) (எ-று) 4.

ஒன்றாக் கேணெஞ்சே யுடற்கலைவு காம
மோயாத பசிநோய்க ளொன்றுபி னெவ்வொன்று
யென்றும்வரு மேலுக்க மெதுகாறு மொழியா
திதற்குரிய செய்வைசெய லெப்பயனு னக்குப்
பொன்றாதி ருக்குமெனி னன்றுமி தின்றே
பொறுத்துடலை யாவதென் போயொழிக விடுவா
யின்றேனுங் கற்பத்தி லேனுமிட லரிதே
யிறப்பொடு பிறப்பவதி யென்றுமக லாயே.

௬

(இ-ள்) நெஞ்சே-மனமே, ஒன்றுகேள்-இன்னமொரு விசேடங்கேட் பாய், உடற்கு-இச்சரீரத்திற்கு, ஓயாத-நீங்காத, பசி-பசியும், அலைவு-அப் பசிக்கு ஆகாரம் தேடும் அலைச்சலும், காமம்-எதிர்காண் பொருளிச்சையும் மாதரிச்சையும், நோய்கள்-வியாதிகளும், ஒன்றுபின்-ஒன்றன்பின், ஒவ் வொன்றாய்-ஒவ்வொன்றாக, என்றும் வருமேல்-எக்காலத்திலும் வந்து கொண்டிருக்குமானல், இதற்குரிய உளக்கம்-இத்துன்பங்களைத் துடைக்க த்தக்க நீசெய்யுமுயற்சிகள் எதுகாறும்-எதுகாலபரியந்தம், ஒழியாது-விடாது, செய்வாய்-செய்துக்கொண் டிருப்பாய், செயல்-அப்படிவிடாது செயலால், எப்பயன் உனக்கு-பிரயோஜனம்யாது உனக்குண்டாகும், பொன்றாது-இவ்வுடல் கெடாது, இருக்குமெனின்-இருக்குமானல், நன் றும்-நன்மையாம், இது-இவ்வுடல் கெடாமை, இன்றே-எவர்க்கும் இல்லை யே (ஆகையால்), உடலைப்பொறுத்து-உடலைச் சுமந்திருப்பதால், ஆவ தென்-ஆகும் பிரயோசன மென்ன, இன்றேனும்-இன்றைக்கேனும், கற் பாந்தத்தேனும்-கற்பமுடிவிலேனும், போயொழிக-நீங்கவேண்டிய நியதி யில் நீங்கக்கடவதென, விடுவாய்-நீயிதனாசையை விட்டுவிடுவாயாக, விடல ரிதேல்-விடுதலருமை யென்பாயாகில், இறப்போடு-மரணத்தோடு, பிற ப்பு-பிறப்பென்கிற, அவதி-எல்லையை, என்றும்-எக்காலத்திலும், அகலா யே-கடக்கமாட்டாய் எனவறிக. (எ-று) 5.

## பொருட்சுகப்புன்மை பழித்தல்.

பயனாவ தேதகமே யுண்டவைகண் மலமாம்
பார்த்தவோ காணாது பாழாந்து யின்றா
லயலால்வ ருஞ்சுகம நித்தியமே யன்றோ
வயன்முதற் றேவர்சித் தர்க்கெனினு மொக்கும்
வியனாரும் வீடுவரு வகையேது தோன்றா
விரைந்தழி பொருட்கழுது வீணாக லழகோ
பயமாதி சேராத வகைகேளெ னெஞ்சே
பகற்கனவி தென்றுலகி னைப்பார்த்து நில்லே.

(இ-ள்) அகமே-மனமே, பயனாவது-உடலாலும் பொருளாலும் பயனாவது, ஏது-யாதும் இல்லையாம், உண்டவைகள்-புசித்தவைகள், மலமாம்-வெறுக்கத்தக்க மலமாக மாறிவிடுகின்றன, பார்த்தவோ-(முருந்திருந்து) காணப்பட்டவைகளாகிய உடலாதிபொருள்களோ, துயின்றால்-உறங்கினால் அல்லது மறித்தால்; காணாது பாழாம்-காணாதொழியும் (இதனாலே), அயலால்-ஆன்மாவாகிய தன்னையன்றி யன்னியப் பொருள்களின் சேர்க்கையால், வரும்-உண்டாகிற, சுகம்-விஷயசுகங்கள், அநித்தியமே-நிலையற்றனவே, அன்றோ-அல்லவோ? அயன்முதல்-பிரமன்முதல், தேவர்-தேவர்கள், சித்தர்-சித்தர்கள், எனினும்-என்றாலும், ஒக்கும்-அவர்க்கும் இந்நியமம் பொருந்தும், வியனாரும்-பெருமைமிக்க, வீடு-விஸ்ராந்தியைத்தரும் கேவலபேரின்பம், வருவகை-அயல்பொருள்களால் உண்டாகும்விதம், ஏது-என்றும் இல்லையாம், தோன்றா-உண்டுபோல் காணப்பட்டு, விரைந்தழி-சீக்கிரமாகமறையும், பொருட்கு-உடல் முதலிய வஸ்துக்களுக்கு, அழுது-துன்பப்பட்டு, வீணாகல்-பயனற்றவனாகல், அழகோ-அழகாகுமோ, என்னெஞ்சே-என்மனமே, பயமாதி-சமபய முதலியதுன்பங்கள், சேராத-வந்தணுகாத, வகைகேள்-மார்க்கங்கேட்கக் கடவை, உலகினைப்பார்த்து-உலகத்தைப்பார்த்து, இது-இத்தோற்றம், பகற்கனவு என்று-பகலிற்றோற்றும் கனவென்று, நில்-பேதவாதிகள் சொல்லை நிராகரித்து கலங்காது நிற்பாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று). 6

## விடயவிச்சையைப் பழித்தல்.

ஓயாது பொருளாசை கொண்டலைவை நெஞ்சே
யுடற்கணம் வாழ்வதறி யாயுடல்வ ளர்க்க
வேயாது பெறினுமறு சுவையுமுண் டிலையோ
வேறெதனை யுண்பாதி சாலவுடை யோரு
நாயாக வலைவதென் றோவுளது போமோ
நமக்கென்ன மேமுடிவி னுதனிலை யாமால்

காயாது விழையாது கணம்விட்டு நிற்கக்
 கனவாம்பொ ருட்சுகங் கண்டுநீ தெளியே

(இ-ள்) நெஞ்சே-மனமே, ஓயாது-இடைவிடாமல், பொருளாசை கொண்டு-திரவியவாசையைப்பொருந்தி, அலைவை-தரிக்காதுழல்கின்றனை, உடற்கணம் வாழ்வது-இன்னுங்கணப்பொழுது உடலோடுயிர்பொருந்தி வாழுமென்பதை, அறியாய்-நீ அறிவாயல்லை, யாதுபெறினும் – (ஆசையால்) நீ யெதையடைந்தாலும், உடல்வளர்க்கவே-சரீரத்தை வளர்க்கவேயன்றோ? அறுசுவையும்-அறுசுவைப் பொருள்களையும், உண்டிலையோ-இதுவரையுண்டே யிருக்கின்றாயல்லவோ? (நீயுண்ட இவ்வறு சுவைப்பொருள்களையன்றி), நிதிசால உடையோரும்-மிக்கத்திரவியம் உடையவரும், வேறெதனையுண்பர்-வேறெந்த வஸ்துக்களை யுண்பார்கள் (இல்லையாகையால்), நீநாயாக-நீநாய்போல, அலைவதெனனோ – அலைவதுயாது காரணமோ, உளது-இப்பிறப்பில் நாமனுபவிக்க வேண்டிய பிராரத்தவப் புசிப்பு, போமோ-நமைவிட்டொழியுமோ?, நமக்கெண்ணமே-நமக்கு நமதெண்ணங்களைப் போலவேயாவும், முடியில்-கைகூடுமானால், நாதன்-உயிர்க்குத்தனு கரணபுவனபோக நியதிசெய்த ஈசன், இலையாம்-இல்லையாவன் (ஆகையால்), காயாது-இச்சையின்றிக் கிடைத்தவைகளை வெறுக்காமலும், விழையாது-கிட்டாதவைகளை யிச்சியாமலும், கணம்-கணநேரமாகிலும், விட்டு-மயக்கம்விட்டு, நிற்க-நிற்பாயாகில், பொருள்-திரவியத்தால், சுகம்-சுகமுண்டென நினைக்கு மெண்ணம், கனவாம்-கனவில் காண்பொருள் மறைவது போலாம், கண்டு-இதையனுபவித்தறிந்து, நீதெளி-நீதெளிவாயாக. (ஏ-ஈற்றசை) 7.

வாழ்வெனத் தாழ்வெனப் பேதமய லாகி
 வருந்தலேன் மனமேயி ருந்தபடி யிருநீ
வாழ்வேது தனதான்ய மனைமக்க ளேயால்
 வருந்தா வுடற்கொண் டிருந்தாள்வ தெனினோ
தாழ்வா மெமன்வருத லுண்மையிது வன்றித்
 தனஞ்செலவு செயலும்விடி னுங்கெடுதி யற்றே
தாழ்வாகு மனைமக்க ளுரைகொளாப் பொழுதுந்
 தனக்குமுன் பின்னவர் தனிப்பதையு முனிலே.

(இ-ள்) மனமே-நெஞ்சமே, வாழ்வென-வாழ்வென்றும், தாழ்வென-தாழ்வென்றும், மயலாகி-ஆராய்ச்சியிலார் சொல்லுகிற வார்த்தை[illegible], பேதம்-பேதங்களைக் கற்பித்துக்கொண்டு, வருந்தல் ஏன்-ஏன [illegible]ப்பத் தால் நீயே துன்பமடைதல் யாது பிரயோஜனம், இருந்தபடி-[illegible] முன்னிருந்தவாறாக, நீயிரு-நீயிருப்பாயாக (எவ்வண மிருக்கலாமென்

யையாகில்), வாழ்வேது-நீ வாழ்வெனக் கொள்வதெதனை, தனம்-விலையேற்றக்கற்களும்-பண்ட மாற்றற்கேற்ற உலோகங்களும், தான்யம்-யவை கோதுமையாதி உணவுக்குரிய பொருள்களும், மனை-இருப்பிடமும் மனைவியும், மக்கள்-புத்திரர் ஏவலாளர் முதலிய மனிதர்களும், நோயால் வருந்தா-வியாதியால் உண்ண-பூச-முடிக்க-பூண-போகிக்கமுடியாது வருந்துங் குறையற்ற, உடல்கொண்டு-திடகாத்திர சரீரம் பெற்று, இருந்து-தீர்க்க காலம் நிலையாக இவ்வுலகத்திலிருந்து (இவற்றோடு), ஆள்வதுளனின்றோ-அதிகாரமும் பெற்று அநுபவிப்பதென்றாலோ. எமன் வருதல்-இப்பொருள்களையழிக்கும் காலன் வருதல், உண்மை-சத்தியம் (ஆகையால்), தாழ்வாம்-இவ்வெண்ணம் அப்பொழுது தாழ்வை யளிப்பதாம், இதுவன்றி-இதல்லாமலும், தனம்-தனத்தை, செலவுசெயினும்-செலவழித்தாலும், விடினும்-உண்ணாது பிறர்க்குக் கொடாது புதைத்துவைத்தாலும், கெடுதி-துன்பத்தைத் தருவதாகும், மனைமக்கள்-நற்குணமில்லா மனைவிமக்களும், உரைகொளாப் பொழுதும்-சொற்படி நடவாவிடத்திலும், அற்றே-அதுபோலத்துன்பமே வருவிப்பவராவர் (கேட்பவராக விருந்தவிடத்தெனிலோ,) அவர்-அம்மனைவிமக்கள் உரைதவிராதவர்களாகில், தனக்குமுன்-தானிறப்பதற்கு முன்னும், பின் - தானிறந்த பிற்பாடும், தனிப்பதையும்-நிக்கற்றவராதலையும். உனில்-நினைந்தபோதெல்லாம், தாழ்வாம்-துன்பத்தைதருவனவாம் என வுணர்வாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று) 8

## பகிர்முகப்பாபவிரி.

தடையேதுமின்றியஞ் சாதுலையு நெஞ்சே
　　ஜகந்தேக முயிராதி தந்தவனு மிலையோ
படையாதி யற்கைதர வந்தவெனி லருளோன்
　　பாழ்படுத் தலுமேத தாழ்வடைத லெவனோ
வுடையா னொருத்தனுள னேலவனை நாடி
　　யோயாம லழுதுதுயர் மாயாத தென்னே
கடையாய வுன்போல்வ ரிலையாய்ந்தி டாது
　　கரையறுது யர்க்கடல்க விழ்ந்துவிழு வாரே.

(இ-ள்) தடையேதுமின்றி-ஒரு தடையுமில்லாமல், அஞ்சாது-கடவுள் வேதம்பெரியோர் முதலானோருக்கும் பயப்படாது, உலையும்-உனதிஷ்டப்படி பிறவிகளைப் பெற்றுத் துன்பத்திற் சுழலுகின்ற, நெஞ்சே-மனதே, ஜகமும்-இவ்வுலகத்தையும், தேகமும் உயிராதி-உடலையும் உயிர் முதலானவையும், தந்தவனும்-சிருட்டித்தவனும், இலையோ-இல்லையோ, படையாது-இவைகள் ஒருவன் சிருட்டி செய்யாமலே, இயற்கைதர-சுபாவமாய் உண்டாகி. வந்தவெனில்-வந்தவைகளென்பையேல், அருளோன்-எவனோ ஒருவ

னிருந்தழித்தானென்றென்னை என துக்கபபடுகிறாய், பாழ் படுத்தலும்-இவைகளையழிப்பதும், அதே-அச்சுபாவசக்தியே யல்லவா? அப்படி நினையாமல், தாழ்வடைதல்-தன தான்ய மனைமக்களுக்கு அழிவு வந்த விடத்தில் துன்பமடைதல், எவன்-என்னகாரணம், உடையான்-உடலுயிர்களைப்படைத்தவன், ஒருத்தனுளனேல்-ஒருவனுண்டென்பையாகில், அவனை நாடி அவனை யின்னுனென விசாரித் துணர்ந்து, ஓயாமலழுது-இடைவிடாது உன் துக்க முரைத்துவேண்டி, துயர்-பிறவித்துன்பத்தை, மாயாதது-அடியோடழிக்காதது, என்னே-யாது காரணம், ஆய்ந்திடாது-பிறவிவந்த காரணத்தையும் ஒழிக்கும் விதத்தையும் விசாரியாது, கரையறு-எல்லையிறந்த, துயர்க்கடல்-துக்கசாகரத்தில், கவிழ்ந்து விழுவார்-கண்மூடிக்குப்புற விழுவோர்களில், கடையாய-கீழ்மையையுடைய, உன்போல்வார்-உன்னைப் போன்றவர்கள், இலே-இல்லையென்றறிவாயாக. (ஈ-ஈற்றசை) (ம-று) 9.

எதுகருதி நெஞ்சேயுன் வாணுட்க ழிப்பா
யெங்கிருந் திங்குவந் தனைபோத லெவிட
மதுமறந் தயல்வியக் கச்சிலது கற்றே
யருந்தற் பொருந்தற்க லைந்துபொரு டேடி
மதுவுண்ட வண்டென மயங்கின்மறு ஜனனம்
வராதோவ ராதெனின் வரலெனிச் சனன
மிதுதந்த வன்பினுந் தரிமேலது செய்வா
யெப்படியி மைப்பமிதுசெப்புகவி ரைந்தே.

(இ-ள்) நேஞ்சே-அகமே, எதுகருதி-எதையாதாரவாக நம்பி, உன் வாழ்நாள்-அருமையாகிய உன்னுடைய ஆயுள் நாட்களை, கழிப்பாய்-வீணில் வழிக்கின்றாய், எங்கிருந்து-எவ்விடத்திலிருந்து, இங்கு-இப்பிறவிக்கு, வந்தனை-வந்திருக்கின்றனை, போதல்-உடலொழிந்து பின்னர் செல்லுதல், எவிடம்-எவ்விடத்திற்கோ, அதுமறந்து-அதனைநினையாமல், அயல்-(உன்னைப் போலவே மாணுதி குறைகளுடைய) மற்றவர்கள், வியக்க-அதிசயிக்க, சில துகற்றே-சில வித்தைகளைக் கற்றுக்கொண்டு, அருந்தல்-புசித்தலுக்கும், பொருந்தற்கு-புணர்தலுக்கும், அலைந்து-அலைச்சற்பட்டு, பொருள்-அவற்ற வற்றிற்குரிய திரவியத்தை, தேடி-சம்பாதித்து, மதுவுண்ட-மலரின் தேனையுண்டு வெளியேறாத, வண்டென-கமலத்திற் சிக்கிய வண்டைப்போல மயங்கில்-(உலகாகிய மலரிலுள்ள விஷயங்களாகிய தேனை மனமே நீ வண்டைப்போலுண்டு விடயங்களில்) மயங்கியிருப்பாயானால், மறுஜனனம்-மறுபடியும் பிறப்பு, வராதோ-வந்து பொருந்தாதோ, வராதெனின்-வரமாட்டாது கண்டாரார் என்பையேல், இச்சனம்-இப்பிறப்பு, வரலேன்-பலபேதமாக வந்து பொருந்தலேன், இது தந்தவன்-காரணமில்லாமலே இச்சரீ

நவ கொடுத்தவனே, பிறுகதரில்-மறுபடியும் கொடுத்தால், எது செய்வாய்-என்னசெய்வாய், எப்படி பிழைப்பாம்-என்ன விதத்தில் பிறப்பைத் தவிர்ப்போம், இது-இவ்வுபாயத்தை, விரைந்து-சீக்கிரமாக,செப்புக-சொல்லக்கடவாய். (எ-நற்றவை) (எ-று), 10

[ஆகசெய்யுள்கள் 81]

---

## பிறவிலயப்பழித்தல்.

---

கலகயமன்விடு தூதர்பிடித்திரு கைகள்சலித்தன ரால்
கருவளரச்சும வசபெறுநோயில்க ருத்தனைநொந்தன ரா
லலகறுதந்தையர் பெற்றுவளர்த்தழி யாத்துயர்கொண்டன ரா
லரிவையர்பூண்மங் கலநாணிழவா லழுதுசலித்தன ரால்
பலமுறைநரகுபு குந்தடைதுயரயல் பார்த்துவெறுத்தன ரால்
பந்துஜனங்கள் சிநேகர்சிசுக்கள் பதைத்துநடுங்கின ரா
னுலகமுதித்திடு நாண்முதலுடலை யொழிந்துபொறுத்திட லா
லோகெடுவாய்பலபேர்கணடுங்கவுருக்கொளலென்னழ கே.

(இ-ள்) உலகம்-ஜகத்து, உதித்திடு நாண்முதல்-தோன்றிய அநாதிகாலந்தொடங்கி, உடலை-ஜனித்த உடல்களை, ஒழிந்து-விட்டு நீங்கி, பொறுத்திடலால்-மறுபடியும் ஓர் சரீரத்தைச் சுமத்தலினால், கலகயமன்விடு-உடலுயிருக்குப் பிரிவென்னும் கலகத்தை யுண்டாக்குகிற யமன் விடுகிற தூதர்-ஏவலாட்கள், பிடித்து-பிறவிதோறும் பிடித்துப்பிடித்து, இருகைகள்-இரண்டுகைகளும், சலித்தனர்-சலித்தனர்கள், கரு-தாய்மார்களின் கருப்பாசயத்தில், வளர-உன்னுடல் நாளுக்கு நாள் பெருக்க, சுமவா-கஷ்டத்தோடுஞ் சுமந்து, பெறு-பெறுகிற, நோயில்-வருத்தத்தினால், அனை-கணக்கற்ற அன்னைமார்கள், கருத்து நொந்தனர்-மனவருத்தமடைந்தார்கள், அலகறு-கணக்கற்ற, தந்தையர்-தகப்பன் மார்கள், பெற்று-உனைப் பிள்ளையாகவடைந்து, வளர்த்து-பலவிதமாகத் தம் வரும்படியெல்லாம் செலவிட்டுப் பாலித்து, அழியாத்துயர்-நீங்காத துன்பத்தை, கொண்டனர்-அடைந்தார்கள், அரிவையர்-உனக்குத் தாரமாகவந்தமாதர்கள், பூண்-[illegible] தையாலணியவணிந்து கொண்ட, மங்கலநாண்-கலியாணகுத்திரம், இழிவால்-கழிக்கவேண்டிய காரணம் வந்தமையால், அழுது-[illegible] காலமனவும பலமயி சலித்தனர்-[illegible] வெறுத்துக் கொண்ட[illegible] பலமுறை-பலதடவைகளிலும், நரகு புகுந்து-நரகத்தில் பிரவே[illegible]

அடைதுயர் — அடைந்ததுக்கத்தை, அயல் — அங்குள்ள கிங்கர யமபடாளும், பார்த்து — கண்டு, வெறுத்தனர் — உனக்குப்புத்திவரவில்லையேயென்று வெறுத்துக்கொண்டார்கள், பந்துஜனங்கள் — அந்தந்த பிறப்பில் பந்துக்களாயிருந்தவர்களும், சிநேகர் — சிநேகராயிருந்தவர்களும், சிசுக்கள் பிள்ளைகளாகப் பிறந்திருந்தவர்களும, பதைத்து — தபித்து, நடுங்கினர் — நடுக்கங்கொண்டார்கள், (ஆகையால்) ; ஓ கெடுவாய் — ஓ அழியும்பொருள்களை விரும்பியழிபவனே, பலபேர்கள் — உன்னொருவனால் அனேகம்பேர்கள், நலிங்க — துன்பப்பட, உருக்கொளல் — சரீரத்தைத்தாங்குதல், என்னழகு — உனக்கென்ன விநோதம், (ஆல் — அசைச்சொல்) (எ-று.) 1.

கருவளர்பைச்சாண் முழநீ யதில்கட் டுண்டுவருந்தினை முன்
கழிபொருளொக்கநெ ருக்குண்டுடல்வெளி காணவயர்ந்த
றருசிறு நீர்மல மாதிபு ரண்டுத வழ்ந்துந டந்திடு நா [ளை பி
டரைமிசைவீழ்ந்தறையுண்டைம்பருவந்தனிலனை தந்தைமு
னன், குருவிவர்முனிவுக் கிடனாய்நொந்தனை கொம்பனையார்மய
லாற், கூடழிநோய்பழி பகையச்சங்கொடு கோரகுடும்பியு
மாய்ப், பெருதுயர்கண்டனை யைம்பொறிகெடுமூப்பினின்பரணை
த்துய ரென், பேசுகவறிவாய் பேதாய்பயனெது பிறவிவிரு
[ம்புவையே.

(இ-ள்) கருப்பை — கர்ப்பப்பையானது, ஜாண் — ஒருஜாணளவேயாகும், வளர்நீமுழம் — அதில்வளர்ந்த நீயொருமுழமாம் வரை, முன் — பிறவாமுன், அதில் — அந்தப்பையினிடமாக, கட்டுண்டு — பிணிக்கபபட்டு, வருந்தினை—வருத்தப்பட்டனை. (அன்றியும்), கழிபொருளொக்க—உடலினின்று நீங்கும் உபாதிப் பொருள்களைப்போல, உடல் — உனது சரீரமானது, வெளிகாண — வெளிப்படவாரம்பிக்க, நெருக்குண்டு - துவாரநெருக்கத்தால் நசுக்கப்பட்டு, அயர்ந்தனை — மூர்ச்சித்து வீழ்ந்தனை பின் — அதன்பின்பு, தருசிறுநீர் — நீயேகழிக உன்னாலுண்டாகிய உனது மூத்திரம், மலமாதி — மலமாதிகளில், புரண்டு — புரண்டு, தவழ்ந்து — நகர்ந்து, நடந்திடுநாள் — தத்தடியிட்டு நடக்கும் பருவத்திலும், தரைமிசை — பூமியின்மீது, வீழ்ந்து — விழுந்து, அறையுண்டு — காயப்பட்டும், ஐம்பருவம் தனில் — ஐந்து வயதானபோது, அனை — தாயாரும், தந்தை — பெற்றவனும், முனன் — முன்பிறந்த தமயனும், குரு — உபாத்தியாயரும் ஆகிய, இவர் — இவர்களது, முனிவுக்கு — கோபத்தினால் தண்டிக்கும் தண்டனைகளுக்கு, இடனாய் — தானமாகி, நொந்தனை-எதிர்க்கவல்லமையற்று வருத்தப்பட்டாய், (பதினாறுவயதுமுதல்) கொம்பனையார் — பூங்கொம்பினையொத்தமாதர்கள், மயலால் — மயக்கும் மயக்கத்தினால் மய

க்கி, கூடழி – சரீரத்தைப்பாழாக்கும், நோய்–நோய்களும், பழி – பழியும், பகை – பகையும், அச்சம் – பயமும், கொடு – அம்மாதர்கள் தாமேற்கொண்ட தாய்தந்தை பந்துமுதலானோர் வருந்திமனஞ்செய்விக்க, கோரகும்பியுமாய் – துஷ்பமிக்க சமுசாரியாகி, பெருதுயர்–மிக்கதுன்பத்தை கண்டனை – இதுவரையடைந்தாய், ஐம்பொறி – இனிபஞ்சேந்திரியங்களும், கெடுமூப்பினில் – நிலைதமோறுங் கிழத்தனத்திலும், மரணத்துயர் – மரணமடையும்போது உண்டாகும் துன்பத்தை, என்பேசுக – எவ்வளவென்று சொல்லுவேன், அறிவாய் – நீயும் பிறர்படுந்துன்பத்தைப் பார்த்திருக்கின்றாய், பேதாய் – அறிவற்றவனே, பிறவிவிரும்புவை-இவையெல்லாந்தெரிந்திருந்தும் இப்பிறப்பையே இச்சிக்கின்றனை, எதுபயன் – என்னபயனை யடைவாயோ நீ யோசிப்பாயாக. (ஏ – ஈற்றசை) (எ-று) 2.

உண்டிடுவிரை தழை காய்கனிசருகல துண்ணலைபட்டுடை நூ
லுடையொடுரோமத் துடைநாரல்ல துடுக்கலைசந்தகில்சேர்
தண்பனிநீர்கா னம்புழுகாதிய தடியுடல்பூசலை நீர்
தனிலலர்கொடிகோ டலர்மலரலதுத ரிக்கலைமணியணி பூ
ணுண்ணிடைமாதர்மு யக்கலதுறுகிலை நூறுகம்வாழுகி னு
நுண்ணறிவோர்பெறு பேரின்பச்சுகநுகராலைபிறவிதொறுங்
கண்டதுகண்டுண்டதையுண்பதிலெது காண்குவமொழியகிலாய்
கண்கொடுபடுகுழி வீழ்வதுநன்றல கற்பனைவிட்டகலே.

(இ–ள்) உண்டிடு – ஜனனந்தோறு முண்டவைகளாகிய, விரை – (அரிசி; பருப்பு, முதலிய) வித்துவகைகளும், தழை – பலவித கீரைகளும் காய் – (கத்தரிக்காயாதி) காய்களும், கனி – (மாங்கனியாதி) பழங்களும்; சருகு – வற்றல்களும், அலது – ஆகிய விவைகளே யல்லாமல், உண்ணலை – வேறெவையுமுண்பாயல்லை, பட்டுடையொடு – பட்டுவஸ்திரத்தோடு, நூலுடை – பருத்திநூல் வஸ்திரமும், உரோமத்துடை – கம்பளங்களும், நாரல்லது – நார்மடிகளேயல்லது, உடுக்கலை – கட்டிக்கொள்வாயல்லை, தண்பனிநீர் – குளிர்ச்சிபொருந்திய பன்னீரும், கானம், – கஸ்தூரியும், புழுகாதிய – புனுகுமுதலிய வாசனைப்பொருள்கள், சேர் – சேர்ந்த, சந்து – சந்தனக்குழம்பையும், அகில் – அகிற் குழம்பையும், தடியுடல் – மாமிசமிக்க சரீரத்தில் பூசுவாயலது, பூசலை-வேறெவற்றைப் பூசுவாயல்லை, நீர்தனிலலர் – நீரில் பூக்கும் (தாமரை முதலிய) புஷ்பங்களும் கொடி–(மல்லிகைமுதலிய) கொடிகளும், கோடு–(சம்பங்கி முதலிய) இலைகளில், அலர் – மலர்ந்த, மலரலது – புஷ்பங்களையு [illegible] மல் வே தரிக்கலை – சூடிக்கொள்வாயல்லை, மணியணிபூண் – நவரத்தினங்க[illegible] த்த ஆபரணங்களையணிந்த, நுண்ணிடை – நூலிழைபோன்ற நுண்ப[illegible]

டைய, மாதர் — அழகியபெண்கள், முயக்கமது — சங்கமசிற்றின்பமே யல்லாமல், உறுதிலை — வேறு அடைவாயல்லை, நூறகம் — இன்னுமிவ்வுடலோடு நூறுயுகங்கள், வாழுகினும் — வாழ்ந்தாலும, தண்ணறிவோர் — நட்பமாகிய ஆத்மஞானிகள், பெறு — அடையும், பேரின்பச்சுகம் — பரமானந்தப்பிராப்தியென்னும் ஜீவன்முத்தியை, நுகராலை — இப்பிறவிகழலாதளவுமனுபவிக்கமாட்டாய், பிறவிதொறும் — இதுவரை எடுத்தவெல்லாப்பிறவிகளிலும், கண்டதுகண்டு — முன்பார்த்த ஜடபதார்த்தங்களையே பார்த்தும், உண்டதையுண்பதில் — உண்டவைகளையே யுண்டுவருவதில், எது காண்குவம் — முன்னறியாத எச்சுகத்தையறிவோம், ஒழிய லிலாய் — ஏன் ஒழிக்க விரும்புவாயல்லை, கண்கொடு — இருவிதக்கண்களையும் பெற்றிருந்தும், படுகுழி — ஆழமாகிய பள்ளத்தில், வீழ்வது — அடிக்கடி விழுவது, நன்றல — விவேகமல்லவாகையால், கற்பனை — ஜீவேஸ்வரஜகப்பேதப்பொய்யை, விட்டகலே — விட்டு நீங்குவாயாக. (எ-று) 3

நதிகடல்வாவிகள் விதியிலமிழ்ந்தனை நாடவராமனீ யோர்
நன்னேம்போம்பினை மந்திரபூசைந யந்துமுடித்தனை பல்
பதிவலம்வந்தனை புலிமான்றோலிடை பன்மணிபூண்டிறுமாப்
பாகவிருந்திரு கண்களைமூய்ந்து பயின்றனையோகுகளைப்
பதிசதிநிதிசுத ருடலணிமாதிப யன்பெறவேண்டிய லாற்
பாழ்படவிகபர வாழ்வுடனிதியென பவமறுதற்கல வே
யிதிலெதுபயனிக பரசுகநிலையல வெனுமிருமறையுடல் வாழ்
வெண்ணில்கழிந்த தறிந்ததைவேண்டுவை யென்னிதுவுன்
[ னினைவே.

(இ-ள்) நதி — கங்கைமுதலிய நதிகளிலும், கடல் —சமுத்திரத்திலும் வாவிகள் — பாபநாசம்முதலிய தீர்த்தக்குளங்களிலும், விதியில் — கிரமப்படி சங்கற்பஞ்செய்து, அமிழ்ந்தனை — சங்கற்பத்தைச்சொல்லி| மூழ்கிஸ்நானஞ்செய்திருக்கின்றாய், நாள்தவறாமல்— பிரதிதினமும் தவிராதபடி, ஓர்— ஒப்பற்ற, நல்நோம்பு — நல்லநோன்புகளை, நீ ஓம்பினை — நீ விரும்பிச்செய்து வந்தனை, மந்திரபூசை — மந்திரஜபத்துடன் ஆராதனைகளையும், நயந்து — அன்போடு, முடித்தனை — செய்துபூர்த்தியாக்கினாய், பல் — அனேக, பதி — திவ்யதேசங்களை, வலம்வந்தனை — வலமாகச்சூழ்ந்து வந்தாய், புலிமான்தோல்—புலித்தோல் மான்தோல் முதலியவைகளைப்பரப்பி, இடை — அவைகளின் மத்தியில், பன்மணி — பலவிதமாகிய மணிகளை, பூண்டு — தரித்துக்கொண்டு, இறுமாப்பாகவிருந்து — கிமிர்ந்துட்கார்ந்து, இருகண்கள — இரண்டு கண்களையும், மூய்ந்து — மூடி, யோகுகளை — * பிராணயா

இயமம்-நியமம்-ஆதனம்-பிராணயாமம்-பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதி-ஆக-8.

மாதியான தாரணைகளை, பயின்றனை — அப்பியசித்தனை, பதி — இவ்வாறு செய்தயாவும்சுவர்க்கமுதலிய விடங்களையும், சதி-மனைவிமுதலியகளத்திரத்தினையும், நிதி—திரவியங்களையும், சுதர்—சீடராதி பிள்ளைகளையும், உடல் — சரீர சவுக்கியமும், * அணிமாதி பயன் — அணிமாதி அஷ்ட ஐஸ்வரியங்களையும், பெறவேண்டியலால் — அடையவிரும்பியே யல்லாமல், இகபர உடல்வாழ்வு — இகபரங்களில்வரும் உடலோடிருந்தலையும் வாழ்வுகளும், நிதி-சம்பத்தும், பாழ்படவென — பாழாயொழிவனவாகையால் நீங்கக்கடவதென, பவமறுதற்கு — பிறப்பைவிட்டழியா சொரூபசுபாவம்பெறுதற்கு; அலவே — அல்லவே, இதிலெது பயன — இந்தஸ்நாநஜபதபாதியஷ்டகருமத்தாலென்னபிரயோஜனம், இருமறை — உயர்வாகியவேதங்கள், இகபரசுகம் — இம்மை மறுமைகளிலடையும் சுகாதிகள், நிலையலவெனும் — நிலையல்லவெனத்தெரிவிக்கும்,(அன்றியும்) உடல்வாழ்வு — சுவர்க்காதியிடங்களில் உடல்களும் அதனாலாயசுகதுக்கபோகவாழ்வுகளும், எண்ணில்கழிந்த—அளவற்றவைகள்நீங்கினவாம்,அதைஅறிந்து — அறிந்துமதனையே, ?வேண்டுவை — அடைய விரும்புகின்றாய், உன்னினைவு இது — உன்னெண்ணமாகிய விது, என்—எத்தன்மையது. (ஏ-சுற்றசை) (எ-று) 4.

கௌரவைமறந்திலை கர்வமொழித்திலை கன்மம்விடுத்திலை யால்
காய்சினமவிட்டிலையுடல்பொருள்குலவபிமானங்கழலலையா
ல், வெவ்வுரைதந்தெம் மதமேபெரிதென வீண்வாதாடுவையால்
வீணர்தமைப்புகழாமெய்ஞ்ஞானிமுன் வீம்புகள்பேசுவை
யால்,பவ்வநெடுந்திரைசூழ்புவிமேற்புகழ்பரவவிரும்புவைமெய்ப்
பத்திசிரத்தைநிராசைவிசாரணை பற்றலைசற்றதிலென்
னெவ்வுலகோசத மெவ்வுடலோசத மெம்மதமோசத நீ
யெண்ணறுபிறவியெடுத்தழிவித்ததை யென்னலையென்
[னிதுவே.

(இ-ள்) கௌவை—பொறுமையை, மறந்திலை—மறந்தாயல்லை, கர்வம்—(குலகோத்திர வர்ணாச்சிரமங்களில் யானே சிறந்தவனென்னும்)கர்வத்தை, ஒழித்திலை—நீக்கினையில்லை, கன்மம்—இகபரபோகந்தருவதும் ஆன்மசுகத்தை மறப்பது மாகிய விஷயசுகவாசையை, விடுத்திலை—விட்டாயில்லை, காய்சினம்—பிறர்மேல் கோபிக்கும்கோபத்தை, விட்டிலை—விட்டு நீங்கினையில்லை, உடல்பொருள்குலம்—உடலிலும்,பொருளிலும்,குலத்திலும்அழுந்திய,அபிமானம்—யானெனதென்னும்அகந்தையைவிட்டு,கழலலை—நீங்கினையல்லை,வெவ்வுரை—நியாய விரோத கடுமொழிகளை, தந்து—பேசி, எம்மதமே—உலகி

* அணிமா-மகிமா-கரிமா - இலகிமா-பிராந்தி - பிராகாமியம்-ஈசத்துவம்-வசித்துவம்-ஆக-8.

னுள்ள சகலரும் விரும்பலால் எங்களபிப்பிராயமே, பெரிதென-உயர்வாயதென, வீண்வாது-பயனற்றவிதண்டா வாதத்தை, ஆடுவை-எக்காலத்தும் புரிவாய், வீணர்தமை-(தனக்கும் பிறருக்கும் பிரயோஜனமான விசாரணையை விடுத்து பழக்கமே பெரியோரொழுக்கமென) விருதாகலங்கழிப்பார்களை, புகழா-நல்லோர்களெனப் புகழ்ந்து பேசி, மெய்ஞ்ஞானிமுன்-மெய்மையாகிய ஞானத்தைப்பரோபகாரமாக போதிப்பவர் முன்சென்று, வெம்புகள்-அகங்கார வார்த்தைகளை, பேசுவை-பேசுகின்றாய், நெடுந்திரை-பெரியவலைகளையுடைய, பவ்வஞ்சூழ்-சமுத்திரம் சூழ்ந்த, புவிமேல்-உலகமெங்கும், புகழ்-கீர்த்தி, பரவ-வியாபிக்க, விரும்புவை-இச்சிக்கின்றாய், மெய்ப்பத்தி-உண்மையான ஸர்வவியாபக வீசனிடத்தும் எல்லாமவனுருக்காணும் அன்பும், சிரத்தை-வேதாகமபுராணங்களிடத்தும் உண்மையை யுரைக்கும் பெரியோரிடத்தும் நம்பிக்கையும், நிராசை-அழியும்பொருள்களிடத்தாசையை நீக்கும் விராகமும், விசாரணை-தெளிந்தோர்களிடம் விசாரித்தலும் ஆகிய நற்கருமங்களை, பற்றலை-கைப்பற்றுவாயல்லை, கற்றதில்-சந்தேக விபரீதந்தீராது நீ கற்றவைகளில், என்-என்னபிரயோஜனம், சதம்-அழியாவான்மாவினோடு சாஸ்விதமாக நிற்பது, எவ்வுலகோ - எந்தலோகமோ? எவ்வுடலோ-தேவ மனுஷியாதி எந்ததேகமோ (இல்லையாகையால்) சதம்-நித்தியமாக, எம்மதமோ-எந்த மதமோ?, சதம்-நிலையாகநிற்கும், (அன்றி.) நீ, எண்ணறு-நீ யளவிறந்த, பிறவி-ஜன்மங்களை, எடுத்து-தாங்கி, அழிவித்தனை-அழிவித்தவைகளை, எண்ணலை-நினைந்துணர்வாயல்லை, இதுஎன்-இது என்னவதிசயம். (ஏ-ஈற்றசை) (எ-று) 5.

[ஆகசெய்யுள் 36]

---

## அறிந்தழிவாயெனல்.

---

இறப்போமென் றறிவரியென் னிலரிறக்கக் கண்டா
யெவர்பிழைத்தா ரேனழுத லென்றயலுக் குரைப்ப
துறப்பரோ வுயிர்தமர்க ளார்த்துமறந் தழுவாய்
துடிதுடித்துக் குலைநடுங்கித் துஞ்சுமுனே யுடலை
மறப்பதுபுண் ணியமென்பாய் மகான்கதைகள் படிப்பாய்
மறுகணத்தின் மண்பெண்பொன் மயலதனான் மாழ்கித்
திறப்படுவா யுலகுசத மென்வேலை யையோ
திரைக்கடல்வீழ்திரணமொத்தாய்செப்புவதென்னுனக்கே.

(இ-ள்) (மனமே)-மனமே! இறப்போம் என்று-நாமெல்லோரும் சாவோம எனை, அறிவாய்-நீ தெரிந்து கொண்டிருக்கிறாய், எண்ணிலர்-கணக்கில்லாத பேர்கள், இறக்க-சாக, கண்டாய்-கண்ணாரப்பார்த்திருக்கிறாய், எவர் பிழைத்தார்-எவர் சாகாது உயிரோடிருந்தவர்கள், எனழுதல்-எதற்காகதுக்கிப்பது, என்றயலுக்கு-என்று அயலார்க்கு, உரைப்பாய்-அனேகருக்குச் சொல்வாய், தமர்கள்-தம்மவர்கள், உயிர் துறப்பரேல்-ஜீவனை விடுவார்களாகில், மறந்து-முன் அயலாருக்குச் சொன்னவைகளை மறந்து, ஆர்த்து-வாய்விட்டலறி, அழுவாய்-புலம்புவாய், தடிதடித்து-அன்றியடிக்கடி பதைத்துப்பதைத்து, குலைகுலைந்து-குலை யதிர்ச்சிகொண்டு, துஞ்சுமுனே-ஒவ்வொருவரும் தாம் தாம் சாகும் முன்னரே, உடலைமறப்பது-சரீரத்தை மறந்திருப்பது, புண்ணியமென்பாய்-பூர்வஞ்செய்த தரும பயன் என்று சொல்வாய், மகான்கதைகள்-அப்படியுடலினிடத்துப் பற்றற்ற பெரியோர் சரித்திரங்களை, படிப்பாய்-வாசிப்பாய் பிறருக்குஞ் சொல்லுவாய், மறுகணத்தில்-மறுக்ஷணத்தில், மண் பெண் பொன்-மண் பெண் பொன் என்கிற மூவாசையின், மயலதனால்-மயக்கத்தினால், மாழ்கி-புத்தி கெட்டு, உலகு சதமெனவே-பொய்யுலக வாழ்வு நிச்சயமென்றே,ஸ்திரப்படுவாய்-நம்புவாய், ஐயையோ-ஐயையோ நிலையில்லாமனதே,திரைக்கடல் வீழ்-அலைகளையுடையசமுத்திரத்தில் வீழ்ந்து அலைந்துக் கொண்டிருகிற, திரண மொத்தாய்-துரும்புக்கு ஒப்பானு யானால்,செப்புவது-சொல்வதுஉனக்குஎன்-நீ யறியாதது உனக்கு என்ன இருக்கிறது? இல்லை. (உ-ஈற்றசை) (எ-று) 1.

விரைந்திடலேன் விதியிலுள்ள தேவருமென் றுரைப்பாய்
வீணர்சொல்லை மெய்யெனவீ டும்பொருளுந் தோற்றே
கரைந்திரச வாதபித்தே றிப்புகைக்குட் பட்டுக்
கண்ணிழந்து மதியிழந்து கையிரண்டு மேந்தி
யிரைந்தழுதிச் சகம்பேசி யிஞ்சியுண்ட குரங்கா
யிடுவர்கைக்கே மாந்தவரா விடர்தொலைக்க வலைவாய்
சிரைபுரைவா யவர்தொழுத்த லவர்கதியே யன்றோ
சிச்சிநீ யறிந்து கெட்டாற் செப்புவனா ருனக்கே.

(இ-ள்) மனதே! விரைந்திடலேன்-மனதே! [illegible]வேண்டுமென்று விரைவதேன், விதியிலுள்ளதே-பிரா[illegible]யிருப்பதே, வருமென்று-வந்து சேருமென்று, உரைப்பாய்-நீ பிறருக்குச் சொல்லுவாய், (அப்படிச்சொல்லும் நீ ), வீணர்சொல்லை-பயனில் செய்வார்வார்த்தையை மெய்யென-மெய்யென்றெண்ணி, வீடும் பொருளும்-வீட்டையும் [illegible]யையும், தோற்றே-[illegible]வாதிகளுக்குக்கொடுத்து, கரைந்[illegible]து, இரசவாத-இரசத்தை [illegible]த்துப் பொன்செயவேண்டுமென்கிற [illegible]

சாஸ்திரப்படிபொன் செய்வதென்கிற, பித்தேறி-பயித்தியங்கொண்டு, புகைக்குட்பட்டு-பாஷாணகந்தகாதி சரக்குகளின் புகையில் அகப்பட்டு, கண்ணிழந்து-கண்கெட்டு, மதியிழந்து-புத்தி கெட்டோமென்று நினைந்து கையிரண்டும் ஏந்தி-இரண்டுகையும் ஏந்திக்கொண்டு, இரைந்தழுது-பி, கைஷயென்று கூவி வீட்டார்வர அவர் முன் அழுது, இச்சகம் பேசி-எவருக்கும் இதமான வார்த்தைகள் சொல்லி, இரந்தியுண்ட-இரந்தையைத்தின்கிற, குரங்காய்-குரங்கைப்போல்வெறுப்படைந்தவனாய், இவர்கைக்கு-தானங்கொடுப்பவர் இடத்துக்குப்போய், மொந்தவரால்-அவர் கொடுக்கும் வரையில் தியங்கி நிற்பவராகிய பொய்வாதிகளால், இடர் தலைக்க-உன்னிடதரித்திரசங்கடத்தை நிவர்த்தி செய்துக்கொள்ள, அலைவாய்-பின் திரிவாய், சிரைபுரைவாய்-குரங்கை யொத்தவனே!, அவர் கொடுத்தல்-அப்படி கெட்டுவந்தவர்கள் கொடுப்பது, அவர்கதியே யன்றோ-அவரனுபவிக்குஞ் சங்கடமேயல்லவோ?, சிச்சி-சிச்சி, நீ அறிந்து கெட்டால்-நீ தெரிந்திருந்தும் கெடுதியையடைந்தால், உனக்கு-உன்றனக்கு, செப்புவர்-புத்தி புகட்டுவோர், ஆர்-யார் நீ யோசி, (ஈ-ந்றசை) (எ-று) 2.

தேவரௌவை சிவசமய வாசிரிய ரடியார்
திருந்துசட கோபர்முத லாழ்வார்கள் சித்தா
மூவர்சொன்ன கீதைமுத னூல்படிப்பாய் பிறர்க்கு
மொழிந்திடுவாய் குருவாக முன்னிரைவா யல்லால்
யாவரெனைப் போன்மடைய ரென்றகத்திற் றிரும்பா
யானெனலு மெனதெனலு மெள்ளளவுந் தவிராய்
கோவணத்தின் மேற்குறையுந் தலைமேலாக் கினையுங்
குறுகாதென் பாய்துணியாய் கூறுவரா ருனக்கே.

(இ-ள்) நெஞ்சே! தேவர்-நெஞ்சே! தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவர் சொன்ன குறள் முதலிய நூல்களும், ஔவை-ஔவையார் சொன்ன ஆத்திசூடி முதலிய நீதிநூல்களும், சிவசமயவாசிரியர்-மாணிக்கவாசகர் முதலிய சிவசமயவாசிரியர் செய்த திருவாசகம் தேவாரம்முதலிய நூல்களும், அடியார்-பட்டினத்தடிகள் தாயுமானவர் முதலிய அடியவர் செய்த நூல்களும், திருந்து சடகோபர்முதல்-திருத்தமாகிய சடகோபர் முதலாகிய, ஆழ்வார்கள்-பனிரண்டாழ்வார்கள் செய்த பிரபந்தங்களும், சித்தர்-அகஸ்தியர் முதல் பதினெண் சித்தர்கள் செய்த நூல்களும், மூவர்-பிர்மாதிமூவர், சொன்னகீதை-சொன்ன ஈஸ்வரகீதை ருத்ரகீதை விஷ்ணுகீதையென்னும் ரிபுகீதை பகவத்கீதைகளும், முதனூல்-முதனூலாகிய இருக்கு முதலிய நான்கு வேதங்களும், படிப்பாய்-நீ வாசிப்பாய், பிறர்க்கு மொழிந்திடுவாய்-பிறர்க்கு மவைகளைத் தெளிவாகச் சொல்வாய், அல்லால்-அல்லாமல், குருவாக முன் நிரைவாய்-ஆசிரியனாக ப்பதிரும்ப் பிரியனாக

தூரிதப்படுவாய், யாவரெனைப்போன் மடையரென்று — என்னைப்போல் அறிவீனர் யாரென்று, அகத்திற்றிரும்பாய்—அந்தர்முக நாட்டமாகத்திரும்பாய் (அன்றியும்.) யானெனலும்—சரீரமே யானென்று பழகிய தூர்ப்பழக்கத்தையும், எனதெனலும்—அச்சரீரத்தாற் றேடியகருமம்-குணம்-உலகத்தோற்றப்பொருள்களையெனதென்றுகொள்வதையும், எள்ளவுந்தவிராய்—கிஞ்சித்தும் விட்டிடாய், கோவணத்தின்மேற் குறையும்—எவர்களுக்காகிலும் கோவணத்திற்கு மேற்பட்ட வஸ்திரமும், தலைமேல் ஆக்கினையும்—தலைவெட்டுவதற்கு மிஞ்சின தண்டனையும், குறுகாதென்பாய்—அணுகாதென்று பிறர்க்குத் துணிவாகச் சொல்வாய், துணியாய்—நீ அப்படியே விட்டிடாய், உனக்கு கூறுவாரார்—உனக்குச் சரிசொல்ல வல்லவர் யாவரிருக்கிறார்கள்? இல்லை. (ஏ—ஈற்றசை) (எ-று) 3.

ஆசைபல வருந்துயருக் கடிப்பீட மென்பாய்
யாதுவந்து மடங்காதே யார்கொடுப்பா ரென்பாய்
காசைநாந் தேடினமோ நமையதுதே டிற்றே
கடற்கரையிற் புரண்டாலுங் கனபரங்கொண் டதுவே
தூசதிக மொட்டாதென் றெவரிடத்தும் புகல்வாய்
துரும்பளவாசையையும்விட்டுத் துணிவமெனத் துணியாய்
வேசையர்க ளாசைபோக்க நேசம்வைப்பாய் சிவன்மேல்
வெளிவேடம் பரமசுகம் விளைத்திடுமோ நெஞ்சே.

(இ—ள்) நெஞ்சே! பல அருந்துயருக்கு—மனமே! அநேக முடிவு பெறாத துக்கங்களுக்கு, ஆசை அடிப்பீடம் என்பாய்—ஆசையானது முதலாசனமாயிருக்கிறதென்பாய். (அன்றியும்) யாது வந்தும் அடங்காதே—எவ்விதமான உயர்ந்த பொருள் கிடைத்தும் ஆசையடங்காதே, யார் கொடுப்பாரென்பாய்—அவ்வாசையடங்கும்படி கொடுக்க வல்லவா யாரென்று சொல்வாய், காசை—திரவியத்தை, நாம் தேடினமோ—நாம் சம்பாதித்தமோ, அது நமை தேடிற்றே—அக்காசு நமைச்சம்பாதித்ததோ இல்லை. கடற்கரையில்புரண்டாலும்—சமுத்திரக்கரையோரம் உள்ள மணலில் குறைவறப் புரண்டாலும், கனபரம் கொண்டதுவே—சரீரத்தில் ஒட்டுமவ்வளவே யல்லாமல், தூசதிகம் ஒட்டாதென்று—அணுமாத்திரம் அதிகமாய் ஒட்டாதென்று, எவரிடத்திலும் புகல்வாய்—எல்லாரிடமும் சொல்வாய், துரும்பளவும்—ஒரு திரணமாத்திரமும், ஆசையையும் விட்டு—தூராசையைநீக்கி. துணிவமெனத் துணியாய்—விதியிலுள்ளது நேருமெனச் செயவேண்டியது செய்து இருப்போமென்று திடங்கொள்ளாய், சிவன்மேல்—மங்கள [illegible] கடவுள் மீது, வேசையர்கள் ஆசைபோக்க—தன்னை நாடி வருபவன்மேல் தாசிகள் வஞ்சனையாய் பக்ஷம் காட்டி பொருள்மீது ஆசை வைப்பதுபோல், நேசம் வைப்பாய்—அவனையன்றி வேறாய பொருள்களையடைய உள்ளன்பில்லாமல் ஆசைவைப்பாய், வெளிவேடம்—பகிர்முக வேடமானது, பரமசுகம்—மேலான முத்திச்சுகத்தை, விளைத்திடுமோ—உண்டாக்குமோ? சொல்லுக. (எ-று) 4.

(கலிவிருத்தம்)

எண்பெல் லாமெலும்பு நரம்புதசை கூடித்
தோலாலே மறைந்தமல பாண்டவுட லதிலே
கொண்டிருப்போ நாமுமென வறிந்திருந்துந் தனியுங்
குவலயத்தி லுள்ளாரைக் குறையுனலென் னெஞ்சே
பண்டிதத்தால் வேடத்தால் பணத்திலுயர்ந் ததனால்
பழையமல பாண்டமொரு பவித்திரம்பெற் றிலதே
யண்டர்பிரான் றருமுயிர்க ளனைத்தையுமொன் றென்றே
யறிவதுநன் ஞானமென்றுன் னகங்காரந் தொலையே.

(இ-ள்) நெஞ்சே! நெஞ்சு-மனமே! நெஞ்சனாகிய, எலும்பு-எலும்புகள், பலவாம்-அநேகமாகவிருந்து, (அதனோடு); நரம்புதசைகூடி-நரம்பு தசையுங்கூடி, தோலாலே மறைந்த-தோலாலே மூடப்பட்டு ஒன்றாகத்தோற்றப்படுகிற, உடல்-உடலாகிய, மலபாண்டமது-மலபாண்டத்தை, நாமும்-நாமும், மேற்கொண் டிருப்போமென-அபிமானித்துச் சுகமென்மேற்கொண்டிருப்போம் என்று, அறிந்திருந்தும்-தெரிந்திருந்தும், தனியும்-தனைக்காட்டிலும், குவலயத்திலுள்ளாரை-உலகின்கண் உள்ளவரை, குறையுனலேன் தாழ்ந்தாரென நினைத்தலென்னகாரணம், பண்டிதத்தால்-தேர்ந்த உன்வித்தை நிறத்தாலும், வேடத்தால்-பலர்முகவேடத்தாலும், பணத்திலுயர்ந்ததினால்-அதிக பணமுடையவனாயிருத்தலாலும்; பழையமலபாண்டம்-அநந்த ஜன்மங்களாக அடைந்துவரும் மலபாத்திரமாகிய உடலானது, ஒருபவித்திரம் பெற்றிலதே-ஒருவிதமான பரிசுத்தமும் அடையவில்லையே, (ஆகையால் முதலில்) அண்டர்பிரான்-தேவர்கட்குத் தலைவனாகிய கடவுளால், தருமுயிர்கள்-படைத்த ஜீவர்களில், அனைத்தையும் ஒன்றென்றே-எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல ஒவ்வொன்றும் உயிரேயென்று, அறிவது-தெரிந்துகொள்வது, நன்ஞானமென்று-நல்லறிவென்று நினைந்து, உன்னகங்காரம்-உனது கர்வத்தை, தொலை-நீக்கிவிடுவாயாக. (கருத்துரை) (எ-று)

இருப்பதுபொய் போவதுமெய் யாதிருந்து மென்று
மெவரிருந்து மென்செய்வா ரெமன்வருங்கா றறவும்
பொருள்கொடுத்துப் பிழைப்பாரோ தமரைபதும் புல்லே
பொய்யுரைத்தாற் சென்றிடுமோ பிறக்கவந்தே வாங்கே
திருக்கழுவையு மையாவென் றிருக்கும்படி வாரே
வுடம்புவளர்த் திடுமுடம்பி லிருந்திடுமோ காலே
யொருக்கெதுவோ நிலைமையிலாப் பொருட்கழுவாய் நெஞ்சே
யுயிர் பிரிந்தகட்டைநெருப் புவர்ாகுமக்கே

(இ-ள்) நெஞ்சே-மனமே, இருப்பது பொய்-நிலையென்று [illegible]
[illegible] நிருக்கல்பொய், போவதுமெய்-அழிந்து போவது [illegible]

ருங்கால்-உடலுயிரைப பிரிக்கும் சமயத்தில், யாதிருந்துமென் னும்-எவ்வித பொருள்களிருந்தும் என் பலனுகிவிடும், எவரிருந்து மெ ன்செய்வார்-எவ்விதமான சகாயிகளிருந்தும் என்னசெய்வார்கள்? தேடும் பொருட்கொடுத்து-பல உபாயங்களாலும்-கஷ்டத்தாலும் சம்பாதித்தபொ ருட்களைக்கொடுத்து, பிழைப்பாயோ-யமனுடன்செல்லாது இவ்வுலகிலே யே ஜீவிப்பாயோ?, தமரையனுப்புவையோ-உனக்குப்பதிலாக புத்திரமித் திர களத்திராதிகளை யனுப்புவாயோ?, பொய்யுரைத்தாற் சென்றிடுமோ- உலகரைவஞ்சிக்கக்கற்ற வார்த்தைகளைச்சொன்னால் சரிக்கட்டுமோ?, பிற்க ணத்தேவருவேன்-அடுத்தக்ஷணத்தில் வருகிறேன், உருக்கம் வையுமையா வென-என்மீது தயைவையுமையாவென்று, அழுதும் விடுவானே-விசனப் பட்டாலும் விடுவானே? ஊட்டிவளர்த்திடுமுடம்பிஞெடு--நானென நம்பி இதுவரை உண்பித்து விர்த்திபண்ணின தேகத்திஞேடும், கொடுபோகா னே-கொண்டுபோக உடன்படானே, செருக்கெதுவோ-என்னகருவத்தை யாதாரவாகக்கொண்டோ, நிலைமையில்லாப் பொருட்கழுவாய்-தோன்றிம றையும் நிலையில்லாதபொருட்கு ஆசைப்பட்டு அழுவாய், சீசீ-சீசீ, நீ அறிந் துகெட்டால்-நீ தெரிந்து இருந்தும் கெடுதியையடைந்தால், உனக்குச்செ ப்புவர் ஆர்-உனக்குச் சொல்லவல்லவர்யாவர் ஒருவருமில்லை. (ஏ-ஈற்றசை) (எ-று) 6

பெண்ணுசை யாலழிந்த பேர்கடமைக் கண்டாய்
　　பெரும்பார தக்கதையி ராமர்கதை யறிவா
யெண்ணமை லவர்பிறகே நாயதுபோ லலைவா
　　யிருந்தபொரு ளீந்துலக ரேசிடவா யறுவாய்
புண்ணதி தரவழிந்தாய் வைத்தியர்பின் பற்றிப்
　　பொருள்கொடுத்து வாய்ப்பறகள் போமருந்தை யுண்டாய்
மண்ணுவா ராசைகன விலும்விரும்பே னென்றாய்
　　மறுத்தவர்வா யிலேக்காப்பாய் மருந்துனக்கென் னெஞ்சே

(இ-ள்) பெண்ணுசையாலழிந்த-பிறனிட பெண்களினுசையிஞல்கெட் ட, பேர்கடமைக்கண்டாய்-மனிதர்களைப் பார்த்திருக்கின்ருய், (அன்றியும்) பெரும்பாரதக்கதை-பெரிய பாரதக்கதையையும், இராமர்கதை-இராமர் கதையையும் படித்து, அறிவாய்-அவற்றில் பெண்ணுசையிஞல்கெட்ட திரி யோதனன் இராவணுதிகளைப்பற்றித்தெரிந்திருக்கிருய், எண்ணுமலவர்பி றகே-அதையும் நினைந்துபாராமல் அப்பெண்கள்பிறகே, நாயதுபோலலை வாய்-ஆண்நாய் பெண்ணுயைத்தொடர்ந்து அலைவதுபோலலைகின்ருய், இருந்தபொருளீந்து-தகப்பனுல் சம்பாதித்ததும் நீ சம்பாதித்ததுமாகிய பொருளும்கொடுத்து [illegible] சம்பாதித்ததைப் பார்த்து தரித்திரனுகி உலகரேசிட-உலகத்தார் [illegible]செய்ய, [illegible]வாய், பதில்சொல அவ

மானமுடையவனும் வாய்மூடிக்கொண்டிருக்கிறாய், (அன்றியம்மாதர்கள்) புண்ணுதிரமழிந்தாய்-வெள்ளை அரையாப்புகட்டி முதலிய புண்களைகொடுக்க பெற்று கஷ்டப்பட்டு சரீரம்மெலியப்பெற்றாய், வைத்தியர்பின்பற்றி-சில இரக்கமில்லா வைத்தியரைச்சேர்ந்து, பொருட்சொரிந்து-மிகுதிபணத்தையும்கொடுத்து, வாய்ப்பறக்கள்-வாயிலுள்ள பல்லுகள், போமருந்தையுண்டாய்-விழுந்து போகும்படியான இரசசம்பந்த மருந்துகளைத் தின்றுமிருக்கிறாய், மண்ணுவாராசை-மண்ணிலிருந்து தோற்றிமறுபடி மண்ணுமாறும்ஸ்திரிகள்மீதுபட்சம்,கனவிலும்விரும்பேனென்றாய்-இனிமேல்ஒருவேளை சொற்பனத்தில் தோற்றினாலும் இஷ்டப்படேனென்றாய், மறந்து-மருந்தால் தேகம்சௌக்கியப்பட்டபிறகு முன்சொன்னதைத்தடுத்து, அவர்வாயலேக்காப்பாய்-அம்மாதரது தெருவாசற்படியில் காத்திருப்பாயானால், நெஞ்சே-மனதே, உனக்குமருந்து என்-உனக்கு என்ன மருந்து கொடுத்தாலும் திரும்பாய். (எ-று) 7.

துறவிகளுக் கரசனொரு துரும்பெனுஞ்சொற் பொய்யோ
துணிந்தார்க்குத் துக்கமில்லை யெனலறிநீ மெய்யோ
பிறந்திறவா வுயிர்க்கரந்தை யுண்டெனலை யையோ
பேயர்சொல்லும் வாழ்வுதாழ் வதைநினைவாய் நொய்யோ
ரரன்பிரம னரிமுதலோ ரடைந்தனரே யுடல்கொண்
டார்சிறுமை பெருமையடை யாதிருப்பார் கலங்கேன்
மறமலிந்த நெஞ்சுடையார் வார்த்தையினு னெஞ்சே
வருவவர வாராத வரலொழிக வெனவே.

(இ-ள்) துறவிகளுக்கு-சர்வ சங்க பரித்யாக மென்பதை யறிந்தடைந்த சந்நியாசிகளுக்கு, அரசன்-ஏக சக்கிராதிபதியாகிய அரசனும், ஒரு துரும்பெனுஞ்சொல்-ஒரு திரணத்திற்குச் சமமென்று சொல்லுகிற சொல்லானது, பொய்யோ-பொய்யாகுமோ?, துணிந்தார்க்கு-நிலையாமையை எண்ணித்துணிந்தவர்க்கு, துக்கமில்லை எனல்-விசன மில்லை யென்று சொல்லுவதை, அறிநீ-நீ தெரிந்து கொள்ளக்கடவை, பிறந்திறவாவுயிர்க்கு-உதித்து மறையாத ஜீவனுக்கு, அரந்தை யுண்டெனல்-துன்பம் உண்டென்பது மெய்யோ-நிஜமல்லவே? ஐயையோ-ஐயையோ பேதமையான மனதே, பேயர் சொல்லும்-அலைச்சலைத்தரும் அறுவகை மதப்பித்தர்கள்சொல்லும், வாழ்வு தாழ்வு அதை-சம்பத்து தரித்திரம் என்னும் விபரீத வார்த்தையை நினைவாய்-கேட்டு நினைந்து கெட்டுப்போகிறாய், உடற்கொண்டு-சரீரமடைந்து, நொய்யோர்-தூர்க் குணமுடையாரகூடதாளும், அரன் பிரமன் அரி-சிவன் பிர்மா விஷ்ணு, முதலோர்-முதலானவாளும், அடைந்தனரேல்-சம்பத்தாபத்துகளை யடைந்தனரென்றால், சிறுமை பெருமையடையாதிருப்பார்-யாவர் துக்க சுகங்களை மாறி மாறி யனுபவிக்காதிருப்ப

வர், யார்-யாவருமடைவர்கள், நெஞ்சே-ஆகையால் என் மனமே, மற யவித்த நெஞ்சுடையார்-பாவம் நிறைந்த மனமுடையவரிட, வார்த்தையி னால் கலங்கேல்-சொற்களால் சலனப்படாதே, வருவவா-பிராரத்வயித் துண்டாகி வரத்தக்கவைகள் வரக்கடவது, வாராதுவா எனவே ஒழிக-பி ராரத்வத்தி லில்லாதது வாராதென்று விட்டு நீங்குக. (எ-று) 8.

உள்ளபடி நாம்பிழைக்கும் வகையெதுவென் றுன்னு
யுணர்ந்தவரைப் பரிகசிப்பா யுட்கருத்தை மறைத்துக்
கள்ளவந்த னம்பூசை ஜபதபமேற் காட்டிக்
கருத்தறியா ரிடம்பகட்டிக் கண்டவர்பா லணுகா
யெள்ளளவும் வாக்குமனங் காயமொருப் படவிங்
கெத்தொழிலு முஞற்றுகிலா யெப்பயனெங் குறுவாய்
பொள்ளலுடற் கேயழுவா யான்மசுகம் பேணாய்
புறந்திரிவா யகமடங்காய் புகலுவதென் னுனக்கே.

(இ-ள்) உள்ளபடி-உண்மையாக, நாம் பிழைக்கும்-நாம் பிழைக்கின்ற வகையெது வென்றுன்னாய்-விதம் எது வென்று நினைக்கவில்லை, உணர்ந் தவரைப் பரிகசிப்பாய்-ஆன்மாநுபவமடைந்தவர்களைப்பரிகாசஞ்செய்வாய் உட்கருத்தை மறைத்து-உள்ளெண்ணத்தை மறைத்து, கள்ள வந்தனம்-வ ஞ்சனையாய்க்கும்பிட்டும், பூசை ஜபதபம்-ஈசுவரனைப்பூசித்தும் ஜபித்தும் தபித்தும், மேற்காட்டி-துற்சிந்தையை மறைத்து நற்சிந்தை யுடையவன் போல் வேஷங்காட்டி, கருத்தறியாரிடம் பகட்டி-உண்மையறியாத மூட ரை மிரட்டி, கண்டவர்பா லணுகாய்-உண்மையறிந்தவரிடம் சேராய், எள் ளளவும்-எள்ளளவும், வாக்கு மனங்காயம்-வாக்கும் மனசும் சரீரமும், ஒருப்பட-ஒத்து, இங்கெத்தொழிலும்-இவ்வுலகத்தில் எந்தக் காரியத்தை யும், உஞற்றுகிலாய்-நீ செய்யவில்லை (அப்படித்திரிகரண சுத்தமாய்ச் செய் யாவிடில்), எப்பயன்-எந்த பிரயோஜனத்தை, எங்குறுவாய்-எந்த உலகத்தி லாகிலு மடையப்போகிறாய்? இல்லை, பொள்ள லுடற்கேயழுவாய்-பொத் துடைய சரீரத்திற்கே யழுவாய், ஆன்மசுகம்-ஆத்மாவினுடைய ஆனந்தத் தன்மை யை, பேணாய்-மாயையாற் கெடாதிருக்க விரும்பிக்காப்பாற்றாய், புறந்திரி வாய்-பகிர்முக நாட்டமுடையவனாகத் திரிவாய், அகமடங்காய்-அந்தர் முகத்தில் சேர்ந்திராய், புகலுவதென் னுனக்கே-உனக்குச் சொல்வதுஎன் னவிருக்கின்றது? ஒன்றுமில்லை (ஏ-ஈற்றசை) (எ-று) 9.

இல்லையெனுங் குறைநீயெப்போர் வடிவாகும் மனமே
யானாநீ யெங்குநித்த மெவர்பொருட்டா யலைவாய்
வல்லையல்லை யகிலாண்ட கோடிவருந் தளித்துள்
வாங்கவல்லா னிப்பதிநின் பறந்ததுனி நசைக்க

நல்லைநீ யென்பொருட்டே துயருறுவா யெனிலோ
நம்புமெனைக் கைவிடுத்துச் சுழுத்தியிலெங் கொழிவா
யெல்லையில்சத் தாமெனினீ பிறந்திறப்பை யுணர்வா
யினியேனுந் தொழிலறவென் னிற்கலந்து சுகியே.

(இ-ள்) இல்லையெனும் குறைவே-இல்லையென்று சொல்லும்அதிருப்தியே, ஓர் வடிவாகும் மனமே-ஒருருவமாகிய மனதே, யாஞர்-எனது சொரூபமெது, நீ யெங்குதித்தாய்-நீ எவ்விடத்தில் தோன்றினாய், எவர் பொருட்டு-எவர் நிமித்தமாக, அலைவாய்-நிலையாது அலைந்து திரிகிறாய், என் பொருட்டே-ஆத்மாவாகிய உன்னிமித்தமே, துயருறுவாயெனிலோ-நீ துக்கப்படுகிறேனென்பையாகில், அகிலாண்டகோடி-எல்லா அண்ட பிண்டங்களையும், வகுத்து அளித்து உள்வாங்கவலா-சிருஷ்டித்து ரட்சித்து உள்ளடக்கும் வல்லமையுடையோனாகிய சர்வேசுரனது, நியதிதனை மறுத்து-விதி தங்களைத் தடுத்து, இங்கு அணுவசைக்க-இவ்விடத்து த்ரண மாத்திரம் மாறுபாடு செய்ய, வல்லை யல்லை-நீ வல்லமையுடையவனல்ல, நம்புமெனைக் கைவிடுத்து-உன் வார்த்தை நிஜமென்று நினைக்கும்என்னைக் கைவிட்டு, சுழுத்தியிலெங்கொழிவாய்-நித்திரையில் எங்கே நீங்கிப்போகிறாயோ, தெரியவில்லை, எல்லையில் சத்தாம்எனில்-அளவில்லாதவனும் அழிவற்றவனுமாகிய எனனில், நீ பிறந்திறப்பை யுணர்வாய்-நீ ஜனித்து நசிப்பதை அறிவாய் (ஆகையால்). இனியேனும் தொழிலற-இனியாகிலும் வினைக்காக்கச்செய்யும் யாதொரு வேலையுமற்று, என்னிற்கலந்து சுகி-சமுத்திரஜலத்திலுண்டாகும் அலைதுளி நுரைகள் மறுபடி அச்சலத்திலடங்குவது போல் ஆத்மாவாகிய என்னிலெழும் நீ என்னிலடங்கி சுகமாயிரு, நீ நல்லை-அப்பொழுது நீ எனக்கு நல்லவனாவாய், (ஏ-ஈற்றசை) (எ-று) 10.

[ஆகசெய்யுள்கள் 46]

---

## மெய்க்குருவை வியத்தல்.

---

அல்லறீர வறிவைய ளித்தருப்பே
ராசை தீர வருளிதெனு மோர்மொழி
சொல்ல வல்ல வருட்குரு தாடலை
தோயக் கொண்டு பிறப்பறு நெஞ்சமே
நல்ல யோகஞ் சிதம்பரச் சக்கர
நாச மின்றி யுடனிலை மார்க்கமு

மில்லை யோதரு மொருநொடிக் குள்ளெனு
மீனர் சொல்விடு ஞானந் தழைக்குமே.

(இ-ள்) நெஞ்சமே!-மனமே!, அல்லல்தீர-பிறவித் துக்கம் நீங்க, அறிவையளித்து-ஆன்ம ஞானச்சொரூபத்தைக் காட்டி, பேராசைதீர-மிகுந்த ஆசையானது நீங்க, அமுதெனுமோர்மொழி-கெடாத அமிர்தமாகிய ஓர் பிரணவத்தை, சொல்ல வல்ல-உபதேசிக்க வல்லவராகிய, அருட்குருதான்-கிருபையே வடிவானவரும் அஞ்ஞானத்தை நீக்குபவருமானவரிட பாதத்தை, தலைதோயக்கொண்டு-தலையில் படியக்கொண்டு, பிறப்பற-உனது பிறப்பை நீக்கிக்கொள்வாயாக, நல்லயோகம்-இயமம்-நியமம்-ஆதனம்-பிராணயாமம்-பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதி முதலிய நன்மையாகிய அஷ்டாங்கயோகங்களும், சிதம்பரச் சக்கரம்-ஞானாகாசத்தில்நிற்றிட்டுள்ளநாற்பத்துமுக்கோண சக்கரமும், உடல் நாசமின்றி நிலைமார்க்கமும்-தேகம் அழியாது நிலைத்திருக்கச்செய்யும் (அணிமா-மகிமா-கரிமா-இலகிமா-பிராத்தி-பிராகாமியம்-ஈசத்துவம்-வசித்துவம் முதலிய) அஷ்டமாசித்திமார்க்கங்களும் இல்லையோ தருவோம் ஒருநொடிக்குள்ளெனும்-சாஸ்திரங்களிலில்லையா நொடிக்குள் உமக்கு மேற்சொன்னவைகளைத்தருகிறோம் என்று சொல்லுகின்ற, ஈனர் சொல்விடு-தான் சாஸ்திரத்தை விசாரித்து உண்மையறியாது ஒன்றை ஒன்றாக அர்த்தஞ்செய்கிற புத்தியீனராகையால் அவனிட வார்த்தையைக் கேட்காது நின்றாயாகில், ஞானம் தழைக்கும்-ஞானமானது பூரணப்படும். (எ-ஈற்றசை) (எ-று) 1·

ஏதம் யாவுங் கெடுத்துக் கெடாதபே
ரின்ப மேதர வன்புரு வாய்வரு
நாதன் சற்குரு தாடலைக் கொண்டது
நானெ னத்திட னுய்நில்லெ னெஞ்சமே
காத லித்திட வேமறை வஞ்சனங்
கற்ப நீக்கும் வசியந் திரிதலு
மோத வந்திடு மென்றுபொ ருட்கொளு
மூத்த ரைவிட் டொழித்துப் பிழைத்திடே.

(இ-ள்) என் நெஞ்சமே!-மனமே, ஏதம்யாவும்-உன்பாலுண்டாகிய குற்றம் முழுதும், கெடுத்து-நசிக்கச்செய்து, கெடாத பேரின்பமேதர-அழியாத பெரிய சுகத்தையே உனக்குக்கொடுக்க, அன்புருவாய் வரும்-கிருபையேயோருருவமாக வந்த, சற்குருநாதன்-அழியாதவனும் அஞ்ஞானத்தைக்கெடுப்பதில் வல்லவனுமாகியவனிட, தாள்தலைக்கொண்டு-பாதங்களைத் தலையில் தரித்துக்கொண்டு, அது நானெனத் திடனுய் நில்-பிரம்மமே நானென்று உறுதியாக நிற்பாயாக, காதலித்திடவே-ஆசையினுழலுவனை இன்னும் ஆசைகொள்ளும்படி, மறைவு அஞ்சனம்-(ஆள் ரூபம் தெரியா

திருக்கும்படி நெற்றியிலிட்டு மறைக்கும் மையும், புதையலெடுக்கும் அஞ்சனமையும்), கற்பழிக்கும் வசியம்-பதிவிரதஸ்திரிகளின் கற்பைக்கெடுக்கும் வசீகரமந்திரமும், திமிர்தலுப்-பிறரை மயக்கும் சொக்குப் பொடியும் உதவுந்திடுமென்று-உனக்குக் கற்றுக்கொடுக்க எனக்கவை தெரியுமென்று சொல்லி ஏமாற்றி, பொருட்கொளும் வுத்தரை-உனது கைப்பொருளைக் கைக்கொள்ளுகிற பொருளாசையுடையாரது சகவாசத்தை, ஒழித்துவிட்டு-முழுதும் நீக்கிவிட்டு, பிழைத்திடே-உயிர் தப்பி விமுக்தியடைவாயாக. (எ-று) 2.

என்றுமோர்படித் தாகவி லகிடு
 மேத மில்சக ஜாநந்த முன்னுரு
நின்றி டென்றப வாதம ருள்செயு
 நித்தி யக்குரு தாடொழுளன் னெஞ்சமே
பொன்றி டச்செயு மாரணம் பித்துக்கொள்
 பேத னம்வித்து வேஷணம் மோகன
முன்ற னக்கருள் வோங்குறை யாதெனு
 மூடர் கைவிடு கேடுத விர்க்கவே.

(இ-ள்) என் நெஞ்சமே-பேதை மனதே, என்றுமோர் படித்தாக-எக்காலத்தும் ஒரேவிதமாக மாறுபாடின்றி, இலகிடும்-சுயம்பிரகாசமாக விளங்கும், ஏதமில்-மறைப்பில்லாத, சகஜாநந்த முன்னுரு-உனது ஆத்ம சொரூபம் இயற்கையானந்த சுபாவமுடையன், நின்றிடென்று-அதை விட்டுப்பிரியாதிருப்பாயாகவென்று, அபவாதம்-ஒன்றிலொன்று வடக்கிக்காட்டும் அபேத யுத்தியை, அருட்செயும்-கிருபை செய்கிற, நித்தியக்குருதாடொழு-உண்மையாசானிடபாதத்தை வணங்குவாயாக, பொன்றிடச்செயும் மாரணம்--சாகச் செய்கின்ற மாரண மந்திரமும், பிதன்க்கொள் பேதனம்-புத்தி பேதம் உண்டாகச்செய்கின்ற பேதன மந்திரமும், வித்ன் வேஷணம்-ஒருவர்க்கொருவர் பிணங்கும்படி செய்யும் மந்திரமும், மோகனம்-மோடியெடுத்தல் முதலாகிய பிறரை மயக்கச்செய்யும் மந்திரமும் உன்றனுக்கு அருள்வோம்-உனக்குத் தெரிவிப்போம், குறையாதெனும்-பிறகு உனக்கு குறையாதொன்றுமில்லை என்று ஏமாற்றுகின்ற, மூடர், கை-மூடக்குருக்களின் சகவாசத்தை, கேடு தவிர்க்க-உனக்கு நேர்ந்திருக்கும் சகல கெடுதிகளும் உனைவிட்டு நீங்க, விடு-விட்டொழிப்பாயாக, (ஏ-அசைநிலை)(எ-று) 3.

அறிவை யன்றிப்பகிலம் விளங்குமே
 லாநந் தப்பிர மம்மது வங்ஙனே
வெறிய வேறற நில்லவை நிபெனும்
 வேத வாரியன் றடொழென் னெஞ்சமே

ங்கள் வைத்திது சண்முகி சாம்பவி
கூடு விட்டொரு கூடு புகச்செயு
நெறிய தென்றதி லேனுநி லைத்திடார்
நீசர் கைவிடு தேசுதி கழுமே.

(இ-ள்) என்னெஞ்சமே-என்னிட மனதே, அறிவையன்றி-பஞ்சேந்திரிய ஞானத்தை விட்டு, அகிலம் விளங்குமேல்-எல்லா சராசரப்பொருள் வடிவ உலகம் அதற்கதுவே தெரியுமாகில், ஆநந்தப்பிரமமது-சுக வடிவாம் பிரம ரூபமும், அங்ஙனே-அதுபோலவே அறிவிலும் வேறாகவிருந்துசொரூபஞானம் தெரியும், வெறிய வேறறநில்-பயித்தியக்காரா சந்தேக மற ஆத்ம சொரூப வடிவாய ஞானமன்றி ஜீவ அந்தக்கரண ஞானேந்திரிய ஞானங்கள் வேறல்லவென திடமாக நினை, அவை நீயெனும்-அந்தப் பிர்மமே நீயென்று தெரிவித்த, வேதவாரியருன்றொழு-வேதங்களை ஆராய்ச்சிசெய்து தன்னை யுணர்ந்தவாசிரியன் அடிகளை வணங்குவாயாக, இது சண்முகி-இது கண்காது மூக்கெனும் அறுவழிகளை மூடி நிற்பதாகிய சண்முகி முத்திரை, (இது) சாம்பவி-இது ஆகாய திருஷ்டியாக மேனோக்கிய முத்திரை, (ஆகிய இவைகளைப்பழகினால்), கூடு விட்டொரு கூடு-ஒரே தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தில், புகச்செயும் நெறியது என்று-புகும்படி செய்கின்ற வழியைப்பயப்பது என்று சொல்லி,குறிகள்வைத்து-பழக்கும் படிக்குப் பிறர்க்குக் காட்டிக்கொடுத்து, அதிலேனும் நிலைத்திடார்-அந்த நல் வைராக்கியத்திலேனும் சற்குரு வரும் வரை பழகி நிலைக்காதவராகிய நீசர் கைவிடு-அறிவீனரிட சேர்க்கையை விட்டு விடுவாயாகில், தேசுதிகழுமே-பிர்ம ஞானப் பிரகாசம்புடமிட்ட பொன்போற் பிரகாசமுடையதாமே. (எ-று) 4.

அணுவி னுக்கணு வாகிய கண்டமா
யந்த மற்றகு ருதுரி யந்தனைக்
கணுமு திர்ந்த கரும்பெனக் காட்டிய
கற்ப கக்குரு தாடொழுன் னெஞ்சமே
முணுமு ணுத்துச் சபித்திடு மோகம்பேன்
மோடி செய்தழிந் தார்கோடி யுண்டென்றெங்
கணுமு ரைத்தச்ச மாடுங்கு றும்பரை
யஞ்சி டாதவர் நெஞ்சைப்பி ளந்திடே.

(இ-ள்) என்னெஞ்சமே-எனது மனமே, அணுவினுக்கணுவாகி-நுட்பத்துகளிலும் நுட்பமாயும், அகண்டமாய்-எல்லையற்றதாகியும், அந்தமற்ற-முடிவில்லாததுமான, குரு துரியந்தனை-சகலத்திற்கும் ஆதாரமான மேலான ஞானத்தை, கணுமுதிர்ந்த கரும்பென-கணு முற்றிய கரும்பின்

ருசியைப்போலுமுருசிக்க, காட்டிய—காண்பித்த, கற்பகக் குரு—நினைத்ததைக் கொடுக்கும் கற்பகவிருட்சத்திற்கொத்த குருவினது, தாடொழு—அடியைப் பணிவாயாக. முனு முனுத்து—வாயால் முணுமுணென்று பேசி, சபித்திடுவோம்—சாபமிடுவோம், நம்மேல்—எம்போல்வார் மீது மோடிசெய்து—பிணக்குசெய்து, அழிந்தார் கோடியுண்டென்று—கணக்கில்லாதபேர்கள் நாசமடைந்தவர்கள் என்று, எங்கணுமுரைத்து-எவ்விடங்களிலும் பயமுறும்படிக்குச் சொல்லி, அச்சமாடுங்குறும்பரை-நல்லவரைப் பயப்படுத்துகிற பாபிகளை, அஞ்சிடாதவர் நெஞ்சை-பயப்படாமல் அவரது மனது (திடுக்கிடும்படி மார்பிலும் முகத்திலும்) அறைந்து, பிளந்திடு-கலக்கமடையச் செய்வாயாக. (ஏ-ஈற்றசை) (எ-று) 5

சுருதி யுக்தி யனுபவத் தாலுனைச்
சோர்வி லாப்பரி பூரண மாக்கிடத்
திருதி யாக வெழுந்த ருள் மாரிபெய்
தேசி கன்றிருத் தாடொழென் னெஞ்சமே
நிருதி மந்திர மீதுச பித்திட
நிச்ச யமுல கோர்தத் தஞ் சிந்தையிற்
கருதும் யாவும் வெளிப்படை யாமெனுங்
கயவர் கைவிடு காலமி ருக்கவே.

(இ-ள்) என் நெஞ்சமே-என்னிட மனமே, சுருதி-வேத ஆராய்ச்சியாலும், யுக்தி-காட்சி-அனுமானம்-ஆகமம்-அருத்தாபத்தி-உவமானம்-அபாவம்-சம்பவம்-ஐதீகம்முதலிய அஷ்டவித பிரமாணங்களாலும், அனுபவத்தால்-சுய அனுபவத்தாலும், உனைச்சோர்விலா-உன்னை மறதியில்லா, பரிபூரணமாக்கிட-குறைவறு நிறைந்தவனாகச்செய்ய, திருதியாகவெழுந்து-துணையாக எழுந்து வந்திருந்து, அருள்மாரி பெய்-கிருபாமழைபொழியும், தேசிகன்-ஆசிரியன், திருத்தாள் தொழு-அழகிய பாதத்தைப்பணிவாயாக, நிருதி மந்திரமீது-இது பேய்மந்திரம், சபித்திட-இதை தியானிப்பாகில்,உலகோர்தத்தம் சிந்தையில்-உலகத்தார் தங்கள் தங்கள் மனங்களில், கருதும் யாவும் வெளிப்படையாம்-நினைக்கும் எல்லா சங்கதிகளும்வெளிப்படையாக நீயறிவது, நிச்சயம்-நிஜமாகும். எனுங்கயவர்-என்று சொல்லும் மூடருடைய நேசத்தை, காலமிருக்கவே-சரீரம் நல்ல ஸ்திதியிலிருக்கும்போதே, கைவிடு-விட்டு நீங்குவாயாக. (எ-று) 6.

மாயை யில்லை மனாபாந்த முத்தியும்
வாய்ந்த நீசித் திவைசட முன்னுற
சாயை யோர்முத லென்னை யுய்ந்தொர்
சங்கதிக் தவன் சொல்லா நின்றான் னெஞ்சமே

பேயை யேவல் செயும்படிக் கேவுவன்
　　பேழந் துர்க்கையென் கைவச மென்றால
காயந் தேடும ழும்பர்கை விட்டுநில்
　　லந்த மில்பர மாநந்த மாவையே.

(இ-ள்) என்னெஞ்சமே—என்னரிய மனதே, மாயை மனம்—மாயையாலும் மனத்தாலும், பந்தம் முத்தியில்லை—ஆன்மாவாகிய நீகட்டுண்டதும் விடுபட்டதும் இல்லை, மைந்த நீகேட்டு—மாணாக்கா நீ சகலமும் அறியவல்ல சைதன்னிய சொரூபமாகிய பூரணான்மா, இவைசடம்—முன் சொன்ன மாயை முதலியனவும் யாதொன்றையும் உணரவல்லதல்லாத சடசொரூபங்களாம், உன்னுருசாயை—உனது கற்பித சரீரத்தின் நிழலானது, ஓர் முதலேல்—உனது சரீரத்தைப்போல வேறொரு முதலாகுமானால், இவை யுண்டென—முன்சொன்ன மாயை முதலியவை உன்னிலும் வேறாயுண்டாம் அப்படித் தோன்றுவதில்லை எனவும், சங்கை தீர்த்தவன்றொடொழு—சந்தேகம் நிவர்த்தி செய்தவன் பாதத்தைப் பணிவாயாக, பேயையேவற் செய்யும்படிக்கேவுவன்—நான் பேயை எனது ஏவல் செய்யும்படிக்கு ஏவல்செய்வேன், பேழந் துர்க்கையென் கைவசம் என்று—பெரியவாயையுடைய துர்க்கை என்பவள் எனக்கு வசியமாயிருக்கிறாள் அவளை ஏவுவன் என்று பயமுறுத்தி, உலகாயம் தேடும் அழும்பர்—உலகத்தாரிடம் ஆதாயம் சம்பாதிக்கிற பாவிகள் கைவிட்டுநில்—சிநேகம் விட்டு நல்வழியில் நின்றால், அந்தமில் பரமாநந்தமாவை—முடிவில்லாத பரமானந்த சொரூபியாவை. (எ-று) (ஏ-று) 7.

வைது நிந்தை வழங்கிவெ றுக்கினும்
　　வாய்மை தந்து மறுக்க மறுக்கவே
செய்து சிந்தை மகிழுமென் னையனுந்
　　தீன பந்துவின் றொடொழு னெஞ்சமே
நொய்து பேசலும் பாம்புபு லிகடன்
　　னோன்மை யல்லதோர் நோன்புஞ் செயாச்சிறு
மைத லாய்ப்பிற வைதல டைவதை
　　பன்னு வார்மொழி தன்னையொ ழித்திடே.

(இ-ள்) என்னெஞ்சமே—என்மனதே, வைது நிந்தை வழங்கி—திட்டி பழிச்சொற்கள் சொல்லி, வெறுக்கினும்—அப்படி தன்னை வெறுத்துக்கொண்டாலும், வாய்மைதந்து—ஒருத்தனை சத்தியத்தைச்சொல்லி ஆண்பித்து, மறுக்கம்—பிறவிபயத்தை, அறுக்கவேசெய்து—விலகச்செய்து பிறகு அவர்கள் சந்தோஷமடையப் பார்த்து, சிந்தை மகிழுமென்னையனும்—தானும் சந்தோஷத்தையடையுமெனது தந்தையாகிய தீனபந்துவின்றொடொழு—ஏழைகட்குப்பந்துவானவனது பாதங்களைத் தொழுவாயாக, நொய்து பேச

னும்—அற்பனுக்கும் வகையாகப் பேசுதலோடு,பாம்பு புலிகடன் நோன்மையல்லது—உபகரித்தார்க்கு விடமும் பிராணஹானியுந்தரும் பாம்பு புலிகளின் அற்பகுணம் போலல்லது, ஓர் நோன்புஞ் செய்யா—வேறொரு நல்விரதமும் செய்ய மனமில்லாது, சிறுமைபதலாய்—சிறுபிள்ளைகளைப்போல, பிறர் வைதலடைவகை—பிறர் துன்பம் அடையும்விதமாக, பன்னுவார் மொழி தன்னை—சொல்லுவார் வார்த்தைகளை,ஒழித்திடு—நீ நீக்கி நிற்பாயாக, (ஏ:சற்றலை) (எ-று) 8.

தான்பி ழைக்கப் பிறர்கெட வெண்ணலாற்
சன்ம கன்மம் வளர்ந்தன மற்றையோர்
தான்பி ழைக்க வுடல்கொடென் றோதினன்
றாண்ம றக்கி லழிவையென் னெஞ்சமே
யூன்ற ழைக்கப் பிறர்பொருள் கொள்ளைகொள்
ளுவமை வாசகத் தாற்பிர மிக்கச்செய்
வான்வ ரும்வஞ்ச வேடக்கு ருக்கடம்
வாய டக்கியுன் மாயையொ ழித்திடே.

(இ-ள்) தான் பிழைக்க—தான் பிழைக்கவும், பிறர் கெட—பிறர்கெடவும், எண்ணலால்—நினைத்தலால்—, சன்மகன்மம் வளர்ந்தன—பிறப்புக்கேதுவான நல்வினை தீவினைகளும் விர்த்தியாயின, மற்றையோர்தான்—அன்னியர்யாவரும், பிழைக்க—பிழைக்கும்படியாக, உடற்கொடென்றோதினன்—உன்சரீரக்கஷ்டம் பாராமல் உபகாரம்செய்யென்று சொன்னவன், தாள் மறக்கில்—பாதத்தை அனுதினம் நினையாமல் மறப்பாயானால் என் னெஞ்சமே—என்மனதே, அழிவை—நீ கெடுவாய், ஊன்றழைக்க—உடல் பருக்க, பிறர் பொருள் கொள்ளைகொள்—அந்நியரது பொருளை மிகுதியும் அபகரித்துக்கொண்டுண்ண, உவமை வாசகத்தால்—ஒன்றோடொன்றொப்புறுத்தும் வாக்கியத்தால், பிரமிக்கச் செய்வான்—அறிவை மயக்கச்செய்யும்பொருட்டாக, வரும் வஞ்ச வேடக்குருக்கள் தம்—வீடுகள் தோறும் காட்ட மோசவேஷம் தரித்துவந்து மிரட்டுகிற குருக்களுடைய, வாயடக்கி—வாயிலிருந்து வரும் வார்த்தையைக் கேளாமல் தடுத்து, உன் மாயை யொழித்திடு—உன் மயக்கத்தைத் நீக்கிக் கொள்வாயாக, (எ-சற்றலை) (எ-று) 9.

கற்ற றிந்தவ ரேனுங்க ளைபல
கற்கி லாதவ ரேனுங்க லங்கலார்
நற்ப தங்க ளுனக்கணி சூடேனு
ஞானவாரிதி தாடொழென் னெஞ்சமே
பற்ற றுந்தவர் போலும்ப சப்பியே
பஞ்ச போலலை யும்பல வஞ்சகர்

சற்று நிற்க விடந்தா லும்விடு
சத்தி யந்துயர் முற்றும கலுமே.

(இ-ள்) என்னெஞ்சமே-என்மனதே, கற்றறிந்தவரேனும்-வாசித்துத் தன்னை யுணர்ந்தவராயிருப்பவரையாயினும், கற்றிலாதவரேனும்-வாசியாமல் தன்னையுணர்ந்தவரா யிருப்பவரையானாலும், கலங்கலார் நற்பதங்கள்-மனக்கலக்கமின்றி தானாக நிற்பவர்களது நல்ல அடிகளை, உனக்கணிகுடெனும்-உனது தலைக்கு ஆபரணமாகத் தரித்துக்கொள்ளென்று தெரிவித்த, ஞானவாரிதிதாடொழு-ஞாநாநந்தக் கடலினரது பாதத்தை வணங்குவாயாக, பற்றறுந்தவர்போலும்-சகல ஆசையும் விட்டவர்போல, பசப்பியே-மேல்வேஷங்காட்டி, மனம்பஞ்சுபோலலையும்-மனத்தினிடத்து காற்றிலலையும் பஞ்சுபோல அலைச்சலையுறுகிற, வஞ்சகர் சற்று நிற்க-கபடிகள் நீ இருப்பிடத்தில் கொஞ்ச நேரம் நிற்கும்படிக்கு, இடந்தாலும் விடு-இடங்கொடுப்பதையும் விடுவாயாக அப்படிவிட்டு இருப்பாயாகில், துயர் முற்றுமகலும்-உன்னிட துக்கம் முழுதும் நீங்குவது, சத்தியம்-இதுவே உண்மையென்று அறிவாயாக. (எ-ஈற்றசை) (எ-று) 10.

ஆக-செய்யுள்கள்-56

---

## மனனதிடம்.

---

### ஆத்மாநாத்மாவைக் கூறல்

தானெனலறி வென்றுசொ லுண்மை கொளார்
தனையுடலள வாக்கொடு நிற்பதலா
லீனனமில திப்பியி லென்பது போ
லிலையுலகறி வினிலெனி லோர்ந்தடையார்
கானனமிட ஞக்கொடு சடைமுடியுங்
காஷாயக மண்டல தண்டுறிலென்
ஞானமது கண்டில கேத்திடினு
மவர்தருசிறு மொழிகளை யஞ்சிலனே.

(இ-ள்) தானெனல்-தான் என்னுஞ் சொல்லுக்குரிய பொருளானது, அறிவு-ஆன்ம ஞானமாம், என்று சொல் உண்மை-என்று பெரியோர் சொல்லும் உண்மை மொழியினை, கேளார்-பகிர்முக நோக்க வாசனையால் ஏற்றுக்கொள்ளாதவர்கள், தனையுடலளவாக்கொடு-தன்னையுடலாக மதித்

து, நிற்பதலால்-நிற்பார்களே யல்லது, இப்பியில் ஈனமிலது-கிளிஞ்சலில் வெள்ளி இல்லை, என்பதுபோல்-ஈன்று காண்பதுபோல, அறிவினில் உலகு-சொரூபஞானத்தில் திரிசிய உலகமானது, இலையெனில்-எப்போதும் இல்லை என்று சொல்லுவதை, ஓர்ந்துஅடையார்-சந்தேக விபரீதமற அதைக் கற்கவேண்டிய விதிப்படிக் கற்றுத்தெளிந்து அந்த ஞானத்தை பெறுகிறார்களில்லை, கானனம் இடனுக்கொடு-இப்படி உண்மை யறியாத அஞ்ஞானிகள் காடே தமக்கு வசிக்கும் இடமாகக்கொண்டு, சடைமுடியும்-உலகம் பிர்ம்மிக்கும்படி தலைமயிர் வளர்த்து சடைமுடித்தலும், காஷாய கமண்டலம்-காவி வஸ்திரமும் கரகமும், தண்டிறிலென்-தண்டாயுதமும் அடைந்திருப்பதினாலும் என்ன பிரயோஜனம், உலகு ஆனனமது கண்டு உலகத்தார் அவரிடமுகத்தைப் பார்த்து, ஏத்திடினும்-துதிசெய்தாலும், அவர் தருசிறு மொழிகளை-அந்த அஞ்ஞானிகள் சொல்லும் அற்ப வார்த்தைகளுக்கு, அஞ்சிலன்-யான் பயப்படமாட்டேன். (ஏ-ஈற்றசை) (எ-று)1.

## ஆன்மவிலக்கண மறிவித்தல்.

தனையறிவது தனையய லறிவதனைத்
தானெனனல மெனமறை முறையிடலா
லெனையறிவது யானல மனமெனிலோ
விதுநிலையல வெனுமுறை பேசிடுவார்
மனைகனதன தானிய மெனதெனலை
மதியறவொரி மலைமுழை வாழ்வுறிலென்
முனைவினையுனி புனைகழல் வனைதலலான்
மொழிதருசிறு மொழிகளை யஞ்சிலனே.

(இ-ள்) தனையறிவது தனை-தன்னைத்தானறியக்கூடியதும், அயலறிவதனை-தானயல்வடிவாகத் தோற்றித்தானே தன்னையறியக்கூடியதும் எதுவோ அதை, தானெனல் நலமென-தானெனு மான்மஞானமென்றுசொல்வதே நல்லதென்று, மறைமுறையிடலால்-வேதம் சொல்வதால், எனையறிவதுயான்-ஞான சொரூபியாகிய என்னையறிவது யான், மனம் அலவெனிலோ-மனமுதலாகிய சடப்பொருள்கள் என்னை யறிய மாட்டாதெனிலோ இது நிலையலவெனு முறைபேசிடுவார்-இது நிலையானசொல்லல்லவென்று சொல்பவர்கள், மனைகனதன தானியம்-வீடுபெண்ஜாதி தனம் தானியம் முதலிய பொருள்களிடத்தில், எனதெனலை-எனதெனக்கொள்ளும் மமகாரத்தை, மதியறவொரி-மனமாறவிட்டு நீங்கி, மலைமுழை வாழ்வுறிலென்-மலையின் குகையில் தனியாக வாசஞ்செய்தாலும் என்ன பிரயோசனம், முனைவினையுனி-முன்வேதம் விதித்த விதிக்கீடாக சமுசாரியைவிட மேலான சந்யாசி வேஷம் பெற்றதைநினைத்து, புனைகழல் வனைதலலால், அலங்காரமான பாதங்களைப் பூசிப்பதே அல்லது, மொழிதரு சிறுமொழி

க்லை—அவர்கள் சொல்லும் அற்பவார்த்தைகளுக்கு, அஞ்சிலன்—பயப்படமாட்டேன். (ஏ-ற்றசை) (எ-று) 2.

## அவஸ்தாத்திரய சாக்ஷியான்மாவெனல்.

அந்தந்தவ வத்தையி லதுவதுவா
யானிற்கினு மவ்வவ வத்தைகடா
மெந்தெந்தவி தத்தும றுத்திடினு
மிலையாகிடு மொன்றினி லொன்றவைதாம்
வந்தெந்தபொ ருட்கணி கழ்ந்தழியு
மதுநானறி வின்றெனி லாத்தியெதோ
தந்தம்மதி போனவை ஞானமெனத்
தருவார்மொழி கிஞ்சினு மஞ்சிலனே.

(இ-ள்) யான்—ஆத்மாவாகியான், அந்தந்த அவத்தையில்—சாக்கிரம் சொப்பனம்—சுழுத்தி என்னும் அவஸ்தைகளில், அது வதுவாய் நிற்கினும்—அந்தந்த அவஸ்தைகளில்தோன்றும்பொருள்களின்வடிவாகயானிற்கவிரும்பினும், அவ்வவவத்தைகடாம்—அந்தந்த அவஸ்தா தோற்றங்களை, எந்தெந்த விதத்து—மந்திர தந்திர சாதக மாதியால் ஓர் அவஸ்தையை நிலைக்கச்செய்ய விரும்பி, மறுத்திடினும்—மறையாதிருக்கத் தடுத்தபோதிலும், ஒன்றினி லொன்றிலையாகிடும்—ஒருஅவஸ்தைபிற்றோற்றினது மற்றைய அவஸ்தைகளில் மறைந்ததாகத் தோற்றுவதோடு இல்லாததுமாகிறது, (ஆகையால்) அவைதாம்—அவ்வவஸ்தைகளிடத்து, எந்த பொருட்கள் வந்து—எந்த ஆதார வஸ்துகளுண்டாகி, நிகழ்ந்து—எந்தபொருளால் காணப்பட்டு, அழியும் எதனிடம் அழியுமோ, அது நானறிவு—அதுதான் நானென்னும் ஆத்ம ஞானம், இன்றெனிலாத்தியெதோ—அப்படிப்பட்ட ஓர் ஞானம் இல்லையென்று மதவாதிகள் தடைப்பாராகில் நிலையாயுள்ளது பின்னெதுவோ?, தந்தம் மதிபோனவை—தங்கள் தங்கள் மனம் போனபடி நினைந்தவைகளை, ஞானமெனத்தருவார்—ஞானமென்று சொல்வார்கள். மொழிகிஞ்சினும்—இப்படி உண்மையறியாதவர்களின் வார்த்தைக்கு அணுமாத்திரமும், அஞ்சிலன்—ஒப்புக்கொண்டுபயப்படேன். (ஏ-ற்றசை) (எ-று) 8

## உலகுபொய்யெனல்

நனவினினுல குடலிரை நாலமுமாய்
கனவியகன வினிலவை சாயையுமாய்
வனிகர்துயி லினிலரு பாழ்வடிவாய்
மாறிடினுல குடனிஜ வடிவெதுவோ
நினவனுபவ மாதவி ரோர்மினெனிற்
செவிகொளவறி யார்பல கலையுணர்விற்

கனமலைபுரை வாரெனினென்னவர் தங்
கதியறுசிறு மொழிகளை யஞ்சிலனே.

(இ-ள்) நனவினில்—சாக்கிர அவஸ்தையில். உலகுடலிறை தூலமுமாய்—உலகும் தேகமும் ஆகாரமும் ஆகிய இவைகள் தூல ரூபமாயும், நழுவிய கனவினில்—சாக்கிரம் ஒழிந்த சொர்ப்பனத்தில், அவைசாயையுமாய்—அப்பொருள்கள் நிழல் வடிவாயும், வனநிகர் துயிலினில்—சுடுகாட்டுக்குச் சமானமான நித்திரையில், அருபாழ்வடிவாய் மாறிடில்—முழுதும் சூன்ய வடிவாகவும் மாறித்தோன்றுமானால், உலகு உடல் நிஜவடிவெது—உலகுக்கும் தேகத்திற்கும் மேற்கண்ட மூன்று அவஸ்தைகளில் எந்த அவஸ்தையை நிஜவடிவமாகச் சொல்லத்தக்கது, தினமனுபவமாதலின்—மேற்கண்ட சாக்கிர சொப்பன சுழுத்திகளின் மாறுதல்கள் தினவனுபவமாக இருப்பதால், ஓர்வினெனில்—ஞானம் மெய் உலகுபொய் யென்பதை அறிந்துகொள்ளுங்களென்றால், செவிகொளவறியார்—இதைக் காதிலும் ஏற்றுக்கொள்ளும் வல்லமை பெறாதவர், பலகலையுணர்வில்—அநேக சாஸ்திரப் பாடப்பிரக்ஞையில். கனமலை புரைவாரெனிலென்—கனமான மலைக்குச் சமானமானவர்கள் என்பதினாலென்ன பிரயோஜனம், அவர் தம்—அம்மதிகேடரின், கதியறு சிறுமொழிகளை—ஒழுக்கமற்ற அற்ப வார்த்தைகளுக்கு, அஞ்சிலன்—நான் பயப்படமாட்டேன். (ஏ-ஈற்றசை) (எ-று) 4.

ஆன்மாவையன்றி யகிலமிலையெனத்துணிதல்.

அறிவினையறி வதுவறி வலதுபிற
வாகலசட மவையொரு முதலுமல
பொறிபுலன்மன முடலுயி ருலகிறையும்
போயொழிதலும் வருதலு முண்டறிவின்
மறுவறுதுயி லினினன வினிலறிதாம்
மறுகலையறி வலதிலை பரவனுவும்
நெறியிதுநெறி யதுவெனு முரைதகையார்
நேரறிவர் தஞ்சொலை யஞ்சிலனே.

(இ-ள்) அறிவினையறிவது அறிவு அலது—ஆன்ம ஞானத்தைத் தெரிந்துகொள்வது ஆன்மஞானமேயல்லது, பிறவாகல—இந்திரியமாதி பிறிதொன்று மறியா, அவை சடம்—ஆன்மா நீங்கலாகிய மற்றவை சடமாம், ஒரு முதலுமல—அவ்வசத்துக்களும் ஞானம்போல ஒரு முதற் பொருளுள்ளனவல்ல, பொறி—மெய் வாய் கண் மூக்கு செவி எனுமைந்து இந்திரியங்களாலுண்டாகும், புலன்—சத்த பரிச-ரூப-ரச-கந்தமெனும் ஐந்து அறிவுகளும், மனம்—மனமும், உடல்—சரீரமும் உயிரும்—ஜீவாத்மாவும், உலகு—உலகமும், இறையும்—இவற்றின் நியாமகனாகிய ஈசனும், அறிவில் மறுவறு துயிலினில்—அறிவினிடம் குற்றமற்ற நித்திரை காலத்தில், போயொழி

தலும்—போய் அடங்கி இல்லாதனவாக காண்பதும், கனவினில் வருதலுமுண்டு—மறுபடி சாக்கிர அவஸ்தையில் தோற்றுதலுமுண்டு, அறிந்தும் மறுகலே—இதை அறிந்திருப்பதால் மயங்கவேண்டுவதில்லை, அறிவலதிலை பரவணுவும்—பரமாணு மாத்திரமும் அறிவல்லது இல்லவே இல்லையாகும், நெறியிது நெறியது—சொல்லிய வ்வனுபவ மார்க்கம் சத்தியம் இது சத்தியமானது எனுமுறைதகையார்—எனும் வார்த்தையை தடுக்கார், நேராரிவர் தஞ்சொலே—ஒப்புக்கொள்ளவும் மாட்டார் இவரிட சொல்லே, அஞ்சிலன்—ஏற்றுக்கொண்டு பயப்படேன். (எ-ஈற்றசை) (எ-று) 5.

பந்தமுத்தியகறல்.

மண்ணீரனல் வளிவான் றிரிபவையே
மாந்தர்கண்முத லேழ்வகைத் தோற்றநசிப்
புண்ணாடிலி றப்புப் பிறப்புமில்
லுடலிற்கு முதல்கெட லின்மையினாற்
கண்ணாமறி வோமறை யாதிதனாற்
கண்டிடிலிலை பந்தமு முத்தியெனிற்
புண்ணாகுவர் நீதிக டைப்பிடியார்
பூரியரிவர் தஞ்சொலே யஞ்சிலனே.

(இ-ள்) மண்ணீரனல்—மண்ஜலம் நெருப்பு, வளிவான்றிரி பவையே—காற்று ஆகாயமெனும் பஞ்சபூதங்களின் மாறுதல்களையே, மாந்தர்கள் முதலேழ்வகைத் தோற்றம் நசிப்பு—மனிதர் முதல் புல்லீறாகிய எழுவகை சாத்திரங்களின் பிறப்பும் நாசமுமாகச் சொல்லப்படுகின்றன. உண்ணாடில்—இதை யோசித்துப் பார்க்கில், முதல் கெடலின்மையினால்—பஞ்ச பூதங்களாகிய முதற்றோற்றப் பொருள்கள் கெடாதிருப்பதால், உடலிற்கும்—இச் சரீரத்திற்கும், இறப்புப் பிறப்புமில்—பிறப்பும் நாசமும் இல்லை யென்பது உண்மையாம், கண்ணாமறிவோ—சர்வ சாக்ஷியாகிய சூக்கும புத்திக்கு பிரத்யக்ஷமாகும் ஞானமோ? மறையாது—மறையாது இதனால்காணிடில்—இஞ்ஞாயத்தால்கண்டார்க்கு, பந்தமும் முத்தியும்—ஆத்மாகட்டுப்படுவதும்விடுபடுவதும், இல்லையெனில்—இலையாம் என்றால், நீதி கடைப்பிடியார்—இதைஞாயமான உண்மையென்று நம்பி உறுதி யாக்கிக்கொண்டு நடவாதவராகி, புண்ணாகுவர்—மனம் வருந்துவர், பூரியரிவர்—அத்தகையார் இந்த மூடர்ளை, தஞ்சொலே—அப்படிப்பட்டவர் சொல்லை, அஞ்சிலன்—கேட்டுப் பயப்படேன். (எ-ஈற்றசை) (எ-று) 6.

உலோகாபவாதங்கழலல்.

மனைமக்கடு றந்தில மென்பர் சிலர்
மனமுண்டது போகில தென்பர் சிலர்
வினைமாண்டில தென்செய லென்பர்சிலர்
விதியாதுநி கழ்த்துமோ வென்பர்சில

றெனையாண்டவ ரன்செய லென்பர்சில
ரிடைவாரறி வாகிட விரையகிலார்
கனைஞானிகள் போற்றமை பேசிடுவார்
களையேற்றுவர் தஞ்சொலை யஞ்சிலனே.

(இ-ள்) மனைமக்கடிறந்திலம்-பெண்ஜாதி வீடுபிள்ளைகளைவிட்டுப்பிரிய வில்லையே விட்டவர்க்கன்றோ வீடுண்டாகும், என்பர் சிலர்—என்று சிலர் சொல்வார்கள், மனம் உண்டு அதுபோகில—ஞானத்தைத்தவிர மனம்வேறு இருக்கிறது அது நாசமாகவில்லையே நாசமானாலல்லவோ ஞானியாகலாம், என்பர் சிலர்—என்று சிலர் சொல்வார்கள், வினைமாண்டில தென்செய—பூர்வஞ் செய்துள நல்வினை தீவினை நாசமாகவில்லையே என்ன செய்வது, என்பர் சிலர்—என்று சிலர் சொல்லுவார்கள், விதியாது நிகழ்த்துமோ—அவ்விருவினை எவ்வித சுகதுக்கத்திலாழ்த்துமோ? என்பர் சிலர்—என்று சிலர் சொல்வார்கள், எனையாண்டவரன் செயல்—உபாஸனா மூர்த்தியாக எனையாட்கொண்ட சிவன் செயல் எப்படிமுடியுமோ, என்பர் சிலர்—என்று சிலர் சொல்வார்கள், இடைவார்—பெரியவரை யடுத்து விசாரணை செய்யாமல் இவ்வகையாய் வீண்சாக்குகள் சொல்லிப்பொழுது போக்குவாரே யொழிய, அறிவாகிட—தான் ஞானஸ்வரூபியேயென உண்மையைக்கடைப்பிடிக்க, விரையகிலார்—உடல் வாழ்வு கழிவதற்கு முன் துரிதப்படார்கள், தமைகனை ஞானிகள்போல்—தங்களை பூர்ணஞானிகளென்று, பேசிடுவார்களை—தற்புகழ்ச்சி சொல்லிக்கொள்வோரை, ஏற்றுவர் தஞ்சொலை—துதிசெய்யும் மூடர்களிட சொற்கு, அஞ்சிலன் – பயப்படமாட்டேன். (ஏ-ஈற்றசை) (எ-று)

இதுவுமது.

குணபேதமி றந்தில தென்பர்சிலர்
கூர்மந்தனை யொத்திரு வென்பர்சிலர்
பிணமாம்வரை பேசுவர் ஞானிகளோ
பேசாரறி வுற்றவ ரென்பர்சிலர்
நிணவுடல்விட் லாகுமோ வென்பர்சிலர்
நேராரறி வாகிட விரையகிலா
ரணல்வரையுறு துயர்கெட நினையகிலா
ரார்கெலோவிவர் தஞ்சொலை யஞ்சுவரே.

(இ-ள்) குணபேதமிறந்திலது – சத்துவம் ரஜசு தமசு எனும் முக்குணங்களின் வித்தியாசங்கள் கெடவில்லையே நாம் எப்படி ஞானிகளாகலாம், என்பர் சிலர்—என்று சிலர் சொல்லுவார்கள், கூர்மந்தனை யொத்திரு—ஆமை ஐந்து அவயவங்களை உள்ளடக்குவதுபோல் உன் பஞ்ச இந்திரியங்

கலே அடக்கிக்கொண்டிரு, என்பர் சிலர்—என்று சிலர் சொல்லுவார்கள், பிணமாம்வரை பேசுவர்—கிட்டை சாதிப்பதைவிட்டு சாகிறவரையில் பேசுவோர்கள், ஞானிகளோ—அறிவுடையோராவரோ, அறிவுற்றவர் பேசார்—அறிவுடையவர் யாரோடும் ஒன்றையும் பேசமாட்டார்கள், என்பர் சிலர்—என்று சிலர் சொல்வார்கள், நிணவுடல் விடலாகுமோ—மாமிசவுடலின் அபிமானத்தைவிட்டு இருக்கமுடியுமோ, என்பர் சிலர்—என்று சிலர் சொல்வார்கள், அறிவாகிட—வாசனைவிட்டு வருணாச்சிரமதருமபூர்வ எல்லாமாயலவாகும் தனது சொரூபஞானவடிவாக நிற்க, நேரார்—உடன்படார்கள், விரையகிலார்—ஜன்ம வாசனை சங்கல்ப சமனார்த்தம் துரிதப்படார்கள், அணல்வரையுறு—கண்ட பரியந்திரம் தங்கள் கருமத்தால் தமக்கு நேர்ந்திருக்கும், துயர் கெட நினையகிலார்—துக்கம் நீங்க நினைக்கும் வகையறியாதவர்களாகிய, இவர் தஞ்சொலே—இம்மூடர் வார்த்தைகளுக்கு, யார் அஞ்சுவர்-உண்மையர் யார்தாம் பயப்படுவார்கள். (கொல்—ஏ அசை)-(எ—று) 8.

இதுவுமது.

சும்மாவிரு சொல்லற வென்பர்சிலர்
சுகமாயொரு கணமுமி ருந்துரையார்
நம்மாற்பலர் ஞானிக ளாகினர்க
ணொமொன்றையுங் கேட்பதி லென்பர்செயார்
பெம்மானுரை பேசின னென்பர்சிலர்
பிரிவற்றறி வாகிட விரையகிலார்
தம்மாலல தெம்மய லறநினையார்
தருவர்களிவர் தஞ்சொலே யஞ்சிலனே.

(இ-ள்) சொல்லற சும்மாவிரு—ஊமைகளைப்போல் பேச்சற்று சும்மா இருந்தாலன்றோ ஞானவானாகலாம், என்பர் சிலர்—என்று சிலர் பிறர்க்கு புத்தி கூறுவர், ஒரு கணமும்—ஒரு க்ஷண நேரமாகிலும், சுகமாயிருந்துரையார்—ஆநந்த சொரூப சுபாவ மௌனியாக நின்று சொல்பவர்களாகார்கள், பலர் நம்மால் ஞானிகளாகினர்கள்—அநேக ஜனங்கள் தங்களால் ஞானிகளாகினார்களென்று டம்பமாய்ச் சொல்வார்கள், ஒன்றையும் நாம் கேட்பதில் என்பர்—எவ்வித சந்தேகமும் பிறரிடம் தாங்கள் கேட்பதில்லை, என்று சொல்வோர், செயார்—சொன்னபடிக் கிராமல் பிறரை மிரட்டி வாங்குவார்கள், பெம்மானுரை பேசினன்-கடவுள் தங்களுடன் வார்த்தை பேசினான், என்பர் சிலர்—என்று சிலர் சொல்வார்கள், பிரிவற்று அறிவாகிட—பொய்த் தோற்றங்களைவிட்டு ஞான சொரூபமாகிட, விரையகிலார்—துரிதப்படார். தம்மாலல தெம்மயல்—தங்களிட மயக்கமாவது அல்லது எம்மயக்கமாவது, அற நினையார்—நீங்கும்படி நினைப்பதில்லை, தருவர்கள் இவர் தன் சொலே—இப்புத்தியீனர்களுடைய வார்த்தைகளுக்கு, அஞ்சிலன்—பயப்படேன். ஏ-சற்றசை)(எ-று) 9.

**இதுவுமது.**

விதியுண்டெனில் வந்திடு மென்பர்சிலர்
 வினையார்தர வந்ததெ னக்குறியார்
பதிதந்திடி லாகிடு மென்பர்சிலர்
 பசுவால்வர லரிதரி தென்பர்சிலர்
விதியாதிக ளேனென விடைபகரார்
 விட்டுடலறி வாகிட விரையகிலார்
மதியாலரி யாரனிலை யாய்ந்தறியார்
 வாய்வாதிக டஞ்சொலை யஞ்சிலனே.

(இ-ள்) விதியுண்டெனில் வந்திடும்-பூர்வ புண்ய நல்வினைக்கீடான நியதியுண்டெனில் மோட்சமும் வரும் நாம் வேதாகமாதி கற்றலும் கேட்டலும் பிரயோஜனமுடையதல்ல, என்பர் சிலர்-என்று சிலர் சொல்வார்கள், வினையார் தரவந்தது என-வினையார் செய்யவந்தது (நாம் செய்தது தானே) என்று, குறியார்-நினையார்கள், பதி தந்திடிலாகிடும்-ஈஸ்வரன் கொடுக்க எல்லாம் ஆகும், என்பர் சிலர்-என்று சிலர் சொல்வார்கள், பசுவால்வர லரிதரிது-ஜீவன் செய்யும் பிரயத்தனத்தால் கிடைப்பது கஷ்டம் கஷ்டம், என்பர் சிலர்-என்று சிலர் சொல்வார்கள், விதியாதிகளேனென-அப்படி யாகில் வேதவிதிகளும் கருமவிதி முதலியசடங்குகளும் பூசையாதிகளும்என்னத்திற்கென்றால், விடைபகரார்-பதில் சொல்லார்கள், விட்டுடல்-உடலையானெனல்விட்டு, அறிவாகிட-ஞானசொரூபமாகிட, விரையகிலார்-துரிதப்படார்கள், மதியால்-புத்தியால், அரியாரனிலை-சர்வதோற்றமும் நசித்து சேடிப்பது விஷ்ணு சிவனும் நிலையென, ஆய்ந்தறியார்-அறியார்கள் எங்குளரென ஆராய்ச்சி செய்து தெரிந்துகொள்ளார்கள், வாய்வாதிகள் தஞ்சொலை-வீணுக வாயால் வாதிப்பவரிட சொற்களை, அஞ்சிலன்-கேட்டு பயப்படேன். (௭-ஈற்றசை) (எ-று) 10

ஆக-செய்யுள்கள்-66

---

## திரிபகறல்

---

பொன்னை மாதரைப் பூமியை நித்தித்த
லென்ன காரண மேழைநெ றந்திலை
யென்ன கண்டனை னேதுமி லைத்தந்
தன்னை விட்டகலத்தான் பிழைப்பனே

(இ-ள்) பொன்னை-சொர்ணத்தையும், மாதரை-பெண்களையும், பூமி

யை-மண்ணையும், நிந்தித்தல்-குறை கூறுதல், என்ன காரணம்-என்ன ஹேதுவிற்காக, இவை-இம்முப்பொருள்களையும், ஏழை துறந்து-(விதி வசத்தால்) இழந்திருக்கிற வறியோர்கள், என்ன கண்டனன்-இவற்றின் தோற்றமாத்திரத்தில் வேறே என்ன பயனை அடைந்தார்கள், ஒன்றிலை-யாதொரு பயனுமடைந்திலர் (ஆகையால்), தான்-அறிவுள ஒருவன், மத்தந் தன்னை-தனஞ்ஞானத்தை, விட்டகல - விட்டு நீங்குவானாகில், பிழைப்பன்-ஆத்மசுகமடைவன். 1.

ஏது மீசன் செயலென் றுரைத்துப்பின்
பேத முண்டெனப் பேசும றையிதி
லேது நிச்சய மென்றிவை யாய்கில
ரோதி யோதுவ ருண்மை தெளிவரோ.

(இ-ள்) மறை-வேதமானது ஏதும்-எவ்விதப் பொருளும் கருமமும், ஈசன் செயலென்று-கடவுளினது செயலால் உண்டாகின்றதென்று, உரைத்து-எவருக்குஞ் சொல்லி, பின்-உடனே, பேதம் உண்டென பேசும்-ஜீவன் செயலென்கிற பேதமுண்டென்றும் சொல்லுமானால், இதில்-இப்படி வேதம் சொல்வதில், ஏது-இவ்விரு வாக்கியங்களில், நிச்சயமென்று-உண்மையாயதென்று, இவையாய்கிலார்-இவற்றை யாராய்ந்தறிகிலார், ஓதி யோதுவர்-அப்படி பேதம்சொல்லும் பேத வாக்கியத்தை தாங்களும் வாசித்து பிறர்க்கும்சொல்லிக்கொடுப்பார்கள், உண்மை-இஃது ஈசன்செயலென்றும் இஃது ஜீவச்செயலென்றும் கூறும் நிச்சயவனுபவத்தை, தெளிவரோ-தெளிந்து அறிவார்களா வறிந்திலர் (எ-) 2.

விதிய லாது வினைகில தொன்றெனும்
மதிவ ருந்த வருமெவை யும்மெனு
மெதுகொ லோநிஜ மின்னது தற்கெனு
மதிப கில்லர் மருண்டு கிடப்பரே.

(இ-ள்) ஒன்று-யாதோரனுபவமும், விதியலாது - வினைக்கீடாகவலது, விலைகிலது-உண்டாகாது, எனும்-என்று வேதத்திலோர் வாக்கியஞ்சொல்லும், எவையும்-எந்தக் கார்யமும் பயனும், மதிவருந்த-மனதால் வருந்திச்செய்ய, வருமெனும்-கைகூடுமென்றோர் வாக்கியஞ் சொல்லும் நிஜம் எதுகொலோ-இவ்விரண்டில் நிஜமென்று நம்பத்தக்கது யாதோ? இன்னது இதற்கெனு-விதிமதி என்பதில் இதற்கு இன்னது பொருத்தமென்று, மதியகில்லர்-ஆராய்ந்தறிந்திலர், மருண்டு கிடப்பர்-விதி பெரிதெனில் மதிபெரிதென்றும் மதி பெரிதெனில் விதிபெரிதென்றுஞ் சொல்லி மயங்கிக்கிடப்பார்கள் (ஏ-ஈற்றசை) (எ-று) 4,

வேத மோதி விபூதித ரித்துவீண்
வாத மேபுரி வார்மிகு வஞ்சகக்
காதகர் தமைக் கண்டவர் பல்லுருப்
பேத மோதிப் பிழைக்கில ருண்மையே.

(இ-ள்) மிகு வஞ்சகக்காதகர்–அதிக கபடமும் பொருமையு மியற்கையிலுள்ளவர், வேதமோதி – வேதங்களை வாசித்துணர்ந்தாலும், விபூதிதரித்தும்–விபூதியையுடலெல்லாமணிந்தும், வீண்வாதமே புரிவர்–பயனற்ற பேத வார்த்தையே கொண்டாலும் நிலை நாட்டுவார்கள், தமைக்கண்டவர்–முமுக்ஷுவாகப் பிறந்து ஆன்மாவாகிய தனையாய்ந்தறிந்த பெரியோர், பல்லுருபேதம் ஓதி–பலரூபபேத உருவங்களுளதாகச் சொல்லி, பிழைக்கிலர்,–வயிறு வளர்ததுத்திரியார்கள்,உண்மையே–இது சத்தியமாம் (எ–று) 4,

சிவம யமெனச் செப்பிடு நான்முகத்
தெவையெ னுவறி யார்அதிசயம்
புவனம் யாவும் புருட னுருவமே
லவனே யானெனில் யாது பிழையதே.

(இ-ள்) நான்முகத்து–நூல்களினாரம்பத்தில், சிவமயமென–சிவவடிவமென்று, செப்பிடும்–சொல்லப்பட்டிருக்கும், எவையெனு–அப்படி சொல்லப்படுவன யாவையென்று, அறியார்–விசாரித்தறியார்கள், இது அதிசயம். இது ஆச்சரியமா யிருக்கிறது, புவனம் யாவும்–இருநூற்றிருபத்துநான்கு புவனங்களும், புருடனுருவமேல்–விராட்புருடனது வடிவமாகில், அவனே யானெனில்–திருச்சிற்றம்பலமெனும் அச்சிவ வடிவமே யானுமெனில், யாது பிழையது–அப்படிக்கு நினைக்குமக் கருத்து என்ன தப்பிதத்தை யுடையது? (ஏ-ஈற்றசை) (எ-று) 5,

சருவம் விஷ்ணு மயஞ்ஜகத் தென்னவே
கருவ மிக்குக் கழன்றனர் போன்முனோர்
பருவ தங்கள் பறக்கடிப் போமென்றே
வருவ தொக்கு மறுப்பவர் வாதமே.

(இ-ள்) சருவம் ஜகத்–சராசரத்தோற்ற உலகங்களெல்லாம், விஷ்ணு மயம் எனவே–விஷ்ணுவின் வடிவமென்று, முனோர்–முன்னோர்கல், கருவ மிக்கு–கருவமிகுதியினால், கழன்றனர் போல்–சொன்னார்கள் போலும், மறுப்பவர் வாதம்–சிவமயம் விஷ்ணுமயம் ஜகத்தெனு மிவ்விரண்டு வார்த்தைகளைத் தடுப்பவர் வாதமானது, பருவதங்கள்–மலைகளை, ஈ–ஈக்களானவை, பறக்கடிப்போமென–நில்லா தசைக்கும் செட்டைகளின் காற்றால் பறந்து போகச் செய்வோமென்று, வருவதொக்கும்–வருவதை யொக்கும், (ஏ-ஈற்றசை, (எ-று) 6.

அவனை யன்றி யநுபவசை யாதெனு
மிவனெ வனிவ னெப்படி கண்டன
னவன ருள்கொண் டறியினுங் காண்பவ
னெவரி னும்பெரி யானென லேற்குமே.

(இ-ள்) அவனையன்றி-கடவுளையல்லாமல், அநுபவசையாதெனும்-அநுபவசையாதென்றுசொல்லுகிற. இவனெவன்-இவன் யார், இவனெப்படிகண்டனன்-அச்சிவன் செயலை இவனெவ்வாறு அறிந்தான், அவனருட்கொண்டு-அவனதுகிருபையைக்கொண்டு, அறியினும்-அறிந்தேனென்று சொல்லினனாயினும், காண்பவன்-கடவுளை யறிபடுபொருளாயும் தன்னை யறியப்படுவோனாயும், பார்ப்பவன், எவரினும் பெரியன்-எவரினும் பெரியவன், என லேற்கும்-என்று சொல்லுவது பொருந்தும். (ஏ-ஈற்றசை) (எ-று) 7.

எங்கு மீச னிருப்பிட மென்றுபின்
னங்கிங் கோடி யலைந்து திரிவனேன்
சங்கை தீரத் தமிற்றெளி வுற்றிடி
னெங்கு முள்ளவ னைக்கண் டிருப்பரே.

(இ-ள்) ஈசன்-ஈசனது, இருப்பிடம்-இருக்குந்தானமானது, எங்கும் என்று-எங்குமாம் என்று, பின்-பின்னர், அங்கிங்கோடி அவ்விடத்துளன் இவ்விடத்திலன் என்று தேடி ஓடி, அலைந்து திரிவானேன்-கஷ்டப்படுவானேன், சங்கைதீர-சந்தேகமற, தமில்-தனதிடத்திற்றானே, தெளிவுற்றிடில்-உளனாக வறிவானாயின், எங்குமுள்ளவனை-எங்குமிருப்பவனை, கண்டிருப்பர்-பார்த்தாநந்தித்திருப்பர். (ஏ-ஈற்றசை) (எ-று) 8.

முன்னி லங்கு முயிருல கம்முத
லின்ன காலத் திவர்படைத் தாரெனச்
சொன்ன நூலிலை சொல்லு மநாதியென்
றென்ன வேதுல கில்லை யெனற்கரோ.

(இ-ள்) முன்னிலங்கும்-முன்னிலையிற்காணப்படும், உயிருலகம்-ஜீவர்களும் உலகங்களும், முதலில்-ஆதியில், இன்ன காலத்து-இந்த காலத்தில், இவர் படைத்தாரென-இத்தன்மையர் சிருஷ்டி செய்தாரென. சொன்ன நூலிலை-வரையறுத்துச்சொல்லிய் சாத்திரமானது ஒன்றுமில்லையாம், அநாதியென்று-ஜீவரும் உலகங்களும் அநாதியென்று, சொல்லும்-நூல்களுள்ளவைச் சொல்லும், என்ன ஏது-இங்ஙனம் உரைத்தற்கு ஏது என்ன? உலகு இல்லை யெனற்கு-உலகு என்றும் இல்லை யென்பதை யறியும்பொருட்டே, (அரோ-அசைச்சொல்) (எ-று) 9.

தன்னை யின்னவ னென்று தெளிந்தலோ
பின்னர்ப் பேறு பெறற்கு முயலலா
மென்ன மாய மெவர்சொலு நம்புதல்
பொன்னெ றிந்து புழுதியை வாரலே.

(இ-ள்) தன்னை-ஆன்மாவாகிய தன்னை, இன்னவனென்று-இன்ன தன்மையனென்று, தெளிந்தலோ-தெளிந்தபிறகல்லவா, பின்னர்-அதன் பின்பு, பேறு பெறற்கு-வைகுண்ட கைலாயாதி இடம்பொருளாதிகளும் அடைவதற்கு, முயலலாம்-பிரயத்தனஞ் செய்யலாம், பொன்னெறிந்து-கையிலுள்ள பொன்னை எறிந்துவிட்டு, புழுதியை வாரலே-பொன் சம்பாதிக்கப்புழுதி மண்ணைவாரியரிப்பவர் போல, எவர் சொலு நம்புதல்-எவரிடகற்பனு வார்த்தையையும் நம்புதல், என்ன மாயம்-என்ன மயக்கபுத்தியாம், (எ-று) 10.

மான மின்றி மலஞ்சிறு நீர்புழு
வூன ரம்பு முதிரமு ரோமஞ்சே
ரீன மாமுடல் யானெனு மீனனை
ஞானி யென்ன னகைப்புக் கிடமதே.

(இ-ள்) மானமின்றி-அருவருப்பின்றி, மலஞ்சிறுநீர்-மலமும் மூத்திரமும், புழுவூன் நரம்பு-புழுவும் மாமிசமும் நரம்பும், உதிரமும் ரோமஞ்சேர்-இரத்தமும் மயிரும் சேர்ந்த,ஈனமாமுடல்-இழிவாகிய உடலை,யானெனு மீனனை-யானென்கிற மூடனை, ஞானியென்னல்-ஞானி யென்றசொல்லுவது,நகைப்புக்கிடம்-சிரிப்புக்கிடமாயதாகும். (ஏ-ஈற்றசை) (எ-று)11.

ஞான மேவடி வானவன் ஞானியோ
தான லாவுட றானெனக் கொண்டபி
மானம் வைத்து வயிறுபி ழைக்கப்பொய்ஞ்
ஞான மோதுவ ளேதெளி நங்கையே.

(இ-ள்) நங்கையே-பெண்ணே, ஞானமே வடிவானவன்-தானே ஞான சொரூபமே தானெனவறிந்திருப்பவனே.ஞானியோ-ஞானவானோ, தானலாவுடல் - ஓரவத்தையில்தன்பாலத் தியாசமாகத் தோன்றிமறையுமுடலை, தானெனக்கொண்டு-தானென்று ஒப்புக்கொண்டு, அபிமானம் வைத்து-அவ்வுடல்மீது ஆசைவைத்து, வயிறு பிழைக்க-வயிறு வளர்க்க, பொய்ஞ்ஞானமோதுவனே-பொய்யாகிய தேகாதிபிரபஞ்சத்தை மெய்யென்று சொல்பவனே, தெளி-நீ அறிந்து கொள்வாயாக. (எ-று) 12

எந்த தேக மெவர்க்குச் சதம்வந்து
வந்து போனவை மட்டில வேலிறை

தந்தெ ளுமுட மூனென லற்றிடப்
பிந்தி வந்து பிறவியென் செய்யுமே.

(இ-ள்) எவர்க்கு—எத்தன்மையானவர்க்கும், எந்த தேகம் சதம்—எந்த உடல்தான் சொந்தமாகும். வந்து வந்து போனவை—இதுவரையில் பிறந்து வந்து நசித்த சரீரங்கள், மட்டிலவேல்—கணக்கிலையாமாகில், உடல்தானென லற்றிடில்—இத்தேகமே நானல்லவென்று ஆசையற்றிருப்பவனுக்கு, இறை தந்தெனும்—ஆஸ்திகன் சொல்வதுபோல கடவுள் மறுபடி உடலை சிருட்டித்தும் அவ்வுடல் என்ன தீங்கிழைக்கும், பிறவி—தேகோற்பத்தியானது, பிந்திவந்து—நாஸ்திகன் சொற்படி பிறகு இயற்கையாக வந்தாலும், என்ன செய்யும்—அவ்வுடல் என்ன செய்யும் ஒன்றும் செய்யாது. (ஏ-ஈற்றசை) (எ-று) 13.

வறுமை நோய்மர ணங்கள் வருந்துவோ
ரொருவ ரில்லை யொழிந்தவ ருமிலை
யருமை யானவை யுமவை போலவே
வருவ வந்திடும் யாவர் தடுப்பரே.

(இ-ள்) வறுமை நோய் மரணங்கள்—தரித்திரத்தையும் நோயையும் சாவையும், வருந்துவோர்—வருந்தி யழைப்பவர், ஒருவரில்லை—இவ்வுலகிலொருவருங்கிடையாது, ஒழிந்தவருமிலை—அவைகளை முற்றுறவிட்டு நீங்கினவரும் கிடையாது, அவைபோலவே—அவ்வறுமை நோய் மரணங்களைப் போலவே, அருமையானவையும்—அரிதான பாக்கியவாரோக்கிய தீர்க்காயுளாதியும், வருவ வந்திடும்—பூர்வகன்மப் பயனாக வரக்கூடியவை எவ்விதத்தும் வந்து பொருந்தும், யாவர் தடுப்பர்—யார் தடுக்க வல்லவ ரொருவருமில்லை. (ஏ-ஈற்றசை) (எ-று) 14

இணையி லாததோ ரின்பம டைந்தவர்
பிணையுட் பட்டுபி றர்க்கிதம் பேசிலா
ரணைக டந்த வருளுடை யார்க்கெலா
மிணைய லாதிழி வோடுயர் வில்லையே.

(இ-ள்) இணையிலாதது—சமானமிலதாகிய, ஓரின்பமடைந்தவர்—ஒப்பற்ற பேரின்பவடிவாய் தன்னையடைந்தவர்கள், பிணையுட்பட்டு—கட்டுக்குள் அகப்பட்டு, பிறர்க்கு—அயலார்க்கு, இதம் பேசிலார்—நயமான வார்த்தைகள் சொல்லி தப்பித்துக்கொள்ளார், அணைகடந்த—எல்லையில்லாத, அருளுடையார்க்கு—கிருபையுடையவர்களுக்கு, எலாமிணையலாது—யாரும் சமானமே யல்லாது, இழிவோடு—தாழ்வோடு, உயர்வு—உயர்வெனும் பேதங்கள் இல்லை—இல்லையாம் (ஏ-ஈற்றசை) (எ-று) 15.

ஆதி யெவ்வுடற் குமைந்து பூதமென்
றோதி யார்க்கு முரைத்துப் பலபல
ஜாதி யுண்டெனச் சாற்றி லறிவுடை
நீதி யாளர் நெறியெனக் கொள்பவே.

(இ-ள்) எவ்வுடற்கும்—எந்த சரீரத்திற்கும், ஆதி—முதற் காரண வஸ்துக்களானவை, ஐந்துபூதமென்றோதி—பிரிதிவி—அப்பு—தேயு—வாயு—ஆகாயமெனும் பஞ்ச பூதங்களே யென்று வேதவாயிலாக தாங்களும் படித்திருந்தும், யார்க்குமுரைத்து—யாவருக்கும் விளங்கும்படி பிரசங்கித்தும் (பிறகு) பல பல ஜாதியுண்டென சாற்றில்—அநேக ஜாதிபேதங்களுளவென வற்பச் சுருதிகள் கூறுகிறதென்று சொல்லின் இப்படி சொன்னது, அறிவுடை நீதியாளர்—ஞானமுள நியாயவாதிகள், நெறியென—யாவரும் ஏற்று நடக்கத்தக்க விதியென்று, கொள்பவே—கொள்வார்களோ? கொள்ளார் (எ-று) 16

ஆசை விட்டிட் டரன்பதஞ் சேரெனக்
காசை வேண்டிக் கதைபடிப் பார்கடாம்
வேசை போன்ற விரகுடை யாரலா
லீசன் மெய்யன் பினிற்சிக் கிலார்களே

(இ-ள்) ஆசைவிட்டிடு—மண்-பெண்-பொன்னெனு மூன்று ஆசையையும் நீக்கிவிட்டு, அரன்பதஞ்சேரென—சிவன் பாதத்தில் சேர்வாயாகவென்று, காசைவேண்டி—பணத்தைவிரும்பி, கதைபடிப்பார்கள் தாம்—புராணக்கதைகளை காலக்ஷேபஞ் செய்வார்கள், வேசைபோன்ற—ஒருவனிடத்தும் ஆசையுள்ளவள்போல்டித்துக்காட்டி பணம் பறிக்கிற தாசிகள் போல, விரகுடையாரலால்—ஈசன்மீது பக்திவைத்தவர்களே யல்லாமல், ஈசன் மெய்யன்பினில்—கடவுளிடத்துண்மையான அன்பினில், சிக்கிலார்களே—அகப்பட்டவர்களல்லராவர்கள். (எ-று) 17,

தேக நானெனத் தேடும் இருவினை
மோக மென்று மொழிந்த தறிந்தும்பின்
னேக ஞான மியானென்பர் மேற்பழி
யூக மின்றி யுரைப்பதுங் கல்வியே.

(இ-ள்) நான் தேகமென—நான் தேகமேயாமென வெண்ணி, தேடும்—மனவாக்கு காயங்களாற் செய்த, இருவினை—நல்வினை தீவினைகள். மோகமென்று—பிராந்தியேயாமென, மொழிந்தது—வேதங்கள் கூறியதை, அறிந்தும்—வாசித்தறிந்திருந்தும், பின்—பிறகு, ஏகஞானம்—அத்விதீயஞானமே, யானென்பர்மேல்—யானென்று சொல்வோர்மீது, ஊகமின்றி—ஆராய்ச்சியில்லாமல், பழியுரைப்பதும்—நிந்தைகூறுவதும், கல்வியே—படித்தவர்களின் தன்மையாகுமோ ஆகாது. (எ-று) 18.

நதிச முத்திர நண்ணுவ போலுயிர்
பதியி னிற்கலப் பென்று பழமறை
விதியு ரைக்கும பேதங்க ளார்க்குநற்
கதிவ ரல்கன வாகுங் கனங்குழாய்.

(இ-ள்) கனங்குழாய்—கனமான காதணியையுடையாளே, நதி—கங்கை முதலியநதிகள், சமுத்திரம் நண்ணுவபோல்—சமுத்திரத்திற்போய்ச் சேருவதுபோல், உயிர்—பரமான்மாவின் பிரதிபிம்பச் சாயையாகிய ஜீவர்கள், பதியினில்—பரமான்மாவில், கலப்பென்று—என்றும் பிரியாது கலந்திருக்கிறதென்று, பழமறை—பழைமையாகிய வேதங்கள், விதியுரைக்கும்—அறுதி கூறுகின்றன, அபேதங்கொளார்க்கு—இந்த அபேதவிதியை யேலாதவருக்கு, நற்கதிவரல்—அழியா மோக்ஷமுண்டாதல், கனவாகும்—சொற்பனமேயாகுமல்லாது உண்மையாக விடமுண்டாயிருக்கவில்லை. (எ-று) 19.

இன்றிங் கீச னிருப்பை யுணர்ந்திலார்
பொன்ற லுற்றபின் போயறி வோமென
நின்ற ரற்றுவர் நின்மல னோரிடத்
தன்றி யெங்கு மவனிலை போலுமே.

(இ-ள்) இங்கு இன்று—இவ்வுலகில் தானே தேகமுளபோதே, ஈசனிருப்பை — எங்குஞ்சிவனுயிருக்குந் தன்மையை, உணர்ந்திலர் — அறிந்தார்களில்லை, பொன்றலுற்றபின்—தேகேந்திரியாதி சம்பந்தமற்ற காலத்தில், போய்—வேறோரிடத்தில் வேறுதேகத்திற் பிரவேசித்து, அறிவோமென— அறிவோம் என்று, நின்றரற்றுவர்—பிடிவாதமாய் வாதிட்டு நின்றுகூச்சலிடுகிறார்கள், நின்மலன்—களங்கமற்ற சிவபெருமான், ஓரிடத்தன்றி—இவர்கள் கூறும் போலிகைலாயத்திலல்லாமல், எங்கும்—எல்லாவிடங்களிலும், அவனிலைபோலும்—அச்சிவனிலைபோலும் இதுவியக்கத் தக்கதல்லவா? (ஏ-ஈற்றசை) (எ-று) 20.

மாண்ட பின்னர் வைகுண்டத் தறிவரா
மாண்டி ருக்கு மரியிவ ணில்லையோ
காண்ட லுக்களி தேகங் கழன்றபின்
காண்ப மென்னல் கதையென்ன லாகுமே.

(இ-ள்) மாண்டபின்னர்—செத்தபிறகு, வைகுண்டத்தறிவராம்—வைகுண்டத்தில் விஷ்ணுவைத் தரிசிப்பார்களாம், ஆண்டிருக்கும் அரி—அவ்வைகுண்டத்திலிருக்கும் விஷ்ணுவானவர், இவணில்லையோ—இவ்வுலகிலிலை போலுங் காணப்படுகிறது, காண்டலுக்கு—விஷ்ணுவைப் பார்ப்பதற்காகவே, அளிதேகம்—சரீரமிடத்தறியக் கூடாதெங்ஙேற அருளால் கொடுத்த தேகமானது, கழன்றபின்—நமைவிட்டு நீங்கினபிறகு, காண்பமென்னல்—

அவரைப் பார்ப்போமென்று சொல்வது, கதையென்னலாகும்–பொய்க் கதைக்குச் சமமென்று சொல்லத் தடையாது. (எ-ஈற்றசை) (எ-று) 21.

ஈச னெங்குள னெங்குங் கயிலையே
வாசு தேவன் வைகுண்ட முமங்ஙனே
யாசை விட்டவர்க் கன்றிவி ளங்குமோ
காசு றம்விழிக் காதித்தன் போலுமே.

(இ-ள்) ஈசனெங்குளன்–சிவன் எங்கிருக்கிறான், எங்கும்–எல்லாவிடங்களிலு மிருக்கிறானெனில், கைலையே–அப்பொழுது எல்லாவிடமுங்கைலாயமேயாகும், வாசுதேவன்–சகலத்திலும் வாசமாயிருக்கும் விஷ்ணுவுடைய, வைகுண்டமும்–வைகுண்டமும், அங்ஙனே–அப்படியே எங்குமாகும், காசுறம்விழிக்கு–குற்றமுடைய கண்களுக்கு, ஆதித்தன்போல்–சூரியன் புலப்படாததுபோல, ஆசைவிட்டவர்க்கு அன்றி–நிராசையுற்ற புருஷர்களுக்கே யல்லாமல், விளங்குமோ–ஆசையுள்ள மூடர்களுக்கு எங்குமாயுள கைலைவைகுண்டம் தெரியுமோ தெரியாது. (ஏ-ஈற்றசை) (எ-று) 22.

ஐந்து பூத மருண னிளம்பிறை
நந்த லில்பர மாநந்த னல்லுயி
ரிந்த வெண்வகை யீச னுருவமெ
லெந்த வாறிங் கிசைப்பது பேதமே.

(இ-ள்) ஐந்துபூதம்–பிரிதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும், அருணன்–சூரியனும், இளம்பிறை–சந்திரனும், நந்தலில்–கெடுதலில்லாத, பரமாநந்த–இயற்கையாநந்த, நல்லுயிர்–நல்ல ஜீவர்களும் ஆகிய, இந்த எண்வகை–இந்த எட்டுவிதப் பொருள்களும், ஈசனுருவமேல்–சிவனஷ்ட மூர்த்தவடிவங்களாகுமென விதித்திருக்குமானால், பேதம்–ஜடபேதம்-பரஸ்பரஜீவ ஜடபேதம்-ஜீவபரஸ்பரபேதம்-ஜீவேசுரபேத மாதியவைகள், இங்கு எந்தவாறு–இவ்விடத்தில் எந்நியாயத்தால், இசைப்பது–பேதம் பொருந்தச்சொல்வது. (ஏ-ஈற்றசை) (எ-று) 23.

எல்லை யற்றவ னீச னெனச்சொலிக்
கல்லி லுமிருப் பானெனக் காட்டுவா
ரில்லை யோதன் னிடத்தவ னென்றறிந்
தொல்லை சேர்கில ருய்ந்நெறி யொண்டொடீ.

(இ-ள்) ஒண்டொடீ–ஒளிபொருந்திய வளையலை அணிந்த பெண்ணே, ஈசன்–கடவுள், எல்லையற்றவன்–வரம்பில்லாதவன், எனச்சொலி–என்று சொல்லி, கல்லிலும்–ஏகதேசக் கற்சிலைகளிலும், இருப்பானென–அபேதமாயுளனவானென்று, காட்டுவார்–காண்பிப்பார்கள், அவன்–அப்படிகல்முதலிய ஜடவஸ்துக்களிலு மிருப்பவன், தன்னிடத்து இல்லையோ என–

சைதன்னிய ரூபியாகிய தன்னிடத்து இருக்கமாட்டானுவென, அறிந்து—யூகித்தறிந்து, உய்ந்நெறி—பிழைக்கும்வழியில், ஒல்லைசேர்கிலர்—சீக்கிரமாகச் சேர்ந்தவர்களாகாதவென்? (எ-று) 24.

சத்தி யற்ற சடங்கட வுளெனப்
பத்தி பண்ணப் பரகதி வாய்க்குமேற்
சித்சொ ரூபன் சிவனெனப் போற்றுவோர்
முத்த ராவதின் மோசமென் மொய்குழால்.

(இ-ள்) மொய்குழால்—வண்டுகள் மொய்க்ககூந்தலை யுடையபெண்ணே, சத்தியற்றசடம்—இடம்விட்டு இடம் அசைய சத்தியில்லாதகல்-கட்டை-பொன்-செம்பு-முதலிய சடவஸ்துக்களால் செய்தஉரு, கடவுளென—சுவாமியென்று (அவைகளிடத்து), பத்திபண்ண—திரிகரண சுத்தமாய் பத்திசெய்து வணங்கினா, பரகதி—இந்திரலோகம் பிரமலோகம் முதலியவிடங்களில்வாழும் மேலானபதவிகள், வாய்க்குமேல்—கிடைக்குமானல், சித்சொரூபன்—பரமான்மஞான சொரூபனே, சிவனென—சிவனுவெனென, போற்றுவோர்—அறிந்து துதித்துவணங்குவோர், முத்தராவதின்—ஞானிகளாவதில், மோசமென்—தப்பிதமென்னவாகும் இல்லையல்லவா? 25.

பேத வாதம் பிதற்றுவர் கற்சிவ
னாத லுக்கிங் கறைவதெவ் வாதமோ
வேது மீசனை யன்றியி லாமையா
லோதி னார்பெரி யோரென் றுணர்ந்திடே.

(இ-ள்) பேதவாதம்—ஜீவேசுர ஜீவஜடபேதவாதமே, சத்தியமென்று முன்பின் முரணுக, பிதற்றுவர்—பிதற்றுவார்கள், இங்கு—இவ்வுலகில், கல்சிவனுதலுக்கு—ஜடவடிவகல்லையே சிற்றம்பலவடிவனுகக் கொண்டுவணங்கிவருவதற்கு, அறைவது—பொருந்தச்சொல்வது, எவ்வாதமோ — பேதவாதமோ அபேதவாதமோ? பெரியோர்—விக்கிரக ஆராதனை விதித்த முன்னேராகிய முனிவர்கள், ஏதுமீசனையன்றி—எந்த வஸ்துவும் கடவுளைத்தவிர, இலாமையால்—இல்லாமையால், ஓதினர் என்று—அபேதவாதமே பொருத்தமானதால் அறிந்து கல்லையுஞ்சிவமென்று வணங்கச் சொன்னார்களென்று, உணர்ந்திடே—நீ அறிவாயாக. (எ-று) 26.

கோப மாதி குணங்கள் விடுத்திலார்
சாபம் வைப்பர் தவமெப்புக ழாரெனின்
மாப வித்திர வேடந் தரிப்பினுந்
தாப தரெனச் சாற்றல் பிழையதே.

(இ-ள்) கோபமாதிகுணங்கள்—குரோத முதலிய தீக்குணங்களையும் பொய்க்கொலையாதிய செயல்குணங்களையும், விடுத்திலார்—விடாதவர்கள்,

தமைப்புகழாரெனில்—சொற்களைக் கற்று பெரியவர் வேடமிட்டு நன்டையில் தங்களை ஜனங்கள் மெச்சார்களானால், சாபம் வைப்பார்—வையவர்களும் நீந்தைகூறுபவரும், மாபவித்திரவேடம் தரிப்பினும்—சடைமுடி காவி தண்டு கமண்டலக் குரடுமுதலிய விசேடவேடம் பூண்டாலும், தாபதரென—மூத்தாபங்களையும் வென்றவர்களென்று, சாற்றல் பிழையதே—சொல்வது பிழையாமல்லது நியாயமாகாது. (எ-று) 27.

ஆசை யற்றவ ரியாவ ரவர்களே
யீசன் மெய்யன் பினிலீ டுபட்டவர்
பூசு ரரிவர் பொன்னடி போற்றுவோர்
நாச கால நமன்றுயர் நீப்பரே.

(இ-ள்) ஆசையற்றவர் யாவர்—தனுகரண புவனபோக ஆசையில்லாம லிருப்பவர் யாவரோ? அவர்களே—அத்துறவிகளே, ஈசன்மெய்யன்பினில்—கடவுளிடம் செய்யும் உண்மையான பத்தியில், ஈடுபட்டவர்—சம்பந்தப்பட்டவர்கள், பூசுரர்—இவர்கள்தான் பூமியில் தேவர்கள், இவர்—இத்தகையாரது, பொன்னடிபோற்றுவோர்—அழகிய திருவடியை வணங்குவோர்கள், நாசகாலநமன்—நசிக்கச்செய்யும் யமனிட, துயர் நீப்பர்—சங்கடத்திலிருந்து தங்களை நீக்கிக்கொள்வார்கள். (ஏ-ஈற்றசை) (எ-று) 28.

கற்றி லாதவ ராயினுங் காவியைப்
பெற்றி லாதவ ராயினும் பேயர்போற்
பற்றி லாது பதைப்பற் றிருப்பரை
யுற்றுச் சேவிக்க வொன்றுநன் ஞானமே.

(இ-ள்) கற்றிலாதவராயினும்—அநேக நூல்களைப் படியாதவராயினும் படித்தவராயினும், காவியை—காஷாயவஸ்திரத்தை, பெற்றிலாதவராயினும்—அணியாதவராயினும் அணிந்தவராயினும், பேயர்போல்—பயித்தியக்காரரைப்போல, பற்றிலாது—ஆசையற்று, பதைப்பற்று—அவசரமற்று, இருப்பாரை—உபசாந்தமாயிருப்பவரை, உற்றுச்சேவிக்க—நெருங்கி வணங்க, நன்ஞானம்—உண்மையாகிய ஆத்மஞானம், ஒன்றுமே—உண்டாகும். (எ-று) ()

அக்க மாலை யணியினும் பூதியை
யெக்க ணுந்தெரி யாதுட லேற்றினு
நக்க ணுமை நவிலினு மென்னவை
மிக்கு ளாரைநீ வேடரென் றுன்னிடே.

(இ-ள்) அக்கமாலை யணியினும்—உடலில் ருத்திராட்சமாலை தரித்தாலும், பூதியை—விபூதியை, எக்கணுந்தெரியாது—உடலெங்கும் தெரியாமல், உடலேற்றினும்—உடல் முழுதும் பூசினாலும், நக்கணுமம்—சிவனிட அனந்தம் பெயர்களை, நவிலினும்—வாயாற்சொன்னாலும், என்—என்னலாபம்,

நசைமிக்குளாரை-ஆசை மிகுதியாயுடையோரை, வேடரென்று-வெளி வேடம்பூண்டு உலகை மயக்குவோர்களென்று, நீ உன்னிடே-நீ நினைப்பாயாக (எ-று) 30.

குறைவி லாதபே ரின்பங் குளித்தவர்
நிறை மதிக்கொடு நிற்ப தலாற்பிற
நிறையு நோக வியற்றிலர் நன்முது
மறை யுணர்ந்தவர் மான்மருட் கண்ணினாய்.

(இ-ள்) மான்மருட்கண்ணினாய்-மான்போன்ற மருண்ட பார்வையுடையபெண்ணே. நன்முதுமறையுணர்ந்தவர்-நல்ல பழையவேதங்களை யறிந்தவரே. குறைவிலாத-பூர்ணமான, பேரின்பங்குளித்தவர்-பேரானந்தத்தில் மூழ்கினவர், நிறைமதிக்கொடு-இவர்கள் நிறைந்த மனதைக்கொண்டு, நிற்பதலால்-சுவானுபூதியராய் நிலைத்திருப்பார்களேயல்லது, பிறநிறையுநோக-அந்நியரிட சரீரம் நோகும்படி, இயற்றிலர்-துஷ்டகாரியங்களைச் செய்யார்கள். (எ-று) 31.

ஒன்ற லாதுல கந்தெரி யாமலே
நின்ற பேர்க்கடை யாள நினைப்புறி
னன்று தீதெனு நாட்டமி றந்திகழ்
வொன்றைப் பேசி னுளமறு கார்களே.

(இ-ள்) ஒன்றலாது-தனதான்மசொரூப மொன்றேயல்லது, உலகம் தெரியாமலே-தேகாதி பிரபஞ்சந்தெரியாமலே, நின்றபேர்க்கு-நிலைத்த ஞானிகளுக்கு, அடையாளம்-அறிகுறியாதெனில், நினைப்புறில்-தங்களுக்கு நினைப்புண்டானபோது, நன்று தீதெனும்-நல்லது கெட்டதென்கிற, நாட்டமிறந்து-பாவனையற்றவராயும், இகழ்வொன்ற-தான் இழிவடையும்படி, பேசினும்-பிறர்தன்னைப்பேசினாலும், உளமறுகார்கள்-மனம் வருந்தாதவர்களாயிருப்பார்கள் என்பதே. (ஏ-ஈற்றசை) (எ-று) 32.

பெண்ணை யாருயி ரையஞ்சொற் பிள்ளையைக்
கண்ணை யீந்தவர் காதை தெரித்தலா
லெண்ணுறு வார்தமை யீச னடியரா
முண்ணுஞ் சோற்றுக் குரைபொய் விடார்களே.

(இ-ள்) பெண்ணை-தன் மனைவியையும், ஆருயிரை-நிறைந்த பிராணனையும், அஞ்சொல் பிள்ளையை-அழகிய மழலைச்சொற்களைப்பேசும் ஏகபுத்திரனையும், கண்ணை-சர்வவிந்திரியங்களிலும் முக்கியமாகிய கண்களையும், ஈந்தவர்-ஈந்தவர்களாகிய சிவனடியார்களின், காதை-சரித்திரங்களை, தெரித்தலால்-பிரசங்கம்செய்து பிறர்க்கறிவிக்குமாத்திரத்தால், தமை-உள்ளன்பின்றி வெளிவேடம்பூண்ட தங்களையும், ஈசனடியராய்-சிவனடியார்களி

லொருவராக, எண்ணுவார்—நினைத்ததிகாரமாகிகள் செய்பவர்கள். உண்ணுஞ் சோற்றுக்கு—தின்னுஞ் சோற்றுக்கு. உரைபொய்-சொல்லுகின்ற பொய்க்கதைகளை, விடார்கள்—விடாமலிருக்கிறார்களே இது என்ன காரணம்? (௩-ஈற்றசை) (எ-று) 33.

> அன்ப ரென்றிங் கடுத்தவர் கைப்பொரு
> ளுண்ப தேபலர்க் குய்ந்நெறி யல்லது
> துன்ப நீங்கச் சுருதி மயக்கொழிந்
> தின்ப மெய்தின ரெங்கு மரியரே.

(இ-ள்) இங்கு பலர்க்கு—இவ்வுலகில் அநேக வஞ்சகருக்களுக்கு, அன்பரென்று—தாங்கள் கொண்டிருக்கும் வேடத்தால் தங்களை சிவனடியார்களென்று நம்பி, அடுத்தவர்—அடுத்த சீடர்களது, கைப்பொருள்—கையிலுள்ள பணத்தைப்பறித்து, உண்பதே-போசிப்பதே, உய்ந்நெறியல்லது-பிழைக்கும் வழியாகக்கொண்டமை காணப்படுகிறதேயல்லாமல், துன்பம் நீங்க—தங்களது பிறவித்துக்கம் நீங்கும்படி, சுருதி மயக்கொழிந்து—வேதத்திலுள்ள சந்தேகங்களினின்று நீங்கி, இன்பமெய்தினர்—பேரின்பமடைதலே பிழைப்பெனவெண்ணி யதைப்பெற்றவர்கள், எங்குமரியர்—எங்கும் அருமையாயிருக்கக்காண்கிறார்கள். (ஏ-ஈற்றசை) (எ-று) 34.

> ஞான ஹீனர் நவிலிற் பசுவிற்ச
> மான மென்று வழங்கும் பழமொழி
> தானு ணர்ந்துந் தனைத்தெளி யார்மதி
> யீன ரென்னி லெதுபிழை யேந்திழாய்.

(இ-ள்) ஏந்திழாய்—ஆபரணங்களையணிந்த பெண்ணே, நவிலில்—ஆய்ந்து சொல்லுமிடத்து, ஞானஹீனர்—ஆத்மஞானமில்லாதவர்கள், பசுவிற்சமானமென்று—மிருகங்களுக்குச் சமானமானவரென்று, வழங்கும்—பிரசித்தியாக வழங்கிவருகிற, பழமொழி—(விலங்கொடுமக்களனையர்) என்ற பழய வேதவாக்கியத்தை, தானுணர்ந்தும்—தான் கேட்டிருந்தும், தனைத்தெளியார்—ஆத்மாவாகிய தன்னை தெரிந்து அனுபவிக்காதவர், மதியீனரென்னில்—புத்தியீனர்களென்றால், பிழை எது—தப்பிதம் என்ன ஒன்றுமில்லையல்லவா? (எ-று) 35,

> எத்தி றத்து மிடர்துலை யாமையாற்
> சுத்த ஞானச் சொருபமுற் றார்நலோர்
> பித்தர் காண்பொருள் பேணுவ ரிவ்வுல
> கத்தைப் போலெவ் வுலகத்துங் கன்மமே.

(இ-ள்) நலோர்—பெரியோர், எத்திறத்தும்—யாத்திரைஸ்நான ஜபவிரதமாதி எந்தவகையாலும், இடர் துலையாமையால்-பிறவித்துக்கம் நீங்

காமையினால், சுத்தஞானசொரூபம்—பரிசுத்தமாகிய தமதாத்மஞான சுய வுருவத்தை, உற்றார்—ஆராய்ந்தடைந்தார்கள், காண்பொருள் பித்தர்—எதிரிற்காணும் கிரிசியாமரூபாதிகளை உண்மையெனக்கொண்டு ஒழுகிவரும் பேதமதவாதிகளாகிய வெறியர்கள், இவ்வுலகத்தைப்போல்—இப்பூலோகத்திலடையும் தனுகரண புவனபோகங்களைப்போலவே, எவ்வுலகத்தும்—சுவர்க்க வைகுண்ட கைலாயாதி லோகங்களிலும், பேணுவர்—பெற இச்சிக்கிறார்கள், கன்மமே—பூர்வவாசனுபலமல்லது வேறென்னை. (எ-று) 36.

கடக கங்கண மார மணிமுடி
படம ணிந்த படைக்கல வேந்தெழில்
விடமெ னுந்துரும் பென்ன விடுப்பவர்க்
கிடர லாதெது வீனுஞ் சுவர்க்கமே.

(இ-ள்) கடககங்கணம்—கேடகமும் கைவளையும், ஆரம்—மார்பிலணியும் முத்துமாலையும், அணிமுடி—சிரசிலணியும் கிரீடமும், படம்—பட்டு பீதாம்பர சரிகைவஸ்திரங்களும், அணிந்த—தரித்த, படைக்கலவேந்து—தேர்-யானை-குதிரை-காலாள் முதலிய நால்வகைச்சேனைகளையுடைய அரசனது, எழில்—அழகிய சம்பத்தை, விடமெனு—விஷத்திற்கு சமமென்றும், துரும்பென்ன—துரும்பிற்குச் சமமென்றும், விடுப்பவர்க்கு—நினைத்து அதை விரும்பாமலொழித் தான்மஞானம்பெற்ற பெரியோர்க்கு, சுவர்க்கம்—பொன்னுலகமாதிஸ்தானங்கள், இடரலாது—பிறவித்துக்கத்தையே யல்லாது, எதுஈனும்—வேறெதைக்கொடுக்கும். (ஏ-ஈற்றசை) (எ-று) 37.

ஓடுஞ் செம்பொனு மொத்திட நோக்குவர்
பீடு சால்பெரி யோரெனிற் பீதக
நாடு யாதவர் நாட்டத்திற் கோர்கலார்
வீடு மேலிட மென்னல் வியப்பிதே.

(இ-ள்) பீடுசால் பெரியோர்—பெருமைமிகுந்த பெரியவாள், ஓடுஞ் செம்பொனும்—இவ்வுலகில் ஓட்டையும் செம்பொன்னையும், ஒத்திட நோக்குவோர்—சமமாகப்பார்ப்பவர், எனில்—என்றால், அவர் நாட்டத்திற்கு—அப்பெரியோர் பார்வைக்கு, பீதகநாடு—திருமாமணிமண்டபாதியுடைய பொன்னுலகாதிகள், யாது—என்னசுகத்தைக்கொடுப்பனவாகும், ஓர்கலார்—இதையுணராத மூடர்கள், வீடுமேலிடமென்னல்—மோக்ஷஉலகம் மேலே இருக்கிறதென்று சொல்வது, வியப்பிதே—ஆச்சரியப்படத்தக்கதாக விருக்கின்றது? (எ-று) 38.

மறதி யாலுறு மாத்துயர் நீக்கலே
சுருதி யாகமர் சொற்றுணி வாய்ந்திடிற்

பிறது ன் பமெங் காயினும் போகலார்
துறவரோ வீடு துன்னின ராவரோ.

(இ-ள்) மறதியாலுறு—தன்னை மறந்ததினால் வந்த, மாத்துயர்—மிக்க பிறவித் துன்பத்தை, நீக்கலே—அஞ்ஞானப்பியாச பலத்தால் மறுபடியும் தோன்றாதிருக்கத் தடுத்துவிடுதலே, சுருதி ஆகமம்—வேதமும் ஆகம சாஸ்திரங்களினது, சொற்றுணிவு,—சொற்களின் துணிவாகும், ஆய்ந்திடில்—ஆராய்ந்து உணரில், எங்காயினும்—எந்த யுலகத்தில் போய் பிறக்கினும் பிறவி துன்பம்—பிறப்பானது துன்பமே தரும், போகலார்—இப்பிறவியை விட்டு நீங்காதவர், துறவரோ—ஆசைவிட்ட சந்நியாசிகளோ அல்லர், வீடு துன்னினராவரோ — மோக்ஷமடைந்தவர்கள் ஆவார்களோ? ஆகார், (எ-று) 39.

பூத நாதன் புராந்தகன் யாவன்கொ
லாதி யந்தமி லாவறி வன்றெனில்
யாது ருக்கொ டிருப்பனெ வற்றுளுந்
சோதி யார்தற் சொரூப முணர்வரே.

(இ-ள்) பூதநாதன்—பஞ்ச பூதங்களுக்குத் தலைவனும், புராந்தகன்—ஸ்தூல சூக்குமகாரண திரிபுரங்களைத் தகனஞ்செய்தவனும், யாவன்கொல்—யாவனோ, ஆதியந்தமிலாத—முதலும் முடிவுமில்லாத, அறிவு—ஆன்ம ஞானமே யாகும், அன்றெனில்—அல்லவென்று கூறுவார்களானால், எவற்றுளும்—சராசர வஸ்துக்களெவ்வற்றிலும், யாதுருக்கொடு—என்னரூபத்தை கொண்டு, இருப்பன்—அந்தரியாமியாகிய பகவானிருப்பான், சோதியார்—இதனை விசாரித்தறியாத மூடசிகாமணிகள், தற்சொரூபம்—சனாதாத்ம வடிவை உணர்வரோ—அறிவார்களோ? அறியமாட்டார்கள். (எ-று) 40.

அங்கி வாயு வருண னருணனுந்
திங்க ணீர்நிலந் தேவியோர் பாகனே
லெங்கு மாமுணர் வென்னிலை யோர்கிலார்
புங்க ஞானம் புகலில் வெறுப்பரே.

(இ-ள்) அங்கி—நெருப்பும், வாயு—காற்றும், வருணன்—புனற்கரசனும், அருணனும்—சூரியனும், திங்கள்—சந்திரனும், நீர்—ஜலமும் நிலம்—பூமியும், தேவியோர் பாகனேல்—மனவுன்மனியெனும் சிருட்டி காரண சத்தியை அநாதி காலந்தொட்டு வாமபாகமாகக்கொண்ட சிவமே யாமாகில், எங்குமாம்—சராசரமெங்கும் நிறைந்திருக்கிற, உணர்வு என்—ஞானத்தை என்னென்று சொல்வது சிவமென்றுதானே சொல்லவேணும், இதையோர்கிலார்—இதையறியாத மூடர்கள், புங்கஞானம்—உயர்வாகிய ஞானபோதத்தை புகலில்—உபதேசித்தால், வெறுப்பார்—வெறுத்துக் கொள்ளுகிறார்கள். (ஏ—ாற்றசை) (எ-று) 41

ஜாதி பேதஞ் சமயஞ் சடங்குடன்
மீதிருத் திவெவ் வேறுபன் மூர்த்தியென்
றோதி யார்க்கு முரைத்துப் புராணமே
நீதி யென்பர் நிஜமறி யார்களே.

(இ-ள்) உடல்மீது-நிஜசொரூப மறியாத மூடர்கள் சரீரங்களின்மீது, ஜாதிபேதம்-பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரனெனும் ஜாதிபேதங்களையும், சமயம்-வைஷ்ணவ சைவமாத்தவமெனும் சமயபேதங்களையும், சடங்கு-சுபாசுப செய்முறைகளையும், இருத்தி-ஏற்றி, வெவ்வேறு-வேறு வேறான, பன்மூர்த்தியென்று-பல ரூபசுவாமிகளுண்டென்று, ஓதி-தாங்களும் படித்து, யார்க்குமுரைத்து-யாவருக்கும் விளங்கச் சொல்லி, புராணமே-புராணத்திலுள்ள பேத கற்பனை கதைகளையே, நீதி யென்பர்-நியாயமான உண்மைக்கதைகளென்று சொல்பவர்கள், நிஜமறியார்கள்-வேதமாதி கலைகளினின்றும் தனது சுயசொரூபத்தினது உண்மையை அறியார்கள் அறிந்தா ரிப்பவ ரல்லாரவர். (ஏ-ஈற்றசை) (எ-று) 42.

எண்ண மன்றி யிறையுயிர் வேறெனு
விண்ணின் மண்ணில் விளங்க வெவர்கடங்
கண்ணிற் கண்டவ ரைக்கண்ட வர்முனோர்
பண்ணு ரைத்துப் பகட்டித் திரிவரே.

(இ-ள்) எண்ணமன்றி-அவரவர் எண்ணத்தினால் பேதமாய் நினைந்து கொண்டதே யல்லாமல், இறையுயிர்-ஈசனும் ஜீவனும், விண்ணில்-இறந்து சென்ற மேலுலகினாலும், மண்ணில்-இப்பூவுலகிலானாலும், வேறெனு விளங்க-வேறு வேறாகத்தெரிய, தம்கண்ணில்-தங்கள் கண்களால், கண்டவரைக் கண்டவர் எவர்-விண்ணிற்கண்டுவந்து சொன்னவரையாவது பார்த்தவரைப் பார்த்தவர் எவருளர்? ஒருவருமில்லை, முனோர்-தங்கள் பொய் மதத்தைக் காப்பாற்ற ஜகஜீவபரம் வேறு வேறுளதென்று கற்பனைவலங்காரமாகக் கூறிய முன்னோர்களிட, பண்ணுரைத்து-இசைப்பாட்டுகளைச் சொல்லி, பகட்டி-பிறரை மயங்கச்செய்து, திரிவர்-வயிறுவளர்த்துத் திரிவர். (ஏ-ஈற்றசை) (எ-று) 43

தேக முண்டித் திரிபிது நாமலே
மூக மாம்புல னன்றி விளங்குமோ
மோக மாங்கன வில்வரு மோவியத்
தேக மானது மின்றித் திகழுமே.

(இ-ள்) தேகம்-ஸ்தூல உடலானது, உண்டித்திரிபு-உணவுவிகார பதார்த்தமே யாகும் இது நாமலேம்-இந்த ஸ்தூல உடல்நாமல்ல வென்றறிவாய், மூகமாம்-அன்றியும் சடமாம், புலனன்றி-இந்திரிய ஞானமில்லாமல், விளங்குமோ-இவ்வுடல் விளங்கமாட்டாது, மோகமாம்-நித்திராமயக்க

காகிய, கனவில் வரும்-சொற்பனத்தில் தோன்றுகிற, ஓவியத் தேகம்-சித்திரம் போன்ற உடல், மானதமின்றி-மனமில்லாமல், திகழுமே-தெரியுமோ? தெரியாது. (எ-று) 44.

இறந்தி டாமு னிறத்தன் மனம்விழி
யுறங்கி டாமு னுறங்கன் மறலியான்
மறந்தி டாமுன் மறத்த லுலகுயிர்
சிறந்த மேலவர் செய்கைநன் மோக்கமே.

(இ-ள்) இறந்திடாமுன்-தேகம் நசியாததற்குமுன், மனம்-மனமானது இறத்தல்-ரஜோகுண தமோகுண கலப்பற்று சத்துவகுணமாய்ச் சேடித்து நிற்றலும், விழி-கண்ணைமூடி, உறங்கிடாமுன்-தூங்காததற்கு முந்தி, உறங்கல்-தேகாதியுலகுதோன்றாமல் நனவிற் சுழுத்தியாய் நிற்றலும், உலகுயிர் உலகையும் பிராணவாயுவையும் அலதுபந்து மித்ரகளத்ராதி ஜீவர்களையும் மறலியால்-யமனால், மறந்திடாமுன்-மறக்கவைக்காததற்குமுன்பே, மறத்தல் ஆன்மாவாகிய தன்னையன்றி யுலகுயிர்த்தோன்றாமல்மறந்து சுவானுபூதியராய் நிற்றலும், சிறந்த மேலவர்-(ஆகிய மூவகைகளும்) மேலானபெரியோரிட செயல்களாம், நன்மோக்கமே-இச்செயலே நல்ல மோக்ஷமுமாகும், (எ-று) 45.

கால நீக்குமுன் கைவிடி லாக்கையை
ஏல வார்குழ லேயென் னிடர்நசை
யால காலம லாதிலை யாய்கிலை
சால வோதித் தருக்கிற் பயனெதே.

(இ-ள்) ஏலவார்குழலே-வாசனையுற்ற நீண்டகூந்தலையுடைய பெண்ணே, காலன்-யமன், ஆக்கையை-உடலை, நீக்குமுன்-உயிரைவிட்டுப் பிரிக்குமுன், கைவிடில் - நாம் தேகாபிமானம்விட்டு நிற்போமாகில், இடர் என்-துக்கமென்ன? ஒன்றுமில்லையாம், நசை-உடலாசையே, ஆலகாலமலாது-விஷமல்லாது, இலை-வேறு இல்லை, ஆய்கிலை-இதை யாராய்ந்து அறிந்தாயில்லை, சால ஓதி-பேதவாத நூற்களை மிகவும் வாசித்து, தருக்கில் வீண்வாதம் செய்வதிலும் அகங்கரிப்பதிலும், பயனெது-என்ன பிரயோஜனமாகும். (ஏ-ஈற்றசை) (எ-று) 46.

தந்தை தாய்க்குறு ஜாதி மதம்விட
னிந்தை யென்பரிந் நீணிலம் விண்டுவால்
வந்த தென்னின் வழக்கென் விதிமுத
லெந்த ஜீவனு மீசன் குலமதே.

(இ-ள்) தந்தை தாய்க்குறு-தகப்பனுக்கும் தாய்க்குமுள்ள, ஜாதி மதம்-குலத்தையும் சமயத்தையும், விடல்-விட்டு அந்நிய குலத்திலும் சமயத்திலும் சேர்தல், நிந்தையென்பர்-பழிப்புக்கிடமென்று இவ்வுலகர்

சொல்லுகிறார்களல்லவா? இங்ஙனிலம்-இந்த பெரிய உலகமும் அதி லுள்ள சராசரத் தோற்றங்களும், விண்டுவால்-விஷ்ணுவின் நாபிக் கமலத் திலிருந்து, வந்தமைதன்னில்-தோன்றியதென்று எல்லா நூற்களுஞ் சொல் லுமாகுல், வழக்கென்-இடையிற் கொண்ட குல கோத்திர மென்ன வாகும், விதிமுதல்-பிரமதேவன் முதல் புயநீருயுள்ள எந்த ஜீவனும், ஈசன் குலமேத-ஜகன்னியாமகனது குலமே யாகும். (எ-று) 47.

இன்று நாளையு மெண்ணி லுயிர்பொரு
ளொன்றி னொன்ப துதித்த துணர்ந்துல
கன்றே யீச னனைத்தும் படைத்தன
னென்றே மாய ரிவர்தெளி வென்னையே.

(இ-ள்) இன்று நாளையும்-இன்றைக்கும் நாளைக்கும், எண்ணில்-கணக் கில்லாத, உயிர்பொருள்-ஜீவனுள்ள வஸ்துக்கள், ஒன்றிலொன்பது-ஒன் றில் ஒன்பது, உதித்தல்-தோன்றுதலே, உணர்ந்தும்-தெரிந்திருந்தும், உலகு அனைத்தையும்-உலகு அதிலுள்ள சராசரவஸ்துக்கள் யாவையும், அன்றே-ஆதிகாலத்திலேயே, ஈசன் படைத்தனன் என்று-கடவுள் சிருஷ்டிசெய்துவிட்டானென்று, ஏமாப்பார்-மதத்தர்கள் பெருமை பாராட் டிக்கொள்ளுகிறார்கள். இவர் தெளிவு என்னை-இவரிட நூலராய்ச்சியின் தெளிவு என்னவென்றுரைக்கலாம். (ஏ-ஈற்றசை) (எ-று) 48.

ஆக செய்யுள்கள் 114

---

# தெளிந்து தெளிதல்.

அந்தமு மாதி நடுவி லாப்பர மாநந்த மானனையே.
யெந்தப் பொருட்கு முதற்பொரு ளொன்றறி வேற்ற விடத்திலையே.
சிந்தனை யற்றுச் சிவமாய் விளங்கிடச் சின்முத்திரை யிதேயயே.
பந்தத்துட் பட்டுக் கெடுவார் வெறுத்துப் பகைத்துக் கெடுகவே.

(இ-ள்) அந்தமு மாதி-முடிவும் முதலும், நடுவுமிலா-மத்தியமில்லாத பரமாநந்தம் ஆனனை-மேலானந்தவடிவம் ஆகினேன் தோழி, (எவ்வா றெனப்பெயல்) எந்த பொருட்கும்-எந்த தோற்ற காரிய வஸ்துவிற்கும், முதற்பொருளொன்று-முதற்காரணவஸ்துவென்று, அறிவை-ஞானத்தை ஏறவிடத்திலை-நானுணர்ந்தங்கீகரித்த விடத்திலென் தோழி, சிந்தனை யற்று-நினைப்பற்று-, சிவமாய்விளங்கிட-மங்களமான ஆன்மாவாகி பிரகா சிக்க, சின்முத்திரை-ஞான முத்திரை யென்று பெரியோர் கூறுவது,

ஈதேயடி—ஈதென்று தெளிவா யென்தோழி, பந்தத்துட்பட்டு—பேதவாதிகளின் கட்டுக்ககப்பட்டு, கெடுவார்—கெட்டுப்போகிறவர், வெறுத்து—அகங்காரமாக்கி, பகைத்து—பெரியவர்களையும் விரோதித்து, கெடுகவடி—கெட்டுப் போகக் கடவார்கள் என்தோழி (எ-று) 1.

வந்துபி றந்தும் பிறவா திறவா தவான்பொரு ளாமேனனடீ
யிந்துவு லகென்னி னைவன் றிக் கண்டில னென்றவி டத்திலடீ
சிந்தை யிறந்தெதி ரற்றுவி ளங்குஞ் சிதம்பர மீதேயடீ
தொந்தத்துட் பட்டுந் துலைவார் வெறுத்துத் துவக்குண் டிருக்கவடீ [டீ

(இ-ள்) வந்துபிறந்தும்—தேகம் தோற்றமாக வந்து பிறந்தும், பிறவா இறவாத—ஜனித்தலும் சாதலுமில்லாத, வான்பொருள்—உயர்வாகிய ஞானப் பொருளாகவே, ஆனேனடீ—ஆகினேன் தோழி, (எவ்வாறென்பையேல், இந்த வுலகு—இத்தோற்ற உலகானது, என்னினைவன்றி—எனது சங்கல்ப வடிவமே யல்லாமல், கண்டிலன்—வேறாகப் பார்த்திலன், என்றவிடத்திலடீ—என்று அறிந்தவிடத்திலென்தோழி, சிந்தையிறந்து—மனம் சொரூபநாசமாகி, எதிரற்று—எதிரில் வேறாகத்தோன்றும் பொருள் வேறெனும் பாவனை நீக்கி எல்லாம் நானாக, விளங்கும்—பிரகாசிக்கின்றன, சிதம்பரம் ஈதேயடி—இத்தன்மையையே ஞானாகாசமென்றேழி, தொந்தத்துட்பட்டு—பேதபாவனையிலகப்பட்டு, துலைவார்—நீங்குவார், வெறுத்து—மேற்சொன்ன ஞானாகாசத்தைக்கோபித்து, துவக்குண்டு—தேகமே நானெனும் பேதத்தில் கட்டுப்பட்டு, இருக்கவடீ—மோக்ஷ சுகத்தை மறந்து பந்தத்திலேயே இருக் கடவரென்றேழி, (எ-று) 2.

ஏதமில் லாப்பர போதவ டிவாகி யேகாந்த மானேனடி
பேதம பேதங்கொள் ளுநா னென்றெனைப் பெற்றவி டத்திலடீ
சாதல்பி றத்தலி லையுயிர்க் கென்றே சகலருஞ் சொல்வாரடீ
நோதலி றத்தலே னென்னில் வெறுப்பவர் நொந்தே படுகவடீ.

(இ-ள்) ஏதமிலா—குற்றமில்லாத, பரபோதவடிவாகி—மேலான ஞான போதவடிவாகி, ஏகாந்தம்—தனிமையானவனாய், ஆனேனடி—ஆகினேனென்தோழி, (எங்ஙனமெனில்) பேதம்—நான்வேறு உலகம் வேறு—ஈஸ்வரன்வேறு எனும் பேதத்தையும், அபேதம் கொள்—எனையன்றி ஜகஜீவபரம் இலையெனும் அபேதத்தையும் கொள்ளுகின்ற, நாதனென்று—தலைவன் யாரென்று விசாரிக்க நான்தானென்று, எனைப்பெற்றவிடத்தில்—எனை யானடைந்தவிடத்திலென்தோழி, சகலரும்—எல்லா ஜனங்களும், உயிர்க்கு—ஜீவான்மாவிற்கு, சாதல் பிறத்தல்—இறத்தலும் ஜனித்தலும், இலை யென்றே—இல்லை என்றே, சொல்வார்—சொல்வாகளென்தோழி, இறத்தல்—மரணபயமடைதலும், நோதல்—வருத்தப்படலும், ஏனெனில்—ஏனென்று கேட்கில், வெறுப்பவர்—ஜீவனுக்கு பிறப்பிறப்பு இலை யெனும் நியாயமறி

யாது கோபிப்பவர், நொந்தே-வீணாக மனம் வருந்தியே, படுகவடி-இறப்பும் அடைகவென்றோழி. (எ-று) 3

வேறு

கண்ணோடு காதுடன் மூக்குநாக் கற்றெலாங் காண்பவ னானே
விண்ணோ டகில சராசர மெங்கும் விளங்கக் கனவிலடீ [னடீ
பெண்ணேந னவுங்க னவேவே றன்று பிரிந்துடல் காணாதடீ
தண்ணா ரறிவை நினைவே யிரண்டுந் தடுப்போர் தொடுப்போரடீ.

(இ-ள்) கண்ணோடு-கண்ணோடும், காதுடன்-காதுடனும், மூக்கு நாக்கு-மூக்குநாக்குடனுமான, அற்றெல்லாம்-இந்திரியங்களில்லாமலே எல்லாவற்றையும், காண்பவன்-பார்ப்பவன் சர்வ சாக்ஷியாகிய அறிவானேனடீ. தண்ணார் அறிவைப்பிரிந்து-குளிர்ச்சி பொருந்திய ஞானாத்மாவை யிழந்து, உடல் காணாது-தேகாதியிந்திரியங்களும் ஒன்றையுமுணராவாம், விண்ணோடு அகிலம்-ஆகாயத்துடன் பூமியுமாகவும், சராசரம்-இவைகளிற்றோன்றும் அசையும் பொருளும் அசையாப் பொருளுமாகவும், எங்கும் விளங்கக்கனவிலடி-எங்கும் பிரகாசிக்கசொற்பனவஸ்தையிலடி, நானே-ஆன்மரூபியாகிய நானானவன், பெண்ணே-(ஆகையால்) பெண்ணே, நனவும்-சாக்கிராவஸ்தை தோற்றமவையும், கனவே-சொற்பனவஸ்தையைப் போன்றனவே, வேறன்று-வேறுவிதமாக வந்தனவல்ல, இரண்டும்-சாக்கிரசொப்பன உலகு இரண்டும், நினைவே-மனவுன்மனியென்னும் பிரம சத்திவடிவமே, தடுப்போர்-அல்லவென்று ஆக்ஷேபிப்பவர், தொடுப்போரடி-வீண்வாதம் தொடுப்பவர்களே யாவர் என்றோழி. (எ-று) 4.

காணக்க டவுளைக் கண்டகி லந்தேடிக் காணாதொழிந்தேனடீ
வீணுல குண்மையென் றுகொள் வாசனை விட்டவி டத்திலடீ
மாணாவு லகமுக் காலநி லையென்று மதிகொள்வ தார்தேரடீ
பேணார்த மைத்தா மறியா ரவர்சொற் பிதற்ற லழகல்லடீ..

(இ-ள்) வீணுலகு-பொய்யாகிய உலகை, உண்மையென்றுகொள்-மெய்யென்று கொள்ளும், வாசனை-பழக்கத்தை. விட்டவிடத்திலடீ-விட்ட விடத்திலடீ, காணக்கடவுளை-தூலசட்சுக்குத் தோன்றாத கடவுளை, கண்டு-ஞானக்கண்ணாலுணர்ந்து பிறகு, அகிலம் தேடி-தோற்றவுலகைத்தேடி பார்த்தும், காணாது-விளங்காமல், ஒழிந்தேன்-நீங்கினின்றேன், மாணாவுலகம்-மாட்சிமையற்றவுலகும், முக்காலம் - இறப்பு-நிகழ்வு-எதிரெனும் மூன்று காலங்களும், நிலையென்று-நிச்சயமாயுளதென்று, மதிகொள்வது-மதிப்பது, யார்தேர்-யாரென்று ஆராய்ந்து அறிவாகிய தானென்றறிவாய், தமைத்தாம்-அறிவாகிய தம்மைத்தாங்கள், பேணார்-காப்பாற்றார், அறியார்-தெரிந்துகொள்ளார், அவர்சொல்-அவர் கற்பிக்கும் பேதவார்த்தைகளை நம்பி, பிதற்றல்-பினத்தித் திரிதல், அழகல்ல-அழகாகாது (எ-று) 5.

ஏதும்பெறாமலெல் லாம்பெற்றவன்போலவின்புற்றிருந்தேனடி-
யாதுஞ்சடமிதிலேதோ சுகமென் றகன்றவிடத்திலடீ
தீதொடு நன்மைபொருளிடத்தோ தந்தஞ் சிந்தையிலோ தேடி-
ஏதுகொல் யார்க்கும் பிரியந்தனையன்றி யேற்றக் குறைவேயடீ.

(இ-ள்) யாதுஞ்சடம்-அறிவைத் தவிர மற்ற யாவும் அசத்துப் பொருள்கள், இதிலேதோ சுகம் என்று-இவ்வசத்துப்பொருள்களாலேது சந்தோஷமென்று அறிந்து, அகன்ற விடத்தில்-நீங்கினவிடத்தில், ஏதும்பெறாமல்-அறிவாகிய எனையன்றி மற்றேதும் அடையாமல், எல்லாம் பெற்றவன்போல்-எல்லாச் சுகத்தையுமடைந்தவன்போல், இன்புற்று-திருப்தியான சந்தோஷமடைந்து, இருந்தேனடீ-தன்மயமாயிருந்தேனடீ, தீதொடு நன்மை-துக்கசுகம், பொருளிடத்தோ-பொருள்களிடத்திலுள்ளதோ, தந்தம் சிந்தையிலோ-தங்கள் தங்கள் மனதினிடத்திலுள்ளதோவென்று, தேர்-ஆராய்ந்து மனதினிடத்தேயுளதென்றறிவாய், தனையன்றி-ஆன்மாவாகிய தன்னைத்தவிர, ஏதுகொல்-எந்தப்பொருள்மீது, யார்க்கும் பிரியம்-எவருக்கும் இஷ்டமென்று விசாரிக்கில், ஏற்றக்குறைவு-ஆன்மாமீதன்றி மற்றவற்றின்மீது அதிகம் தாழ்வான அன்பு உளதாகும். (எ-று) 6.

வேறு

வாய்பேசிவாதாட மௌனம்விட் டகலா
வகைகண்டு கொண்டேனடீ
தாய்மலடி மகனரசை யாள்கிலா னறிவிற்
ஜகா்வரா மையினலடீ
பேயர் சிலர் வாய்மூடி யேதிரிவர் சிலரொன்றும்
பேசாதேயென்பாரடீ
பாய்மனதை மூடவகை வாய்கொடல தூபதேசம்
பண்ணுவாரிலேதேரடீ.

(இ-ள்) தாய்மலடி-தாய் என்றும் பிள்ளைகள் பெறாதவள், மகன்-அம்மலடியின் பிள்ளை, அரசையாள்கிலான-உலகை அரசாட்சி செய்யானென்பதுபோல் அறிவில்-அறிவினிடத்து, வராமையினால்-என்றும்உலகம் உண்டாகாமையினாலேவாய்பேசிவாதாட-வாயால் பேசிதர்க்கம்செய்யும்போதும் மௌனம் விட்டு-தன்சொரூப நிலையைவிட்டு, அகலாத-நீங்காத, வகைகண்டு கொண்டேனடீ-விதமறிந்துகொண்டேனடீ, சிலர் வாய்மூடியேதிரிவர்-சிலர் வாயைமூடிக்கொண்டே இதுமௌனமென்று நினைத்து அலைவார், சிலர்ஒன்றும்-சிலர் ஒருவார்த்தைகூட, பேசாதே யென்பர்-பேசக்கூடாதென்பர், பேயர்-இவ்விருவகையினரும் பயித்தியக்காரர்கள், பாய்மனதை-விஷயங்களைத் தாவும் மனதை, மூடவகை-நிறுத்தவழி, உபதேசம்பண்ணுவார்-பிறர் செவியிற்சுருக்கவுரைப்பவர், வாய் கொடலது-வாயைக்கொண்டல்லாமல்,

இலைதேர்-வேறு விதம்செய்யவழி இலைஎன்பதை அறிந்துணர்வாய் (எ-று)

அருவாகி யுருவாகி யருவுரு மாகியிவை யன்றாகி நின்றேனடீ
வருதுயிலி னனவுகன வுகளிலரு துரியத்தில் வம்பரல வென்
[பாரடீ
திருவடைய வுடல்வளர விருமைபெற வலைநரவர் தேரார்க
[ளென்செயலடீ.
யருமைமிகு வருமைகுரு துரியவடி வாமேனோர்கள் யாதுங்கை
விடுவாரடீ.

(இ-ள்) வருதுயிலில்-இளவனுபவமாய் வரும் நித்திரையில், அருவாகி-காற்றுகாயம்போல அரூபமாகியும், நனவு-சாக்கிராவஸ்தையில், உருவாகி-மண் ஜலமுதலியதைப் போல் ரூபவஸ்துக்களாகியும், கனவுகளில்-சொப்பனாவஸ்தையில், அருவுருவுமாகி-அக்னிபோல் ரூபாரூபமுள வஸ்துக்களாகியும், அருதுரியத்தில்-அருமையான துரியாவஸ்தையில், இவை யன்றாகி-ரூபம் அரூபம் ரூபாரூபம் இம்மூன்றும் அல்லாததாகியும், நின்றேனடீ-இம்மூன்றுக்கும் சாட்சியாயும் நிலைத்தேனடி, வம்பர்-உண்மையறியாதமூடர்கள், அலவென்பர்-மேற்சொன்னவதை சரியல்லவென்பர், திருவடைய-(அப்படி அலவென்பர்) மூடரை மயக்கி பணம்பறிக்கவும், உடல்வளர-அதினால் உடலை வளர்க்கவும், இருமைபெற-இப்பிறப்பில் இவ்வுலகசுகத்தையும், மறு பிறப்பில் மேலுலக சுகத்தையும் அடையவும், அலைநரவா-அலைகின்ற வஞ்சனை குருக்களாம், தேரார்கள்-உண்மையான தனதான்மசுகத்தை யடைந்து தேர்ச்சியடையார்கள், என் செயல்-நான் என்னசெய்வது ஒன்றுமில்லை. அருமைமிகு-கிடைப்பது மிகவரிதான குரு-ஆசிரியரெனும், அருமை துரியவடிவு-அரிதான துரிய சொரூபமாக, ஆனோர்கள்- ஆயினோர், யாதும்-தன்னையன்றி யாது மில்லையென்று, கைவிடுவார்-கைவிட்டு தனித்திருப்பர். (எ-று) 8.

அரியாகி யரனாகி யயனாகி நின்றதெது வதுவாகி நின்றேனடீ
யரியாரு மயனாகி நின்றதறி வொன்றென்மை யாயெனவ டாதுவிடடீ
தெரியாத பேர்தமைச் சேராத பேர்வேறு செப்புவார் தப்பா
[மடீ
கரியிரையை நாயொன்று நிமையுறக் கொண்மடமை நாஞ்சொல்ல
[நினி யென்னடீ.

(இ-ள்) அரியாகி-விஷ்ணுவாகியும், அரனாகி-சிவனாகியும், அயனாகி பிரமனாகியும், நின்றதெது-நின்றது எதுவோ, அதுவாகி-அதுவேயாகி நின்றேனடீ-நிலைபெற்றேனடீ. அரியரனுமயனாகி-விஷ்ணு சிவன்-பிரமன் வடிவாகி, நின்றது அறிவே-நிலைபெற்றது ஞானமாகு மென்பதே, உண்.

மை—சத்தியம், அயலெனலடர்து—வேறெனல் பொருந்தாது,விடு—இனிசந்தேகமற்றிரு, தெரியாதபேர்—புத்தியினர்களும், தமைத் தேடாதபேர்—ஆன்மாவாகிய தனைவிசாரித்து அறியாத பேர்களும், வேறு செப்புவார்—தனையன்றி அரி அரன் அயன்வேறாக இருக்கிறார்களென்று சொல்வார்கள், தப்பாம்—அப்படிசொல்வது பிழையாகும், நரியிரையை—நரிக்கு உணவாகும் உடலை, நானெனு—நானென்றும், நீயெனு—நீயென்றும், கொள்மடமை—கொண்ட அறியாமையினால் அபபடி வேறானதாய்க்கூறுவர், நான்சொல்வது—அம்மூடருக்கு நானுபதேசிப்பது, இனியென்ன விருக்கிறது ஒன்றுமில்லை. (எ-று) 9.

சவிகற்பநிருவிகற்பசமாதிகளென்றன்றகைமைக்குப் பேராச்சமயவிரோத மாகவறி வேவிளங் கக்கண்ட டைந்தவி டத்திலமே
புவியுளோர் பலநிட்டை மந்த்ரஜபமாதிமேற்பூச்சுகாட்டிடுவாரமே
சிவமாகவைக்கவுலகாமனதையறிவாற்செகுப்போர்பிழைத்தாரமே.

(இ-ள்) அவிரோதமாக—பகை யில்லாததாக, அறிவே விளங்க—எங்கும் ஞானமயமாய் விளங்க, கண்டடைந்த—பார்த்தானந்தம் பெற்ற, இடத்திலமே—ஸ்தானத்திலடி, சவிகற்பம்—சாக்கிர சொப்பனவடிவ பேதம் பிறத்தலும் நிருவிகற்பம்—நித்திரை வடிவமாய் பேதமற்றிருத்தலுமாகிய, சமாதிகள்—, இவ்விருசமாதி யோகங்களும், என்றன்தகைமைக்கு—என்சுபாவகுணத்திற்கு, பேராச்சு—அறிகுறியாச்சுது, புவியுளோர்—பூமியிலுள்ள சில மூடர்கள், பலநிட்டை—பல தந்திரத்தால் மனமசைவற்றிருக்கச் செய்தலும், மந்த்ரம் ஜபமாதி—ஓம் எனும் பிரணவமுதலிய மந்திரம் உச்சரித்தலுமாகிய, மேற்பூச்சு—மேல்வேஷம், காட்டிடுவார்—காண்பிப்பார்கள், சிவமாகவைக்க—அப்படி மேற்பூச்சுகாட்டும் மூடர்கள் தங்கள்மனதை சிவாகாரமாகவைத்து கண்மூடி பூசிக்க, உலகாம்மனதை-உலகாகாரமாகும்மனதை,அறிவாற்செகுப்போர்—அறிவினால் தன்மயமாக்கி ஜயிப்பவர், பிழைத்தார்—விமுத்திஅடைந்தார். (எ-று). 10.

ஆக செய்யுள்கள் 124.

---

# அபயம்.

தடமா ருலகத் தவர்சென் னெறிவெவ்
விடமே யெரியே யெனவிட் டகலக்
கடையே னையருட் கண்ணா லருளெம்
மடிகட் கடியே னடைவே னபயம்.

(இ-ள்) தடமார்—விசாலம்பொருந்திய, உலகத்தவர்—உலகிலுள்ள ஜனங்கள், செல்நெறி—நடக்கின்றவழி, வெவ்விடமே—கொடிய விஷத்திற்கு சமானமானதே, எரியேயென—கொடிய நெருப்பிற்குச் சமமானதேயென்று, விட்டகல—உலக நடையைவிட்டு நீங்கும்படி, கடையேனை — தாழ்ந்தவென்னை, அருட்கண்ணால்—கிருபாதிருஷ்டியினால் மேலவனாக்கி, அருள்—ஆ

கொண்ட, எம்மடிகட்கு ஈமதாசாரியர் திருவடிகளில், அடியேன்—அடிமை யாகியயான், அபயம்—பயமில்லாமல், அடைவேன்—சேருவேன். (எ-று). 1.

பொன்னாற் புவியாற் புனைமங் கைநலந்
தன்னாற் சுகமுண் டெனத்தட் டழிவேற்
கென்னு லெனைகண் டெனிலின் புறவீ
யன்னு வடிகட் கடியே னபயம்.

(இ-ள்) பொன்னல் – சுவர்ணத்தினாலும், புவியால் – மண்ணினாலும், புனைமங்கை—ஆடையாபரணமணிந்த பெண்ணினாலும், நலந்தன்னால்—உண்டாகும் நன்மையால், சுகமுண்டெனா—சௌக்கிய முண்டென்று, தட்டழிவேற்கு—ஆசைக்கடலிலிழிந்து மோக்ஷகரையேற வழிதெரியாமல் நிலைகலங்கிய எனக்கு, என்னுலெனைகண்டு – என்னுலென்னையறிந்து, எனிலின்புற—எனிற்சந்தோஷமடைய, ஈ—கிருபை செய்தருளிய, அன்னுவடிகட்கு—தாயனையதிருவடிகட்கு, அடியேன்—அடிமையாகியயான், அபயம்—பயமில்லாமல் சேருவேன். (எ-று). 2.

தானு ருலகந் தந்தா னெவனிவ்
வூனு ருடல்வந் துறலே னெனலான்
ஞானு நந்த சுகந்தா னுக்கொளி
ரானு வடிகட் கடியே னபயம்.

(இ-ள்) தானுர்—தான் ஆரென்றும், உலகந் தந்தானெவன்—உலகமுண்டாக்கினவ னெவனென்றும், இவ்வூனுர்—இச்சரீரம் யாரென்றும், உடல்வந்துறலேன—இந்ததேகம் ஏன்வந்த தென்றும், எனலான்—என்று சத்துக்களோடுகூடி சதாவிசாரணை செய்வதால், ஞானநந்தசுகம் – அறிவாநந்த சந்தோஷம், தானுக்கும்—தானுக உண்டாகச்செய்யும் ஒளிரானு—பிரகாசம்பொருந்திய, அடிகட்கு—ஆசிரியர் திருவடிகளுக்கு அடியேன்—அடிமையாகியயான், அபயம்—பயமில்லாமல் சேருவேன். (எ-று). 3.

பொய்யா முலகும் பொருளோ டுடலும்
வெய்யோன் மகனும் விதியுங் கதியு
மெய்யா முனிறந் திவைபோக் கன்மனத்
தையங் கெடுவென் றவடிக் கபயம்.

(இ-ள்) பொய்யாம் – பொய்யாகிய (தோற்றல் மாத்திரமாகிய), உலகும்—உலகமும், பொருளோடு—வஸ்துவோடு, உடலும்—தேகமும், வெய்யோன் மகனும்—சூரியன் பிள்ளையாகியசனியும், விதியும்—நல்வினை தீவினைத்தொடாவரும் பிராரத்துவகன்மமும், கதியும்—பதமுத்தியும், மெய்யாம் உனில்—மெய்யறிவாகிய உனில், தந்து—தோற்றுவித்து, இவைபோக்கல்—

இவைகளை உனில் நாசமடையச் செய்வித்தல், மனத்தையம் – மனத்தினால் நிகழும் சந்தேகக்கூட்டத்தாகும், கெடு–இச்சந்தேகத்தை நீக்கிவிடு, என்ற அடிக்கு–என்று தெரிவித்த எனதாசியர் திருவடிக்கு, அபயம் – பயமில்லாமல் சேருவேன். (எ-று). 4.

மண்ணால் வருவ மண்ணா மதுபோ
லெண்ணீ யெதுவா குவையிவ் வுடல்விட்
டுன்னா வகையென் னெனவே யுணர்வீ
யண்ணா வடிகட் கடியே னபயம்.

(இ-ள்) மண்ணால்வருவ–மண்முதலிய பஞ்சபூதங்களால் தோன்றிய சராசர உடல்கள், மண்ணாம்–மறுபடி மண்முதலியதாகவே மாறிவிடும், அதுபோல்–அத்திருட்டாந்தத்தைப்போல், எண்–யோசித்துப் பார்ப்பாயாகில், நீ எதுவாகுவை – (பரமான்மாவின் பிரதிபிம்பச் சாயாரூப ஜீவனாகிய நீ அப்பரமான்மாவே யாகாமல்) பின்னெந்த வடிவாகுவை, இவ்வுடல் விட்டு–இச்சரீர அபிமானம் நீங்கி, உன்னாவகையென்–உன் சொருபத்தை நினையாதவிதமென்ன, எனவே–என்று, உணர்வீ – அறிவைக்கொடுத்த அண்ணாவடிகட்கு–தந்தையொப்பானவரிட திருவடிகளுக்கு, அடியேன்–அடிமையாகிய யான் அபயம்–பயமில்லாமல், சேருவேன். (எ-று.) 5.

இதுநா மெனவிங் கிசையச் சொலிபின்
னெதுசெய் யெனினு மிசையத் தகுமிங்
கதுகாண் கிலர்சொல் லதுதந் திடுபே
றெதுபொய் யெனுமெம் மிறைதாட் கபயம்.

(இ-ள்) இதுநாமென – இதுதான் நாமென்று, இங்கு – இவ்வுலகில், இசையச்சொலி – நம்மை ஒப்பச்சொல்லி, பின்–பிறகு, எதுசெய்யெனினும்–எதைச் செய்யச்சொன்னாலும், இசையத்தகும்–ஒத்து செய்யக்கூடும், அதுகாண்கிலர் சொல்–அப்படி இதுதான் நீயென்று காட்டசத்தியில்லாதவரிடசொல்லும், அதுதந்திடுபேறு–அந்த சொற்களால் கொடுக்கும் செல்வமும், எதுபொய்யெனும் – எதுவென்றால் பொய்ச்செல்வமாகும் என்று தெரிவித்த, எம்மிறைதாட்கு–எமதாசிரியர் திருவடிக்கு, அபயம்–பயமில்லாமல் சேருவேன் (எ-று) 6.

உயிரே துலகே துடலே துலைவே
தயிர்வாம் விதியே தகமே தயலாஞ்
செயிரே துனைநீ தேரிற் றெளியார்
தயரே லெனுமெம் மடிகட் கபயம்.

(இ-ள்) உனைநீதேரில்–ஆன்மாவேநானென்று உனைநீயாராய்ந்துணரில், உயிரேது–உனையன்றி ஜீவனேது, உலகேது–உலகமேது, உடலேது–சரீர

மேது, உலவேது-பயமேது, அயிர்வாம்-நன்மையாகிய, விதியேது-வ மேது, அகமேது-மனமென்பதேது, அயலாந் செயிரேது - அந்நியம் உள தெனும்குற்றமேது, தெளியாதபரே-தன்னைத்தான் விசாரித் துணராத குற்றமே, எனும்-என்று தெரிவித்த, எம்மடிகட்கு-எனதாசிரியர் திருவடிகட்கு, அபயம்-பயமில்லாமல் சேருவேன். (எ-று) 7.

அழியா வுனைநீ யறியா மையினாற்
பழியாம் பிறவி பதமுத் திகளார்
வழியா லுலவா தனைவந் ததெனச்
செழிபே ரருள்சே வடிகட் கபயம்.

(இ-ள்) அழியாவுனைநீ-என்றும் நாசமாகாத வுன்னை நீ, அறியாமையினால்-தெரிந்துகொள்ளாமையினால், பழியாம்பிறவி-பழிப்பாகிய ஜனனமும், பதமுத்திகள்-அச்சனனமடையும் இந்திரபிர்மாதி லோகபதமுத்திகளும், ஆர்வழியால்-நிறைந்தவழியினால், உலவாதனை-சென்றலைகின்ற வாசனைப் பழக்கமும், வந்ததென-வந்ததென்று, செழிபேரருள் - சிறப்புற்றமிகுந்த கிருபையோடு தெரிவித்த, சேவடிகட்கு-ஆசிரியர் சிவந்த பாதங்களுக்கு, அபயம்-பயமில்லாமல் சேருவேன். (எ-று) 8.

பெரியார் சிறியார் பெற்றார் பிறரென்
றறிவா தனைவிட் டகலா ரகலார்
பெரிதாம் பிறவிக் கடனீ யருவா
யறிவா யிருவென் றவடிக் கபயம்.

(இ-ள்) பெரியார்-இவர் பெரியவரென்றும், சிறியார்-இவர் சின்னவரென்றும். பெற்றார் (என்றும்) - இவர்நம்மைப்பெற்ற தாய்தந்தைகளென்றும், பிறர் என்று-இவர் அந்நியரென்றும், அறிவாதனை-அறிகின்ற பேதவாசனையை, விட்டு அகலார்-விட்டு எல்லாரும் சமமென்றறிந்து நீங்காதவர், பெரிதாம்-பெரிதாகிய, பிறவிக்கடல்-ஜனனசாகரத்தை, அகலார்-விட்டுநீங்கி மோக்ஷ கரைசேரார் (ஆகையால்) நீ, அருவாய் - அரூபியாகியும், அறிவாயிரு-ஞானரூபியாகியும் நிலைத்திரு, என்றவடிக்கு-என்றுதெரிவித்த ஆசிரியர் திருவடிக்கு, அபயம்-பயமில்லாமல் சேருவேன். (எ-று) 9.

சிவமாம் பொருளன் றியிலோர் பொருளு
மிவணுண் டெனிலுண் டிகமும் பரமு
மவனீ யெனசொல் லருமா மறைவாக்
கவமோ சிவனுமெம் மடிகட் கபயம்.

(இ-ள்) ஓர்பொருளும்-ஓர்வஸ்துவும், சிவமாம்பொருளன்றி-சிவமாகிய வஸ்துவைத்தவிர, இல்-அணுமாத்திரம்வேறில்லையாம், இகமும்பரமும்-இவ்வுலகமும் மேலுலகமும், இவண் உண்டெனில்-இவ்விடத்தில் அறியாகிய

சிவத்தால் உண்டெனில், உண்டு—உளதுபோல்காணும், அவனீனைசொல்—அச்சிவம் நீதான்என்று சொல்லுகின்ற,அருமாமறைவாக்கு—அரிதான மகாவேதவாக்கியமானது,அவமோஎனும்—வீணாகுமாவென்றுதெரிவித்தஎம்மடிகட்கு—எமதாசிரியரடிகளுக்கு, அபயம்—பயமில்லாமல் சேருவேன். (எ-று)

உடனானெனவுன் னுதலே யொழியா
மடமை தருமா யையின்மா சறவே
திடஞா னசொரூ பமேயா னெனலே
கடனென் றவடிக் கபய மபயம்.

(இ-ள்) உடனானென்—தேகமே நானென்று, உன்னுதலே—நினைத்துப் பழகலே, ஒழியா—நீங்காத, மடமைதரு—அஞ்ஞானத்தைக் கொடுக்கிற, மாயையின் மாசு—மாயையின் குற்றமாம், அறவே—இவ்வஞ்ஞானம் நீங்கவே, திடஞான சொருபமே—ஸ்திரமான ஞானவடிவே, யானெனலே—யானென்று பழகலே, கடன்—உனக்கு முறைமையாம், என்றவடிக்கு—என்றுதெரிவித்த ஆசிரியர் திருவடிகளுக்கு, அபயம் அபயம் – பயமின்றி சேருவேன் பயமின்றி சேருவேன். (எ-று) 11.

எதுவேண் டினுமேவேண் டிலையா யினுமென்
னிதுவென் னனவவ் வளவே யிவையென்
முதுஞா னசொரூ பமுமன் றயலன்
றெதுபற் றெனுமெம் மிறைகட் கபயம்.

(இ-ள்) எதுவேண்டினும்—எந்தபொருள்களை விரும்பினாலும், (எது) வேண்டிலையாயினும்—எந்த வஸ்துக்களை வெறுத்தாலும், என் – என்னபலனைக் கொடுக்கும் ஒன்றும்கொடாது ஏனெனில், இது—இப்படி விருப்பு வெறுப்பான பேதம்விளைவது, என்னன வவ்வளவே – என் நினைப்பின் அளவாகவேமுடியும், இவை—இவ்வகையான பேதங்கள், என்முதுஞானம்—என்பழைய ஞானத்தினிட, சொருபமும் அன்று—வடிவமுமல்ல, அயலன்று – என்ஞானத்தை விடவேறான வடிவமுமல்ல, எதுபற்று எனும்—(ஆகையால்) எனையன்றி பந்தப்பட்ட வேறுவஸ்து எது? ஒன்றுமில்லையென்று தெரிவித்த, இறைகட்கு—தலையாய வாசிரியரிடம், அபயம் – பயமில்லாமல் சேருவேன், (எ-று) 12.

ஆக செய்யுள் 136.

## உபதேச வினாவிடை.

ஞானமேதென் னையனேயுன் னற்சொரூப மைந்தனே
யீனமேது தோற்றமுண்மை யென்றுகொள்ளுநன் பாவனை.

மானமேது சித்தெனக்கோர் மடமையில்லை யெனவறி
மோனமேது ஞானமேலோர் முடிவுமில்லை யென்பதே.

(இ-ள்) என்யனே-எனதாசிரியனே, ஞானமேது - ஞானமென்பது ஏது, மைந்தனே-சீடனே, உன்னற் சொரூபம்-உனது நல்லான்மவடிவமாகும், ஈனமேது-இழிவேதெனில், தோற்றம்-நாமரூபமாய்த் தோன்றுமுலகை, உண்மையென்று-நிஜமாயுள்ளதென்று, கொள்-ஏற்றுக்கொள்கிற, உன்பாவனை-உன்னிட நினைப்பாகும், மானமேது பெருமையாதெனில், சித்து-நான் ஞானரூபி, எனக்கோர்-எனக்கு ஒரு, மடமையில்லை-அஞ்ஞானமில்லை, எனவறி - என்று வேதஞ்சொல்வதை அனுபவமாய் அறிந்துகொள்வாய், மோனமேது-மௌனம் ஏதெனில், ஞானமேலோர்-ஞானத்திற்குமேற்பட்ட ஒரு, முடிவுமில்லை-முடிவும் இல்லை, என்பதே - என்று அறிவதேயாகும். (எ-று) 1

வித்தையேது யாவுங்கற்கு மெய்யறிவைக் காணுதன்
மித்தையோ பிராக்திஜங்ய வின்பதுன்ப விபரிதஞ்
சித்துமூ வவத்தைநப்பு ஜீவசாட்சித் துரியனுஞ்
சத்தியாவும் வந்தடங்கத் தானிடங் கொடுப்பதே.

(இ-ள்) வித்தையேது - கல்வியென்பது யாதெனில், யாவுங்கற்கும்-எல்லாவற்றையும் படித்தறிகின்ற,மெய்யறிவை-உண்மைஞானத்தை, காணுதல்-கண்டுணர்வதாகும், மித்தையோ-அஞ்ஞானமோ யாதெனில், பிராக்திஜங்ய-மயக்கத்தாலுண்டாகிய, இன்பதுன்பம்-சுகதுக்கங்களுண்டெனும், விபரிதம்-வேறுபாடுற்ற நினைப்பாம், சித்து - அறிவுயாதெனில், மூவவத்தை - நனவு-கனவு-சுழுத்தியெனு மூன்றவஸ்தையை, நம்பும் - உண்மையென்று நம்பியிருக்கும், ஜீவசாக்ஷி-ஜீவனுக்கு சாக்ஷியாகிய, துரியனும் - கூடஸ்தபிரமமாம், சத்தி-ஞானசத்தி யாதெனில், யாவும்வந்தடங்க - எல்லாந் தன்னிடம் அடங்கிநிற்க, இடங்கொடுப்பதே - இடங்கொடுத்திருப்பதாகும். (எ-று) 2,

இன்பமேது தன்னைத்தா னெலாவிடத்துங் காணுதற்
றுன்பமோ தனைமறந்து சொற்பல பிதற்றுத
லன்பதோ தனைத்தெளிந் தனைத்தையும்பொய் யாக்குதல்
வன்பவமோ நனைவையன்றி வருவதல்ல வென்பதே.

(இ-ள்) இன்பமேது-சுகமென்பது ஏதுவென்றால், தன்னைத்தான் - ஆன்மாவாகிய தன்னைத்தானே,எலாவிடத்தும்-எல்லாவிடயங்களில்எல்லாவிடங்களாயும் அதிலுள்ளசராசரப் பொருள்களாயும், காணுதல்-பார்த்தாநந்தித்திருப்பதாம், துன்பமோ-துக்கம்யாதெனில், தனைமறந்து - எல்லாமாய்த்தோற்றும் சொரூபத்தை மறந்து, சொற்பல-தன்னையன்றி பொ

ருள்கள் வேறுளதாக அநேகமயக்க வார்த்தைகளால், பிதற்றுதல் — விடாது ரைத்தலாம், அன்பதோ—பிரியம் யாதெனில், தனைத்தெளிந்து — அறிவா கிய தன்னைத்தெரிந்து, அனைத்தையும்—அசையும் பொருள் அசையாப்பொ ருளாகிய யாவற்றையும், பொய்யாகருதல்—பொய்யென்றறிதலாம், வன்பவ மோ—கொடுமையாகிய பிறப்போ, நனவையன்றி—நினைப்பைத்தவிர, வரு வது அல்ல—உண்டாகுவதல்ல, என்பதே—என்று சொல்வதாகும். (எ-று) 3.

தெய்வமேது சர்வதேக தேகியாகு மறிவுகாண்
பொய்யதேது நாமரூப பூதபௌதி காதிகள்
மெய்யதே தநந்தவின்ப மேசொரூபந் தன்னுரு
வுய்வதோ தனைப்பிடித்திங் கொன்றும்வேண் டிலாமையே.

(இ-ள்) தெய்வமேது — கடவுளேது வென்றால், சர்வதேகம் பிரமன் முதல்புல்லீறாகிய சகல உடல்களிலும், தேகியாகும்—ஆன்மாவாயிருக்கும் அறிவுகாண் — ஞானமென்றுணர்வாய், பொய்யதேது — மித்தையென்பது யாதெனில், நாமரூப—பேரும் வடிவுமுமாய்த்தோன்றும், பூதபௌதிகாதி கள்—பஞ்சபூதபௌதிகாதி சரீரங்களாம், மெய்யதேது—உண்மையானதேது, தன்னுரு—தன்வடிவாகிய, சொரூபம்—ஞானசொரூபமாம், அநந்தவின்பமே—அதுமுடிவில்லாத சுகவடிவானதே என்றறிவாய், உய்வதோ—நாம் பிழைக் கும்வழியோ, தனைப்பிடித்து—அறிவாகிய தனைப்பற்றி, இங்கொன்றும்—இவ் வுலகில் வேறொன்றையும், வேண்டிலாமையே—விரும்பாமல் பற்றற்றிருப்ப தேயாகும். (எ-று) 4.

ஜாதிதன் னமிசமென்று சகலமுள் ளடக்குதல்
வாதியாவர் மனமலாது மற்றோரில்லை காண்பொருட்
காதியாவ ரென்னினீ யநாதிநீ யலாதிலை
சோதியாவை யும்விளக்குஞ் சுத்தஞான சோதியே.

(இ-ள்) தன்னமிசமென்று— (சகலமும்) தன்வடிவமென்று உணர்ந்து, சகலமுள்ளடக்குதல்—சகலத்தையும் தன்னிலயிக்கியம் செய்வது, ஜாதி—நல் லகுலமாகும், வாதியாவர்—நமக்கு விரோதியாரென்றால், மனமலாது—மன தைவிட, மற்றோரில்லை — பின்னொருவரும் விரோதிகளாகார்கள், காண் பொருட்கு—தோற்றவஸ்துக்களுக்கு ஆதியாவ ரென்னில்—முதற்காரணப் பொருள்யா ரென்றால், நீ—ஞானவடிவினனாகிய நீயாகும், அநாதி நீ—என் றுமுள கடவுளும் நீயாகும், அலாது இலை—அல்லாதுவேறு இல்லை, சோதி (யாது) — பிரகாசமான வஸ்து எதுவென்றால், யாவையும் விளக்கும்—எல் லாவற்றையும் தெரிவிக்கின்ற, சுத்தஞான சோதியே—பரிசுத்தமானஞானப் பிரகாசமாகும். (எ-று) 5.

பத்தியேது ஞானதேவை பகலுமிரவும் பரவலுன்
முத்தியே துலகுந்தானு மோர்வடிவ மாகுதல்

சித்தியோ மனப்பகை செகுத்தடங்க லாளுதல்
சுத்தவீர மெதிரறச் சுயம்புவாகி நிற்றலே.

(இ-ள்) பத்தியேது-உண்மையான ஆராதனை எதுவென்றால், ஞான, தேவை – ஞானக்கடவுளை, பகலும் இரவும் – பகலிலும் இராத்திரியிலும் பரவல்-விடாதுதியானம் செய்தலாம், உன்முத்தியேது-சீடனே! உனக்கு மோக்ஷம் எதுவென்றால், உலகும்-ஜடதோற்ற உலகமும், தானும்-சைதன்யமாகியதானும், ஓர்வடிவமாகுதல்-பேதமற்று ஏகசொரூபமாய் நிற்றலாகும், சித்தியோ-மோக்ஷம்கைகூடுதலோ, மனப்பகைசெகுத்து – மனம் வேறெனும் பகையைஜயித்து, அடங்கலாளுதல்-யாவும்தானாய் அரசாட்சி செய்வதாம், சுத்தவீரம்-எதிரிக்கு முதுகுகாட்டி யோடாததைரியம் எது வென்றால், எதிரற-எதிரில் தன்னையன்றி தோற்றப்பொருளொன்றுமில்லையென்றறிந்து, சுயம்புவாகி-சுயசொரூபமாகி, நிற்றலே-நிற்பதாகும் (எ-று)

அண்டமேது நனவனைத்து மாகிநின்ற கோலமாம்
பிண்டமேக தேகமாய்ப் பிரிந்துணர்ந்த போகமாம்
கண்டமே தவத்தையுண்மை கண்டொருங்கு படுதல
கண்டமோ தனைத்தெளிந்து கற்பனை கடந்ததே.

(இ-ள்) அண்டமேது – சமஷ்டியான புவனவண்டம் எதுவென்றால், நனவு-எண்ணமே. அனைத்துமாகிநின்ற – எல்லாமாகிநின்ற, கோலமாம் – அழகாகும், பிண்டம்-வியஷ்டியான தேகம்எதுவென்றால், ஏகதேகமாய்ப் பிரிந்து-உலகினின்று ஏக உடலாய்ப்பிரிந்து, உணர்ந்த – அறிந்த, போகமாம்-சுகமாம், அவத்தை – நனவு-கனவு-சுழுத்திஎனும் மூன்றவத்தையை, உண்மைகண்டு-நிஜமென்று நம்பி, ஒருங்குபடுதல்-ஒருவழிப்பட்டு நிற்றல், கண்டமே-அளவுடையதாகும், அகண்டமோ-எல்லையற்றிருப்பதோ, தனைத்தெளிந்து – ஆன்மாவாகிய தன்னைத்தெரிந்து, கற்பனைகடந்ததே-பொய்த்தோற்ற உலகைவிட்டு நீங்கி நிற்பதாம். (எ-று) 7.

பொருளதே தழிவிலாத போதரூபங் காப்பதே
மருளதேது மந்த்ரயந்த்ர மகிமைபேசி மாழ்குத
லருளதே துலகெலாந்தன் னுருயிரென் றெண்ணுத
லிருளதேது ஞானம்விட் டெலாக்கலையுங் கற்பதே.

(இ-ள்) பொருளதேது – அழியாதவஸ்து எதுவென்றால், அழிவிலாத-கெடாத, போதரூபம்-ஞானரூபத்தை, காப்பதே-காப்பாற்றுவதே, மருளதேது-மயக்கமெது வென்றால், மந்த்ர-நமசிவாய-நாராயண முதலிய மந்திரங்களிடவும், யந்த்ரம் – பிராணபிரதிஷ்டை செய்யும் சக்கரங்களிடவும், மகிமைபேசி-மகத்துவங்களைப்பேசி, மாழ்குதல் – சாதலாம், அருளதேது-கிருபை எதுவென்றால், உலகெலாம்-உலகிலுள்ள ஜீவர்களையெல்லாம், தன்னுருயிரென்று-தன்னில் நிறைந்த ஜீவனைப்போன்ற ஜீவர்க

னென்று, எண்ணுதல்-நினைத்தலாம், இருளதேது - அந்தகாரமெது வென்றால்,ஞானம்விட்டு-அறிவைப்பற்றிப்படியாமல்விட்டு, எலாக்கலையும்-மற்றெல்லா சாஸ்திரங்களையும், கற்பதே-படிப்பதேயாம், (எ-று) 8.

புருடர்யாவர் பகைவரேனும் பொய்மைதீர வெண்ணுவோர்
திருடர்நம்பி னர்க்கிங்குண்டு தெய்வங்குருவு மென்பவர்
குருடர்தம்மைக் காண்கிலார் குருக்கள்வேடங் கொள்ளுவோர்
மருடுறந்த பேர்நிராசை மன்னிவாழும் புண்ணியர்காண்.

(இ-ள்) புருடர்யாவர்-புருஷாள்யாரென்றால், பகைவரேனும்-தனக்குவிரோதிகளானாலும், பொய்மைதீர-அவர்களிட அறியாமைநீங்கும்படி, எண்ணுவோர்-உபதேசஞ்செய்ய நினைப்பவர், இங்கு-இவ்வுலகத்தில், நம்பினவர்களுக்கு-மூட நம்பிக்கையுள்ளவர்களுக்கு, தெய்வம்குருவும்-கடவுளும் ஆசிரியரும், உண்டு என்பர்-உண்டென்று உபதேசிப்பவர், திருடர் ஆவர்-கள்ளாசிரியராவார்கள், தம்மைக்காண்கிலார்-ஆன்மாவாகிய தம்மை அறியாதவர்களும், குருக்கள் வேடங்கொள்ளுவோர்-ஆசிரியர்களைப்போல பொய்வேடம் தரிப்பவர்களும், குருடர் (ஆவர்)-ஞானக்கண்ணில்லாத குருடர்களாவார்கள், மருள் துறந்தபேர்-அஞ்ஞானம் நீங்கினவர்கள் யாரென்றால், நிராசைமன்னிவாழும்-ஆசைநீங்கிவாழ்கின்ற, புண்ணிர்காண்-புண்ணியவான்களாம். (எ-று) 9.

பொய்யர்யாவ ருடலினாசை பூட்டியாட்டிப் போக்குவார்
மெய்யர்யாவர் மலைவுதீர வேதமுடிவைக் காட்டுவா
ரையர்யாவ ரையநீங்க வாதியந்த மூட்டுவார்
வெய்யர்வேட மிட்டுவிபவ வெறிகொடெங்குந் திரிவரே.

(இ-ள்) பொய்யர்யாரென்றால்-பொய்பேசுகிறவர்கள் யாரென்றால், உடலினாசை பூட்டி--தேகாபிமானம் ஊட்டி, ஆட்டி-அவ்வாசையில் உழலவைத்து, போக்குவார்-வாழ்நாள் வீணாய்க்கழிப்பவர், மெய்யர்யாவர்-உண்மைபேசுகிறவாள் யாரென்றால், மலைவுதீர-சீடனிடமயக்கம்நீங்க, வேதமுடிவை-வேதத்தின் முடிவாகிய ஆன்மரூபத்தை, காட்டுவார்-நீதானென்று தெரிவிப்பவர், ஐயர்யாவர்-சந்தேகம் தீர்ந்தவர்யாரென்றால், ஐயம்நீங்க-சீடனிட சந்தேகம்தெளிய, ஆதியந்தம்-முதலும் முடிவுமாகிய அறிவுநீதானென்று, ஊட்டுவோர்-அறிவிப்பவர், வெய்யர் (யாவர்)-கொடியர்யாரென்றால், விபவவேடமிட்டு-ஞானச்செல்வர்களைப்போல் பொய்வேடம் தரித்து, வெறிகொடு-பணம்பறிக்கும் பயித்தியங்கொண்டு, எங்குந்திரிவர்-எவ்விடத்திலும் அறிவீனரை மயக்கித்திரிவர். (எ-று) 10.

ஆகசெய்யுள் 146.

## நன்றிமறவாமை.

இப்பாரிற் பிறந்திறக்கு மிடுக்கணுக்கிங் காளாகி
யொப்பேது மறியாத வொருபொருளை யறியேனை
முப்பாழும் பாழாக்கி முதற்றுனி யங்கடத்தி
யப்பாலில் வாழவைத்த வடிமறக்க லாவதுவே.

(இ-ள்) இப்பாரில்-இவ்வுலகத்தில், பிறந்து இறக்கும்-ஜனித்துமரிக்கும், இடுக்கணுக்கு-சங்கடத்திற்கு, இங்கு ஆளாகி - இவ்விடத்திலடிமையாகி, ஒப்பேதுமறியாத-சமானரகிதமான, ஒருபொருளை - யாவுந்தானும் வஸ்துவை, அறியேனை-அறியாதவென்னை, முப்பாழும்-சாக்கிரதை-சொப்பனம்-சுழுத்தியெனும் மூன்றுபாழையும், பாழாக்கி-பொய்யாக நினைக்கச்செய்து, முதற்றுனியங்கடத்தி-இம்மூவவத்தைக்கு முதற்காரணமாகிய பிரகிருதியையுந் தாண்டச்செய்து, அப்பாலில்-துரியவடிவில், வாழவைத்த-சுகமாய் நித்தியனாகவாழச்செய்த, அடிமறக்கல்-ஆசிரியாது திருவடிகளைச் சிந்தியாதிருக்க, ஆவதுவே-கூடுமோ? கூடாது. (எ-று) 1.

விருப்புவெறுப் பாமுலக விடயநெருப் பாற்றிலிழிந்
தறக்குழைந்து கருகியதி னாதியந்த மறியேனை
பரப்பிரம மாக்கிமயிர்ப் பாலமெனு மறிவேற்றித்
தாரக்கவடி வாக்கடிக டுதிமறக்கத் துரிசறுமே.

(இ-ள்) விருப்புவெறுப்பாம்-அனுகூல வத்துக்களாகவும்-பிரதிகூலவத்துக்களாகவும், விடய-காணப்படுகிற, உலகநெருப்பாற்றில் - உலகமென்கிற நெருப்பாற்றில், இழிந்து-இறங்கி, அறக்குழைந்து - மிகவுங்கரைந்து, கருகி-வெந்து, அதின் ஆதியந்தம்-அதினது உத்பத்தியும் முடிவும், அறியேனை-தெரிந்துகொள்ள சத்தியற்றவென்னை, பரப்பிரமமாக்கி-மேலான பகவச்சொருபமாக்கி, மயிர்ப்பாலமெனும்-மயிர்போனுட்பமாகிய வாராவதியெனும், அறிவேற்றி - ஞானவேணிமேலேறச்செய்து, தாரக்கவடிவாக்கும்-மோக்ஷவடிவாகச்செய்யும், அடிகள்-ஆசிரியர் திருவடிகளில்செய்யும், துதிமறக்க-தோத்திரத்தைமறந்தால், துரிசறுமே-குற்றம் நீங்குமா? நீங்காது. (எ-று) 2.

மலநாறு முடல்வியக்கு மட்டிகட்கு வகுத்தபல
குலகோத்ர வளராழ்ந்த குருடரின்பின் விழுவேனைப்
புலையாணை வப்பகையைப் போக்கியறி வாக்கிமுத்தி
நிலமேற்றி வாழ்வருளு நிமலனடி நினைவறுமே.

(இ-ள்) மலநாறும்-மலநாற்றமுடைய, உடல்வியக்கும்-தேகத்தையே நானென விரும்பும், மட்டிகட்குவகுத்த-மூடருக்குப் பிரித்தளித்த, குலம்

கோத்திர அளர்-ஜாதிவமிசமாகிய சேற்றில், ஆழ்ந்த-அழுந்திய, குருடரின்பின்-அஞ்ஞானிகளாகிய அந்தகரின்பிறகே, விழுவேனை-அக்குல கோத்திரசேற்றில் விழுந்தாழும் என்னை, புலைபாணவ-மாமிசத்தாலாய உடலையானெனும் கருவமாகிய, பகையைப்போக்கி - விரோதத்தைநீக்கி, அறிவாக்கி - ஆன்மாவேயானெனும் அறிவுண்டாக்கி, முத்திநிலமேற்றி-மோக்ஷபூமியில் ஏறச்செய்து, வாழ்வருளும்-அழிவிலாப் போகந்தவாழ்வைக்கொடுத்த, நிமலனடி-நிருமலனுகிய ஆசிரியன் திருவடியை (நினையாவிட்டால்), நினைவருமே - என் மனம் நினையாது நிற்குமோ? நிற்காது. (எ-று) 3.

சித்தசித்து வடிவாகித் திகழ்மனதைச் செயிக்கவழி
பத்திசித்தி யோகமெனப் பகட்டுவர்பின் பரிந்தேனை
பெத்தமுத்தி மாயைபிற பேசுவதென் னறிவலது
சத்திலையென் றளித்தவடி தனைமறக்கிற் சார்பெதுவே.

(இ-ள்) சித்தசித்து வடிவாகி-சைதன்னியம் ஜடமெனும் ரூபமாகி, திகழ்மனதை-பிரகாசிக்கும்மனதை, செயிக்கவழி-ஜயித்தடக்கும்விதம், பத்திசித்தி-முன்னிலைச்சுட்டிடத் தன்புவைத்து கடவுளைப்பணிந்து பத்திசெய்வதாலும், அணிமா-லகிமாவாதி அஷ்டமாதி சித்திகள்பெற அப்பியாசிப்பதாலும், யோகமென-அடயோகம்-லயயோகம்-மந்திரயோகம் முதலிய யோகாப்பியாசம் செய்தலாலும் ஆமென, பகட்டுவர்பின்-வேஷபாஷைகளால் பிரமிக்கச்செய்து ஏமாற்றுவர்பிறகே, பரிந்தேனை-அன்பாகச்சென்ற என்னை, பெத்தமுத்திமாயை-ஆன்மா பந்தப்பட்டதெனலும் மோக்ஷமடையுமெனலும் அஞ்ஞானமாகுமாயின், பிறபேசுவதென்-மற்றதுளதென்றுசொல்வதால் என்னபயன், அறிவலது-ஞானத்தைத்தவிர, சத்திலையென்று-அழியாத பொருளொன்று மில்லையென்று, அளித்தவடிதனை-ஞானோபதேசஞ்செய்த ஆசிரியர்திருவடிகளை, மறக்கில்-மறந்தோமானால், சார்பெதுவே-நமக்கு ஆதாரம் வேறெதுவாகும்? ஒன்றுமில்லை. (எ-று) 4.

அரிபெரிய னலபெரிய னரனெனவே வாதாடிப்
பெரியர்கருத் தறியாது பிதற்றுவர்பின் றிரிந்தேனை
யொருபொருளை யன்றியிலை யுலகமென வனுபவத்திற்
சரிவரவே காட்டடிக டனைமறக்கச் சழக்கறுமே.

(இ-ள்) அலபெரியனரன்-சிவன் பரத்வமுடையவனலன், அரிபெரியன்-விஷ்ணுவே பரத்வமுடையவன், எனவே-என்று, வாதாடி-சண்டைசெய்து, பெரியர்கருத்தறியாது-அரியும்சிவனும் ஒன்றுதானென்று தெரிந்தபெரியோர் எண்ணத்தை யறியாமல், பிதற்றுவர்பின்-வாய்ஓயாது பித்தர்போல் பேசுவோர்பிறகே, திரிந்தேனை-அலைந்து திரிந்தவென்னை, ஒருபொருளையன்றி-ஒப்பற்ற ஞானவஸ்துவைத்தவிர, உலகம் இலைஎன-உல

கம் வேறாகஇல்லையென்று, அனுபவத்தில்-திடமாக அனுபவத்திற்கு, சரிவ ரவே-சரிப்பட்டு வரும்படி, காட்டடிகள்தனை-தெரிவிக்கும் ஆசிரியர்திரு வடிகளை, மறக்க-மறந்தால், சழக்கறுமே-பொய்க்கோல விறுமாப்பு நீங்கு மோ? நீங்காது. (எ-று) 5.

அவரவர்க ணினையுநினை வவர்க்குறுதி யென்னாது
சிவன்செயலென் றறைந்துபிறர் சிறுமைசெப்பித் திரிந்தேனை
யவத்தையொரு மூன்றுமறுத் தாநந்த வடிவாக்கிப்
பவங்கெடுத்துத் தடைவிடுத்த பதமறக்கும் பான்மையதே.

(இ-ள்) அவரவர்கள்-அவரவர்களும், நினையுநினைவு-எண்ணும் எண் ணங்களை, அவர்க்குறுதி-அவர்களுக்குப் பலனாகப்பலிக்கும், என்னாது- என்று சொல்லாமல், சிவன்செயலென்று-எல்லாஞ் சிவனுடைய செயலே யென, அறைந்து-சொல்லி (அதினுமுறுதியின்றி), பிறர் சிறுமைசெப்பி- அந்நியரது குற்றங்களை எடுத்துரைத்து நிந்தித்து, திரிந்தேனை-மூடனாய்த் திரிந்தவென்னை, அவத்தையொருமூன்றும்-சாக்கிர-சொப்பன-சுழுத்தியெ னுமூன்று அவஸ்தைகளையும், அறுத்து-மறக்கச்செய்து, ஆநந்தவடிவாக்கி- எனைஞானாநந்த சொரூபமாக்கி, பவங்கெடுத்து-எனது பிறப்பைப்பொய் யாக்கி (பிறந்திலாயெனக்காட்டி), தடைவிடுத்த-துக்க நிவர்த்திசெய்வித்த, பதம்-ஆசிரியர் திருவடிகள், மறக்கும் பான்மையதே - மறக்கத்தக்க தன் மையுடையவைகள் ஆகுமா? ஆகாது. (எ-று) 6.

பராபரனென் றுரைத்தமொழி பயனறியாக் குரவர்மலி
தராதலத்தி லவர்கண்மொழி தலையின்மிசைச் சுமப்பேனை
புராதனபே ரறிவூட்டிப் புகல்வாட்டி யிருளோட்டிக்
கரணமறுத் தாண்டவர்தங் கழன்மறக்கக் கரிப்பறுமே.

(இ-ள்) பராபரன் என்று-முன்னவனும் பின்னவையுமாகி யிருக்கிற வன் ஒருவனே யென்றறிந்துபெயரிட்ட, உரைத்தமொழி-பெரியோர்வார் த்தையின், பயனறியா-பிரயோஜனத்தைத்தெரிந்து கொள்ளாத, குரவர் மலி-ஆசிரியர் நிறைந்திருக்கிற, தராதலத்தில் - பூவுலகத்தில், அவர்கள் மொழி-அவர்கூறும் ஜீவேசபேதபோதக வார்த்தைகளை, தலையின்மிசை - தலைமீது, சுமப்பேனை-சிரேட்டமாக வணிந்துகொண்டவெனை, புராதன பேரறிவூட்டி-பழமையாகிய பெரிய ஞானவடிவைப் புசிப்பித்து, புகல்வா ட்டி-அன்னியத்தோற்ற வாதரங்களைக்கெடுத்து, இருளோட்டி-அஞ்ஞா னாந்தகாரத்தையறுத்து, கரணமறுத்து-தீக்குணங்களின் வழிப்புகாதுதடுத்து, ஆண்டவர்தம்-எனை யாட்கொண்டவரது, கழல் மறக்க-பாதங்களை மறந் தால், கரிப்பறுமே-பிறவிப்பயம் நீங்குமோ? நீங்காது (எ-று) 7.

கொலைகளவு காமாதி கொடுநரகத் தீச்சூழ்ந்து
நிலைகலங்கி மனம்புழுங்கி நெறியொதுங்கி நின்றேனை
கலையுணர்வி னும்சாந்திக் கடலாடச் சுகநீட
மலவோட வைத்தவடி மாண்பதனை மறப்பதுவே.

(இ-ள்) கொலைகளவுகாமாதி-மனிதராதி உயிர்கொலைபுரிதலும்,பிறர் பொருளைத்திருடுதலும், பரஸ்திரிகளை யிச்சித்தலும் இவைமுதலாகிய துர்ச்செய்கைகளெனும், கொடுநரகம்-கோரநரகமெனும், தீச்சூழ்ந்து-ஜுவாலைகளால் சூழப்பெற்று, நிலைகலங்கி-நின்றதன்னிலையினின்று வேறுபட்டு, மனம்புழுங்கி-மனம்வருந்தி, நெறியொதுங்கி - மெய்ஞ்ஞானமறியும் வழிநின்று நீங்கி, நின்றேனை-அநியாய வழியில்நின்ற வென்னை, கலையுணர்வினும்-வேதாதிமெய்ஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாலுண்டாகும், சாந்திக்கடலாட-விஸ்ராந்தியெனும் சமுத்திரத்தில் மூழ்கவும், சுகம்நீட - ஆத்மாநந்த சந்தோஷம் அதிகமாயடையவும், மலவுஓட-அறியாமைநீங்கவும், வைத்தஅடி-செய்துவைத்த ஆசிரியர்திருவடிகளின், மாண்பதனை - பெருமையை, மறப்பதுவே-மறக்கலாமோ? மறக்கப்படாது. (எ-று) 8.

அகண்டசச்சி தாநந்த மாகுமெனின் மகிழாம
லிகபரங்க ளாஞ்சடங்கட் கேற்றமுரைத் திரங்குமெனைச்
சுகவடிவ னாக்கிமலஞ் சோருமரு ளுரைதேக்கி
யகமயக்க மழித்தவரின் னடிமறக்க வறிவுறுமே.

(இ-ள்) அகண்டம்-குறைவற்றதும்,சச்சிதாநந்தமாகும்-அழியாததும்-ஞானவடிவானதும்-ஆனந்தமயமானதுமான, எனில் மகிழாமல்-என்சொருபத்தில் சந்தோஷியாமல், இகபரங்களாம்-இவ்வுலகம் மேலுலகமெனும், சடங்கட்கு-அஞ்ஞானதோற்றச்சடப்பொருட்களுக்கு, ஏற்றம் உரைத்து-என்னினுஞ் சிறந்தவைகளெனத்துதித்து, இரங்குமெனை - அவ்வுயர்வாம் பொருட்சுகம் கிடைக்கவில்லையே என்று பரிதபிக்கும் என்னை, சுகவடிவனாக்கி-ஆநந்தாத்ம சொருபனாக்கி, மலஞ்சோரும்-ஆணவம்-காமியம்-மாய்கையெனும் மும்மலங்களும் மறையும், அருளுரைதேக்கி-கிருபாவார்த்தைகளென்னும் வெள்ளத்தை நிறைத்து, அகமயக்கம்-மனதிலுள்ள பேததிருட்டிமயக்க வெப்பத்தை, அழித்தவரின்-நீக்கினவரின் அடிமறக்க-திருவடியைமறக்கின், அறிவுறுமே-மெய்ஞ்ஞானம் உதயமுண்டாகுமா? உண்டாகாது. (எ-று) 9.

வேதமுத லாதிகலை விரிக்குமெனை யறியாம
லோதிபிறர்க் குரைத்துமறை யுண்மைதனை யறியேனை
யாதியந்த நீமறையி லறிவதெதை யுனையலது
போதமுரை யெனவொழித்த புனிதனடி போற்றிதே

(இ-ள்) வேதமுதலாதிகலை - (இருக்கு-யஜுர்-சாமம்-அதர்வணமாகிய நாலுவேதங்களும், மந்திரம்-வியாகரணம்-நிகண்டு-சந்தோபிதம்-நிருக்தம்

சோதிடம் முதலிய ஆறுவேதாங்கங்களும், மீமாஞ்சை-தருக்கம் புராணம்-தருமநூலாகிய வுபாங்கங்களாலும்) ஆகியபதினாலு அபரவித்தைகள்; விரிக்குமெனை-விரித்துச்சொல்கின்ற ஆன்மாவாகிய என்னை, அறியாமல்-சந்தேக விபரீதமறத்தெரிந்து கொள்ளாமல், ஓதி-அவ்வபரவித்தைகள் பதினாலையும் வாசித்தும், பிறர்க்குரைத்தும் - அயலார்க்கு அவற்றைக்கற்பித்தும், மறையுண்மைதனை-வேத நிச்சயார்த்த விரகசியத்தை, அறியேனை-அறியாதவென்னை, ஆதியந்தம்சீர் - வேதாரம்பமுதல் மௌனசுபாவவரைசெய்தான்நீ, (ஆகையால்), உனையலது - பரவித்தையெனும் ஆன்மசொருபியாகிய) உன்னையல்லாமல், மறையிலறிவதெதை-வேதத்தில் அறிந்துகொள்வது எதை, போதும் உரைஎன-வீண்வார்த்தையாவது போதுமென்று, ஒழித்த-சந்தேக விபரீதத்திலிருந்து நீக்கின, புனிதனடி-புண்ணியவான் திருவடியை, போற்றரிதே-துதித்தல் அரிதாகுமோ? ஆகாது.(எ-று) 10.

ஆகசெய்யுள் 156.

---

## சாதன முறைமை.

---

பிரிவறு நின்னிலையேதது பரகதி
பேசறு கேவல நிருவாணம்
புரிவற மனமறு மிடமது சுயநின்
பொருவறு நன்னிலை பரிபூர்ணம்
சுரியறு நன்னிலையீதிதி னின்றவர்
சோர்கிலர் பவபா ராவாரம்
பரிவொடு வந்தருள் ஞானமுனிக்குரு
பதமலர் பிரிகிலெ னொருநாளும்.

(இ-ள்) பிரிவறு நின்னிலை ஏது - பிரியக்கூடாத உன்சுபாவஸ்திதி எதுவோ, அதுபரகதி-அதுவே மேலான பதவியாம், பேசறுகேவல நிருவாணம்-பேச்சற்ற தனிமையான மோக்ஷமுமாகும், புரிவற, மனமறுமிடம்-மனமறக்கூடியதுமான இடமும், அது-அதுவே, சுயம்-ஆக்கவழிக்கப்படாத, நின்-உன்னுடைய, பொருவறுநன்னிலை-ஒப்பற்ற நல்லநிலைமையும், பரிபூர்ணம்-நிராபேக்ஷக நிறைவும் ஆகும். சுரியறு நன்னிலையீது - சுழற்சியற்ற நல்ல நிலையும் இதுவே, இதில் நின்றவர்-இந்த ஆன்மசொரூப நிலையில்நின்றவர், பவபாராவாரம்-பிறவிக் கடலின்கரையை, சோர்கிலர்-மறதியாதியாற் கையறப்பெறார் என்று, பரிவொடு-அன்போடு, வந்தருள்-

எதிரில்வந்து கிருபையோடு உபதேசித்த, நாதமுனியெனும் ஆசாரியரிட, பதமலர்-தாமரை மலரொத்த பாதத்தைவிட்டு, ஒருநாளும்பிரிகிலன்-ஒரு நாளும் பிரியமாட்டேன். (எ-று) 1.

பொன்றினர் கனவிற் போகலர் நனவிற்
போன்றறு துரியந் தனினேசம்
ஒன்றினர் நனவி லுடல்கெட லறிகில
ருறுகிலர் மரணப யமிலேசம்
அன்றியு மதுவது வாகவி ளங்குவ
தறிவல துண்டெனல் படுமோசம்
என்றிவை வந்தரு ணாதமு னிக்குரு
விணைமலர் பதமென் னுயிர்வாசம்.

(இ-ள்) கனவில்-சொப்பனத்தில், பொன்றினர்-செத்தவர்போல் தன்னைப்பார்த்தவர், நனவில்-சாக்கிராவஸ்தையில், போகலர்-தான் பிழைத்திருக்கக்கண்டு சொற்பனத்தில் கண்டசாவு பொய்யென்று நினைவார், போல்-அதைப்போல, அறு-சகலகேவலமற்றதும், துரியந்தனில்-சகலத்திற்கு மாதாரமானது மாய அறிவினில், நேசம் ஒன்றினர்-அந்தரங்க பத்தியால் கலந்தவர்கள், நனவில்-ஜாக்கிராவஸ்தையில், உடல் கெடல்--உயிரைவிட்டு உடல்நீங்கி நசிக்குமென்பதை, அறிகிலர்-அறியமாட்டார்கள், மரணபயம்-நசிப்புத்துக்கத்தை, இலேசம்-கொஞ்சமுங்கூட, உறுகிலர்-அடையார்கள், அன்றியும்-இதல்லாமலும், அதுவதுவாக-அவ்வவ்வாகாரமாக, விளங்குதல்-பிரகாசித்தல், அறிவலதுண்டெனல்-ஞானமல்லாது வேறுசத்தை உண்டெனப்பழகல், படுமோசம்-முழுதும் மாயாமோகமாம், என்று-என்று, இவை-இவ்வுண்மையை, வந்து அருள்--வந்துகிருபையோடுதெரிவித்த, நாதமுனிக்குரு-நாதமுனியெனும் ஆசிரியரது, இணைமலர்பதம்-தாமரை மலர்போன்ற இரண்டு திருவடிகளே, என்னுயிர்வாசம்-எனதுயிர்விட்டுப் பிரியாது வசிப்பதற்கிடமாம். (எ-று) 2.

எங்கெங் கேதுத டிக்கினும் விடாம
லேதோ தடித்த தெனுநோக்கால்
அங்கங் கதுவறி வாகக் கரைத்தி
டயலறு மென்றன னருணோக்கால்
இங்கென் வினைவலி கெடமன மாயை
யெரிந்து கரிந்திட வெறில்வாக்கால்
அங்கிங் கெனலறு நாதமு னிக்குரு
வடிசிந் தித்திட மிருதேக்கால்.

(இ-ள்) எங்கெங்கு-சீடனே! உனக்கு எவ்வெவ்விடங்களில் ஏது தடிக்கினும்-எது தோன்றினாலும், விடாமல்-அதைவிடாது பின்பற்றி, ஏதோதடி

த்தது—எது அப்படித்தானமுனது, எனும் நோக்கால்—என்ற விசாரணை திருஷ்டியால், அங்கங்கது—தோன்றின அவ்வவ்விடங்களிலதை, அருள்நோக்கால்—ஆசிரியரிட கிருபாதிருஷ்டியால், அறிவாகக் கரைந்திடும்—ஞானவடிவாய்க்கரைந்திடும், (அன்றியும்), அயலறும் என—உன்னிலும் அயலுண்டெனும் நினைவு நாசமாகுமென்றும், எழில்வாக்கால்—தெரிவித்த ஆசிரியரிட அழகியவாக்கால், இங்கென்—இவ்வுலகில் என்னுடைய, வினைவலி கெட—நல்வினை தீவினையின்பலம் கெடவும், மனமாயை — மனமெனும் மாயையுமதின்காரிய வடிவங்களும், எரிந்து கரிந்திட — ஞானக்கினிபற்றி சத்தற்றுப்போகவும், என்றனன்—என்று சொன்னான், அங்கிங்கெனலறு — அங்கு இங்கு எனும்பேதம் நாசமாகச்செய்த, நாத முனிக்குருவடி—நாதமுனியெனும் ஆசாரியாடிகளை, சிந்தித்திட—நினைக்க, மீதுதேக்கு — மிகவும் மதுரமாம். (ஆல்—அசை) (எ-று) 3.

நீயுல குடலுயி ருண்டென நனவி
னினைந்திடு நினைவா லுளவாகும்
நீயெஃ துளதெனி லிவையுள வென்று
நினைந்திட வாரா தவைபோகும்
நீயறி வாகிநி லைத்துவி ளங்கிட
நிர்வா சனையாய்ப் பவமேகும்
நீயல திலைநா னென்றவ னடிதர
நின்றில துலகுண் டெனுமோகம்.

(இ-ள்) நனவில்நீ—ஜாக்கிரா வஸ்தையில்நீ, உலகு-உடல்-உயிர்-உலகும் உடலும்-ஜீவனும், உண்டென நினைந்திடு—உளவென நினைத்துவந்த, நினைவால்—எண்ணத்தின் சத்தினால், உளவாகும்—உள்ளனபோன்று கொள்ளப்படுகின்றன, எஃதுளதெனில் — எது உண்டாயிருக்க, இவையுளவென்று—இந்த ஜகஜீவபரம் உளவென்று; நீ நினைந்திட—நீநிதானித்துணர்ந்திட, வாராது—இவைகளுளவாகக் கொளப்படாது, அவைபோகும்—அவை நின் எண்ணமேயாகப் புலப்படும், நீயறிவாகி—நீ ஞானவடிவாகி, நிலைத்து விளங்கிட—நிலைபெற்று பிரகாசிக்க, பவம்—பிறப்புண்டென்பது, நிர்வாசனையாய்—வாசனாக்ஷயமாகி, ஏகும்—மறைந்துபோகும், நான் நீயலதிலை—நானும் நீயேயல்லாது வேறில்லை, என்று—என்று, அவனடிதர — அவனது திருவடியை எனக்கு பற்றுக்கோடாகக் கொடுக்க, உலகுண்டெனும்—உலகம் உள்ளதென்கின்ற, மோகம் நின்றிலது — ஆசை நிலையற்றுப் போகாது. (எ-று) 4.

அறிவறி யாமைக ளாகியு மாகா
வறிவே தானகு தன்ஞானம்
குறியிது போன்மெய்க் குறியில தென்றக்
குறியி லடங்குவ ததுமோனம்

வெறிகொடு பலபல சாதனை மேற்கொடு
வீண்பட விடலே னிவையீனம்
செறிதர வெனையா ணாதமு னிக்குரு
செப்புரை யேமா னநூனம்.

(இ-ள்) அறிவறியாமைகள்—பாவபதார்த்தங்களே அபாவங்களின், ஆகியும்—சொருபவடிவமாகியும், ஆகாவறிவே-அவ்வடிங்களாகாமற் சாக்ஷியாகவிருக்கும் ஞானமே, தானாதல்—தானாக நிற்றல், ஞானம் — மெய்ஞ்ஞானமாம், குறியிதுபோல் — இவ்வடையாளத்தைப்போல, மெய்க்குறியிலதென்று—உண்மையான முத்திரையில்லையென, அக்குறியில் — அச்சின்முத்திரையில், அடங்குவது—தேகோக மடங்கிநிற்றல், மோனம்—மௌனமாகும், வெறிகொடு—பைத்தியங்கொண்டு, பலபலசாதனை—அநேக முத்திரைசாதித்தலை, மேற்கொடு—ஏற்றுக்கொண்டு, வீண்படவிடல்—பிரயோஜன மற்றதேயென்று பிறகு கைவிட்டுவிடுவது, ஏன்—யாதுக்கு, இவையீனம்—கற்பனையாகிய இவைகள் மதியீனம் என, எனைச்செறிதர ஆள் — எனையானடையயாட்கொண்ட நாதமுனிக்குரு—நாதமுனியெனும் ஆசிரியர், செப்புரையே—சொல்லிய வார்த்தைக்கே, மானம்நூனம்—பெருமையும் நுட்பமும் உண்டாகி யிருக்கின்றன. (எ—று) 5.

நாமல வுலக நாமல பிரம
நாமுயி ரென்பாய் நன்றாகும்
நாமுட லலவே யுயிரறி வலவோ
நமைவிட் டிலகுவ வன்றாகும்
நாமுட லாகா நிலைநின் றிடவிவை
நம்முரு வாயன் றொன்றாகும்
நாங்கண் டோநீ காணென குருவரு
ளூட்டின னயலொன் றின்றாகும்.

(இ-ள்) நாமலவுலகம்—நாம்உலகவடிவமாகோம், நாமலபிரமம்-நாம்பிரமவடிவமுமாகோம், நாம் உயிரென்பாய்—நாம்சிறு ஜீவர்களே என்பாய், நன்றாகும்—இது நன்மையேயாகும் என்றாலும், நாம் உடலலவே—நாம் சரீரவடிவ மல்லவே, உயிர் அறிவலவோ—ஜீவன் அஸ்திபாதிப்பிரிய ரூபனல்லவோ?, நமைவிட்டு—ஜீவஞானவடிவாகிய நம்மைவிட்டு, இலகுவதன்றாகும்—உலகமும் பிரமமும் பிரகாசிப்பவையல்லனவாம், நாமுடலாகாது — நாம் உடல்வடிவமாகாது, நிலைநின்றிட—அறிவாய்நிலையில் நிலைத்திட, இவைநம்முருவாய்—இச்சகம் பிரமபேதம் நமதாகாரமாக, அன்றி ஒன்றாகும்—அக்காலத்தில் ஏகமாகவேவிளங்கும் நாம்கண்டோம்—ஆன்மாவாகிய எனையன்றி அனுமாத்திரம் வேறில்லையென மனுபவத்தை நாமறிந்தோம், நீகாணென—

நீயுமப்படியே யறிவாயென்று, குருவருள் நாட்டினன் - குருகிருபையால் எனைநிலைக்கச் செய்தான், அனுவுமயல்-எனையன்றியணுவும் வேறேக, இன்றாகும்-இல்லையாகும். (எ-று) 6.

கண்ணாடியில்வரு கண்ணிணை காண்பார்
கண்ணிடை காண்பார் வெளிகாண்பார்
விண்ணாடிச்சா யையாமதி யிரவி
விளக்கொடு நாசியி னுனிகாண்பார்
புண்ணாகுவர்வளி நடைதடை பூண்பார்
பொய்யுரு வலது தமைக்காணார்
தண்ணார் மொழிதரு நாதமு னிக்குரு
தாளிணை பூண்பார் தமைக்காண்பார்.

(இ-ள்) கண்ணாடியில்வரு-கண்ணாடியில் தோற்றுகிற, கண்ணிணைகாண்பார்-இரண்டுகண்களையும் இமைக்காமல் சிலர் பார்ப்பார்கள், கண்ணிடைகாண்பார்-சிலர் இரண்டுகண்களுக்கு மிடையிலுள்ள புருமத்தியைப் பார்ப்பார்கள், வெளிகாண்பார்-சிலர் ஆகாயவடிவையே பார்த்திருப்பார்கள், விண்ணாடிச்சாயை-சிலர் ஆகாயத்தை நாடிச்சாயாபுருஷனையும், மதி இரவி-சந்திரபிம்பத்தையும்-சூரியபிம்பத்தையும், விளக்கொடு - விளக்கையும், நாசியின் நுனிகாண்பார்-மூக்கின்நுனியையும் பார்ப்பார்கள், வளிநடைதடை பூண்பார்-உடலெங்கும் கிரமமாய்ச்செல்லும் மூச்சைத்தடுத்து இரேசகத்தைப்பூரகத்தில் கும்பமாய் நிறுத்திமூன்பின்னுக்குமுறி அப்பியாசிப்பார்கள், புண்ணாகுவர்-இவ்வாறு பார்த்து மனம்புண்ணாகுவார்கள், பொய்யுருவலது-இவர்கள் காண்பதுபொய் வடிவமேயல்லது, தமைக்காணார்-மெய்ஞ்ஞான வடிவமாகிய தங்களைக் காணார்கள் (என்று), தண்ணார் மொழிதரு-குளிர்ச்சிபொருந்திய வார்த்தையால் திருப்திசெய்த, நாதமுனிக்குரு-நாதமுனியெனும் ஆசிரியரின், தாளிணைபூண்பர்-இரண்டுபாதங்களையும் தலையிலணிவோர்கள், தமைக்காண்பார் - தனது ஞானவடிவைத் தரிசிப்பார்கள், (எ-று) 7

கற்பனை சேராக் கதிகே ளெனையான்
காணேன் பிரியே னறிவொன்றே
முற்படு மேலது காண்பேன் பிரிவேன்
முனிவரு ளேதனு வயலின்றே
தற்பர மாகிவி ளங்கி நிலைத்த
சமோதய மறிவொன் றெனுமன்றே
யுற்பவ காணுக் கெரியென சற்குரு
வுதவின னுபதேச முறன்றே.

(இ-ள்) கற்பனைசேரா-ஜாதிமதாச்சிரம தேகேந்திரியாதி பொய்சேராத, கதிகேள்-வழியைக் கேட்பாயாக, எனையான்காணேன் - என்னையா

ன்பாரேன். ஏனெனில்?, பிரியேன்—என்னைவிட்டியான் நீங்கேன். ஆகை யால், அறிவொன்றேமுற்படுமேல்—அறிவே எவற்றிற்கும் மூதற் காரணப் பொருளாகுமாகில், எது காண்பேன்—அறிவிற்குட்படாத எந்த பொருளைப் பார்ப்பேன், பிரிவேன்—அறிவைவிட்டு எப்படிபிரிவேன். முனிவருளேது— அறிவைத்தவிர வெறுப்பும் கிருபையும் என்பாலேது?, அணு அயல் இன் றே—அறிவைத்தவிர வேறு பொருள் துரும்பளவு மில்லையே, தற்பரமாகி— தானே மேலானகடவுளாகி, விளங்கிநிலைத்த — பிரகாசித்து நிலைபெற்ற சதோதயம்—உண்மையுதயப்பொருளாகிய, அறிவொன்றெனும்—ஞானமொ ன்றேயென்கிற, அன்றே—அப்பொழுதுசிதாகாசமே, உற்பவகானுக்கு—பிறப் பெனும்காட்டிற்கு, எரியென — அழிவுதரும் நெருப்புருவாமென்று, சற் குரு—நல்லாசிரியர், உதவினன்—உபகாரமாய்ச் சொன்னான், உபதேசமும்— சற்குரு உபதேசமும், நன்றே—நல்லபடியேயாகும். (எ-று) 8.

பாவனை யுலகம் பாவனை சடலம்
பாவனை கண்டம கண்டபதம்
பாவனை யேசுக துக்கம வத்தைகள்
பாவனை பந்தமு முத்திநிதம்
பாவனை யேமுக் காலம் புண்ணிய
பாபம் பாஷைகள் சாந்திகதம்
பாவா பாவம் நீயல வேறல
பாரென் றருள்குரு பதஞ்சதம்.

(இ-ள்) உலகம் பாவனை—உலகம் நினைவுவடிவமாம், சடலம் பாவனை— தேகம நினைவுவடிவமாம். கண்டபதம்—பேதத்தன்மையும், அகண்டபதம் — அபேதத்தன்மையும், பாவனை—நினைவுவடிவமேயாம், சுகதுக்கம்—நன்மைதீ மையும், அவத்தைகள்—நனவு-கனவு-சுழுத்திமுதலிய அவஸ்தைகளும், பாவ னையே—நினைவின்பேதங்களே, பந்தமும்முத்தி—ஜீவன் அஞ்ஞானத்தால்கட் டுண்டதும், ஞானத்தால் விடுபட்டதும், நிதம்பாவனையே—நிச்சயமாய் நினை ப்பின் வடிவமேயாகும், முக்காலம்—இறப்பு-எதிர்வு-நிகழ்வெனும் மூன்று காலங்களும, புண்ணியம்-பாவம்—சொர்க்க நரகமும், பாஷைகள் — பலவித பாஷைகளும், சாந்தி கதம்-பொறுமையும்-கோபமும், பாவனையே — நினை வுவடிவமே, பாவாபாவம்—நினைப்பும் மறப்பும், நீயல — உன்சொரூபமல்ல, வேறல—உன்னைவிடவேறுமல்ல; பாரென்றருள்குரு—இதை நன்றாய் நினைத் துப்பாரென்று சொன்னகுருவினுடைய, பதம்—திருவடிகள், சதம் — நிலை யான துணையாகும். (எ-று) 9.

அறிவே பிரமமும் மறிவே நீநா
னன்றெனின் மூட மனித்தியமே
யறிவிலை யேலோ ரணுவும் தோன்று
தகிலங் காலஞ் சத்தியமே

மகாமஹோபாத்யாய, டாக்டர்

அறிவால் வந்தன வேதங் கீதமு
மறுபா னெண்கலை தத்தியமே
யறிவென னனவு பிறப்பிட மென்று
னன்றென லென்று மசத்தியமே.

(இ-ள்) பிரமமும் அறிவே-பிரமமும் ஞானவடிவமே, நீநான் அறிவே-நீநான் என்கிறபேதவடிவும் ஞானமே, அன்றெனில் - அல்லவென்பையாகில், மூடம் அநித்தியமே-பிரமமும் நீயும்-நானும் சடப்பொருளும் அநித்தியப்பொருள்களுமாகவேண்டிவரும், அறிவிலையேல்-ஞானமிலையேல், அகிலம்காலம்-உலகமும் காலமும், ஓரணுவுந்தோன்று-ஒரு அற்பமுந்தோன்றியதாகாது, சத்தியமே-இஃது உண்மையாகும், வேதங்கீதமும்-மறைகளும் பாட்டுகளும், அறுபானெண்கலை-அறுபத்தெட்டு கலைஞானங்களும், அறிவால்வந்தன-ஞானத்தால் தோன்றிவந்தவைகளே யெனல், தத்தியமே-மெய்யே, அறிவெனல்-ஞானமென்பது, நனவுபிறப்பிடம்-நினைப்பு உண்டாகுமிடம், என்றுன்-என்று ஆசிரியன்தெரிவித்தான், அன்றெனல் - அல்லையென்றல், என்றும் அசத்தியமே - எக்காலத்திலும் பொய்யேயாகும். (எ-று) 10.

ஆக செய்யுட்கள் 168.

---

## அச்சம்.

---

தானெவ னென நன் கோரார் தனிமறை யுரையுங் கொள்ளார்
ஞானசாத் திரங்க ளாயார் நாலொரு கவிகற் றோயார்
மோனமே முடிவென் றோதி முன்பினு மலைவு தீரா
ரானக வாயர் நிந்தைக் கவரை நா மஞ்சு மாறே.

(இ-ள்) தானெவனென-அஹமென்பது தேகாதியாகிய ஜடவஸ்துவா? அல்லது சைதன்னிய மெனுஞானவஸ்துவா? என்று விசாரித்து, நன்கோரார்-இதுதான் நானெனமயக்கமற வுணரார்கள், தனிமறையுரையும்-ஒப்பற்றவேதம் ஞானந்தான் நீயென்று கூறும்வார்த்தையையும், கொள்ளார்-ஏற்றுக்கொள்ளார்கள், ஞானசாத்திரங்கள், அறிவைப்பற்றிசொல்லும் நூல்களை, ஆயார்-ஆராய்ந்து உணரார், நாலொருகவிகற்று - ஞானநூலில் நாலொரு பாட்டுகளைப் படித்து, ஓயார்-மனமடங்கி நில்லாராகி, மோனமுடிவு-மனத்தின் சொருபஞானமாகும் மௌனநிலையே முடிவான நிலையென்று ஓதி-என்று ஞானநூலிற்படித்து முன்பினும்-அறியாதகாலத்

னும் அழிந்தகாலத்துமுள்ள அலைச்சலெலனும், மலைவுதீரார்-அஞ்ஞானத்தி லிருந்து நீங்கார், நிந்தைக்கு-பிறரை நிந்தைசெய்வதில், ஆனகவாயர்-தாங்கள்கூறும் பேதஞானமே சரியென்று மேளம்போல் பறைபடிக்கும் வாயை யுடையவர், அவரை-அத்தகைய மூடருக்கு, நாமஞ்சுமாறே-நாம் பயப்படுகிறோம். (எ-று) 1.

மாயையே திருக்கி னன்றோ மற்றதைத் துடைப்ப தென்பார்
பேய்மன நிலையா தென்றே பின்னொரு கணத்திற் சொல்வார்
நீயெவ னெனவே பொங்கி நிறுத்துவாய் ஞான மென்பா
ராயத்திற் கலைபொய்ஞ் ஞானிக் கம்மநா மஞ்சு மாறே.

(இ-ள்) மாயையேது-மாயையென்பது ஏது? இல்லை, இருக்கின் அன்றோ-இருந்தாலல்லவோ, மற்று அதை-பின்னுமம்மாயையை, துடைப்பதென்பார்-நாசமாக்குவது என்று சொல்வார்கள், பின்னொருகணத்தில்-மற்றொருக்ஷணத்தில், பேய்மனம்-அலைச்சலைத்தரும் மாயாமனமானது, நிலையாதென்றே-ஒருபடித்தாய் நிலைத்திராதென்றே முன்மாயையேயில்லையென்றவர், சொல்வார்-சொல்வார்கள், நீயெவனெனவே - அப்படிசொல்லும் நீயாரென்று தெளிந்தோர் கேட்கில், பொங்கி-கோபித்தெழுந்து, ஞானம்-சித்துமுதலிய வித்தைகள் கல்லாமல் வாயால் நான்ஞானியென்று சொல்லும் ஞானத்தை, நிறுத்துவாய் என்பர்-நிறுத்து இவையெல்லாம் வாய்ஞானமேயென்பார்கள், ஆயத்திற்கு அலை-பொய்வேடத்தால் மூடர்களைமயக்கி அவர்களிடம் சுங்கம்வாங்க அலைகின்ற, பொய்ஞ்ஞானிக்கு - அசத்தியவான்களுக்கு, அம்ம - ஐயோ, நாமஞ்சுமாறே - நாம் பயப்படுகிறோம் (எ-று) 2.

அன்பர்தம் வேடம் பூண்பா ரரகர சம்போ வென்பா
ரின்பமீ வதற்கு மாறா யெவர்க்குமே துன்ப மீவார்
வன்மொழி புகன்று பக்கு வத்தினை யாய்ந்தோ மென்பார்
ஜன்மத்தை வீண தாக்குஞ் சண்டிகட் கஞ்சு மாறே.

(இ-ள்) அன்பர்தம்-சிவனடியார்களின், வேடம்பூண்பார்-வேஷம்தரிப்பார்கள், அரகரசம்போவென்பார், அரகரசம்போவென்று உச்சரிப்பார்கள், இன்பம் ஈவதற்கு-சுகத்தைக்கொடுப்பதற்கு, மாறாய்-எதிரீடாக, எவர்க்குமே-எவ்விதமான குற்றகல்லாத யாவருக்கும், துன்பமீவார் - துக்கத்தைக்கொடுப்பார்கள், வன்மொழிபுகன்று-கடோமான வார்த்தையால் சீடர்மீதுதோஷம்சொல்லி, பக்குவத்தினை-நீ ஞானமடைய பரிபக்குவமானவனுவென்பதை, ஆய்ந்தோமென்பார் - ஆராய்ச்சிசெய்தோ மென்பார்கள், ஜன்மத்தை-சிரேட்டமான மனிதப்பிறப்பை, வீணதாக்கும்-ஆத்மஞானம் பெறவொட்டாமல் வீணாகசிக்கச்செய்யும், சண்டிகட்கு - பிடிவாதக்காரருக்கு, அஞ்சுமாறே-பயப்படுகின்றோம். (எ-று) 3

தநுகர ணங்க ளீசன் றருதலென் றன்னைத் தேர்ந்திங்
கநுப்பிர வேச னீச னடியிற்சென் றடங்க வென்னின்
மநுகுல கரும மாதி வரன்முறை முடிமுன் னென்பா
ரினிபெறு முரைப்ப மன்னு ரீறில்வாய்க் கஞ்சு மாறே.

(இ-ள்) தநுகரணங்கள்-சரீரமும் மனமாதியிந்திரியங்களும், ஈசன் தருதலேன்-கடவுள் கொடுக்கப்பெற்றதேன், தன்னைத்தேர்ந்து - தன்னை ஆராய்ச்சிசெய்து, இங்கநுப்பிரவேச-இங்கு தன்னுடன் பிரவேசித்திருக்கும், ஈசனடியிற்சென்று-கடவுளின் திருவடியிற் புகுந்து, அடங்கவென்னில்-அடங்கி ஆசையற்றிருத்தற்கென்று சொல்லின், மநுகுலகருமமாதி-மநுவால் விதித்துள்ள குலாசாரப்படி தினந்தோறும் செய்யவேண்டிய சந்தியாவந்தனம்முதலிய நித்தியகருமமும் - சிரார்த்தாதிய நிமித்தம்பற்றி ஓர்காலத்தில் செய்யும் நைமித்திககருமதருமாதிகளை, வரன்முறை-வரிசைக்கிரமமாக, முன்முடியென்பார்-முன்னேமுடி பிறகு பத்திஞானங்களைத் தொடங்கலாமென்று உபதேசிக்கவருகிறார்கள், இனிபெறுமுரைப்பம் - இனி அம்மூடாசிரியர்களுக்கு என்னபுத்தி சொல்லப்போகிறோம், அன்னார்-அத்தகையாருடைய, ஈறில்வாய்க்கு-நியாயம்முடிவு அறியாதவாய்களுக்கு, அஞ்சுமாறே-பயப்படுகின்றோம். (எ-று) 4.

ஜீவனா மென்றா ரெத் தேயத்தோ ரதையே வேத
நீயென வுரைக்கி லெச்சீர் நேர்ந்ததோ மறைநா மத்திற்
கோயமி லரனீ யென்றே யிசைத்திடல் சிறப்பா மென்னின்
மாயவா திகளென் றோது மடமையிற் கஞ்சு மாறே.

(இ-ள்) எத்தேயத்தோர்-எந்தத் தேசத்திலுள்ள ஜனங்கள்?, ஜீவன் நாமென்றார்-ஜீவனை நாமென்று நினையாதவர்கள்? ஒருவருமில்லை, வேதம்-மறையானது, அதையே நீயென உரைக்கில்-அந்த ஜீவனையே நீயென்று சொல்லுமானால், எச்சீர்நேர்ந்ததோ-அவ்வேதத்திற்கு என்னபெருமை உண்டாச்சுதோ? ஒன்றுமில்லை, ஏயமில்-குற்றமற்று நிறைந்த, அரனீயென்றே-சிவன்நீ யெனவே இசைத்திடல்-சொல்லல், மறைநாமத்திற்கு-வேதமெனும்பெயருக்கு, சிறப்பாமென்னில் - மேன்மையென்று சொன்னால், மாயவாதிகளென்று-உலகிற்குமாயையே முதற்காரணப் பொருளெனக் கொள்ளும் தங்களுக் குரித்தாகிய பெயரால் பிரம்மங்காரணமென் றுரைக்கும் உண்மையரை மாயாவாதிகளென, ஓதும் மடமையிற்கு - சொல்லும் அஞ்ஞானிகளுக்கு, அஞ்சுமாறே-பயப்படுகிறோம். (எ-று) 5.

பத்தியொ டுஞ் ஞான நீதி பயனென வறிவ ரேற்பின்
சத்தியந் தவறி ஞாயந் தனைக்கடந் தணுவும் பேசார்

சித்தியு மகிமை பேசித் திரவியந் தேடா ரென்னின்
முத்தர்நீ ரெனப் பழிக்கு மூடருக் கஞ்சு மாறே.

(இ-ள்) பத்திமெய்ஞ்ஞான நீதி-குருபத்தியும் உண்மையாகிய ஆத்ம ஞானமாம் நடத்தையும், பயனென வறிவரேல்-மோக்ஷபிரயோஜன மான தென்று அறிவார்களானால், பின்சத்தியந்தவறி-பிறகு மெய்ப்பேசுதலை நீங்கி, ஞாயந்தனைக்கடந்து-நடுவு நிலைமையைத்தாண்டி, அணுவும்பேசார் - அற்பமும் பேசார்கள், சித்தியும்-அணிமா, லகிமா, மகிமா முதலிய அஷ்டமாதி சித்திகளையும், மகிமைபேசி-அவற்றின் பெருமையும் பிறர்க்குச்சொல்லி, திரவியம்தேடார்-பணம் சம்பாதிக்கார்கள், என்னில்-என்று சேர்ந்தோர் சொல்வாராகில், நீர் முத்தரென-நீர் எல்லாந்துறந்தஞானியென்று, பழிக்கும்மூடருக்கு-நிந்தைகூறும் அறிவீனர்களுக்கு, அஞ்சுமாறே-பயப்படுகின்றேம். (எ-று) ௬

அரியர னாதி நாமத் தரும்பொரு ளிலக்கி யார்த்தஞ்
சரவர வுரையார் தேடார் சாற்றுவா ருரையுங் கொள்ளார்
பெரியவர் வேடம் பூண்டு பித்தரோ தீர்த்த மூர்த்தித்
தரிசன மளித்தோ ரென்று தருக்குவோர்க் கஞ்சு மாறே.

(இ-ள்) அரியாதி - விஷ்ணுசிவன் முதலாயினோர்களின், நாமத்தரும்பொருள்-பெயரின் அருமையான அருத்தத்தினுடைய, இலக்கியார்த்தம்-இலட்சணார்த்தத்தையும், சரிவரவுரையார்-சரிப்பட்டு வரும்படி சொல்லார், தேடார்-நூற்பொருளை யுத்தியாதிகளில் தேடிப்பாரார், சாற்றுவார்-எல்லாம்வல்ல கடவுள் சொருபநிலையைச் சொல்பவர்களின், உரையுங்கொள்ளார்-வார்த்தையையும் ஏற்றுக்கொள்ளார் பெரியவர்வேடம்பூண்டு-பெரியோர்போல் பொய்வேஷம்தரித்து, தீர்த்தம் மூர்த்தி தரிசனம்-குளங்களில் ஸ்நானம்செய்து விக்கிரகங்களைப்பார்த்து, அளித்தோர் - வணங்கும்படிச் செய்தவர், பித்தரோ என்று-பயித்தியக்காரரோவென்று - தருக்குவோர்க்கு - வீண்தர்க்கஞ்செய்து கருவிப்பவர்க்கு, அஞ்சுமாறே - பயப்படுகிறேம். (எ-று) 7.

பொய்யுல கென்னு நூலும் புனிதமெய்ஞ் ஞான மொன்றே
மெய்யென வுரையா நூலும் வேறுசா தனைக ளெல்லாஞ்
செய்திடப் பகவி தந்து சிதையுமென் றுரையா நூலும்
வையமீ திலையென் றுரலும் மறுகுவோர்க் கஞ்சு மாறே.

(இ-ள்) உலகம் பொய்யென்னுநூலும்-உலகம் அறிவினிடம் பொய்யாகத்தோற்றுகிறது என்னுத சாஸ்திரமும், புனிதமெய்ஞ்ஞானம்-பரிசுத்தமான உண்மை அறிவு, ஒன்றே மெய்யென - ஒன்றே நிஜமாயுள்ளதென, உரையாநூலும்-சொல்லாத சாஸ்திரமும், வேறுசாதனைகள்-ஞானமில்லாது.

செய்கின்ற வேறானமுத்திரைகள்-சித்தி-யோகம்முதலிய அப்பியாசங்கள், எல்லாஞ்செய்திட—எல்லாஞ்செய்ய, பதவிதந்து—(பிரமோபாசனையில் லாத கர்மாதிகாரியாய புருஷன் இறக்குங்காலத்தில் சந்திரலோகத்தைப் பேதித்துக்கொண்டு இந்திரலோகத்திற்குப்போகும் பிதிர்யானமும், பிரமோபாசனையில் தற்பரனுயுள்ள புருஷன் இறக்குங்காலத்தில் சூரியமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு பிரமலோகத்திற்குப்போகும் தேவயானமுமாகிய பிரவர்த்திமார்க்கத்திற்குரிய பதமுத்தியைக்கொடுத்து), சிதையுமென்று—புண்ணியம் முடிந்ததே பூலோகத்தில் மறுபடிமாறிப்பிறக்கும் படிசெய்யுமென்று, உரையானாலும்—சொல்லாதநாலும், வையமீதிலையென்றால்—உலகின்மீது இல்லையென்று சொன்னால், உள் மறுகுவோர்க்கு—ஒன்றும்தோன்றாமல் உளக்கொதிப்புறுவோர்க்கு, அஞ்சுமாறே—பயப்படுகின்றாம். (எ-று) 8

சரியைநற் கிரியை யோகந் தத்துவ ஞான நான்கிற்
பெரியதும் பிறப்பை நீக்கிப் பேரின்ப முத்தி யீதற்
கரியது மெதுகொல் பத்தி யாகிற்பின் னிரண்டு சொற்றார்
தெரிகிலா தவரோ வென்னி றிலக்கி லார்க் கஞ்சு மாறே.

(இ-ள்) சரியை நற்கிரியையோகம்—நல்லொழுக்கமும்-அகாராதி மந்திரோச்சாரணமும், பிராணாயாமமும், தத்துவஞான நான்கில்—உண்மைஞானமுமாகிய நான்கில், பெரியதும்—பெரியதானதும், பிறப்பைநீக்கி—ஜனனத்தைநீக்கி, பேரின்பமுத்தி—பேரானந்த மோக்ஷத்தை, ஈதற்கரியதும்—கொடுத்தற்கு அருமையானதும், எது—மேற்சொன்ன நான்கில் எதுவாகும்? எனில், பத்தி—பத்தியே என்பார், ஆகில்—இதே முடிவானதென்றால், பின்னிரண்டுசொற்றார்—பிறகு யோகமும் ஞானமும் இரண்டுளதென்று சொன்னவர்கள், தெரிகிலாதவரோ என்னில் — தெரியாதவர்களோ என்றால், இலக்கிலார்க்கு—அனுபவமாய் ஒப்பாதவர்கட்கு, அஞ்சுமாறே—பயப்படுகின்றோம். (எ-று) 9.

எடுத்தமா ஜன்மம் பாழி லேகுதற் கஞ்சா ரஞ்சி
யடுத்தவர்க் கருளா ரச்ச மாடுவர் பொருள்கைக் கொண்டே
யுடுப்பது முண்ப தும்பின் னுறங்கலுந் தவமாய்த் தர்க்கந்
தொடுப்பதி னுட்சழிக்குந் துட்டருக் கஞ்சு மாறே.

(இ-ள்) எடுத்தமாஜன்மம் — அரிதாய் எடுத்தமானிட ஜன்மமானது, பாழிலேகுதற் கஞ்சார்—நிஷ்பிரயோஜன அவத்சாத்திரிய பாழில் செல்வதற்குப்பயப்படார், அஞ்சியடுத்தவர்க்கருளார்—பிறவிக்குப்பயந்து அடுத்துக்கொள்ளுமாறு தெளியும்படி தன்னையடுத்தவர்களுக்கு உண்மையைக் கிருபைசெய்யார், அச்சமாடுவர்—கேட்கும் சீடனை இன்னும் உனக்கு பருவபக்குவகாலம் வரவில்லையேயென்றும் நீயநிற்பிரவர்த்திக்கில் கெடுவையென்

றும் பயமுறுத்துவர், பொருள்கைக்கொண்டு-அச்சீடரிடம் பணம்பறித்துக்கொண்டு, உடுப்பதும், உண்பதும்-வேண்டியவாறு உடுத்தலும் புசித்தலும், பின்பு உறங்கலும்-பிறகு தூங்குவதும், தவமாய் - தவமாகவைத்துக்கொண்டு, தர்க்கந்தொடுப்பதில்-வீண்வாதஞ் செய்வதில், நாள்கழிக்கும் - ஆயுலைப்போக்கும், துட்டருக்கு-துஷ்டர்களுக்கு, அஞ்சுமாறே - பயப்படுகின்றேம். (எ-று) 10.

ஆக செய்யுட்கள் 178.

# ஐயமகற்றல்.

நினைவொன்று மில்லாம னிற்கினக மென்பார்
நிற்கவகை சொலுமெனவென் சற்குருவைக் கேட்டே
னெனையன்றி யானறியே னீயறிவாய் போலு
மெது நினைவோ வெங்குளதோ விசையெனவுங் கேட்டாள்
நனைமலரே போல்வாடி நலியுமெனைப் பார்த்து
நகைத்துனைநீ பாரெனவ கத்தவிச மர்ந்தே
யனைத்தாகி யன்றுகு மறிவிருக்கக் கண்ட
தல்லாமன் மற்றவெறுஞ் சொல்லாச் சென்னேடி.

(இ-ள்) நினைவு ஒன்றும் இல்லாமல்-ஜனனமாதி மரணமீறுகத்தோற்றும் விஷய நினைவுசிறிதுமின்றி, நிற்கின் - அமிர்தாய் நின்றால், அகமென்பார்-வீடெனும் சுயசொருபமென்பர், நிற்கவகை - அப்படியாதொன்றும் நினையாமல் நிற்பதற்குவிதம், சொலுமென-சொல்லுமென்று, என் சற்குருவை-எனது அழிவிலாசிரியனை, கேட்டேன்-வினவினேன், எனையன்றி - அவ்வாசிரியர்அகமெனுமான்மாவாகிய என்னைத்தவிர,யானறியேன்-வேறுபொருளிருக்கயான் கண்டிலன், நீயறிவாய் போலும்-சீடனே நீ உனையன்றிவேறுபொருள் இருக்கக்கண்டிருக்கிறாப் போலிருக்கிறது (என்று பரிகசித்து, எது நினைவோ-சீடனே! எது மனமென்பதோ, எங்குளதோ - அறிவாம் உனைவிட்டு எங்கிருக்கிறதோ?' இசையெனவும்-அதைச் சொல்லெனவும், கேட்டாள்-சங்கித்தனர், நனைமலரேபோல் - குளிர்ச்சியாகிய பூவைப்போல, வாடிநலியும்-முகவாட்டமுற்று நையும், எனைப்பார்த்து-என்னைப்பார்த்து, நகைத்து-சிரித்து, அகத்தவிசமர்ந்து - அந்தக்கரண சிம்ஹாசனத்திருந்து யாவுமாய்விளங்கும், உனை நீபாரென - உன்னை நீபாரென்றுசொல்ல அப்படியே பார்த்தவளவில், அனைத்தாகி-எல்லாமாகியும், அன்றாகும்-

ஒன்றும தானல்லாததாகியுமான. அறிவிருக்கக்கண்டது—ஞானமிருக்கப் பார்த்ததே, அல்லாமல்—அல்லாமல், மற்ற—மற்றவைகள், வெறுஞ்சொல்லாச்சு—வீணான சொற்களாயின, என்னேடி—இதுஎன்ன அதிசயந்தோழி. (எ—று)

### வேறு.

ஒன்றைமறந் தொன்றைநினைந் துறுகணத்திற் கிடையே
யுள்ளநிலை துரியமென்ப ருறைவதெவ்வா றென்றே
னென்றுமொரு படித்தாகி யிலங்கறிவே யல்லால்
யானறியேன் பிறவிருக்க நீயறிவாய் போலு
நன்றெதனை மறப்பதெதை நினைப்பதென நக்கான்
நானுரைக்கு மெவையுமறி வாயிருக்கக் கரைத்தா
னின்றலகா ணெப்பொழுது மிப்படியே யென்று
னென்னுரைப்பே னெதுகேட்பேன் யான்செயலென் னேடி.

(இ—ள்) ஒன்றை மறந்து—ஒருபொருளைமறந்தும், ஒன்றை நினைந்துறு கணத்திற்கு—மற்றொருபொருளை நினைக்கும் மாத்திராகாலத்திற்கு, இடையே—நடுவில், உள்ளநிலை—இருந்த நிலைமையையே, துரியமென்பர்—சகலத்திற்கு மாதாரமாகிய ஞானமென்பார்கள், உறைவது — என்மனமதிலென்றும் பொருந்தியிருப்பது, எவ்வாறென்றேன்—எந்த விதத்திலாமென்று எனதாசிரியரைக்கேட்டேன், என்று மொருபடித்தாகி—அவர் எக்காலத்தும் ஒரேவிதமாகி, இலங்கறிவேயல்லால்—பிரகாசிக்கும் ஞானமேயல்லாமல், பிறவிருக்க—மற்றசராசரப் பொருள்கள் வேறுயிருக்க, யானறியேன்—யான் பார்த்திலன், நீயறிவாய்போலும்—நீ உனைவிடவேறு பொருள் இருக்ககண்டிருக்கிறாய்போலும் என்று பரிகாசித்து, நன்று எதனைமறப்பது — நல்லதுசீடனே?(உண்மையிலறிவன்றி யொருபொருளுமில்லை) எந்தப்பொருளைமறப்பது, எதை நினைப்பது—எந்த பொருளைநினைப்பது, எனநக்கான் — என்று சொல்லி ஆசிரியன் சிரித்தான், நானுரைக்குமெவையும்—நான் சொல்லும் எந்தப்பொருள் களையும் சிருட்டியல்ல வென்றும்-உண்டேல் ஆதியுண்டென்றும் உண்டெனில் ஆரம்பமென்றென்றும் - முதற்பொருளெது வென்றுங்கேட்டு, அறிவாயிருக்க—ஞானவடிவாகவிருக்க, கரைத்தான் — கரைத்துவிட்டான், (பிறகும்) இன்றலகாண்—இன்று அல்லகாண், எப்பொழுதும்—எந்தகாலத்திலும், இப்படியே என்றான்—இப்படி ஞானமயமேயன்றி வேறிலையென்றான், என்னுரைப்பேன்—அவருக்கு நான் என்னபதில்சொல்வேன், எதுகேட்பேன்—அறிவன்றி எந்தவிஷயம் கேட்பேன், யான்செயல்—அவருக்குயான் செய்யக்கூடியதும், என்னேடி—இதுஎன்ன அதிசயந்தோழி(எ—று)

ஒன்றெனவு மிரண்டெனவு முரைப்பதனை மறந்திங்
குரையிழந்தல் பொருணிலையென் றோதுவருள் எதுவோ

வென்றனக்கீ தருளுமையா வெனவிரந்து கேட்டே
　　னெனையன்றிப் பிறகாணே னிரண்டெனல்பொய் யாங்காண்
நன்றிதுகா ணூமைகளோ ஞானிகணூற் பகரார்
　　நானிலையென் றுரைப்பவனார் நானதனு லொன்றா
யென்றுமுளே னுரைத்தாலு முரையாத விடத்து
　　மென்செயநா னெனையொழித்தற் கெனநகைத்தா னேடி.

(இ-ள்) ஒன்றெனவும்-யாவும் ஜீவேசர் அத்துவிதமென்றும், இரண்டெனவும்-ஜீவேசர்வேறு வேறென்றும், உரைப்பதனைமறந்து-சொல்வதை மறந்து, இக்குரையிழத்தல்-இவ்வுலகில் பேசாது மௌனமாயிருத்தல், பொருணிலை என்று-உண்மை நிலையாமென்று, ஓதுவர்--சொல்வார்கள், உள்ளதுவோ-இஃது உண்மையோ? என்றனக்கு-எனக்கு, ஈதருளுமையாவென-இதை கிருபைசெய்து தெரிவியுமையாவென்று, இரந்து கேட்டேன்-வணக்கத்துடன் யாசித்தேன், எனையன்றி-அவ்வாசிரியர் சர்வசாக்ஷியறிவாகிய என்னையல்லாமல், பிறகாணேன்-வேறு இருக்கப்பார்த்ததில்லை ஆகையால், இரண்டெனல்-துவிதமென்று சொல்வது, பொய்யாம்-பொய்யேயாகும், காண்-நீயறி, நன்றிதுகாண்-முன்னர் நீ கேட்டது வேடிக்கையாக விருக்கிறது, ஞானிகள் ஊமைகளோ-வாய்பேசாது மூடித்திரியும் ஊமைகளோ ஞானிகள், நூற்பகரார் - (அப்படி உளமைகளாகில்) நூல்சொல்லார்கள், நானிலையென்று-நானில்லையென்று, உறைப்பவனார் நான்-உரைப்பவனும்-உணர்பவனும்-உரையாடாதிருப்பவனும்-ஆர் நானேயன்றோ? அதனால்-அவ்வகையால், உரைத்தாலும்-நான்பேசினும், உரையாத விடத்தும்-பேசாதவிடத்தும், ஒன்றாய்-ஒருவனேயாகி, என்றும் உளேன்-எப்போது மழியாமலிருக்கிறேன், எனையொழித்தற்கு - இத்தகைய என்னையொழித்தற்கு, என்செய நானென-நான் என்ன செய்யவேண்டுமென்று, நகைத்தானேடி-சொல்லிச்சிரித்தான் என்தோழி. (எ-று) 3.

ஐம்புலனை யொடுக்கிமன மடக்கிச்சவம் போன்று
　　றல்லாமண் மற்றையர்க ளறிஞரல வென்பார்
நட்புமெனக் கிதுதெளிய வுரையுமென நகைத்து
　　நானறியே னிவையாவு நீயறிவாய் போலு
மம்புவியிற் றுயில்வோர்கண் மூர்ச்சையினுற் கிடப்போ
　　ரறிஞரெனி லிவராவா ராச்சரியக் கதைகா
ணும்பாயன் சிவன்மாலுஞ் ஜனகரொடு விதுர
　　ருலகளித்தார் ஞானிகளென் றுரைத்திடுநூற் கொள்ளே.

(இ-ள்) ஐம்புலனையொடுக்கி - மெய்-வாய்-கண்-மூக்கு - செவியெனு மைம்புலன்களையும் ஒன்றையுமுணரவொட்டாது ஒடுக்கி, மனமடக்கி-மன

தைவெளிப்படாது சுழிமுனையிலடக்கி, சவம்போன்றார்-செத்தபிணத்தைப் போல் கிடப்பவர்கள், அல்லாமல்-அல்லாமல், மற்றையர்கள்—ஏனைய எவ்வகையறிவாளரும், அறிஞரல வென்பார்-ஞானிகளல்லர் என்பார்கள், இது நம்பும் எனக்கு-இதுவே நிஜமான நிருவிகற்பமென்று நம்பியிருக்கு மெனக்கு, தெளிய உரையுமென—சந்தேகம் தீரும்படி தெளிவாகச் சொல்லுமென்று எனதாசிரியரைக் கேட்டேன், நகைத்து – எனது கேள்விமூடத்தனமென்று ஆசிரியர்சிரித்து, இவைநானறியேன்—பிணம்போலிருப்பது முதலிய இவ்வகைகளை நான் அறிந்திலன், யாவும் நீயறிவாய்போலும்-சீடனே? நீ இவையாவற்றையும் அறிந்தவனாக வாயிருக்கின்றனை எனப்பரிகாசித்து, அம்புவியில்—அழகிய பூமியில், துயில்வோர்கள் – மனதும் பஞ்சேந்திரியங்களுமடங்கத்தூங்குவோரும், மூர்ச்சையினாற் கிடப்போர்—சன்னிபாதாதி மூர்ச்சாரோகத்தால்பஞ்சேந்திரியமும் மூச்சும்வெளிப்படாமல்அடங்கக் கிடப்பவர்களும், அறிஞரெனில்—ஞானிகளாகில், இவராவார்—இப்படிபஞ்சேந்திரியமுமடக்கியோகஞ்செய்யு மிவர்களும் ஞானிகளாவர். ஆச்சரியக்கதைகாண்— இது அதிசயிக்கத்தக்க கதைகளாகுமென அறி, உம்பர் அயன்—தேவர்களும்-பிர்மாவும், சிவன்மாலும்—சிவனும்-விஷ்ணுவும், ஜனகரொடுவிதூரர்—ஜனகச் சக்கிரவர்த்தியொடுவிதூரராஜனாதியோர், உலகளித்தார்—உலகபாலகராய்தொழில் நடாத்திக்கொண் டிருந்தபோதும், ஞானிகளென்று—மேற்சொன்னவர்களெல்லாம் ஞானிகளென்றே, உரைத்திடும் நூல்—சொல்லிய புராணாதிகள் வசனத்தை இதிகாசமாக, கொள்ளே—ஒப்புக்கொள் ளென்றான் தோழி. (எ—று) 4.

கொள்வதெங்ங னும்முரையைக் கோடிகற்ப காலங்
  குருவியினங் கூடமைத்துக் குஞ்சியினில் வாழ
வுள்ளொளியாம் பதமேவி யுடன்மறந்தா ரெனவிங்
  கொருநூலே யலபலவு முரைத்திடலே னென்றே
னுள்ளதுகாண் பின்னுலகிற் றிரிந்தனரோ விலரோ
  வுலவுங்கான் ஞானியோவஞ் ஞானியோசொல் லென்றான்
கள்ளமற்ற ஞானியென்றே னங்கிலையே நன்றாங்
  கழலாத நிலையிதது கழலு மென்றா னேடி.

(இ,ள்) உம்முரையை—சத்குருவே உமது வார்த்தையை, எங்ஙன்கொள்வது—எவ்விதம் ஏற்றுக்கொள்வது. கோடிகற்பகாலம்—கோடியுகம் முடிவுகள் பரியந்திரம், குஞ்சியினில்—குடுமியில், குருவியினம்—குருவிகள் தங்களினத்தோடு, கூடமைத்து—கூடுகட்டிக்கொண்டு, வாழ – நெடுநாட்கள் வாழ, உள்ளொளியாம்—உள்ளே பிரகாசமயமாகிய, பதமேவி—தனதெதார்த்தசொரூபமடைந்து, உடன்மறந்தாரென—சரீரம் மறந்திருந்தார்களென்று, இங்கொருநூலேயல—இவ்வுலகில் ஒருசாஸ்திரமேயல்ல, பலவும்—பலநூல்களும்,

உரைத்திடல்-சொல்லுதல், ஏன் என்றேன்-எற்றுக்கு என்று எனதாசிரியரைக்கேட்டேன், உள்ளதுகாண்-சீடனே? நீசொல்வது உண்மைதானென்றாலும், பின்னுலகில்-பிறகும் உலகத்தில், திரிந்தனரோ? இலரோ? - அப்படி பயசமாதியிலிருந்தோர் எழுந்து திரிந்தார்களோ? அல்லது திரியாமலே யிருந்தார்களோ?, உலவுங்கால்-அப்படித்திரியுங்காலத்தில், ஞானியோ? அஞ்ஞானியோசொல்?-ஞானவான்களா? அல்லது மூடர்களா? நீயேசொல்லுக, என்றான்-என்றுகேட்டான், கள்ளமற்ற-வஞ்சனை மனமற்ற, ஞானியென்றேன்-ஞானி என்று சொன்னேன், அந்நிலையே நன்றாம்-அப்படித் திரியும்போது ஆன்மாவாகியதன்னை மறவாதிருக்கும் தன்மையேநல்லதாகுமென்றும், இதுகழலாதநிலை-இதுவே எப்போதும் தன்னைப்பிரியாத நிலையாகுமென்றும், அதுகழலுமென்றானேடி - அப்படி சமாதியில் உடல்மறந்திருக்கும் நிலை ஒருபோது பிரிந்துகாட்டுமென்றும், சொன்னான் என் தோழி. (எ-று) 5.

அன்பர்பணிக் காளாகி லின்பநிலை வருமா
மருமறைதேர் தலிற்பயனோ ரணுவுமிலை யென்பார்
ருன்றனக்குஞ் சம்மதமோ வருட்குருவே யென்றே [யார்
னொன்றையொன்றாப் பிதற்றலெதா முணவின்பொருட் டறி
நன்கறிந்த குருவாகிற் சுருதியுத்தி யாலே
நாசமுற வறியாமை யோட்டியறி வூட்டிக்
குன்றலிலா மறையுரையி லென்னுரையி லுன்றன்
குற்றமற்ற வனுபவத்திற் குறைவெதுகே ளென்பான்.

(இ-ள்) அன்பர்பணிக்கு-சிவ்னடியார்களின் ஏவற்றொழில் செய்வதற்கு, ஆளாகில்-நானடிமையானால், இன்பநிலைவருமாம்-ஆத்மானந்த நிலை எனக்கு உண்டாகுமாம், அருமறைதேர்தலில்-அரிதானவேதங்களை ஆராய்ச்சிசெய்வதில், பயன் ஓரணுவும் - பிரயோஜனம் ஒருக்ஷணமாத்திரமும், இலையென்பார்-இல்லையென்று சொல்வார்கள், அருட்குருவே-கிருபையே வடிவான ஆசிரியரே உன்றனுக்கும்-உமக்கும், சம்மதமோ-அப்படிஏவற்பணி செய்வது இஷ்டமோ, என்றேன் - என்றென்ஞசிரியரைக் கேட்டேன், இது உணவின்பொருட்டு-இப்படி ஏவற்பணியால் ஆத்மானந்தம் வருமென்று கூறிசீடரிடம்ஆகாரம் வாங்கித்தின்னும் பொருட்டு, ஒன்றையொன்றாக-வேதத்தின் உண்மையான ஒருகருத்தை மறைத்து வேறொன்றாக எடுத்துக்காட்டி, பிதற்றலாம்-மூடகுருக்கள் வாயாற்பிதற்றித்திரிவதாகும், அறியார்-இவர்கள் உண்மையறியாதவர்களே, நன்கறிந்த குருவாகில்-நல்ல ஆத்மஞானம் அறிந்த ஆசிரியனுகில்-சுருதியுத்தியாலே-வேதத்தாலும் தன்னிடயுத்தியினுலும், அறியாமை-சீடனிட அஞ்ஞானத்தை, நாசமுற ஓட்டி-அழிந்தோடும்படிச்செய்து, அறிவூட்டி-ஞானவடிவாக்கி, குன்றலிலா-குறைவில்லாத

மறையுரையில் - வேதவாக்கியத்தாலும், என்னுரையில் என்னிடயுக்தியா லும், உன்றன்குற்றமற்ற—உன்னிட குற்றமில்லாத, அனுபவத்தில்—அனுப வத்தாலும், குறைவெது—என்னகுறைவு, கேளென்பான்—கேளென்றுசொ ல்லுவன். (எ-று) 6

கேளேனன் பத்திதரு முத்தியென்னிற் சிவமேன்

கேளென்றார் மாணிக்க வாசகரைப் போதங்

கோளறவே னருச்சுனருக் கரியுரைத்தார் கீதை

குருவிவர்க ளவர்களிலுங் குறையிறந்தார் போலும்

வாளாபல பிதற்றுதலே னறியாமை யறிவான்

மாயுமலான் மற்றொன்றுன் மாயாதிது சரதம்

வேளாண்மை தவந்தானங் கடவுடுதி ஞானி

வியனடிக ளகத்தூய்மை விளைத்திடன்மெய் யுணரே.

(இ-ள்) கேளேனன்—நான்கேட்கவேண்டிய தொன்றுமில்லை, பத்தி — கடவுளிடம் பத்திசெய்தால், முத்திதருமென்னில்—மோக்ஷம் உண்டாகுமெ ன்னையாகின், சிவம்—சிவபிராஞனவர், மாணிக்கவாசகரை—மாணிக்கவாச கருக்கு, போதம் — சிவஞானபோதத்தை, ஏன் கேளென்றார்—ஏன் கேளெ ன்று உபதேசஞ்செய்தார், அரி—விஷ்ணுவானவர், அருச்சுனருக்கு — அருச் சுனருக்கு, கோளற—அறியாமையால் மேற்கொண்டவினைதீர, ஏன்—யாது பற்றி, கீதையுரைத்தார்—பகவற்கீதையை உபதேசம் செய்தார், குரு இவர் கள்—இவ்வுலகத்தில் தன்னுண்மையறியாதவர்களாகிய இந்த குருக்கள், அவ ர்களிலும்—அந்த ஹரிஹராதிகளென்பவர்களிலும், குறையிறந்தார்போலும்— குறைவற்ற ஞானச்செல்வர்கள்போலும் - அதிசயம், வாளாபல பிதற்றுத லேன்—வீணுக பலவார்த்தைகளைப் பேசுதல் எற்றிற்கு, அறியாமை—அஞ்ஞா னமானது, அறிவான்மாயுமலான்—ஞானத்தால் அழியுமேயல்லது, மற்றொ ன்றான்—மற்றெவற்றாலும், மாயாது—கெடாது, இதுசரதம்—இது சத்தியம், வேளாண்மை—உபகாரமும், தவம் தானம்—தவமும் பூதானமுதலிய தானங் களும், கடவுடுதி—கடவுளைத்தோத்திரத்து வணங்கலும், ஞானிவியனடிகள்— ஞானியின்பெருமைபொருந்திய பாதங்களை வணங்குதலும் (பலன் கருதா துசெய்யின்), அகத்தூய்மை—மனதின்பரிசுத்த தன்மையை, விளைத்திடல்— உண்டாக்குதல், மெய்யுணரே—மெய்யென்றறிவாய். (எ-று) 7,

உண்மைதனைத் தெளிவதற்குக் குருமொழிநன் னூலு

ம்யர்சத்திய நடைவிராகை யொடுசாந்தியும் வேண்டும்

புண்ணியவா னுனுலு மிவைபழகா னுகின்

பூரணத்தின் வாழ்வருளச் சிவனுலு மாகா

தென்னமென்ன மற்றவரா லிதுவருமென் றிசைக்க
வெப்படியா மிவனிலையா தவரருளத் தெளிநீ
விண்ணுலகிற் கயிலையோவை குண்டமோசொல் வீடு
விட்டயலற் றிருந்தவிட மென்றனன்கா ணேடி.

(இ-ள்) உண்மைதனை-ஜகத்தோற்றக் காரணமாகிய நிஜத்தை, தெளிவதற்கு-உள்ளபடி யுணருவதற்கு, குருமொழி-ஆசிரியரனுபவ வசனமும், நன்னூலும்-பதார்த்த நிச்சயஞான ஏதுவாகிய நியாயாதி ஞான நூல்களும், உயர்சத்திய நடை-மேலான உண்மை நடத்தையும், நிராசையோடு-ஆசையற்றதன்மையோடு, சாந்தியும்வேண்டும்-பொறுமையாதி குணங்களும்வேண்டும், புண்ணியவானானாலும்-தானதருமாதிசெய்து புண்ணியம் பெற்றவனானாலும், இவைபழகானகில்-மேற்கூறிய குருமொழிமுதலியவற்றில் பழகானகில், பூரணத்தின்வாழ்வு அருளல்-நிறைமையான ஞானசுகத்தைப்பெறச்செய்யல், சிவனாலும்-சருவஞ்ஞனும்-சர்வஸக்தனுமாகிய நியாமகனாலும், ஆகாது--கொடுத்தற்கேலாது, என்னமென்ன-பலசிந்தை எற்றிற்கு,மற்றவரால்-மற்ற ஆசிரியரால், இதுவருமென்று - இம்முழுஞான சுகம்வருமென்று கொள்ளற்கு, எப்படியாம்--எப்படி முடியும், இவனிலையாது-இச்சீவனிட சொருபநிலையாது? ஞானமல்லவா?, அவரருள-அச்சிவனும் ஞானவடிவனாகையால் எப்படிபிரித்து ஞானத்தை அச்சீவனுக்குகொடுக்கமுடியும், நீதெளி-அப்படி கொடுக்கமுடியாதென்று நீதெளிவாயாக, வீடு - மோக்ஷமென்பது, விண்ணுலகில்-ஆகாய உலகத்திலுள்ள, கைலையோ -- கைலாசமெனுமொருதேசமா?, வைகுண்டமோ-வைகுண்டதேசமா? சொல்-நீயோசித்துச்சொல்லுக, விட்டு - எல்லா விகற்ப சங்கற்பங்களையும்விட்டு, அயலற்று-தன்னினும்வேறுபொருளற்று,இருந்தவிடம்-தானேதானாய் இருந்த இடமே, என்றனன்-மோக்ஷமென்று தெரிவித்தான், காணேடி - பாரடி தோழி. (எ-று) 8.

ஞானியெவ ரருட்குருவே குணங்குறிக ளறையி
னளினமணை யனமெனவே நான்சேர்குவ லென்றேன்
மாநிலத்தோர் பொன்செய்வோர் மகிமையுளோ ருலகின்
மானம்விட்டுத் தீசையுண்ணர் சருகுபலம் புசிப்போர்
வானிடையே பறப்பவர்கள் குளிகையினா னேய்கண்
மாய்ப்பவர்க ளுலகிலுடன் மறையவெளி திரிவோர்
சூனியமா கச்சபிப்போர் முக்காலமு முணர்வோர்
சுழலுறுகாற் றடக்குவர்க ளெனவுரைப்ப ரறியார்.

(இ-ள்) அருட்குருவே-கிருபையே வடிவான ஆசிரியரே? ஞானியெவர் - எவ்வகைப் பட்டவர்கள் ஞானிகள்?, குணங்குறிகள் --அவர்களது குணங்களும் அடையாளங்களும், அறையின் - சொல்லீராகில், நளினம் அணை-தாமரைப்பூவில் சேர்கின்ற, அனமெனவே-அன்

ணப்பட்சியைப்போல, நான்சேர்குவலென்றேன்—அவ்வாசிரியர் திருவடித் தாமரையில், நான்சேர்ந்து றைவேனென்றேன், பொன்செய்வோர்—செம்பு-வெள்ளி—முதலிய லோகங்களைமாற்றி பொன்னாகச்செய்வோரும், மகிமையுளோர்—பெருமையுள்ளவர்களும், உலகில் மானம்விட்டு—உலகில் மானத்தை விட்டுத்திரிபவரும், தசையுண்ணோர்—மாம்சாதிகளைத் தின்னாதவரும், சருகு பலம் புசிப்போர்—சாதம் தின்னாமல் வற்றல்களையும் பழங்களையுமாத்திரம் தின்பவரும், வானிலடையே பறப்பவர்கள்—ஆகாயத்தினிடையே பறப்பவர்களும், குளிகையினால்—மாத்திரைகளினால், நோய்கள் மாய்ப்பவர்கள்—வியாதிகளைத் தீர்ப்பவர்களும், உலகிலுடல்மறைய—உலகத்திலுள்ள ஜனங்களுக்குத்தேகந்தெரியாமல்மறைய, வெளிதிரிவோர்—வெளியேதிரிவோரும், சூனியமாகச் சபிப்போர்—ஒருபொருளை வெளிமயமாகும்படி சாபமிடுவோரும், முக்காலமுமுணர்வோர்—இறப்பு-எதிர்வு-நிகழ்வு எனும்மூன்று காலங்களில் நடக்கும் சங்கதிகளையறிந்து சொல்பவரும், சுழலுறுகாற் றடக்குவர்கள்—இரேசக-பூரகத்தின்வழி சுழலும் மூச்சைகும்பகத்தில் சுழலாமல் நிறுத்துவோரும், எனமானிலத்தோருரைப்பர் — புவியோர் இவ்வகையோர்களே ஞானிகளெனச் சொல்வார்கள், அறியார்—இப்படிக்கூறுவோர்ஞானிகளையறியாதவர்களே. (எ-று) 9.

அறியிவர்கள் ஞானியலர் மூலிகையான் மையா
லரிதாகுஞ் சாதனையா லருமருந்தாற் செய்வார்
குறியிவைகள் கலைஞான மெய்ஞ்ஞான மலகாண்
கூறிடின்மெய்ஞ் ஞானியிவை விடுவனறிந் தாலுங்
கிறியுரையா னருளைவிடா னெவருமவன் போலக்
கிடையாத பேரின்பச் சாகரத்தின் மூழ்கக்
குறியுரைப்பா னனுவளவு மோசவெண்ண மில்லான்
கூடும்வரை யுலகிலுப காரஞ்செய் வானே.

(இ-ள்) அறி—நான் கீழ்சொல்வதை உணரக்கடவாய், இவர்கள் ஞானியலர்—பொன்செய்பவராதியாச் சொல்லப்பட்ட இவர்கள் ஞானவான்களல்லர், மூலிகையால்—பச்சிலை மூலிகைகளினாலும், மையால்—மாடப்புறாபிச்சு, சுழல்வண்டு, தலைப்பிள்ளையோடு முதலியவைகளாற் செய்யும் மைகளாலும், அரிதாகும் சாதனையால்—அரிதாகச்செய்யும் அட-லய-மந்திரயோக சாதனைகளாலும், அருமருந்தால்—ரசகுளிகைமுதலிய அருமையான மருந்துகளாலும், செய்வார்—பலவிதசித்துகள் செய்வார்கள், இவைகள் — இவைகளை, கலைஞானம்- இகத்திற்கற்றுக்கொள்ளும் ஞானமாகுமென, குறி — நினை, மெய்ஞ்ஞானமலகாண்—தனதெதார்த்தசொருபஞான மல்லவென்றுதெளி, கூறிடின்—யோசித்துச் சொல்லுமிடத்து, மெய்ஞ்ஞானி—சொருபஞானியானவன், இவையறிந்தாலும்—இச்சித்து வித்தைகளைக் கற்றிருந்தாலும், விடு

வன் - சொருபசுகத்திற்குத் தடைகளை விட்டு விடுவன், கிரியுடையான், (அன்றியும்) பொய் சொல்லுன், அருளைவிடான்-கிருபையிலிருந்து நீங்கான், எவரும்-உலகிலுள்ள யாவரும், அவன்போல-தன்னைப்போல, கிடையாத-கிடைப்பதற் கருமையாகிய, பேரின்பசாகரத்தில் - பேரானந்தக்கடலில், மூழ்க-முழுகிஜனன மரணவெப்பம் தணிய, குறி உரைப்பான்-ஆத்மானுபவகோசர லக்ஷியத்தைச்சொல்லுவன், அணுவளவும்-சிறிதும், மோசவெண்ணம்-வஞ்சிக்கும் எண்ணம், இல்லான்-இல்லாதவன், உலகில்-உலகிலுள்ள ஜீவர்களுக்கு, கூடும்வரை-தன்னால் கூடியவரையில், உபகாரஞ் செய்வான்-உதவிசெய்வான். (ஏ-ஈற்றசை) (எ-று) 10.

உபகார மல்லாமற் புகழ்வேண்டான் மகிழா
 னொன்றறியா யென்றாலு முளமகிழ்ச் சிரிப்பா
னபகார மொருபொழுது மறந்தேனுஞ் செய்யா
 னந்த மெயுருவா யமர்ந்துறைவா னவன்மேல்
விபரீதம் விளைத்தாலுங் கலங்கலன்கா ணாரே
 விண்ணதனை யளைப்பவர்கள் சோதனைக்குந் துணியே
லபசார மவர்பொறுத்துஞ் சிவனுனைத்தண் டிப்பா
 னரிதவர்கள் சரணடையென் றறிவித்தா னேடி.

(இ-ள்) உபகாரமல்லாமல்-உதவி செய்வதேயல்லாமல், புகழ்வேண்டான்-கீர்த்தியை விரும்புமவனல்லன், மகிழான்-தான்செய்த உதவியால் பரலோகசம்பத்து தனக்குவருமென்று சந்தோஷிப்பவனு மல்லன், ஒன்றறியாய்-உனக்கு ஒன்றும் தெரியாது, என்றாலும்-என்று பிறர்பழித்தாலும், உளமகிழ்ச்சிரிப்பான்-மன மகிழ்ச்சியிக்கச்சிரிப்பான், ஒருபொழுதும் - ஒருகாலத்திலும், அபகாரம்-ஒருவர்க்கு கெடுதியான செய்கையை, மறந்தேனும் செய்யான்-மறந்தாலும் செய்யமாட்டான், ஆநந்தமேயுருவாய்-சந்தோஷமேவடிவாய், அமர்ந்துறைவான் - அமர்ந்து வசிப்பான், அவன்மேல் - அத்தஞானியின்மேல், விபரீதம் விளைத்தாலும் - வேறுபாடானதுர்க்ருத்தியங்களைச்செய்தாலும், கலங்கலன்காண்-கலக்கமடையமாட்டான், விண்ணதனை-ஆகாயத்தை, யாரே அளைப்பவர்கள்-ஆரே அளைக்கவல்லவர்கள் ஒருவருமில்லையன்றோ? சோதனைக்குத் துணியேல்-அவர்களைப் பரிக்ஷிக்கத்துணியாதே, அபசாரம்-அப்படி சோதிக்கச்செய்யுங்குற்றத்தை, அவர்பொறுத்தும்-அந்தஞானிகள்பொறுத்துக்கொண்டாலும்துன்பமுனக்குண்டாகாதிராது, உனைசிவன்-உன்னைசிவபெருமான், தண்டிப்பான்-சிட்சைசெய்வான், அவர்கள் அரிது-அப்படிப்பட்டவர்கள் உனக்குக்கிடைத்தலருமை, சரணடை-அவர்கள் பாலடைக்கலம்புகு. என்று-என்று, அறிவித்தானேடி-தெரிவித்தான் தோழி. (எ-று) 11.

வேறு.

ஞானந்தனை யலதுலகிலை முப்போதினு மென்றாய்
ஞாயந்திட பரிசோதனை தாநம்புவ லென்றேன்
வானொத்துறை பரிசங்கெட வெம்மை குளிர்மென்மை
வன்மைகன மின்மைவழு வழுப்பாதி குணஞ்சேர்
தானம்பல பொருளேயுள வாகாவொளி யிலதேற்
றங்காபல வண்ணங்களு முருவங்களு மிதமாங்
கானம்வசை சொற்பேதமு மோசையல திலபோற்
காணுவிரு கந்தஞ்சுவை யாறும்புவி புலனே.

(இ-ள்) முப்போதினும்-இறப்பு-எதிர்வு-நிகழ்வெனும் மூன்றுகாலங்களினும், ஞானந்தனை யலது-ஞானமாகிய தனையல்லாது, உலகிலையென்றாய்-வேறாக உலகம் இல்லையென்று சொன்னாய், ஞாயம் - அதற்குரிய ஞாயத்தையும், திடபரிசோதனைதா-உறுதியான ஆராய்ச்சியும் அனுபவமாக நிற்கச்செய்தால், நம்புவலென்றேன்-நம்புவேன் என்றுசொல்லினேன், (அதற்கு குருவானவர்), வானொத்துறை-ஆகாயமொத்து உடம்பினுட்புறமுறை, பரிசங்கெட-ஊறு என்னும் ஞானமின்றாகுமாகில், வெம்மைகுளிர்-சூடும்குளிர்ச்சியும், மென்மை வன்மை-மிருதுவும்-கடினமும், கனம்-இன்மை-குருத்வமும்-இலேசும், வழுவழுப்பாதி-வழவழப்புமுதலிய, குணம்சேர்தானம்-குணங்கள்சேர்ந்த இடமும், பலபொருளே-பலவஸ்துக்களும், உளவாகா-உள்ளன வாகாவாம், ஒளியிலதேல்-அதைப்போலவே உருவஞானமில்லாவிடில், பலவண்ணங்களும்-கறுப்பு-சிவப்பு-வெளுப்பு-பச்சை-மஞ்சள் முதலிய பலநிறங்களும், உருவங்களும்-பலவடிவங்களும், தங்கா-காணப்படாவாம், ஓசையலது-சப்தஞானமில்லாமல், இதமாங்கானம்-இன்பமாகிய இராகமும், வசை-நிந்தையுமென்கின்ற, சொற்பேதமும்-சொற்களின் வித்தியாசமும், இல்லை-இல்லையாம், போல-அவைகளைப்போன்றே, இருகந்தம்-நல்லவாசனை துர்வாசனை எனும்பேதம் கந்தஞான மில்லாவிடின் தெரியாது, சுவையாறும்-(காரம்-உப்பு-புளிப்பு-துவர்ப்பு-கசப்பு-தித்திப்புஆகிய ஆறுருசியும் இரசஞானமில்லாவிடில் தெரியாது-ஆகையால் ஐவகைஞான விஷயப்பொருள்களும்), புவி-அவற்றையுடைய பூமியும், புலனே-ஞானங்களேயாகும். (எ-று) 12.

புலனன்றியு டம்பும்பல பொருளுந்தெரி யாவாம்
புலனேபொறி யலதுண்டென லாகாவினி மனமே
யிலதேலிலை மனமேயுல கென்றானை வணங்கி
யெந்தாயிவை யுண்டாயினு மெதிர்காண்பொரு ளிலவோ

கலைதயுற வுரையீரென வநகா கனவினிலே
காணப்படு பொருளின்றியுங் காணப்படலென்னோ
வுலகானது முடலானது நனவென்றுரை ஞான
மொன்றின்றிய துயிலிற்சக மின்றாகலை யறியே.

(இ-ள்) புலனன்றி—ஐவகையா மிந்திரியங்களும் அவற்றிற்கிருப்பிடமாகிய பொறியாதிசேர்ந்த, உடம்பும்—தேகமும், பலபொருளும்—பலவஸ்துக்களும் அவ்வத்துக்களிருப்புத்தலங் களும், தெரியாவாம் — தோன்றாவாம், புலனேபொறி—ஐயறிவேமெய்-வாய்-கண்-மூக்கு-செவியெனும் ஐந்து இந்திரியங்களாம், அலதுண்டெனலாகா—அவற்றினும் வேறே உண்டெனல்பொருந்தாது, இவை—இவ்வைம் பொறிகளும், மனமே — மனமேயாகும், இலதேல் இல்லை — (ஆதலால்) அம்மனமில்லையாகில் புலன்களும் பொறிகளும் அவற்றின் விடயங்களும் இல்லையாகும், உலகுமனமே—உலகுமனவடிவமே; என்றுனைவணங்கி—என்றுதெரிவித்த ஆசிரியனைத்துதிசெய்து, எந்தாய் — எனது தாயனையகுருவே, இவையுண்டாயினும்—மேற்சொன்ன இவைகள் ஆதார ஆதேயஞாயப்படி உண்மையாயினும், எதிர்காண்பொருள்—நம்மெதிரில் தோற்றும் ஆதேயப்பொருள்கள், இலவோ—ஞானத்தைவிட்டு வேறாகஇல்லனவோ, கலைதயற—எனது சந்தேகம் தீரும்படி, உரையீரென—தயவுசெய்து சொல்வீராக வென்றுகேட்க, அநகா—பாவமற்ற சீடனே! ஆதேயப்பொருள்கள்வேறாக விருந்தே காணப்படவேண்டுமென்னை நியமமென்பையேல், கனவினிலே—சொற்பனத்திலே, காணப்படுபொருள்—பார்க்கப்படும் வஸ்துக்கள், இன்றியும்—கனவு காண்பானைவிட்டு வேறாக இல்லாதிருந்தும், காணப்படலென்னோ—உள்ளனவாகக் காணப்படுதற்கென்ன காரணம் இதையோசிப்பாயாக வென்றபடி, (இதனால்), உடலானதும்—மனமிந்திரியாதிதேக வடிவமானதும், உலகானதும் — உலகவடிவமானதும், நனவென்றுரை—சாக்கிரமென் றுரைக்கும் சமஷ்டிவடிவ ஈசுரமனஞானமாம், ஞானம்—அவ்வீசுரஞானமனம், ஒன்றின்றிய—ஒன்று இல்லாத, துயிலில் — காடநித்திரையில், சகம்—(உலகமும்-உலகப்பொருள்களாகிய இந்திரியங்கள்-ஐம்புலன்கள்-ஜீவன்-மனம்-விவிட்ட உடல்களாகிய பொருள்களும்), இன்றாகலை—இல்லாதொழிதலை, அறியே—தெரிந்துகொள்வாய். (எ-று) 13.

அறிவன்றியி லறியாமையு மதுவின்றெனி னனை
மதுவின்றியே பொறியாதியு மவைதந்திடு பொருளுந்
தறிதந்திடு பூமாணிக ராமென்பது திண்ணஞ்
சங்கற்ப விகற்பாதிக டங்கற்கிட மெதுகாண்
குறியாதவி டத்திற்பல கலையும்பல குணமுங்
குவிதற்கிட மெதுவோவுட லுலகுக்கிட மதுவே

நெறியோமய லுளதோவறி விலேயெலிவை வருமோ
நீயேயுரை யென்றான்சொல வாயற்றன னேடி.

(இ-ள்) அறிவன்றி-சொரூப ஞானத்தைத்தவிர, அறியாமையும்-பாரமார்த்திகசதமெனும் சுழுத்தியும், இல்-இல்லையாம், அதுவின்றெனில்-அவ்வறிவு இல்லையாகில், நனவும்-சமட்டி-ஈஸ்வரஞான மாயாவிவிஷ்ட்டமனமும், அதுவின்றியே-அச்சமட்டி மனமின்றியே, பொறியாதியும் - மெய்-வாய்-கண்-மூக்கு-செவியாதிய ஐந்து இந்திரியங்களும், அவை தந்திடுபொருளும்-அவ்விந்திரியங்களால் தரும் வஸ்துக்களும், தரிதந்திடு - கட்டையினிடத்துத்தோற்றும், பூமாணிகாமென்பது-மனிதனுக்குச் சமானமாகுமென்று ஞானநூற்கள் சொல்வது, திண்ணம்-நிஜமாகும் (ஆன்றியும்), சங்கற்பம்-இனிப்பெறு பொருளின்சிந்தனையும், விகற்பமாதிகள் - நால்வகையோனி-எழுவகைத்தோற்ற இந்திரிய மனதீவேசுரபேத இசபராதி, தங்கற்கிடமெதுகாண்-தங்கி நிற்பதற்குஸ்தானம் எதுவாகும், குறியாத விடத்தில்-மன-வாக்கு-காயமெனுந் திரிகரணங்களும் தொழிற்படாதகாலத்தில், பலகலையும்-அனேக சாஸ்திரங்களும், பலகுணமும்-அநேக குணங்களும், குவிதற்கிடம் எதுவோ-குவிந்து நிற்பதற்குஸ்தானம் எதுவோ? அதுவே-அவ்வறிவாகிய இடமே உடலுலகுக்கிடம்-உடலாதி மூவுலகந் தோற்றுவதற்கு மிடமாகும், நெறியோ மயலுளதோ-என்பது நியாயந்தானோ எதாவது மயக்கமுளதோ?, அறிவிலையேல்-ஞானமில்லாவிடில், இவைவருமோ-தேகாதி பிரபஞ்சம் தோற்றுமோ. உணரப்படுமோ, கெடலீனப்படமோ? நீயேயுரையென்றான்-சீடனே நீயேசொல்வாயாக வெனக்கேட்க, சொலவாயற்றேனேடி-ஒன்றுஞ்சொல்ல வாயெழாமலிருந்தேனேதோழி. (எ-று)

இடைபிங்கலே யிருநாடியி யங்கும்வளி யதனை
யிடைநாடியி லேற்றிச்சியி லேறும்படி செய்தே
மடைபோல்வரு மமுதுண்டினி வருவேன்படி லாதி
மாறுதுடல் வைப்பார்பெரி யோரென்றுரை பகர்வார்
கடையேனிது தெளியத்திரு வருளேசெயு மெனவின்
கருமஞ்செய வேண்டேனுரு காக்கிற்றயர் வினைவே
மடமைநிறை மதியாரை மறந்தற்கிவை போல்வ
வைத்தாரறி வாளர்சொல வித்தாரயி தாமே.

(இ-ள்) இடைபிங்கலே-இடதுமூக்குத்துளையும் வலதுமூக்குத் துளையும், இருநாடி-ஆகிய இரண்டுநாடிகளில், இயங்கும் வளியதனை - அசைந்தோடுகின்றகாற்றை, இடைநாடியிலேற்று-மத்திய நாடியாகிய சுழிமுனைநாடியிற்சேர்த்து, உச்சியிலேறும்படிசெய்தே-தலையின் உச்சியாகிய பிரமரந்தனத்தில் ஏறும்படிசெய்து, மடைபோல்வரு-ஜலதாரைவாய்க்கால்போல்

ஒழுகிவரும், அமுதுண்டு—அமிர்தத்தைப்போசித்து, உணவது—அன்னபானாதிகளை, வேண்டிலராகி—விரும்பாதவராகி, உடல்மாறாது — தேகம் என்றும் நசியாதிருக்கும்படி, வைப்பார்—செய்வார்கள், பெரியோரென்று—பெரியவர்களென்று, உரைபகர்வார்—சித்தாந்திகளிற் சொல்லியிருக்கிறார்களென்று சொல்லுகிறார்கள், சடையெனிதுமொழிய—ஆசிரியரே யடியேனிச்சந்தேகத்திலிருந்து நீங்கித் தெளிவடைய, திருவருள்செய்யுமென — கிருபைசெய்து தெரிவிக்கவேண்டுமென்று கேட்க, விருதாம்—விருதாவாகும் கிரியைகளை, செயவேண்டேல்—செய்யவிரும்பாதே, உருகாக்கல்—தேகாதிவடிவங்களைக் காப்பதால், துயர்விளைவே—துக்கசம்பவமேயொழிய வேறு இல்லை, அறிவாளர்—அறிவுடைய பெரியவாள், மடமை நிறையுநியாரை—அஞ்ஞானம் நிறைந்த புத்தியினர்களை, மறுத்தற்கு — தடுத்து ஆட்கொள்வதற்காக, இவைபோல்வ — மூச்சடக்கல்முதலிய இச்சாதனைகளைப் போல, வைத்தார்—ஏற்பாடுசெய்து வைத்தார்கள், இதுசொல—இதை விவரித்துச்சொல்லவேண்டில், வித்தாரமாம்—விரிவாகமுடியுமென அபிப்பிராயம்.

(எ—சீற்றசை) (ர-ஆ) 15.

ஆகுந்தனை யறியாதுட லாவானை விலக்கற்
கடயோகம் லயமந்திர மாதித்தொழி லதனாற்
போகும்வளி போகாம னிறுத்தக்கெடு மனமே
புரணச்சுகம் வருமாலுடல் போகாதிதி னின்றோர்
தேகந்தனை மடவார்கன லுறைக்குழி சேரார்
தேராதுட னிருங்கிடும் வாராதரு ளென்றார்
மோகந்தரு மடவார்சுக மொழியாவகை யறியீர்
மூந்தாதொரு பொழுதேயுண வுந்தாமரு ளினரே.

(இ-ள்) ஆகுந்தனை—எல்லாவசரத் தோற்றமும் தானாகவே விளங்கும் நித்தியனாகியதன்னை, அறியாது—தெரிந்துகொள்ளாமல், உடலாவானை — தன்னை தேகவடிவமாகவே நினைத்திருப்பவனை, விலக்கற்கு—தடுத்து ஆட்கொள்வதற்கு, அடயோகம்-ஒற்றைக்காலால் நிற்றல், பத்மாசன முற்றிருத்தல் முதலிய அடயோகத்தாலும், லயமந்திரமாதி—மூச்சை பிரமரந்தரத்தில் லயப்படுத்தல் பிரணவமந்திரம் ஜபித்தலாதி, தொழிலதனால்—கருமங்களினால், போகும்வளி—இரேசக பூரகமார்க்கமாகத்திரியும் காற்றை, போகாமல் நிறுத்த—அப்படிச் செல்லவிடாமல் கும்பகத்திற்சேர்த்து பிரமரந்திரத்தில் லயிக்கச்செய்ய, மனம்கெடும்—மனது நாசமாகும், புரணச்சுகம் — அப்போது குறைவிலாத ஆநந்தம், வரும்—உண்டாகும், உடல்போகாது — சரீரமும் அழியாமல் நிற்கும், இதில் நின்றோர்—இவ்வித யோகத்தில்நின்றவர்கள், தேகந்தனை—தங்கள் உடலை, மடவார்கனல் உற—பெண்களின் தேகோஷ்ணம்படிய, குழிசேரார்—அவர்கள் அல்குலாகிய குழியில் சேர்க்கார்கள், உடல்தேராது—அக்குழியில் சேர்த்தவர்கள் தேகம் சுகமடைந்து நிலை

காது, நீறாகிவிடும்-சாம்பலாகிவிடும்; அருள்வாரா து-அன்றித் திருவருளும் கிடைக்காது, என்றார்-என்று தேகாபிமானம்விட தந்திரஞ் செய்தார்கள் மோகந்தருமடவார்-ஆசையூட்டும் பெண்களது, சுகம் ஒழியாவகை – போ கேச்சையானது விடமுடியாத சபலத்தை, அறிந்தா-அறிந்துகொண்டவராகி, முந்தாது-பலதரம் புசிக்கமுன்னிடாமல், ஒருபொழுதே – தினம் ஒருவேளையே, உணவும் – அன்னபானாதிகளைப் புசிக்கவும், தாமருளினர் – பெரியோர்கிருபை செய்தார்கள். (ஏ-ஆல்-அசைகள்) (எ-று) 16.

உணவோர்பொழு தேனும்பல வுரிசைவிடு புளியா
 லூனேருநரை திரையெய்திடு முப்பாற்றளர் வெய்து
நிணமாதிகள் வேண்டேலென வுணவாதி சுகத்தை
 நீத்தாரிவை நீத்தாருட னீத்தற்கறு பிரிவாய்க்
கணநாதன யன்மாலுருத் திரனாதிய தேவர்
 காப்பென்றறு நிலையுந்தரு கலையுந்திக ழுருவுங்
குணமுந்தொழி லாதித்தெளி மனதிற்பட நாட்டிக்
 கூட்டைக்கழி புட்போலுயிர் கூட்டைக்கழி வித்தார்.

(இ-ள்) உணவு ஓர் பொழுதேனும்-சீடனே அன்னபானாதிகள் ஒருபொழுது உண்டாலும், பலவுரிசைவிடு-பலவிதமான வுரிசையை விரும்பாமல் விட்டுவிடு என்றும், புளியால் – புளியைச்சேர்த்துக் கொண்டாயானால், ஊனேருநரை-உடலோதன் மீதுற்றமயிர்வெளுத்தலையும், திரையெய்திடும்-தோல்மடித்தலையும் அடையும், உப்பாற்ற ளர்வெய்தும் – உப்பு தின் பதினால் தேகம் தளர்ச்சியடையும் அன்றி, நிணமாதிகள் – மாமிசாதிகள், வேண்டேலென-தின்ன விரும்பாதே யென்று, உணவாதிசுகத்தை-ஆகாராதிபதார்த்த விச்சாவின்பத்தை, நீத்தார்-நீக்கிவைத்தார்கள், இவைநீத்தார்-இவ்வாகாராதிகளை நீக்கிவைத்தவர்களுடைய, உடல் நீத்தற்கு-தேகாபிமானத்தை விடச்செய்வதற்கு, அறுபிரிவாய்-கீழ்மூலம் மூலாதாரம்-பிரஜாபதி சுவாதிஷ்டான மென்றும் – உந்திமணி பூரகமென்றும்-மார்பிலநாகத மென்றும்-கண்டஸ்தானம் விசுத்தியென்றும்-புருவமத்தி ஆக்கினை யென்றும்-தேகத்தை ஆறுபங்குசெய்து, கணநாதன் – விநாயகனும், அயன், மால்-பிர்மாவும், விஷ்ணுவும், உருத்திரனாதியதேவர் – உருத்திரனும்-மகேஸ்வரனும்-சதாசிவனும் முதலிய தெய்வங்கள், காப்பென்று-முறையே மூலாதாரமுதலிய ஆறு இடங்களைக் காத்துக்கொண்டு இருக்கின்றார்களென்றும், அறுநிலை-மூலாதாரமுதலிய ஆறுநிலைகளும், தருகலையும்-அந்தஸ்தானங்களால் கிடைக்கும் சாஸ்திரோக்தமான எழுத்துகளும், திகழுருவும்-அவ்விடங்களில் தோற்றும் வடிவங்களும், குணமும்-அவ்விடங்களினதிஷ்டான தேவதைகளின் குணங்களும், தொழிலாதி-அத்தேவதைகளின், தொழில்களாதி, தெளிமனதிற்பட-தெளிந்த மனதிலமைய,

நாட்டி--நிலைக்கச்செய்து, கூட்டைக்கழி-முட்டையாகிய கூண்டிலிருந்து வெளிப்படுத்துகிறபுள்போல்-பட்சிகளைப்போல, உயிர்பூட்டை-தேகத்திற் சீவன்பந்தப்பட்டிருப்பதை, கழிவித்தார்-நீக்கிவைத்தார். (எ-று) 17.

கழியுஞ்சட வுடனீயலை யுணவாம்பொரு டிரிபே
காற்றேவலை யுலகின்னிறை காற்றுமன மெனிலோ
ஒழியுந்துயி லினினீயிதை யுணர்வாய்மன முதலா
மொன்றாயினு மலைநீயுனை யன்றியிவை யிலையால்
விழியாவரு மொழியக்கெடு மழிவில்லறி வாகி
யென்றுந்திரி யாதிங்குறு மெவையுந்தெரி வானீ
பழியாம்பிற விபைநீங்கென வருள்வாரிவை யோரார்
பகருங்கரை பற்றார்க்குறுஞ் சுகமென்றன னேடி..

(இ-ள்) கழியுஞ்சடவுடல்-சீடனே வியர்வைமல மூத்திராதிகளாய்க் கழிகின்ற கட்டையைப்போலொத்த சரீரம், நீயலை-நீயல்ல, உணவாம் பொருள் – அன்னபானாதிய ஆகாரவஸ்துக்களின், திரிபாம் – மாறுதலே உடலாகும், காற்றேவலை-உடலெங்கும் வியாபித்திருக்கும் மூச்செனுங் காற்றே நீ அல்ல, உலகில்நிறை-பூமியில் நிறைந்திருக்கிற, காற்றும்--வாயுவே உடலிலுள்ள மூச்சாகும், மனமெனிலோ-நீமனவடிவமோ என்றாலோ, ஒழியும் துயிலினில்--அம்மனம் நித்திரையில் தோன்றாமற்கெடும், நீஇதை-- நீ அம்மனமல்லவெனும் இவ்வுண்மையை, உணர்வாய்-அறிவாய், மனமுதலாம்-மனோமயம்-விஞ்ஞானமயம்-ஆநந்தமயம்-முதலாகிய பஞ்சகோசங்களும், அந்தக்கரண ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், ஒன்றாயினும் நீயலை – மேற்சொன்ன தேகமுதலாகிய வைகளில் ஒன்றாயினும் நீயல்ல, உனையன்றி-அறிவுருவாகிய உன்னைத்தவிர, இவையிலையால்-இத்தேகமுதலிய இந்திரிய அந்தக்கரண பிராணாதி வாயுக்களும் இல்லையாகையால் நீ விழியாவரும்-நீ நினைத்த மாத்திரத்தில் உன் நினைப்பின் வடிவே தேகாதி பிரபஞ்சமாகத்தோன்றும், ஒழியக்கெடும்-உன் நித்திராவஸ்தையில் மனம்கெட தேகாதிபிரபஞ்ச தோற்றமும் நாசமாகும், அழிவில்லறிவாகி – நிர்நாசமாகாத ஞானவடிவமாகி, என்றும் திரியாது-எக்காலத்தும் மாறாதவனாயும், இங்குறும்-இவ்வுலகத்தில் சராசரவடிவாய்த் தோன்றிய, எவையுந் தெரிவாய்-எல்லாவற்றையும் அறிந்திருப்பாய், பழியாம் பிறவியை-நிந்தையாகிய ஜனனத்தைவிட்டு, நீங்கென-நீங்குவாயென்று, அருள்வார் – கிருபையோடு உபதேசிப்பார், இவையோரார்-இவற்றை யுணராதார், பகருங் கரை-பெரியோரால் கூறும் மோக்ஷகரையை, பற்றார்-அடையார்கள், சுகம்உறும் – இப்படிப்பட்டவர்க்கும் மோக்ஷசுகம் உண்டாகுமா? என்றனனேடி என்று எனதாசிரியர் கூறினார் அடீதோழி, (எ-று) 18,

ஆக செய்யுட்கள் 196,

## நின்றநிலைகூறல்.

உடல்பொருளா விகளளிக்க வுபதேசஞ் செய்துவந்தா
ருயர்ந்தோ ருன்ற
னுடல்பொருளை யன்றென்ற னுடல்பொருளா வியுமுலகு
முனதாக் கொண்டு
கடல்புடைசூ ழவனிமுதற் காண்பனவெல் லாநினைவாய்க்
கவலை யற்று
விடல்கொளலாம் பொருளின்றிப் புரணசுகி யாகென்றான்
விளங்கி னேனே.

(இ-ள்)உயர்ந்தோர்—அறிவிற்சிறந்தபெரியோர்கள்,உடல்பொருள்—சீடனது தேகத்தையும்-வஸ்துக்களையும். ஆவிகள் அளிக்க—உயிரையுந் தனக்குத் தத்தஞ்செய்ய ஏற்று,உபதேசஞ்செய்துவந்தார்—பிரணவமுதலிய மறைவாக்கிய மந்திர உபதேசங்களைச்செய்து வந்தார்கள், உந்தன் உடல்பொருளை யன்று—சீடனே உன்னிடதேகம் வஸ்துக்கள் மாத்திரமேயல்லாமல், என்றன்—ஆசிரியனாகிய என்னுடைய, உடல்பொருள் ஆவியும்—தேகத்தையும்.-வஸ்துக்களுயிரையும், உலகும்—பராசரத்தோற்றப் பிரபஞ்சத்தையும், உனதாக்கொண்டு — உன்னுடைய தாகவே ஏற்றுக்கொண்டு, கடல்புடைசூழ்—சமுத்திரஜலத்தால் சூழப்பெற்ற, அவனிமுதல்—பூமிமுதலாக, காண்பனவெல்லாம்—தோற்றுப் பொருள்களெல்லாம், நனவாய் — ஜாக்கிராவஸ்தையின் காரியமாக விருப்பதையறிந்து, கவலையற்று—மனவலைச்சல் நீங்கி, விடல்கொளலாம்—நனவின்றி விடுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் வேறாகிய, பொருளின்றி—வஸ்துவில்லாமையையோர்ந்து, புரணசுகியாகு—பூரணானந்த சொருபனாகி இரு, என்றான்—உண்மையில் நில்லென்றான், விளங்கினேன்—நான் அவ்வாறே பிரகாசிக்கின்றேன். (ஏ—ஈற்றசை) (எ-று) 1.

ஆண்டுபனி ரண்டுனையாஞ் சோதித்துப் பொருளருள
மருள்வை மென்பார்க்
காண்டவன்செய் யேவலுள ரல்லாமற் சுகமருளா
ரல்லே னெல்லாங்
காண்டகைய வறிவேநீ கணமுமிலை தெரிவித்தோங்
காண்ப வற்றைக்
காண்டலைத்த் துலாங்கவுனை யலதுளதோ வயலெனயான்
கண்கி லேனே.

(இ-ள்) பனிரண்டாண்டு—பனிரண்டுவருஷ பரியந்திரம், உனையாம்—சீடனாகிய உன்னையாங்கள், சோதித்து—நிலைத்த புத்தியுடையவனாவென்று பரீட்சித்து, பொருள் அருளும்—இப்பூலோக வாழ்விற்குரிய மணிமந்திர

ஜொஷ்த சித்தியும் முத்தியும், அருள்வேம்-கொடுப்போம், என்பார்க்கு ஈன்று சொல்லும் ஆசிரியருக்கு, ஆண்டு-அவ்விடத்தில், அவன் செய் வவர்-அச்சீடன் செய்கின்ற பணிவிடையாகிய, அஞரல்லாமல் - கஷ்டத் தைக் கொடுப்பார்களே யல்லாமல், சுகமருளார் - பொருளருளினும் சந் தோஷத்தைக் கொடுப்பவராகார்கள், அல்லேன் - அவ்வித வாசிரியரைத் போன்றவன் நான் அல்லேன் (என்றும்), எல்லாம் காண்டகைய-எல்லாப் தோற்றத்தையுஞ் சாட்சியாய் நின்று உணரவல்ல, அறிவேநீ-ஞானமேநீயா கும் (என்றும்), கணமுமிலை-க்ஷணகோமானாலும் வீணாகநாம்கழிக்கவில்லை, தெரிவித்தோம்-உண்மையைச் சொல்லிவிட்டோம், காண்பவற்றை-காண ப்படுகின்ற பொருளை உணரும் இந்திரிய மனமாதிகளை, காண்டுலக்க - விளக்கிவைக்கவும், துளங்க-அவ்வந்தக்கரணதிபொருள்வடிவாகிவிளங்கவும், உனையலதுளதோ-ஞானவடிவாகிய உன்னைத்தவிர வேறு இருக்கிறதோ வென்றுகேட்க, அயலெண-என்னைத்தவிர அணுமாத்திரம் வேறுபொருள் இருக்க, யான்காண்கிலேன்-யான் பார்த்திலேன். (எ-று) 2.

கண்ணாடி முன்னரொரு கண்ணாடிவைக்கவிரு
கண்ணா டிக்குட்
கண்ணாடி யலதுபிற களங்கவற்றில் வாராபோற்
காண்ப வற்றைக்
கண்ணாடிக் களங்களியா வகமுகமாய் மனவாடிக்
கண்ணே தோன்றும்
கண்ணாடி யேயிருக்கக் கண்ணாவா யெனப்பிறநான்
காண்கி லேனே.

(இ-ள்) கண்ணாடிமுன்னர்-ஒரே அளவாயுள்ளவொரு கண்ணாடியின் முன்னே, ஒருகண்ணாடிவைக்க-ஒரேயளவாயுள்ள மற்றொரு கண்ணாடியை எதிரில்வைக்க, இருகண்ணாடிக்குள் - இரண்டு கண்ணாடிகளுக்குள்ளும், கண்ணாடியலது-களங்கமற்ற பிரகாசந்தெரியுமேயல்லாது, பிறகளங்கு-வே றனமலினம், அவற்றில் வாராபோல் - அவ்விரு கண்ணாடிகளிலும் வாராத துபோல, அகமுகமாய்-பகிர்முகலோக பாவனையான மனது, உள்முகமாய் ஞானபாவனையுற்று, மனவாடிக்கண்ணே - ஞானமயமாகிய அந்தக்கரண பிரதேசத்தில், தோன்றும் - சராசரப் பொருள்களெல்லாம் பிரதிபிம்பிக் கும், காண்பவற்றை - தோற்றும் சராசரப்பொருள்களை (வேறாக), கண் ணாடி-உன்மனமானது கண்களின் வழியாகப்பார்த்து உலகம்வேறெனும், களங்களியா-அஞ்ஞானபாவத்தைப் பொருந்தாது, கண்ணாடியே இருக்க - ஞானவடிவனாகிய உனைநீ பார்த்திருக்க, கண்ணாவாயென-நீ ஞானமயனே யாவாயென என்தாசிரியர் தெரிவிக்க, பிறநான்-எனையன்றிவேறு பொரு ள்தோற்ற நான் காண்கிலேனே-பார்க்கவில்லையே. (எ-று) 3.

எப்பொருளை யெப்பொருளெவ் விடத்தெவ்வா றுணர்வதனு
　　　　லெய்தும் பந்த
மெப்பொருளைப் பொருளையெவ்வா றுணர்வதனல் வீடெய்து
　　　　மென்றான் காணு
மெப்பொருளுந் தானகு மறிவுண்மை தன்னனவென்
　　　　றெண்ணல் பந்த
மெப்பொருளுந் தனையன்றி யிலையெனல்வீ டெனக்கண்டே
　　　　னிடரற் றேனே.

(இ-ள்) எப்பொருளை—எந்தவஸ்துவை, எப்பொருள்—எந்த வஸ்துவானது, எவ்விடத்து—எந்தஸ்தானத்தில், எவ்வாறு—எந்தவிதமாக, உணர்வதனல்—அறிவதனல், பந்தம் எய்தும்—பந்தத்தை யடைகின்றது, எப்பொருள்—எந்தவஸ்துவானது. எப்பொருளை—எந்தவஸ்துவை (எவ்விடத்தில், எவ்வாறு—எந்தவிதமாக, உணர்வதனல்—அறிவதனல், வீடு எய்தும் என்றான்—மோக்ஷமடையும்என்று எனதாசிரியன் கேட்டான், காணும் எப்பொருளும்—தோற்றப்படுகின்ற சராசரமாகிய எந்தவஸ்துக்களும், தானகும் அறிவு—தானக வேவிளங்கும் ஞானமானது, தன்னனவு—தனது நனவிற்குதோற்றும்தேகாதிபதார்த்தங்களை, உண்மைஎன்று — தனிலும் வேருக நிஜமாயுளதென்று எண்ணல்பந்தம்—தனது நனவுகனவுகளில் நினைத்தல் பந்தமாகும் எனவும், எப்பொருளும்—எந்தசராசரத் தோற்றப்பொருளும், தனையன்றி—துரியவறிவாகிய தன்னையல்லாமல், இலையெனல்—வேறே இல்லையென்றுதெளிதலே, வீடு என—மோக்ஷமென்றும், கண்டேன்—அறிந்தேன். இடரற்றேன்—பிறப்பெனும் துன்பத்திலிருந்து நீங்கினேன், (ஏ-ஈற்றசை) (எ-று) 4.

இல்லவற்றை யுள்ளவெனக் கொண்டுகுணங் குறிப்பத
　　　　மிசைத்தார் யாரு
மில்லவற்றை யுள்ளவெனக் கொண்டாயா திருத்தலினு
　　　　லிசைப்பா னென்பின்
னில்லவற்றை மாயைதந்த தாய்மாயை யில்லையெனி
　　　　லிசைப்ப தென்யா
னில்லதுள்ள தாய்விளங்க லறிவோன்றே யென்றான்மெய்
　　　　யிதுகண் டேனே.

(இ-ள்) யாரும்—உலகிலுள்ள எவர்களும், இல்லவற்றை—இல்லாத தேகாதி பிரபஞ்சத்தை, உள்ளவெனக்கொண்டு—உள்ளனவென திடமாகநினைத்துகொண்டு, ஆயா திருத்தலினல்—விசாரியா திருத்தலினல், இல்லவற்றை—உண்மையாக வில்லாத தேகாதிபிரபஞ்சத்தை, உள்ளவெனக்கொண்டு—

இருக்கிறதுபோ லொப்புக்கொண்டு, குணம்-சத்துவராஜஸ-தமஸ முதலிய குணங்களின் தன்மையும், குறி-அவற்றாலுண்டாகும் பொருள்களின் தோற்றத்தையும், பேதம்-பலவித பொருட்களின் பேதங்களையும், இசைத்தார்-அவ்வுலகப் பொருள்களுக்கு உளதுபோல் பெரியோர் கூறினார்கள், பின்-ஞானத்தைப்போல் என்றும் உலகம் உள்ளதானால் பிறகு அப்பெரியோர்களே, இல்லவற்றை-இல்லாத தேகாதி பிரபஞ்சத்தை, மாயைதந்ததாய்-மாயையினால் கொடுக்கப்பட்டதாய், இசைப்பான் ஏன்-ஏன் சொல்லவேண்டும், மாயை-இல்லாதவற்றை உள்ளது போலக்காட்டும் மாயைக்கருத்தம், இல்லையெனில்-இல்லையென்று சொல்வார்களானால், யான் இசைப்பதென்-நான்சொல்வது என்ன விருக்கிறது, இல்லதுள்ளதாய் - இல்லாததாயும் உள்ளனவாயும் சிற்சத்தியால் விளக்கி, விளங்கல்-விளங்குவது, அறிவொன்றே-ஞானமொன்றே என்றான்-என்று தெரிவித்தான், இதுமெய்-இப்படிதெரிவித்தது நிஜமென்று, கண்டேன்-எல்லாமெனது ஞானவடிவாகவே யிருக்கப்பார்த்தேன். (ஏ-ஈற்றசை). (எ-று). 5

உள்ளதனை யுள்ளபடி யுணருதலே மெய்ஞ்ஞான
முளதிருக்க
வுள்ளனவா யிலாதவற்றை மேற்கொடுபின் னொழித்திடலே
னொழி யஞ்ஞான
முள்ளதெனிற் போகாது பிரமையும்வஸ் துவேயயலிங்
கொன்றின் றென்று
முள்ளதெனி லுணர்வன்றிக் காட்டென்றா னென்றாகி
யுரையற் றேனே.

(இ-ள்) உள்ளதனை - என்றும் உள்ளதாகிய பொருளை, உள்ளபடி - அதுவியற்கையாக இருக்கிறபடியே, உணருதலே - அறிதலே, மெய்ஞ்ஞானம்-உண்மைஞானமாகும், உளதிருக்க-சத்தாகிய ஞானமென்றுமிருக்க, இலாதவற்றை-இல்லாதமாயாப் பிரபஞ்சத்தை, உள்ளனவாய் - இருக்கிறவைகளாக, மேற்கொடு-ஒப்புக்கொண்டு, பின்னொழித்திடலேன் - பிறகு ஒவ்வொன்றாய் அசத்தென்றுவிடுவதற்கு காரணமென்ன?, ஒழி - மாயாத்தோற்றவுலகாதியந்தமும் இல்லையென்றே நீக்கிவிடு, அஞ்ஞானம் - அஞ்ஞானமென்பது, உள்ளதெனில்-ஞானத்தைப்போல் என்றும் உள்ளதாயிருந்தால், போகாது-ஓர் போது மறைந்துதோன்றாது, பிரமையும் வஸ்துவே-அஞ்ஞானமும் ஞானப்பொருளே, இங்கென்றும்-இவ்விடத்து எக்காலத்திலும், அயல் ஒன்று இன்று-ஞானமன்றி வேறுபொருள் ஒன்றும் இல்லையாகும், உள்ளதெனில்-சிடனே வேறுபொருள் சத்தாயுள்ளதாகில், உணர்வன்றி-ஞானத்தைவிட்டு, காட்டென்றான்-வேறாக இருக்கக்காட்டென்று

சொன்ஞன் அதனல், ஒன்றுகி—எல்லாதோற்றமும், ஒரே ஞானவடிவமே ன்று உணர்ந்தவனுகி, உரையற்றேன்—ஆசிரியனை வேறொன்றும் கேட்க மன மெழாதவனய் நின்றேன், (ஏ-ஈற்றசை) (எ-று) 6.

சித்தாகு முன்னினைவா லன்றியுட லுலகாதி
திகழ்வ தெங்ஙன்
சத்தாக வல்லதசத் தாகவிவ கரித்திடுமா
தருக்க மெங்ஙன்
சுத்தாசுத் தம்பத்தி சுகாசுகமாய்ப் பரிணமிக்குந்
தொழில்க ளெங்ஙன்
பித்தாகி யலைவதென்னீ யுரையென்ரு னெனையன்றிப்
பிறகா ணேனே.

(இ-ள்) உடலுலகாதி—தேகப்பிரபஞ்சங்களாதி தோற்றங்கள், சித்தாகும்—ஞானவடிவாகிய, உன்னினைவாலன்றி — உன்சங்கற்பத்தா லல்லாமல், எங்ஙன் திகழ்வது—பிரகாசிப்பது எங்ஙனம்கூடும், சத்தாக—காணப்படும் தேசகாலாதி வஸ்துக்கள் என்று முள்ளபொருள்களே யெனவும், அல்லது அசத்தாக—அல்லது அழிபொருள்களெ யெனவும், விவகரித்திடு — நியாய வேதாந்தாதி நூல்களாக விவரித்துப்பேசும், மாதருக்கம்—பெரியவாதங்கள், எங்ஙன்—நிகழ்வது எங்ஙனம்கூடும், சுத்தாசுத்தம்—இது நிர்மலமானது களங்கமுள்ளது, பத்தி—இதீஸ்வரபத்தியுண்டாக்குவது, சுகாசுகமாம்—இது இன்பமானது துன்பமானது என்றும், பரிணமிக்கும்—விகற்பவடிவாக மாறுதலடையும், தொழில்களெங்ஙன்—சங்கற்ப விகற்பாதி கருமங்களெவ்விடத்து நிகழும், நீபித்தாகி—நீபேதபயித்தியம் பிடித்தவனுகி, அலைவதென்—வருந்துவது என்னகாரணம்?, உரை என்ருன் — சொல்லென்ருன் (அதனலே), எனையன்றி—ஞானரூபியாகிய என்னைத்தவிர, பிறகாணேன் — வேறுபொருள்களிருக்க நான் கண்டிலன், (ஏ-ஈற்றசை) (எ-று) 7.

முச்சுடர்மூ வுலகுமூ லத்தைமுத்தே கம்விளக்கு
முதலே தொன்று
மச்சொருபா நந்தசர்வ சாட்சியறி வன்றேநீ
யதனுற் காணு
மிச்சொருபங் களிலொன்றுந் தேகநா னென்றுபிறந்
திறந்தே னென்கை
பிச்சலவோ வெனவச்ச மற்றுயர்ந்து பிறப்பிறப்பைப்
பிழைத்திட் டேனே.

(இ-ள்) முச்சுடர்—சூரியன்-சந்திரன்-அக்கினி எனும் மூன்றுபிரகாசங்களையும், மூவுலகு—சொர்க்க-மத்திய-பாதாளங்களாகிய மூன்று உலகம்

கலையும், மூவவத்தை-சாக்கிர-சொப்பன-சுழுத்தியெனும் மூன்றவத்தை கலையும், மூத்தேகம்--தூல-சூட்சும-காரணமெனும் மூன்று தேகங்கலையும், விளக்கும் முதலேது-விளக்கிக்காட்டுகிற முதற்பொருளேது?, அச்சொரூபாநந்த-அவ்வாநந்த வடிவனாகிய, சர்வசாக்ஷி-எல்லாத்தோற்றப் பொருள்களுக்கும் காரணபூதனும் விளங்குகிற, ஒன்றும்-அத்வீதமாகிய, அறிவன்றோநீ-ஞானமல்லவாநீ?, அதனாற் காணும்-அந்தஞானவடிவினாற் றோற்றுகிற, இச்சொருபங்களில்-இந்தசராசர வடிவங்களில், ஒன்றாந்தேகம்–ஒன்றாகிய உடலையே, நாமென்றும்–நாமென்று அபிமானித்தலும், பிறந்திறந்தேனென்கை-உடல்வடிவாகவே நான்பிறந்தேன் சேத்தேனெனலும், பிச்சலவோவென-பயித்திய குணமல்லவோவென்று ஆசிரியர்தெரிவிக்க, அச்சமற்று-பிறப்பெனும் பேதமைப்பயம் நீங்கி, உயர்ந்து-ஞானமயமாய்ச்சிறந்து, பிறப்பிறப்பை-ஜனனம் மரணம் உண்டெனும் பிராந்தியை, பிழைத்திட்டேன்-கெடுத்தொழிந்தேன். (எ-று) (எ-கருத்துரை) 8

பிறப்பேதிங் கழியாத வான்மாவே தானாகிற்
பிரிந்து சேரு
மறப்பேது மறப்பகற்று மார்க்கமே தவையுணர்த்து
மறையே தெல்லாந்
துறப்பேது துறவாமை யேதுமனஞ் சொற்பொருளுந்
துன்பத் தஞ்சும்
பறப்பேது பொய்வெறும்பொய் யாமனத்தின் கூத்தென்றான்
பரப்பற் றேனே.

(இ-ள்) அழியாத ஆன்மாவே-கெடாத ஆத்மாவே, தானாகில்-தானென்னுஞ்சொற்குப் பொருளாகுமாயின், இங்குபிறப்பேது – இவ்வுலகத்தில் ஜனனமெடுத்ததேது, பிரிந்துசேரும்-நித்தியமுக்த ஆன்மாவாகியதன்னை விட்டு வேறுபட்டு மறுபடி ஒன்றாய்ச்சேருகின்ற, மறப்பேது – அறியாமையெனு மஞ்ஞானமேது?, மறப்பகற்றும்-அவ்வறியாமையை நீக்கும், மார்க்கமேது-வழிகளெங்ஙனங்கூடும், அவையுணர்த்தும் – அவ்வறியாமையைப் போக்கும்வழியை அறிவிக்கும், மறையேது-வேதமெங்ஙனம் பிராப்தமாம், எல்லாந்துறப்பேது-யாவற்றையும் விட்டோமென்று சொல்லுகிறசந்நியாசமெங்குண்டாம், துறவாமையேது-எதையும் விடவில்லை யென்கிறபந்தமெங்ஙனமுண்டாகும், மனம்-சொல் பொருளும்–மனமும்-சொல்லும்-பொருளும் ஏது?, துன்பத்தஞ்சும் – பிறவித்துக்கத்திற்குப் பயப்படும், பறப்பேது-அவசரம் ஏது?, பொய்வெறும் பொய்யாம்-அறியாமையாய் ஒப்பின பிறப்புமுதலியவையாவும் பொய்யினும் பொய்யாகும், மனத்தின் கூத்தென்றான்-வாஸனாவடிவமனத்தின் கூத்தென்று ஆசிரியனறிவித்தான் அதினாலே, பறப்பற்றேன்-நான் அவசரப் படலைவிட்டு விட்டேன். (எ-கருத்துரை) (எ-று) 9.

நிட்டைமந்தி ரம்பூசை துக்கசுக மீரவத்தை
நிலையோ நீகை
விட்டிடுக பாழாகு மனமுதல நித்திரையின்
விட்டொன் றாகிற்
கட்டமின்றிக் காண்பொருள்போய் மனமிறந்து பிறவிமயல்
கடந்தா யென்று
னட்டசித்தி வேண்டியவை துட்டமனச் செருக்கொழித்திங்
கறிவா னேனே.

(இ-ள்) நித்திரையில்—காடநித்திரை எனுஞ்சுழுத்தியில், மனமுதல்—மனமும் வாக்குக்காயமவற்றின் செயல்பயன்களாகும் யாவும், பாழாகும்—நாசமாகும் (ஆகையால்), நிட்டை—கண்மூடி உடலசையாது நின்று நிட்டை செய்தலும், மந்திரம்—பிரணவம் முதலிய மந்திரம் ஜபித்தலும், பூசை—உடம்பில் விபூதிநாமங்கோபி முதலியது பூசிபின் ஜடப்பொருளை அலங்கரித் தேற்றலும், துக்கசுகம்—துன்ப இன்பங்களும் ஆகிய இவைகள் தோன்றற் கிடமாகிய, ஈரவத்தை—ஜாக்கிர சொப்பனமெனும் இரண்டு அவத்தைகளும், நிலையோ—ஸ்திரமாகுமா? ஆகாது, நீ கைவிட்டிடுக—நீ நிட்டைமுதலியவைகளை கைவிடக்கடவாய், விட்டொன்றாகில்—நீங்கி ஒரேஞானவடிவானுகில், கஷ்டமின்றி—யாதொரு கஷ்டமில்லாமல், காண்பொருள்போய்—தோற்றப்பொருள்கள் நாசமாகி, மனமிறந்து—மனச்சொருப நாசமுண்டாகி, பிறவிமயல்—பிறப்பு உண்டெனும் மயக்கத்திலிருந்து, கடந்தாயென்றான்—நீங்கினவனானுயென்று ஆசிரியன் தெரிவித்தான் அதனுல், அட்டசித்தி—(அணிமா-லகிமா-மகிமா-கரிமா-பிராத்தி-பிராகாமியம்-ஈசத்துவம்-வசித்துவம்)முதலிய எட்டுசித்திகளை, வேண்டியவை—விரும்பிவருந்தின்ற, துட்டமனச்செருக்கு—துன்மார்க்கமனதின் கருவத்தை, இங்கு ஒழித்து—இவ்வுலகில் நாசமாக்கி, அறிவானேன்—ஞானரூபியானேன். (எ-ஈற்றசை) (எ-று) 10.

மனமதுஜீ வேசஜகத் தாக்கியழித் திடலறியார்
மந்திரத்தான்
மனமதனை வயமாக்கும் வகையருள்வே மென்றுரைப்பார்
மதிவல் லார்காண்
மனமயக்கே மந்திரந்தே வதைநிட்டை சித்திமுதன்
மதியென் றான்பின்
மனமறலோ வென்றேன்சத் துவமாய்ச்சே டித்தலென்றான்
மயக்கற் றேனே.

(இ-ள்) மனமது—மன்மதுவே, ஜீவேசஜகத்தாக்கி—தன்னைஜீவன்-ஈஸ்வரன்-உலகவடிவங்களாக்கி, அழித்திடலறியார்—நாசமாக்கிடல் அறியார்

கள், மந்திரத்தால்-அம்முதல் ஓம்முதலிய மந்திரங்களினால், மனமதனை - மனதை, வயமாக்கும்வகை - வசப்படுத்துகின்ற விதத்தை, அருள்வேம் என்று-கிருபைசெய்து தெரிவிப்போமென்று, உரைப்பார்-சொல்லுவார் கள், மதிவல்லார்காண்-இவர்கள் ஆராய்ந்தவலியபுத்தியுடையவர்கள்தான், மனமயக்கே-எனதாசிரியன் மனதின்பிரமையே, மந்திரம் - நமசிவாய-நாராயணன்முதலிய மந்திரங்களும், தேவதை-அம்மந்திர பலத்தால் தோன்றும் தெய்வங்களும், நிட்டை-கண்மூடி தியானித்தலும், சித்திமுதல்-தான் கோரியது முடிந்துசித்தியாதல் முதலியவும் என்று, மதியென்றான் - மதித்துகொள்வாயென்றான், பின்மனமறலோ வென்றேன்-பிறகு அம்மனநாசமாதலோ எப்படிஎன்று கேட்டேன், சத்துவமாய்-ரஜோகுண தமோகுணகலப்பற்று தன்சுயகுணமான சத்குணமாய், சேடித்தலென்றான்-மிகுந்து நிற்றலென்றான், மயக்கற்றேனே-ஞானந்தவிர அயல்பொருளுளதெனும் பிரமையிலிருந்து நீங்கினேன், (என்றவாறு) (ஏ-ஈற்றசை) 11.

ஆக செய்யுட்கள் 207.

---

## கைம்மாறு காணேனெனல்.

இதுநன்றிது நன்றல வென்றுகொ
ளெவையுந்துயர் தந்திடு முன்றிகழ்
வதுநின்னினை வன்றியி ருந்தில
தயருங்கன வில்வர லென்னினை
யெதுவென்செயு முன்னினை வின்படி
யியலுந்திக ழுந்துயி லின்மன
மதுநின்றிட நின்றில தொருவனு
வறியென்றவ ருக்கெது வெதிரடே.

(இ-ள்) இது நன்று-இது நல்லது, இது நன்றல - இது கெட்டது, என்றுகொள்-என்று ஏற்றுக்கொள்கின்ற, எவையும்-எப்படிப்பட்டபாவங்களும், துயர்தந்திடும்-துக்கத்தைக்கொடுக்கும், முன்திகழ்வது-உன் முன்னேதோன்றுவது, நின்னினைவன்றி - உன் எண்ணத்தைத்தவிர, இருந்திலது-இல்லையாகும், அயருங்கனவில்-(உன்னெண்ணத்தைத்தவிர பொருள் வேறுயிருக்குமானால்) ஓய்ந்தசொப்பனத்தில், வரலென்னினை-மனமேபொருள்வடிவாய் தோன்றுவதற்கு என்னகாரணம்? அறிந்துணர்வாயாக. எது

என்செயும்-எந்தப்பொருளும் உனக்குச் சந்தோஷத்தையாகிலும் துக்கத்தையாகிலும் செய்யவல்ல, உன் நினைவின்படி-உன்மனம் எண்ணினபடி, இயலும்-அசையும், திகழும்-பிரகாசிக்கும், துயிலில் - நித்திரையில், மனமதுநின்றிட-மனமானது சொரூபாகாசமாக, ஒரு அணு-ஒரு திரணப்பொருளாவது, நின்றிலது-நில்லாமல் மறைந்துபோகும் என்பதை, அறியென்றவர்க்கு-தெரிந்துகொள் ளென்றவருக்கு, எது எதிரடி-என்ன கைம்மாறிருக்கிறதென்றோழி. (எ-று) 1.

பதியும்பசு வுந்திர மென்றுணர்
 பதகன்றனை கண்டவ னன்றொரு
மதிதந்திட வந்திவை நனவினின்
 மறையுந்துயில் வந்தவி டந்தனி
லிதிலையமெ மக்கிலை முப்பொரு
 ளெதுவுண்டெனி லுண்டிவை நின்னறி
வதுகொண்டறி பொருணிலை யலசட
 மறியென்றவ ருக்கெது வெதிரடி.

(இ-ள்) பதியும்பசுவும் - பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வேறுவேறாக, ஸ்திரமென்றுணர்-என்றும் உள்ளதென்று அறிகின்ற, பதகன் - பாதகன் அல்லது அப்பியாசி, தனைகண்டவன்-ஆத்மாவாகிய தன்னைப்பார்த்தவன், அன்று-அல்லன், ஒருமதிதந்திட-ஜலத்தில் குமிழிதோன்றுவதுபோல் என்னிடம் ஒரு நினைப்பு உண்டாக, இவைநனவினில்-இச்சக ஜீவபரம் ஜாக்கிரா அவஸ்தையில், வந்து-உண்டாயுளதுபோல் தோன்றி, துயில்வந்த-தூக்கம்வந்த, இடந்தனில்-காலத்தில், மறையும் - தெரியாமல் மறைந்துவிடும், இதில் ஐயம்-இதில் சந்தேகம், எமக்கிலை-ஆசிரியனாகிய எம்போல்வார்க்கு இல்லை, முப்பொருள் - சடனே | ஜகஜீவபரமாகிய மூன்றுவஸ்துக்களும், எது உண்டெனில்-எந்த வஸ்துவால் உண்டென்றுகாட்ட, இவையுண்டு-இவைகள் உள்ளதாகும், நின்னறிவதுகொண்டு - உன்ஞானத்தைக் கொண்டு, அறிபொருள்-அறியப்படுகிற ஜகஜீவபரமாகிய வஸ்துக்கள், நிலையல-அறிவைப்போல் நிலையானவைகள் அல்ல, சடம்-அசத்தானது என்று, அறியென்றவர்க்கு-தெரிந்துகொள்ளென்று தெரிவித்தவர்க்கு, எது எதிரடி-என்ன கைம்மாறுண்டென் தோழி. (எ-று) 2,

உடல்பொய்யுற வென்றறி வித்தவ
 ருரைகற்றுரை தந்து தமக்கொரு
மடமும்பசு வுங்கிண கன்பல
 வகைபத்திய வத்துக ளுங்கொடு
சடமிங்கொரு தெய்வமெ னத்துதி
 சடையன்குரு வன்று பிழைக்கிலர்

விடமுண்டவ ருடனசை விடுவென
விடுவித்தவ ருக்கெது வெதிரம்.

(இ-ள்) உடல் பொய்யுறவு-தேகசம்பந்தம் பொய்ச்சம்பந்தம், என்றறிவித்தவர்-என்றுதெரிவித்த ஞானிகளுடைய,உரைகற்று - வார்த்தைகளைக்கற்றுக்கொண்டு உரைத்து-தேகசம்பந்தம் பொய்யென்று பிறருக்குக் கற்றுக்கொடுத்து, தமக்கொருமடமும்-தாங்கள் மாத்திரம் தேகத்தை நிலையென்று கொண்டு தாங்கள் வசிக்க ஒருமடமும், பசுவும் - பால்கறக்க ஒருபசுவும், இணைகள்-தங்களுக்கு கால்கை பிடித்தல் முதலிய பணிவிடை செய்வதற்கு ஒரு அடிமையும், பலவகை பத்திய-பலவித பத்தியத்துக்குரிய, வத்துகளுங்கொடு - பொருள்களையும் சேகரித்து வைத்துக் கொண்டு, சடம்-அசத்தாகிய கல் - கட்டை - பஞ்சலோகம் முதலியவற்றால் செய்த உருவங்களை, இங்கொரு-இவ்வுலகில் ஒப்பற்ற, தெய்வமெனத்துதி-கடவுளென்று வணங்குகிற, சடையன்-மூடன், குருவன்று - ஆசிரியனல்ல, விடமுண்டவர்-விஷம் குடித்தவர், பிழைக்கிலர் - ஜீவிக்கமாட்டார்கள், உடனசை-ஆகையால சரீர அபிமானத்தை, விடு என-விட்டுவிடென்று, விடுவித்தவருக்கு-பந்தத்திலிருந்து நிவர்த்திசெய்தவர்க்கு, எது எதிரம்-என்ன கைம்மாறிருக்கிறதென்தோழி. (எ-று) 3.

அறிவென்று தமைத்தெளி வுற்றய
லறவேதின மதனி னிலைத்தவர்
தறியொத்த வுடற்குடை கற்குறை
தருவித்தறை கட்டி முடிக்கிலர்
பிறிவற்ற வகண்ட நிரஞ்சன
பிரமந்தனி லுடல்பொரு ளுய்த்தவர்
குறியுஞ்சொலி யுடல்விட நினைவது
குறைவென்ற ருக்கெது வெதிரம்.

(இ-ள்) தமை-தங்களை, அறிவென்று-ஞான வடிவின ரென்று, தெளிவுற்று-சந்தேகமறவறிந்து, அயலறவே-தோற்றமாகிய அந்நியப்பொருள்களில் சம்பந்த நீங்கவே, தினமதனில்-இரவும் பகலும் அந்த ஞானவடிவில், நிலைத்தவர்-ஞானமயமாகவே நிலைபெற்றவர்கள், தறியொத்த - கட்டைக்குச்சமானமான, உடற்கு-தேகத்திற்கு, உடை கற்குறை - உடைந்தகற்பாரைகளைதருவித்து-வரவழைத்து, அறைகட்டி - சமாதியெனும் கல்லறைகட்டி, முடிக்கிலர்-தன்தேகத்தை அவ்வறையில்வைத்து மூட நினையார்கள் பிரிவற்ற-பிரிவு இல்லாததாயும், அகண்ட-எல்லாமானதாயும், நிரஞ்சன-களங்கமற்றதாயுமுள்ள, பிரமந்தனில்-பிரமமாகிய தன்சொருபத்தில், உடல்பொருள்-தேசகால வஸ்துக்களை, உய்த்தவர் - பிரமமயமாகவே கரையச்

செய்தவர், குறியுஞ்சொலி—தன்தேகத்தை அடைக்கலம் செய்ய கல்லறைக ட்டும்படி சீடனுக்கு இடமும் காலமும் குறிப்பிட்டு காட்டி, உடல்விட—தேகத்தைவிட, நினைவது—எண்ணவது, குறைவென்றவருக்கு—ஞானஹீன மென்று தெரிவித்தவருக்கு, எது எதிரம — என்ன கைம்மாறுளதென் தோழி. (எ-று) 4.

தனையன்றி யணுத்துணை யும்பிறி
தறிகின்றவன் முற்றறி வுற்றிலன்
நினைநல்லரு மறைமுத லியகலை
நிறைவென்பது நினைவற லெனுமென
வனையவன்பிற ருள்ளம றிந்துரை
யதுசெப்புவ னென்பது தப்புரை
யினையளவய லறிவுற லறிவல
திரிபென்றவ ருக்கெது வெதிரம.

(இ-ள்) தனையன்றி—ஆன்மாவாகிய தன்னைத்தவிர, அணுத்துணையும்—தினையவ்வளவும், பிரிதறிகின்றவன்—வேறுபொருள்கள் இருக்கிறதாக தெரிந்து கொள்கிறவன், முற்றறிவு உற்றிலன்—முழுஞானம்பெற்றவனல்லன், நல்லருமறை—நல்ல அரிதான வேதம், முதலிய கலை—முதலிய வித்தைகள், நிறைவென்பது—பூர்ணஞானமென்று சொல்லப்படுவது, நினைவற லெனும் என—நினைவற்று இருப்பதுதான் என்று சொல்லுமென, நினை — அறிந்து கொள்வாயாக, அனையவர்—அப்படியே நினைவற்றிருப்பவர், பிறருள்ள மறிந்து—அந்நியரிடமனதில் நினைக்கும் விஷயங்களைத் தெரிந்து, உரையதுசெப்பவன் — அவரெண்ணிய வெண்ணங்களை பிறர்க்கு விளங்கும்படி சொல்வான், என்பது தப்புரை—என்றுசொல்வது பிசகானவார்த்தையாம், தினையளவு—அணுவவ்வளவு, அயலறிவுறல்—அந்நியப்பொருளை அறியும் ஞானம் உண்டாதல், அறிவல—நினைப்பற்ற சொரூபானுபவ ஞானமல்ல, திரிபென்றவர்க்கு—ஞானத்தின் மாறுபாடான அஞ்ஞானமென்றவருக்கு, எது எதிரம என்னகைம்மாறிருக்கிற தென்தோழி (எ-று) 5.

உலகந்திர மன்றெனவும்பல
வுயிருந்திர மன்றென வுந்துயர்
நலனுந்திர மன்றென வுங்கொடு
நரகுந்திர மன்றென வும்படை
நிலமுந்திர மன்றென வுஞ்சொலி
நினைநெஞ்சினை நில்லைமை யெனக்கொளி

நலனெனக்குறு மதுநிலை யன்றெனா
நலனென்றவ ருக்கெது வெதிரமே.

(இ-ள்) உலகம்-சுவர்க்காதி லோகங்கள், நிரமன்றெனவும்-நிலையுள்ளனவல்லவென்றும், பல உயிரும்-தேகபேதமுடைய அநேகஜீவர்களும், நிரமன்றெனவும்-நிலையுள்ளன வல்லவென்றும், துயர்நலனும் - துக்கசுகங்களும், நிரமன்றெனவும்-நிலையுள்ளனவல்லவென்றும், கொடுநரகும்-கொடுமையான இரௌரவம்முதலிய இருபத்தெட்டுநரகங்களும் நிரமன்றெனவும்-நிலையுள்ளன வல்லவென்றும், படைநிலமும் சம்பாதித்த பூமியும், நிரமன்றெனவும்-நிலையுள்ள தல்லவென்றும், சொல்லி-யாவருமறியபிரசங்கித்து, நிலை நெஞ்சினை-இவ்வகை நிலையில்லாப்பொருளை நிலையுள்ளதென்று நினைக்கும் மனதினை, நிலைமையென - நிரமாயுள்ளதென்று, கொளின் கொண்டால், நலனெனக்குறும்-மோக்ஷசுகம் எப்படி உண்டாகும், அது-அந்தமனமானது, நிலையன்றெனல்-நிலையுள்ளதல்லவென்று அறிதல், நலனென்றவருக்கு - நல்லதென்று அறிவித்தவருக்கு-ஏது எதிரமே-என்ன கைம்மாறு செய்வேனடி. (எ-று) ௬.

வேறு.

அவரவர்நினை வலதொரு பொருளினை
யறிகிலரடை கிலர்துயர் சுகமென
வெவரெதுகரு தினுமது வலதிலை
யெதிர்தருபொரு ளிடுகையி தறிகிலர்
கவர்தலையொழி கிலரொழி குவர்நிலை
கதிவரநிஜ மெனவறி குவரவர்
தவர்தலைநினை வதுநல னலவிது
தவிரென்றவ ருக்கெது வெதிரமே.

(இ-ள்) அவரவர்-அவரவர்கள், நினைவலது-எண்ணத்தையே யல்லாமல், ஒருபொருளினை-உண்மையாக ஒருவஸ்துவினை, அறிகிலர்-வேறுதவறிந்தடைவாரிலர், அடைகிலர்-பெற்றாரிலர், துயர்சுகமென-துக்கம் சுகமென்று, எவரெதுகருதினும்-எவர் எந்தபொருளை நினைத்தாலும், அதுவலது-அந்தநினைப்பின்வடிவமே சுகாசுகம் தருமல்லது, எதிர்தருபொருள் - எதிரில் தோற்றும்வஸ்துக்கள், இடுகை இலை-சுகாசுகம்கொடுத்தல் இல்லை. இது அறிகிலர்-இது அறிகிலராகி, கவர்தலையொழிகிலர்-தனையன்றித்தோற்றப்பொருள்வேறு இருப்பதாக விரும்புதலைவிட்டு நீங்கிலர், ஒழிகுவர்-அப்படி நீங்குவோர், நிலைகதிவரல்-நிரமான மோக்ஷம்பெறுதல், நிஜமெனஅறிகுவர்-உண்மையென்று அறிவார்கள். அவர்தவர்தலை-அவர்கள் தப்பிப்போயதனை, நினைவது-நினைத்துக் கொள்வது, நலனல-நல்லதல்ல, இதுதவிர்-இப்படிநீ

னைப்பதையும் விட்டுவிடு, என்றவருக்கு – என்று தெரிவித்தவருக்கு, எது எதிரடி–என்ன கைம்மாறிருக்கிற தென்தோழி.(எ-று) 7.

வேறு.

அயனரியர னிந்திர னிமையவ
ரருமறைதவ முனிவர்கள் சித்தர்கள்
வியனுலகு திருப்பதி கள்வினை
விலகச்செயு நதியுயர் விதிகதி
துயர்தருநம னிரவிநி லவுசநி
துருவன்முத னிலையல வெனலெது
பயனறிவு சுயம்பல மனமெனல்
பதமென்றவ ருக்கெது வெதிரடி.

(இ-ள்) (அயன்-அரி-அரன்)பிரமனும், விஷ்ணுவும், சிவனும், இந்திரன்-இமயவர்–தேவேந்திரனும்-(தேவர்களும்),அருமறை–அரிதான வேதங்களும், தவமுனிவர்கள்–தவஞ்செய்யும் முனிவர்களும், சித்தர்கள் – காயசித்திசெய்த சித்தர்களும், வியனுலகு–பெருமையுடைய இந்திராதி பிரமாதி உலகங்களும், திருப்பதிகள் – காசி இராமேசுர முதலிய அழகிய ஸதலங்களும், வினைவிலகச்செயும் – தீவினைகளை நீங்கச்செய்கிற, நதி–கங்கை-சரஸ்வதிமுதலிய ஆறுகளும், உயர்விதி–மேலான ஆகாமிய பிராரத்துவசஞ்சித விதிகளும், கதி–இனியுண்டாகுஞ்சொர்க்காதிபதவிகளும், துயர்தருநமன்–மரணதுக்கத்தைகொடுக்கும்யமனும்.(இரவி-நிலவு)–சூரியனும்-சந்திரனும், (சநி- துருவன்)–சநியும்-துருவநட்சத்திரமும்,முதல்நிலையலவெனல்-முதலியவைகள் நிலையுள்ள தல்லவெனல், எதுபயன்–என்ன பிரயோஜனம், அறிவு சுயம்பு–சுவரூபமான ஞானமோ நித்தியமானது, அலமனமெனல் – மனமோமாயாகற்பனையானதால் நித்தியம் சடமாம் என அறிந்துசொல்வது, பதமென்றவருக்கு–பக்குவமென்று சொன்னவர்க்கு, எது எதிரடி–என்ன கைம்மாறு செய்வேனடி, (எ-று) 8.

பற்றற்றவர் கற்றவர் நற்றவர்
பற்றறவரு ரிற்றவர் தற்றெளி
முற்றுற்றவர் தெற்ற லறுப்பவர்
முற்பட்டவ ருற்பவ மற்றவ
ரிற்றற்றல பெருமை வியந்திட
விவர்தற்பரர் சிற்பரர் கலைபல
கற்றென்னினை வற்றிலர் பெற்றிலர்
கதியென்றவ ருக்கெது வெதிரடி.

(இ-ள்) பற்றற்றவர் – ஆசையைவிட்டவர்யாவர் அவர்களே, கற்றவர்–உலகிற்கற்கவேண்டியனகற்றவரும்,நற்றவர் – நல்லதவத்தைச்செய்தவருமா

ருவர் (அன்றியும்), பற்றறவனுரிற்றவர்—ஆசைநீங்க துயரையொழித்தவரும், தற்றெளி—ஆன்மாவாகிய தன்னைத்தெளிந்து, முற்றுற்றவர் — முழுஞானமடைந்தவரும், தெற்றலறுப்பவர்—அன்னியாது குறைகளை நீக்கவல்லவரும் முற்பட்டவர்—யாவரிலும் முதன்மையானவர். உற்பவ மற்றவர்—பிறப்பற்றவர் ஆவார்கள்-பெருமை—அப்படிப்பட்டவர்மேன்மை, இற்று அற்று வியாநிடவல—இவ்வளவவ்வளவென்றுபுகழ்ந்து சொல்லமுடியாவாம், இவர்தற்பரர்—இவா உண்மையான பரமேஸ்வரர்.சித்பரர் ஞானபரமேஸ்வரர் ஆகையால், நினைவற்றிலர்—மனம் நாசமாகாதவர், கலைபலகற்றென்—அநேக சாஸ்திரங்களைப்படித்து என்ன பிரயோஜனம், கதிபெற்றிலர்—இவர் மோக்ஷமடைந்தவராகார், என்றவருக்கு — என்று தெரிவித்தவருக்கு, எது எதிரடி—என்னகைம்மாறிருக்கிற தென்தோழி. (எ-று) ௯

வேறு.

குழைகிழியரி படர் மதர்விழிசெங்
குமுதங்கனி துவரித ழடர்வின்
மழைபுரைகுழன் மரைநறு முகைபொன்
மலைநிகர்முலை யுடைமட மயில்பன்
கழைமதுகனி ரசமொழி தருவெங்
கவலையிலழி குவமெனு மொழியென்
பிழையொழிமன நினைவரு வழியுன்
பித்தென்றவ ருக்கெது வெதிரடி.

(இ-ள்) குழைகிழி—காதணிகளை யூடுருவியோடும், அரிபடர்—செவந்த ரேகைகளாற் பின்னப்பட்ட, மதர்விழி—மேலுயர்ந்து விளங்குகண்களும், செங்குமுதம்—செவ்வல்லி, (கனி-துவர்-இதழ்) — கோவைப்பழம்-பவளம்இவைகளைப்போன்றசிவந்தஉதடுகளையும்,அடர்வின்—ஆகாயத்தில்வியாபித்துக் கறுத்த, மழைபுரைகுழல்—மேகத்தை ஒத்த கூந்தலையும், நறுமரைமுகை — வாசனையுள்ள தாமரை மொக்கையும், பொன்மலை நிகர்முலை—அழகியமேருமலையையு மொத்தமுலையையும், உடைமட மயில்பன்—உடைய இளமையானபெண்மயிலின் சாயலையுடைய பெண்கள் வஞ்சிக்கப்பேசும், கழைமது, கரும்புரசத்தையும். கனிரசம் — மா-பலா-வாழைமுதலிய பழங்களின் சாரத்தையும் ஒத்த, மொழிதரு—வார்த்தைகளின் மனனத்தா லுண்டாகும் வெங்கவலையில்—கொடுமையாம் மனசபலத்தினுல், அழிகுவமெனும்—கரைந்துருகி நாசமாகின்றோமென்கிற, மொழியென்—வார்த்தைகள் பிறரிடஞ் சொல்லிக்கொள்வதி லென்ன பிரயோஜனம், பிழையொழிமனம் — இது குற்றமாம் ஆசையாலிதை யொழித்துவிடு, நினைவு அறும்வழியுன் — உன் எண்ணம் நாசமாகும் வழியாகும், பித்தென்றவர்க்கு—அல்லவென்பது புயி

த்தியமாகும் என்றவர்க்கு, எநூ எதிரடீ – என்னைகைம்மாறிருக்கிறதென் தோழி. (எ-று) 10.

ஆக செய்யுட்கள் 217.

---

## சித்தர்நூன் மயக்கொழிதல்.

---

### வெண்பா.

பொதிகைமலைச் சித்தர்தம் பூம்பதங்கள் சேவித்
திதமகிதந் தேர்ந்த திசைப்பேன்—மதிவல்லோய்
பேசரிய சித்தன் பெருமைமைக்கேணாதமுனி
பாசமற வென்றசொற்கைப் பற்று.

(இ-ள்) பொதிகைமலை–தெற்கிலுள்ளபொதிகைமலையில்வசிக்கும், சித்தர்தம்–அகஸ்தியர்ப்பரம்பரையில்வந்த ஞானவான்களது, பூம்பதங்கள்–அழகிய பாதங்களை, சேவித்து–வணங்கி, இதமகிதம்தேர்ந்தது–அச்சித்தர்கள்நூலிற்சொல்லும் நன்மைதீமைகளைனதாசிரியராகும்பொதிகைமலைச்சித்தரால் கானுணர்ந்தபடி, இசைப்பேன்–நாராயணநானுனக்குச் சொல்வேன், மதிவல்லோய்–புத்தியில்வலிய சீடனாகிய, நாதமுனி – நாதமுனியே, பேசரிய சித்தன்–சொல்லுதற்கரிய சின்மயசொருபராகும் சித்தர்களின், பெருமை–மேலான தன்மையை, பாசமறக்கேள் – சரீர ஆசையால் நேர்ந்த பந்தநீங்கும்பொருட்டு கேட்பாயாக, என்றசொல்–என்று சொன்னவார்த்தைகளைகைப்பற்று–நாராயண நீகைப்பற்றுவாயாக (என்றவாறு) 1.

பற்றறுந்த பேர்க்கே பரகதியுண் டாமலது
பற்றகலார்க் கென்றும் பதைப்பேகாண்--பற்றெதுவோ
வென்னி லறிவன்றி யேதுமிலை யென்றோர்சொற்
றன்னைவிடுத் துன்னுந் தாமம்.

(இ-ள்) பற்றறுந்த பேர்க்கே–இக லோக பரலோக போகதேகஆசைநீங்கினவர்களுக்கே, பரகதியுண்டாமலது–மேலானமோக்ஷம் உண்டாகுமல்லது. பற்றகலார்க்கு–இகலோகபரலோக ஆசை நீங்காதவர்களுக்கு, என்றும்–எக்காலத்திலும், பதைப்பேகாண்–மோக்ஷமடைவேனெனும் அவசரக்கூற்றேயன்றி வேறில்லை என்றறிவாயாக, பற்றெதுவோவென்னில்–ஆசையெதுவோ என்பாயாகில், அறிவன்றி–ஞானத்தைத்தவிர, ஏதுமில்லையென்றோர்–இகபரலோகங்களாகிய எதுவும் இல்லையென்ற ஆசிரியரிட, சொல்தன்னை

விடுத்து – உண்மையான வார்த்தையை பாராக்கால் விடுத்து, உன்னுந்தமம் –, இகலோகபாக்கள் உளதென்று நினைக்கின்ற அஞ்ஞானமேயாம். (எ–று). 2.

தமமெதுவேன் முன்பின் றமையுடலாக் கொள்ளுஞ்
சுமடர் தமை நம்பியவர் சொல்லாற்--றமதுமல
மூத்திரத்தை யுண்டுடலை முப்போதும் வைப்போமென்
றாத்திரத்தாற் கொள்ளவல மாம்.

(இ–ள்) தமமெதுவேல்–அஞ்ஞானம் எதுவென்பாயாகில்,முன்பின்–ஆன்மஞான நூல்களை வாசியாத முன்னும் வாசித்தபின்னும்,தமையுடலாய்–தங்களை தேகவடிவமாகவே, கொள்ளும்–ஒப்புக்கொண்டு பேசுகிற, சுமடர் தமை--கீழ்மக்களை. நம்பி–அவர்பூண்டிருக்குங்காவிதண்டுகமண்டலங்களால் யோகிகளென்று நம்பி, அவர்சொல்லால்–அக்கீழ்மக்களது வார்த்தையால், தமது;– உபதேசம்பெற்ற சீடர்தங்களுடைய, மலமூத்திரத்தை, மலத்தையும்-மூத்திரத்தையும், உண்டு–மூலப்புளிகற்பமென்றும்-வெண்சாரைக்கற்பமென்றும் சொன்னதை அறியாதுபுசித்து. உடலை – தேகத்தை. முப்போதும்–இறப்பு-எதிர்வு-நிகழ்வெனும் மூன்று காலங்களிலும், வைப்போமென்று–அழியாமல் நிலையாய் வைத்திருப்போமென்று.ஆத்திரத்தால்கொள்–அவசரத்தினால் நம்பிக்கொண்டு காலங்கழிக்கும், அவலம் ஆம் – வீணான அலைச்சல்களேயாம் (எ–று) 3.

அவலமென வீதை யறைவானேன் ஞாலத்
தெவரிருந்தார் சாகா திசைமி--னவரெங்கே
கண்ணரவ தாரங் கழிந்தனவேன் மற்றையரை
யெண்ணுவதேன் மிக்காரோ வில்.

(இ–ள்) ஈதை அவலமென–சீடர்களே இப்படி மலமூத்திரம் உண்பதை வீணென, அறைவானேன்–சொல்வானேனென்றால், ஞாலத்து–பூமியினிடத்து. சாகாது–மலமூத்திரம் உண்டு இறவாமல், எவரிருந்தார்–எவர் உயிரோடு பிழைத்திருந்தார்கள், இசைமின்–சொல்லுங்கள், அவரெங்கே – அப்படிசாகாது இருந்தவர்கள் எங்கே இருக்கிறார்கள், கண்ணரவதாரம் – சித்தர்களுக்குத் தலைவனாகிய கிருஷ்ணன் எடுத்த மச்சம்-கூர்மம்-வராகம்-நரசிங்கம்-வாமனம் பரசுராமன்-ஸ்ரீராமன்-வாசுதேவன்–பலராமன் - கல்கின் முதலிய பத்து அவதாரப்பிறப்புகளே, கழிந்தனவேல் – சொரூபத்தை விட்டு நீங்கினவையேயாமாகில், மற்றையரை–மற்றசித்தர்களுடலை, எண்ணுவதேன்–கழியாது நின்றனவாக நினைப்பது என்னகாரணம், மிக்காரோ இல்–சர்வாக்ஷகனாகிய வரியினும் மேன்மையுற்றவர்களோ இல்லையாம், (எ–று) 4.

இல்லையெனிற் சித்த ரிறவாரென் றெந்நூலுஞ்
சொல்லுவதே னென்னிற் சொலக்கேணீ--நில்பலவாய்
நிற்பதற்கே யாசையிந் நீணிலத்தார்க் கென்றறிந்து
பற்றகலச் செய்யுபா யம்.

(இ-ள்) இல்லையெனில்—ஆசிரியரே! சகாது என்றும் உள்ளோர் உலகில் இல்லையென்று சொல்வீரானால், எந்நூலும் — எந்தசித்தர் நூல்களும், சித்தர் இறவாரென்று—சித்தர்கள் சாகாது இருப்பார்களென்று, சொல்லுவது-சொல்லுவது, என்—என்னகாரணம் என்று. என்னில்—சீடனே நீகேட்பாயாகில், நீசொலக்கேள்—நீநான் சொல்வதைக்கேள். இந்நீணிலத்தார்க்கு—இந்தநீண்ட பூமியிலுள்ள ஜனங்களுக்கு, நில்பலவாய்—அநேககாலமாக,நிற்பதற்கே—இப்பூமியில் சாகாது உடலோடு நிலைத்திருப்பதற்கே, ஆசையென்றறிந்து—ஆசையுண்டென்பதை ஞானிகளறிந்து, பற்றகலச்செய்—அவர்களை அவ்வாசையிலிருந்து நீங்கசெய்கிற, உபாயம்—சித்தர்கள் நூல்களில் எழுதி வைத்த தந்திரமாகும். (எ—று) 5.

உபாயமே தென்னி லுயிரறியார் யாருஞ்
சுபாவத் துடறானுச் சொல்வ--ரபாவமிது
வானாலுந் தன்னுடலில் யாரே வெறுப்படைவார்
வானுட ரேனும் மதி,

(இ-ள்) உபாயமே தென்னில்—சீடனே தந்திரமேது என்று கேட்பாயாகில், யாரும்—இகலோக பரலோகத்திலுள்ள எந்த ஜனங்களும், உயிரறியார்—ஜீவனைத்தானென்று தெரிந்துகொள்ளார்கள், சுபாவத்தில்—இயற்கையில், உடல்தானாய்—சரீரமேதானென்று ஒப்பி, சொல்வார்—சொல்வார்கள் இது அபாவம்—இப்படி ஜீவனைதானெனாது உடலைத்தானென்பது விபரீத' பாவனையாகும், ஆனாலும்—இப்படிக்கிருப்பினும், யாரே—எவரே, தன்னுடலில்—தன்தேகத்தின்மீது, வெறுப்படைவர் — ஆசையற்று இருப்பார்கள், வானுடரேனும்—தெய்வலோகத்தாரானாலும் தன்தேகத்தின்மீது வெறுப்படையார்கள் என்பதை, மதி—நீதெரிந்துகொள்வாயாக. (எ-று) 6.

மதியாரென் றேயுடலில் வைப்பித்தா ராசை
புதிதா முறவுமதம் போக்க--விதியிலையென்
றெண்ணாதே நூற்றே டிணக்க மறிந்திணங்கு
பெண்ணே மிருத்துவெனப் பேண்.

(இ-ள்) மதியாரென்றே — ஆன்மாவே! நீ உடல் நீயல்ல உனைவிடவும் வேறல்லவென்று பெரியோர்தெரிவித்தை அலட்சியஞ் செய்வார்களென்று

னைத்தே அப்பெரியோர், உடலில்-(தேகம் அழியாதிருக்க உபாயஞ்சொல்லுகிறோம் உன்தேகத்தை பத்திரமாய்க் காப்பாற்றென்று) தேகத்தில், ஆசைவைப்பித்தார்-ஆசையை நிலைக்கச்செய்தார்கள், புதிதாம் உறவுமதம்-அப்படி தேகாபிமானம் உண்டாகச்செய்தது எனெனில் தேகம்தோன்றின பிறகு நூதனமாய்த் தேகசம்பந்தப்பட்ட பந்துக்களையும் - சைவவைணவம் முதலிய மதங்களையும், போக்க-நீக்கிக்கொள்ளவென்றறிவாயாக, விதியிலையென்றெண்ணாதே - தேகம் அழியாது நிலைத்திருக்கும்படி செய்ய சித்தர் நூல்களில் உண்மையான ஏற்பாடு இல்லையென்று சந்தேகப்படாதே, நூல் தேடு-தேகம் அழியாதிருத்திவைக்க உபாயஞ்சொல்லும் சித்தர் நூல்களைத் தேடிப்பார். இணக்கமறிந்து-நல்லொழுக்கமுடையாரையறிந்து, இணங்கு-அவர்களிடம் உடன்படு, பெண்ணை மிருத்து வென-பெண்ணை யமனென்று அறிந்து அவளுடன் சேராமல், பேண் - தேகத்தைக் காப்பாற்றிக்கொள். (எ-று) 7,

பேணா திறந்தார்கள் பேய்மக்க ணீயுடலை
வீணா யவர்க்காய் விடலென்னே—காணாய்கொல்
நாதமுண் ணா விந்துவிடே னன்மூச்சைக் காபிழைப்பாய்
சாதலுறா யென்றார் தகைத்து.

(இ-ள்) பேய்மக்கள்-பேதைமையுடையஜனங்கள், பேணாதிறந்தார்கள்-நாங்கள் சொல்லும் உபாயத்தை நம்பாமல் பெண்கள்சம்பந்தப்பட்டு உடல் வெந்து செத்தார்கள், நீ உடலை-சீடனே! நீ பார்த்திருந்தும் நீ உன் சரீரத்தை, அவர்க்காய்-அப்பெண்களுக்காக, வீணாய்விடலென்னே-வீருதாவாக நாசஞ் செய்துக் கொள்ளுதல் என்ன காரணம், காணாய்-பெண்களால் பல ஹீனமாதி மேகசம்பந்த ரோகங்களைப் பெற்றழிவாரை நீ கண்ணாற் பார்த்திலாயோ? நாதம் உண்ணா-தேகம் இளைக்காதிருக்க ஸ்ரீகளின் நாதத்தைப் புசி. விந்து விடேல்-புணர்ந்து விந்தை விட்டு வெந்துப் போகாதே, நன்மூச்சைக்கா-நல்ல மூச்சை இரேசகபூரக மார்க்கத்தில் திருப்பி கும்பகத்தில் நிறுத்தி வெளிசெல்ல வொட்டாமல் தடுவென, தகைத்து-பலத்காரஞ்செய்து, பிழைப்பாய்-நீயிறக்காமற் ஜீவிப்பாய். சாதலுறா யென்றார்-என்றுஞ் சாகமாட்டாயென்று பெரியோர் தெரிவித்தார்கள். (எ-று) கொல்-அசைச்சொல். 8.

தகைப்பான் புகலேன் றமையறிவாக் கண்டிங்
குசப்பா னிறைந்துண்மை யுற்று—வகுத்தெளிவாய்ப்
பூரணத்தி னின்று புறம்பகமற் றப்பயரி
வாரணத்தால் வாழ வறி.

(இ-ள்) தகைப்பான் புகலேன்-உடலை பெண்களிடம்சேர்க்காமல் பெரியோர்தடுத்ததென்னகாரணமென்றால், இங்கு-இம்மையிற்றானே. தமை

யறிவாக்கண்டு—தங்களை அறிவுசொரூபமாகப்பார்த்து, உகப்பால்—நிரதிசய வானந்தத்தால், நிறைந்து—பூரணப்பட்டு, உண்மையுற்று—அஞ்ஞான மகலப் பெற்று, அகத்தெளிவாய் — சித்தப் பிராந்தி யில்லாதவனாய், பூரணத்தினி ன்று—பூரணஞானத்தில்நிலைத்து நின்று, புறம்பகமற்று—வெளியுள்ளெனும் பேதம் நீங்கிநிற்க, பயநிவாரணத்தால்—பிறப்பிறப்புண்டெனும் அச்சம் நிவ ர்த்தியாகப்பெற்று, வாழவறி—நித்தியனாகி வாழவென்று அறிவாயாக. எ-று

அறியாரிதனை யருந்திமல மாதி
பெரிதென் றதையுகந்து பேசித்—தெரியாத
பேர்க்குரைத்துக் கெட்டுப் பிறரைக் கெடுத்துடலைப்
போக்குவித்தார் மண்ணூர் புதைத்து.

(இ-ள்) இதனையறியார் — அறிவேதானெனும் இவ்வுண்மையைத்தெரி ந்துகொள்ளாத ஆசிரியர்கள், மலமாதியருந்தி—மலமூத்திராதிகளைத்தின்று அதைப்பெரிதென்று—அம்மலமூத்திரங்களைக் குடித்தல் பெரிய மகிமையுள தென்று, உகந்து பேசி—உயர்ச்சியாய்ச் சொல்லிக்கொண்டும், தெரியாதபே ர்க்கு—அறிவேதானென்றறியாத மூட சீடர்களுக்கு, உரைத்து—மலமூத்திர ங்களைப்புசித்தால் தேகம் அழியாமல் என்றும் நிலைக்குமென்று உபதேசஞ் சொல்லி, கெட்டு — மலமூத்திராதி புசித்தலால் ஒருபலனும் அடையாமல் தாங்களும்நாசமாகி, பிறரைக்கெடுத்து—அயலாரையும்நாசப்படுத்தி, உடலை தங்கள்தேகத்தையும் தங்களைநம்பினசீடரிட தேகங்களையும், மண்ணூர் புதை த்து—மண்ணிறையகுழியில் புதைத்து, போக்குவித்தார்—உடலிருக்கும்போ தே அறிவுமயமாகாமல் உடல்களை நாசப்படுத்திவைத்தார். (எ-று) 10

புதையாத முன்னரே பொன்செய்வ மென்று
கதைபலவுஞ் சொல்லிச் செயக் கண்டே—னதுபோன்ற
பொன்னூலிற் காணோனென் பொய்யென்னில் வாகடமேன்
மண்ணுலகின் மெய்யா மதி.

(இ-ள்) புதையாதமுன்னரே—அம்மூடாசிரியர்தங்கள் உடலையும்-சீடர் களிட உடலையும் மண்குழியில் புதைக்காததற்கு முன்னே, பொன் செய்வ மென்று-சீடனே! செம்பு வெள்ளி இவைகளை மாற்றிப் பொன்னாகச் செய் கிறவித்தை எங்களுக்குத்தெரியுமென்றும், கதைபலவுஞ் சொல்லி—திருவள் ளுவநாயனார் தன்மூத்திரத்தைக்கல்லின்மீதுவிட்டுகல்லைப்பொன்னாக்கினார் என்றதைப்போலொத்த பொய்ம்மகிமைக் கதைகளைப் பலவாறாக எடுத்துச் சொல்லியும், செயக்கண்டேன்—அப்படிபொன்செய்ய நான் நேரில்கண்டே னென்றும், அதுபோன்றபொன்—அதுபோல் சிறந்த மாற்றுடையபொன், நான்பூமியிற் பார்த்ததில்லை யென்றும் சொல்வார்கள், பொய்யென்னில் — பொன்செயும்வித்தை பொய்யென்பையாகில், வாகடமேன்—வாதவைத்திய

வாகடங்கள் சித்தர்கள் என்செய்தார்கள், மண்ணுலகில்-பூலோகத்தில், மெய்யாம்பீதி-நோய்களுக்கு மருந்துகொடுத்தால் தீருகிறதை நீயறிந்து அப்படியே பொன்னும் மெய்யாய் செய்து முடிக்கலாமென்பதை நிதானித்துக் கொள் என்பார்கள். (எ-று) 11.

மதியென்று தாம்ரபற்ப மான்மியமுஞ் சான்றோர்
பதிமகிமை பொய்க்காதை பன்னிக்—கதியற்றிங்
குண்ண வகையின்றி யொருமெய்ம் மருந்திற்கும்
விண்டிரந்துஞ் சொல்லார்கள் வீண்.

(இ-ள்) மதியென்று-மூடாசிரியர் தாங்கள்சொல்வதைநம்பென்று சீடர்களைமிரட்டி, தாம்ரபற்ப-செம்பு பஸ்பத்தின், மான்மியமும்-மகிமையையும், சான்றோர்-பெரியோர் உடலைப்புதைத்த, பதிமகிமை-இடத்தின்பெருமையும், பொய்க்காதை பன்னி-எழுதிவைத்திருக்கும் பொய்க்கதைகளைப்படித்துக்காட்டி, கதியற்று-ஆன்மவடிவாக்கும் நல்லாசிரியரிட ஆதரவற்றவர்களாய், உண்ணவகையின்றி-பொன்செய்யும்வித்தையறிந்தோமென்று பொய்சொல்லக்கற்றவர்கள் அப்பொன்னைவிற்று ஆகாராதிகளைப்புசிக்கும் வகையில்லாதவர்களாய், விண்டிரந்தும்-வீடுகள் தோறுஞ் சென்று அம்மா சோறுபோடு என்று வாய்விட்டலறி பிச்சையெடுத்தும், மருந்துக்கும்-அரிதான சஞ்சீவிமருந்து பெறுவதற்கும், ஒருமெய் - ஒரு நிஜமானவார்த்தையை, சொல்லார்கள் - சொல்லமாட்டார்கள், வீண் - இப்பொய்யர்கள் சொல்லைநம்புவது பயனற்றதாகும். (எ-று) 12

வீண்மண்பெண் பொன்னுடலி னாசை மறையுரைக்குங்
காண்பனவெல் லாமழியுங் காரணத்தாற்—சேண்போனுங்
காண்போமே நித்திரையிற் கற்றவற்றி லுற்றவற்றின்
மாண்பெதுவோ தன்னறிவே மாண்.

(இ-ள்) காண்பனவெல்லாம்-நாமரூபமாகமாத்திரம் தோற்றும் சராசரப்பொருள்களெல்லாம், அழியுங்காரணத்தால் - நாசமாகின்ற ஹேதுவினால், மண்-பெண்-பொன் உடலின் - மண் பெண் பொன் தேகம் இவைகளின்மீது, வீண் ஆசை-பயனற்றஅன்புவைப்பதென்று, மறையுரைக்கும்-இருக்கு-யஜுர்-சாமம்-அதர்வணமெனும் நான்குவேதங்களும் கூறும், நித்திரையில்-ஒவ்வொருவரும் அவரவர் தூக்கத்தில், சேண்போல்-எல்லாநாமரூப சராசரப்பொருள்களும் ஆகாயத்தைப்போல சூன்யமாக மாறுவதை, நாம் காண்போமே-நாம் பார்ப்போமாகையால், கற்றவற்றில் - ரசவாதம்-காயாதிகல்பம் அஷ்டமாசித்திமுதலியவித்தைகளை தெரிந்துகொண்டதினாலும், உற்றவற்றில்-அவைகளையடைந்ததினாலும், மாண்பெதுவோ-என்ன

பெருமையுள்ளதோ? ஒன்றுமில்லை, தன்னறிவேமாண்-தன்னிடத்தாகிய ஞானவடிவமே பெருமையுடையதாம். (எ-று) 13.

மாண்புடைய வள்ளுவனார் மாநிலத்தா யௌவையா
ராண்டகைசேர் சங்கரா சாரியார்—வீண்சுமையென்
றிவ்வுடலை விட்டொழிந்தா ரென்னில் விடேமென்பா
ரெவ்வலியா லோதுவரோ விங்கு.

(இ-ள்) மாண்புடைய-பெருமையுடைய, வள்ளுவனார் - திருவள்ளுவ நாயனாரும், மாநிலத்தாய்-பெரிய உலகிற்குத்தாயாகிய, ஔவையார் - ஔவையாரும். ஆண்டகைசேர்-பரகாயப் பிரவேசம் முதலிய சித்துகள்செய்து சிறப்புற்ற, சங்கராசாரியர் - ஜகத்குருவாகிய சங்கராசாரிய சுவாமிகளும், வீண்சுமையென்று-இவ்வுடலைச்சுமப்பதுபயனற்றதென்று, இவ்வுடலைவிட்டு-இச்சரீரத்தைவிட்டு, ஒழிந்தாரென்னில்-நீங்கி ஆத்மானந்தமடைந்தார்களென்றால், இங்கு-இவ்வுலகில், விடேமென்பார்-என்றும் தேகமே நானென்றுமதித்து தேகத்தைவிட்டு நீங்கோம் என்பார்கள், எவ்வலியால்-எந்தபொய்க்காயாதி கல்பத்தின்பலத்தால், ஓதுவரோ-அங்ஙனம்சொல்வார்களோ தெரியவில்லை. (எ-று) 14.

இங்கிவர்கள் வித்தையா லின்றவத்தால் யோகத்தாற்
பொங்கி வழிந்தார்கள் போலுமவர்—தங்களினு
நித்திரையி னில்லா நிணவுடலை நீடூழி
யெத்திறத்தால் வைப்பா ரிசை.

(இ-ள்) அவர்தங்களினும்-சித்திமுத்திகளிற் சிறந்த வள்ளுவர்-ஔவையார்-சங்கரர்முதலியவர்களினும், இங்கிவர்கள்-இவ்வுலகில் காயாதி கல்பம் சாப்பிட்டு உடலழியாதிருக்கச்செய்வோமெனும் இப்பொய்க்குருக்கள், வித்தையால்-கல்வியினாலும், இன்தவத்தால்-இனிமையான தபசினாலும், யோகத்தால்-இயமம்-நியமம்முதலிய அஷ்டாங்கயோகத்தாலும், பொங்கிவழிந்தார்கள்-உயர்ந்தெழுகினவர்கள், போலும்-போலக்காண்கிறது. நித்திரையில் நில்லா - தூக்கத்தில் நிலைபெறாத, நிண உடலை - மாமிசத்தாலாகிய தேகத்தை, நீடூழி-நெடுங்காலம், எத்திறத்தால்-என்னவலிமையினால், வைப்பார்-அழியாது நிலைக்கச்செய்வார். இசை-சீடனே நீயோசித்துச்சொல்வாயாக. (எ-று) 15.

இசையா வுரைநம்ப லெப்பொழுதுந் தப்பாம்
வசைவருமென் றஞ்சேல் வராது—நிஜமுணர்ந்தோ
ராசிர் வதிப்பா ரலாருரைக ளென்செய்யுஞ்
சீச்சீ யொழியவர்வாய்ச் சித்து.

(இ-ள்) இசையா-பெரியோரசம்மதிக்காத,உரைநம்பல்-மூடரிடபொய்வார்த்தைகளைநம்புதல், எப்பொழுதும்-எக்காலத்திலும், தப்பாம்-தப்பித

மாகும், ஏசைவருமென்று—பொய்க்குருக்களால் சாபம் வருமென்று, அஞ்சேல்—பயப்படாதே, வாராது—நீ உண்மையில் பழகுவையாகில் உன்னிடம் அச்சாபம் பொருந்தாது, நிஜமுணர்ந்தோர்—ஆத்மாநந்தவுண்மையை யறிந்தவர்கள், ஆசீர்வதிப்பார்—உன்னை வாழ்த்துவர்கள், அலானுரைகள்—ஞானிகளல்லாத வஞ்ஞானிகளிடவார்த்தைகள், என்செய்யும்—உன்னை எவ்விதகெதியுஞ்செய்யாது, அவர்வாய்ச்சித்து—அப்பொய்யர்வாயிலிருந்துவரும் பொய்களை யேலாது, சிச்சீஒழி—சீசீ நீக்குவாயாக. (எ-று) 16.

சித்தென்ப தோவறிவு சித்தனறி வானோன்
பொத்தவுடற் காப்பவனே பொய் பொய்பொய்—சுத்தவறி
வாகத் தனித்தே யகண்டப் பெருவெளியிற்
சோகமற வாழ்வோன் றுணி.

(இ-ள்) சித்தென்பதோ—ஞான மென்பதோ, அறிவு—அறிவாகும், அறிவானோன்—அறிவின்வடிவானவன், சித்தன்—ஞானவானாம், பொத்தவுடல்—சர்மத்துவாரம் ரோமத்துவாரங்களை யுடைய பொத்தற்றேகத்தை, காப்பவனே—நானென்று அபிமானித்து காயாதிகல்பம் சாப்பிட்டு காப்பாற்றுபவன்சித்தனே, பொய்-பொய்-பொய்—அப்படி தேகத்தைக்காப்பவனை சித்தனென்பதுமித்தை-மித்தை-மித்தையாகும், சுத்தவறிவாக—களங்கமற்றஞானமாக, தனித்தே—தனிமையுற்றே, அகண்டப் பெருவெளியில்—எல்லாமாகிய பெரிய ஞானாகாசத்தில், சோகமற—அஞ்ஞானம்நீங்க, வாழ்வோன்—வாழ்பவன்தான் சித்தனென்று, துணி—நீதெளிவாயாக. (எ-று) 17.

துணிவதென்றன் சொல்லாலே யன்றகத் தீச
முனியருண்மூன் றாறுதத்வ முற்றும்—பனியகற்றும்
பார்த்தாற்சை தன்னியநூல் பாடிவைத்தார் கொங்கணரும்
பூர்த்திசெய்யுன் சந்தேகம் போம்.

(இ-ள்) துணிவது — சீடனே! நீதெளிவது, என்றன் — ஆசிரியனாகிய என்னுடைய, சொல்லாலேயன்று—வார்த்தையினாலேயல்ல, அகத்தீசமுனி அகத்தியமுனிவரால், அருள் — கிருபைசெய்த, தத்துவம் மூன்றாறு—தத்துவம்மூன்றாறையும், முற்றும்பார்த்தால்—முழுதும் படித்துப்பார்த்தால், பனியகற்றும்—உன்சந்தேகத்தை நீக்கும், கொங்கணரும் — கொங்கணசித்தரும், சைதன்னியநூல் — சைதன்னியசாஸ்திரத்தை, பாடிவைத்தார்—பாடிவைத்தார், பூர்த்திசெய்—அதைமுழுதும்படித்துப்பார்த்தால், தேகம் அழிபொருள்ஞான மழியப் பொருளென உணர்த்தும், உன்சந்தேகம்—இவ்வாறலவெனும் உனதுசந்தேகம், போம்—நாசமாகும். எ-று) 18

போமென்பதார்க்குலகிற் பொய்ச்சொலாப் புண்ணியர்க்கே
தாமெடுத்த வோட்ட தரத்துணிந்து—சாம்பிணநே
ராகபலி யிட்டருத்தி யன்பரென நம்பமனம்
வேகவைக்கும் புல்லருக்கோ வில்.

(இ-ள்) போமென்பதார்க்கு—சந்தேகம் யார்க்குவிடுமென்றால், பொய்ச்சொலா—பொய்ச்சொல்லாத, புண்ணியர்க்கே—தருமவான்களுக்கேயாகும், அன்பரென நம்ப—சீடர்கள் தங்களை சிவனடியார் என்று நம்ப, தாமெடுத்த ஓடே—அப்படிநம்பினசீடர்களுக்கு தாங்கள் பிச்சையெடுத்துண்ட ஓட்டையே, தரத்துணிந்து—கொடுக்கநிச்சயித்து, சாம்பிணநேராக—சாகும்பிணத்துக்குச் சமானமாக, பலியிட்டு—அவர்களிடமிருந்தபொருளைப்பறித்து தின்றுவிட்ட வவ்வருத்தத்தா லவர்களுடல் சாம்பலாம் வண்ணமெரித் துலர்த்தி, அருத்தி—பிச்சையெடுத்துண்ணச்செய்து, மனம்வேகவைக்கும்—அவர்கள்மனதை துக்காக்கினியால் வேகவைக்கின்ற, புல்லருக்கோ—அல்ப ஆசிரியர்கட்கோ, இல்—சந்தேகம்போகிறதில்லை. (எ-று) 19.

இல்லிவர்க்குச் சித்திமுத்தி யில்லைபத்தி யெள்ளளவு
மிலைகாண் மான மிரக்கமிவை—கொல்வேடர்
தன்னிற் கொடியர்பொய்ச் சந்நியாசி சொன்னம்பே
லுன்விதியென் செய்வமென்பா னுன்.

(இ-ள்) இவர்க்கு – இப்பொய்வேட சந்நியாசிகளுக்கு, சித்தி முத்தி இல்—எந்தக்காரியமுடிவாதலும் மோக்ஷமும்இல்லை, பத்தியெள்ளளவும்—கடவுளிடம் அன்புஎள்ளளத்தனையும், இல்லை—இல்லையாம்.மானம், இரக்கம்—பெருமை ஜீவகாருண்யம், இவை இல்லைகாண் – இவைகளும் இல்லையென்பதையறிவாய், பொய்ச்சந்நியாசி—காவி தண்டுகமண்டலம் குடை தரித்த பொய்வேடச்சந்நியாசிகள். கொல்வேடர்தன்னில் – பட்சிமிருகம் முதலிய ஜீவர்களைக் கொல்லுகிற வேடுவர்களினும் கொடியர்—கொடுமையானவர்கள். சொல்நம்பேல்—அக்கொடியர்சொல்லைநம்பாதே, உன் விதி—காயாதிகல்பம்சாப்பிட்டும் உன்தேகம் நிலைக்காதழிந்ததும், பொன்செய்யும்வித்தை உனக்குகைகூடாமற்போனதும் உன்னிடதலையெழுத்துநன்றாயில்லை, என் செய்வம்—என்னசெய்யப்போகிறோம், என்பான்—என்று வஞ்சனையாய்நடிப்பான், உன்—இதையறிந்து அவர்களிடம் சேராதிருக்க எண்ணுவாயாக (என்றவாறு.) 20.

உன்னுமற் கெட்டோ ருலகிலின்று நானையுமுண்
டன்னார்போன் றற்பிழைத்தா ரார்காணும்—பின்னுமல
வமுரிதழைக் கற்பமுண்டிங் காடின்றி யொத்தா
ரமுர்தமுற்ற பேரெவரோ வாய்.

(இ-ள்) உன்னாமல்-பொய்வேட சந்நியாசிகளால் துக்கம்வருமென்று நினையாமல், கெட்டார்-கெட்டவர்கள், உலகில்-பூமியில், இன்றும் நாளையும்-இன்றைக்கும் நாளைக்கும், உண்டு-இருக்கிறார்கள். அன்னார்-அப்பேர்ப்பட்ட சந்நியாசிகளிலும் சீடர்களிலும், பொன்னாற்பிழைத்தார் - செம்பு வெள்ளியைமாற்றி பொன் செய்துகொண்டு ஜீவித்தவர்கள், யார்காணும்-யாரிருக்கிறார்கள்? ஒருவருமில்லை, பின்னும்-பிறகு, மலம் அமுரி - மலத்தையும் மூத்திரத்தையும், தழை கற்பம் - பச்சிலை முதலிய கற்பங்களையும், உண்டு-தின்று, ஆடுபன்றி-தழைதின்னும் ஆட்டுச்சும் மலம்தின்னும்பன்றிச்கும், ஒத்தார் சமானமானார்களேயொழிய, அமுர்தமுற்றபேர் – தேகம் அழியாதிருக்கும்படியான தேவருணவைப் புசித்தவர்கள், எவரோ-எவர்களோ? ஒருவருமில்லையென்பதை, ஆய்-ஆராய்ந்தறிவாயாக. (எ-று) 21.

ஆயாம னன்கை யநாதரித்து நம்பிடுவோர்
நாயா யலைந்து நடுக்கமுற்று—வாய்காய்வா
ராசைசொல்வான் யாவ னவனேசூ தன்யமன்கா
ணாசைவிட்டா னாசா னறி.

(இ-ள்) ஆயாமல்-(தேகம் அழியாது நிலைக்கச் செய்யமுடியாதென்பதையும்-அறிவேதானென்பதையும்) ஆராய்ந்தறியாமல், நன்கை-ஆசிரியர் சொல்லும் நல்லவார்த்தையை, அநாதரித்து - அலட்சியம் செய்து, நம்பிடுவோர்-பொய்வேடசந்நியாசிகளிட சொல்லை நம்புகிறவர்கள், நாயாயலைந்து-பொன்செய்வோமெனும் பேராசையால் நாயைப்போல் ஓரிடத்துநிற்காது அலைந்து திரிந்து, நடுக்கமுற்று-தன்பொருளை யெல்லாம் விற்றுப் பொன் செய்யப்பார்த்தும் அதுமுடியவில்லையேயென்று பயமடைந்து, வாய் காய்வார்-பணம் போச்சே யெனும் துக்கத்தால் வாய்வரண்டு உலர்வார்கள், ஆசைசொல்வான்-தேகம் நசியாதிருக்கும் வித்தை கற்றுக் கொடுக்கிறேன் பொன் செய்துக் கொடுக்கிறேனென்று ஆசையுண்டாகச் சொல்கிறவன், யாவன் அவனே-எவனோ? அவன்தான், சூதன்-மோசக்காரனும், யமன்காண்-உயிரைக் கொண்டு போகும் யமனுமாகும், ஆசைவிட்டான்-ஆசையிலிருந்து நீங்கினவன், ஆசானறி-நல்லாசிரியனென்று அறிவாயாக எ-று.

அறிமயிலே சித்தர்நூ லாதியந்தம் பாரா
வெறியர்பொன் னாசையால் வீணைப்—கரிசுட்டு
மாள்வார்பின் சித்திபெற மங்கையரை வாலையென்று
தாழ்வா ரவரடிக்கிழ்த் தாள்.

(இ-ள்) மயிலே அறி-மயில்போன்றநடையையுடைய பெண்ணேநான் சொல்வதை தெரிந்து கொள்வாயாக, வெறியர்-பொன் செய்வோமெனும் பயித்தியம் பிடித்த பொய்ச்சந்நியாசிகள், சித்தர்நூல் – அகத்தியர்-கொங்க

ணர்-கோரக்கர்முதலிய சித்தர்கள்செய்த நூல்களை, ஆதியந்தம்-முதலிலிருந்து கடைசிவரையில், பாரார்-படித்துப்பாரார்களாகி, பொன்னாசையால்-பொன் செய்யலாமெனும் ஆசையால், வீணாய்க்கரிசுட்டு-செம்பு - வெள்ளி-நாகம்-ரசம் முதலியவைகளைப்பொன்னாக்குதுமென விருதாவாகச்சுட்டுக்கரியாக்கி, மாள்வார் - பொன்னாக்கரிக்கியும் ஆகவில்லையே என்ன செய்வமென்கிறவிசனத்தால்சாவார்கள், பின்-அதன்றியும், சித்திபெற-அணிமா-மகிமாமுதலிய அஷ்டசித்திகளை யடைய, மங்கையரை-பதின்மூன்று வயதுப்பெண்களை, வாலையென்று-வாலையெனும்சத்தியென்று, அவரடிக்கீழ்-அவர்களைபூவால் அலங்கரித்துசாராயம்முதலிய வஸ்துக்களைவைத்து புசிப்பித்தருந்தி அவர்களைப்பூசித்து அவர்கள்பாதத்தின்கீழ், தாழ்வார்கள்-வணங்குவார்கள், தான்-தானேயெனவறிகிலர். எ-று. 23.

தானே யறிவென்றுந் தற்பரனென் றுஞ்சொன்ன
தேனோகைக் கொள்ளா ரிதனினும்—வான்றிரியுஞ்
சித்திபெரி தன்றெனவே செப்பிடுநூ லாயாருக்
கெத்தனைசொன் னாலுமென் னாம்.

(இ-ள்) தானே அறிவென்றும்-தானேஞானமென்றும். தற்பரனென்றும்-அதுவெனும் பரம்பொருளென்றும், சொன்னது-சித்தர்கள் தாங்கள் சொல்லிவைத்தவற்றை, ஏனோ-என்னகாரணத்தாலோ, கைக்கொள்ளார்-ஏற்றுக்கொள்ளார்கள், இதனினும்-இப்படி அறிவேதானென விருப்பதைக்காட்டிலும், வான்றிரியும்-ஆகாயத்தில்பறந் திஷ்டமான விடத்திற் சேர்கிற, சித்தி-சித்திகளானவை, பெரிதென்றெனவே - பெரியதனவல்லவென்றே, செப்பிடுநூல்-சொல்லுகின்றசாஸ்திரங்களை, ஆயாருக்கு-படித்து பரிசோதனைசெய்யாதவர்களுக்கு, எத்தனைசொன்னாலும்-எத்தனைவிதமாய் எடுத்துச்சொன்னபோதிலும், என்னாம்-என்னபிரயோஜனமாகும். எ-று.

என்னும் வசிய விடுமருந்தால் வையகத்தோர்
தன்னை வசமாக்கத் தாமலைவார்—சொன்னபடி
தன்மனது மிந்திரியந் தன்வசத்தில் வைக்கறியார்
பின்னெவரை வைப்பார் பிழை.

(இ-ள்) வையகத்தோர் தன்னை - உலகத்தாரை, வசியம்-வசப்படுத்துகிற மந்திரங்களாலும், இடுமருந்தால்-வசப்படுத்தவைக்கிற ஔஷதங்களாலும், வசமாக்க-தங்கள்பட்சம் வசப்படுத்திக் கொள்ள, தாமலைவார் பொய்வேட சந்நியாசிகள்தாம் அலைவார்கள், என்றும்-இப்படி வசப்படுத்த அலைவது என்ன பிரயோஜனமாகும், சொன்னபடி-பெரியோரும் அவர்களால் செய்தவேதமும்சொன்னபிரகாரம், தன்மனதும்-தன்னுடையமனதையும், இந்திரியம்-ஞானேந்திரியம், கன்மேந்திரியங்களையும், தன்வசத்தில்-தன்ம

யமாக, வைக்க அறியார்-வைக்கத்தெரிந்துகொள்ளாதவர், பின்னவரை-பிறகுளவர்களை, வைப்பார்-தங்கள்வசப்படுத்திவைக்கவல்லவர்கள், பிழை-இதுதப்பிதமாகும். எ-று. 25.

பிழைக்கும் வகையறியாப் பேயர் துலாங் கன்னிக்
குழைக்கவருஞ் சித்தியென் றுன்னித்—தழைதின்று
பத்தியத்தைக் காத்துப் பலகாலுந் துன்புறுவா
ரித்தகையார்க் கென்னுரைப்போ மிங்கு.

(இ-ள்) பிழைக்கும்வகை-அறிவேதாமெனன்றுணர்ந்து ஜீவிக்கும் வழியை, அறியாப்பேயர்-தெரிந்துகொள்ளாத பயித்தியக்காரர்கள், துலாங்கன்னிக்கு - துலாம்லக்கினத்திற்கும் - கன்னியாலக்கினத்திற்கும்பிறந்தவன், உழைக்க-சித்தபெற உழைத்தால், சித்திவரும்-அஷ்டமாசித்தி யுண்டாகும்; என்றுன்னி - என்று நினைத்து, தழைதின்று-மூலிகையைத் தின்று, பத்தியத்தைக்காத்து-பத்தியத்தைக்காப்பாற்றி.பலகாலும் - உள்ளநாளெல்லாம்அநேகந்தடவையும், துன்புறுவார்-சித்திபெறாமல்துக்கமடைவார்கள், இத்தகையார்க்கு-இத்தன்மையுள்ள மூடருக்கு, இங்கு என்-இவ்வுலகில் என்ன விதமாய்உரைப்போம்-எடுத்துச் சொல்வோம். எ-று. 26

இங்குலகர் ஜாதகங்க ளேட்டிலெழு திப்படித்துஞ்
சங்கையறு ரர்கித் தவித்தழுவர்—எங்கு
மகப்பையரைக் காசேபோ லாவதுவே றின்று
மிகப்பார்த்தென் சோதிடத்தை வீண்.

(இ-ள்) இங்குலகர்-இவ்வுலகிலுள்ளஜனங்கள், ஜாதகங்கள்-தாங்கள்பிறந்தநாளை, ஏட்டிலெழுதி-ஓலையில் எழுதி, படித்தும்-பலதரம் படித்துப் பார்த்தும், சங்கையறுராகி-சந்தேகம் தீராதவராகி, தவித்தழுவார்-பலருக்கும்காட்டி இளைத்து வருந்துவார், எங்கும் - எவ்விடத்திலும், அகப்பை-தேங்காய் ஓட்டில் மூங்கில்மாட்டின அகப்பை, அரைக்காசே-அரைக்காசுக்கு விற்கும், போலாவது - போல் ஆவது அல்லாமல், வேறு இன்றும்-வேறே அதிகம்விற்காது (ஆகையால்) சோதிடத்தை-ஜாதகசோதிடத்தை, மிகப்பார்த்தென் - அதிகமாய்ப்பார்ப்பதில் என்ன பிரயோஜனம், வீண்-அவலமாம். எ-று. 27.

வீணே யுடலாசை வீண்மண்பெண் பொன்னாசை
வீண்டன்னைக் காணு விடம்பூசை—வீணேயாஞ்
சந்தகமுஞ் சோதிடமுந் தந்திரமு மந்திரமும்
யந்திரமுங் கற்றென் னிடர்.

(இ-ள்) உடலாசை - தேகாபிமானம், வீணே - விருதாவாகும், மண்-பெண்-பொன்னாசை-மண்-பெண்-பொன் இவற்றின்மீது ஆசைவைத்தல்;

வீண்-பயனற்றதாகும், தன்னைக்காணு-அறிவாகிய தன்னைப் பார்க்காது, இடம்பூசை-இடத்தில் பூசைசெய்தல், வீண்-பயனற்றதாகும், சந்தமும்-நிலக்ஷேத்ராதிகளும், சோதிடமும்-சோதிடம்கற்றலும்பார்த்தலும்,வீணேயாம்-பயனற்றதேயாகும், தந்திரமும்-உபாயமும், மந்திரமும்-நாப்புண்படப்பெயராது உச்சரித்தலும், யந்திரமும்-சூத்திரமும், கற்றென்-தெரிந்து கொண்டால் என்னபிரயோஜனம், இடர்-இவையாவும் துன்பமேயாகும். எ-று.

இடர்துலைக்கும வித்தை யெழிலார்வே தாந்த
முடற்சுகத்தை வேண்டார்க்கீ தொன்று—மடமையால்
வேண்டாது மற்றவற்றை வேண்டியலை வார்க்கிடரே
யாண்டா னிவரடிமை யாம்.

(இ-ள்) எழிலார் - வலிநிறைந்த, வேதாந்தம் - வேதத்துட்பொருளினது, இடா துலைக்கும் - பிறவித்துக்கத்தைநீக்கும், வித்தை - கல்வியாம், உடற்சுகத்தை - தேகசௌக்கியத்தை, வேண்டார்க்கு - விரும்பாதவர்க்கு, ஈது ஒன்றும்-இவ்வேதாந்தவித்தை பொருந்தும். மடமையால்-அறியாமையால், வேண்டாது-வேதாந்தவித்தையைவிரும்பாது, மற்றவற்றை-மற்றவித்தைகளை, வேண்டியலைவார்க்கு-விரும்பி அலைபவர்களுக்கு, இடரே ஆண்டான்-துக்கமே ஆசிரியராகும். இவர் அடிமையாம்-இப்பொய்ச்சீடர் அத்துக்கத்திற்கு அடிமையாவார். எ-று. 29.

அடிமையெவ ஞண்டா னெவனையோ பாவங்
கெடுதுயிலை யாயாத கேட்டாற்—கொடுநரகுக்
காளாவார் செல்லை யருளுபதே சம்மெனவே
வாளாகா லம்போக்கு வார்.

(இ-ள்) ஐயோ! அந்தோ! அடிமை எவன்-அறிவைவிட்டு அடிமையென்பவன் எவன்?, ஆண்டானெவன் - ஆசிரியனென்பவன் எவன்?, பாவம் கெடும் - நினைப்பு நாசமாகிற, துயிலையாயாத - நித்திரையை விசாரியாத, கேட்டால்-கெடுதியினால், கொடுநரகுக்கு - *இரௌரவாதி முதலிய இருபத்தெட்டு கொடுமையான நரகத்திற்கு, ஆளாவார் சொல்லை-அடிமையாகின்றவர்கள்வார்த்தையை, அருளுபதேசம்-கிருபையானஉபதேசம், எனவே-என்றுநினைத்தே, வாளா-வீணாக, காலம் போக்குவார்-தங்கள் வாழ்நாளைப் போக்குவார்கள். எ-று. 30.

---

* இரௌரவம், மகாரௌரவம், தாமிசிரம, அந்ததாமிசிரம், கும்பிபாகம், காலசூத்திரம், அசிபத்திராரண்ணியம், சூகரமுகம், அந்தகூபம். கிருமிபோசனம், சந்தம்சம், சந்தசூர்மி, வச்சிரகண்டம, சலவசதி, வைதருணி, பூயோதம், தப்தலோகம், பிரோதம் விசாசனம், இலாலாபக்ஷம், சாரமேயோதனம், அவீச்சிரயபாசனம், க்ஷாரகர்த்தமம். இரக்ஷோகண போஜனம், சூலப்பிரோதம், தந்தசூகம், நிரோதனம், பரியாவருத்தனம், சூசிமுகம் ஆக. 28.

வார்பூண் டனத்தாய் மயக்கறலே முத்தியலா
தார்கண்டார் மற்றவற்றை யாயுங்கால்—பேர்மாத்
திரமாகு மேட்டி லிருக்குமெண்ணென் சித்தி
தரமுத்தி வீணவற்றைத் தள்

(இ-ள்) வார்பூண்டனத்தாய்-ரவிக்கைதரித்த முலையையுடைய பெண்ணே!, மயக்கறலே - அஞ்ஞானம் நீங்குதலே, முத்தியலாது - மோக்ஷமல்லாது, மற்றவற்றை-மற்றசித்துகளை, ஆர்கண்டார்-ஆர்பார்த்தார்கள், ஆயுங்கால் - விசாரிக்குமிடத்து, ஏட்டிலிருக்கும் - புத்தகத்திலெழுதியிருக்கும், எண்ணெண்சித்தி-அஷ்டமாசித்திகளென. பேர்மாத்திரம் ஆகும்-பேர்மாத்திரம் கூறலாகும், முத்திதர - ஞானிகள் உனக்குமோக்ஷம் கொடுக்க (நீவிரும்பினால்), அவற்றை - அச்சித்துகளை, வீண் தள்-பயனற்றதென்று நீக்கு. எ-று. 31.

தள்ளுதற்குங் கொள்ளுதற்குந் தான்றலைவ னல்லாம
லெள்ளளவுங் காணே மிகபரங்க—ளுள்ளனவே
யானு மாகாவிடத்துந் தனைமறந்திங்
கேனோ மயங்கலக மின்று.

(இ-ள்) தள்ளுதற்கும்-நீக்குவதற்கும், கொள்ளுதற்கும்-ஏற்பதற்கும், தான் தலைவன்-தானே எஜமானன், அல்லால் - அல்லாமல், எள்ளளவும்-எள்ளத்தனையும், காணேம் - வேறொருவனிருக்கக் கண்டிலோம், இகபரங்கள்-இகலோகபரலோகங்கள், உள்ளனவே - இருக்கிறதாகவே, ஆனாலும்-ஆனாலும், ஆகாவிடத்தும்-இல்லாதவிடத்தும், தனைமறந்து-அறிவாகிய தன்னைமறந்து இங்கு-இவ்வுலகில், ஏனோமயங்கல்-ஏன்மயங்கவேண்டும், அகமின்று-அப்படிமயங்க தன்னையன்றி இடமில்லை. எ-று. 32.

ஆகசெய்யுள் 249.

---

## வேயினைசயூதல்.

***

அல்லறக டந்தறி வாகிப்பி றைத்தோருக்
கில்லைம ரணமென் றாதுகுழல்
இகபரம் வேண்டாமென் றாதுகுழல்.

(இ-ள்) அல்லற்கடந்து - பிறவித்துன்பத்திலிருந்து நீங்கி, அறிவாகி-ஞானமயமாகி, பிறைத்தோருக்கு-ஜீவித்தவருக்கு, மரணம் சாவு, இல்லையென்று-இல்லையென்று, குழல் ஊது - புல்லாங்குழலை ஊது, இகபரம்-இவ்வுலகத்தையும் மேலுலகத்தையும், வேண்டாமென்று - விரும்பேனென்று, குழல் ஊது-புல்லாங்குழலை ஊது. எ-று.

வேண்டாமை யன்னவி ழுச்செல்வ மில்லென்று
மாண்டாரு ரைத்தாரென் றூதுகுழல்
மறுப்போர் மடயரென் றூதுகுழல்.

(இ-ள்) வேண்டாமை — எந்த உலக சுகமும் தனக்குவேண்டாமென்று சொல்வதற்கு, அன்ன—சமானமான, விழுச்செல்வம்—சிறப்பான ஐஸ்வரியம், இல்லென்று—இல்லையென்று, மண்டார்—மனமிறந்தவர், உரைத்தாரென்று—சொன்னாரென்று, குழலூது—புள்ளாங்குழலையூது, மறுப்போர்—இஃதல்ல வென்று தடுப்பவர், மடயரென்று—அஞ்ஞானிகளென்று, குழல் ஊது—புள்ளாங்குழலை ஊது. எ-று. 2

தோற்றம றைப்புத் துயிலன வென்றுணர்ந்
தேற்றம டைந்தேனென் றூதுகுழல்
இறையவ னானேனென் றூதுகுழல்.

(இ-ள்) தோற்றம் — காணப்படுகிற சராசரப்பொருள் யாவும், நனவு என்று—என்னினைப்பின்வடிவான சாக்கிரசொப்பன அவஸ்தைகளென்றும், மறைப்பு—சராசரப்பொருள்கள் தோன்றாமற் போவது, துயிலென்று—என் னினைப்பற்ற நித்திராவவஸ்தையென்றும், உணர்ந்து—அறிந்து, தேற்றம்—அறிவேநானெனும் தெளிவை, அடைந்தே னென்று — பெற்றேனென்று, குழலூது—புள்ளாங்குழலையூது (அப்போது), இறையவன்—கடவுளே, ஆனே னென்று—ஆயினேனென்று, குழலூது—புள்ளாங்குழலையூது. எ-று. 3.

தனுகர ணபுவ னபோகம் வேண்டில
ரெனிலிற வாரேயென் றூதுகுழல்
ஈசனே யாவரென் றூதுகுழல்.

(இ-ள்) தனு-கரணம் — சரீரமும்-அந்தக்கரணமும், புவனம்—பூமியும், போகம்—சுகபோகமும், வேண்டிலரெனில் — விரும்பாதவரெனில், இற வாரேயென்று—சாவாதவர்களேயென்று, குழலூது — புள்ளாங்குழலையூது, ஈசனே—கடவுளே, ஆவரென்று—ஆவார்களென்று, குழலூது—புள்ளாங்கு ழலையூது. எ-று, 4.

சிற்றறி வுபோ றிவிரண் டென்பவர்
கற்றும றிவில்ல ரூதுகுழல்
கழலார் பிறவியென் றூதுகுழல்.

(இ-ள்) சிற்றறிவு—சின்னஞானம், பேரறிவு(என)—பெரியஞானமென, இரண்டென்பவர்—இரண்டுஞானமுளவென்று சொல்பவர், கற்றும்—வேதா கமபுராணங்களைப் படித்தறிந்தும், அறிவில்லர் (என்று) — ஞானமில்லாதவ

சென்று, குழலூது-புல்லாங்குழலையூது, பிறவி - பிறப்பிலிருந்து, கழலா ரென்று-நீங்கார்களென்று, குழலூது-புல்லாங்குழலையூது. எ-று. 5.

பூசையும் வேண்டார்மெய்ப் போகமும் வேண்டார்நி
ராசைவி டாதவ ரூதுகுழல்
ஆனாய்த் திகழ்வாரென் றூதுகுழல்.

(இ-ள்) நிராசைவிடாதவர் - ஆசையற்றிருப்பதி லிருந்து நீங்காதவர், பூசையும் வேண்டார்-விக்கிரக ஆராதனையும் விரும்பார்கள், மெய்ப்போகமும்-உடலால் அடையும் சம்பத்தையும், வேண்டார் (என்று) - விரும்பார்களென்று, குழலூது-புல்லாங்குழலையூது (அத்தன்மையர்), ஆனாய் - சிவனாய், திகழ்வாரென்று - பிரகாசிப்பாரென்று, குழலூது-புல்லாங்குழலையூது. எ-று. 6.

ஆநந்த மோம்பி யலையுந் தொழிலறத்
தானேதா னாவாரென் றூதுகுழல்
தரிக்குஞ் சுகமென வூதுகுழல்.

(இ-ள்) ஆநந்தம் ஓம்பி - சந்தோஷத்தைவிரும்பி, அலையும் - வருந்துகின்ற, தொழிலற-வேலையிலிருந்துநீங்கி நிற்பார்களாகில், தானே தான்-ஆன்மவடிவமாகிய தானேதானாக, ஆவாரென்று - ஆவார்களென்று, குழலூது-புல்லாங்குழலூது (அப்போது), சுகம்-ஆன்மாநந்தசந்தோஷம், தரிக்குமென-தங்குமென்று, குழலூது-புல்லாங்குழலையூது. எ-று. 7.

இன்ப வடிவேநா மில்லையெ னிற்பள்ளி
துன்பமி லாமையென் றூதுகுழல்
துரியத்தென் னேதுக வூதுகுழல்.

(இ-ள்) நாம் இன்பவடிவே-நாம்சுகவடிவே, இல்லையெனில் - இல்லையென்று சொல்வாயானால், பள்ளி-தூக்கத்தில், துன்ப மிலாமையென்று-நாம் துன்பமில்லாதிருக்கிறோமென்றதை யறிந்து, குழலூது-புல்லாங்குழலூது, துரியத்து - சகலத்திற்குமாதாரமான அறிவில், என்னேதுக - என்னென்று சொல்லுக, குழலூது-புல்லாங்குழலூது. எ-று. 8.

எல்லாம றிவானி றையென்று கண்டதே
தல்லாதி றையில்லை யூதுகுழல
அறிவிரண் டில்லையென் றூதுகுழல்.

(இ-ள்) அறிவால்-ஞானத்தினால், எல்லாம்-யாவற்று சராசரத்தோற் றங்களும், இறையென்று - ஈசன்சொரூபமென்று, கண்டது-பார்த்தது,

எதோ-எந்த அறிவோ?, அது அல்லாது-அந்த அறிவல்லாது, இறையில்லை (என)- கடவுள்வேறேயில்லையென்று, குழலூது-புள்ளாங்குழலூது, அறிவு இரண்டு-ஞானம் சிறிதுபெரிதென இரண்டுபேதமாக, இல்லையென்று, குழலூது-புள்ளாங்குழலூது. எ-று, 9

பொத்தவு டலோர்பொரு ளென்று காவாதோ
ரெத்திறத் தோரேனு மூதுகுழல்
இடருற்று ழலாரென் றூதுகுழல்.

(இ-ள்) பொத்தவுடல் - சர்மத்துவாரம் ரோமத்துவாரமுள்ள சரீரத்தை, ஓர்பொருளென்று-அழியாத ஒருவஸ்துவென்று, காவாதோர்-காப்பாற்றாதவர், எத்திறத்தோரேனும்-எவ்வகைப்பட்டவராயினும், இடருற்று-துன்பமடைந்து, உழலாரென்று-பிறவியிற் சுழலாரென்று. குழலூது-குழலாகிய-பள்ளங்குழலூது குழலூது. எ-று. 10

சித்திகள் வேண்டிச்சி றுமையடைபவர்
சுத்தவெ றியரென் றூதுகுழல்
சுகரூப மாகாரென் றூதுகுழல்.

(இ-ள்) சித்திகள்வேண்டி-(ஆன்மாப்போல் சூட்சுமமாகுமணிமாவும்-மகத்துவமாகும் மகிமாவும்-தன்னுடற்கண்டிப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றையுருவவல்லவனுதலாகும் கரிமாவும்-இலகுத்துவமாகியலகிமாவும்-வேண்டுவனவுடைதலாகியபிராத்தியும்-நிறையுளனாதலான பிராகாமியமும்-ஆட்சியுளனாதலான ஈசத்துவமும்-எல்லாந்தன்வசமாக்க வல்லவசித்துவமுமாகிய. அஷ்டசித்திகளைவிரும்பி,(கிடைக்காமல்). சிறுமையடைபவர்-துன்பமடைவர், சுத்தவெறியரென்று-முழுபயித்தியக்காரரென்று, குழலூது-புள்ளாங்குழலூது, சுகரூபம்-ஆத்மாநந்த சந்தோஷவடிவம், ஆகாரென்று - ஆகாரகளென்று, குழலூது-புள்ளாங்குழலூது, எ-று, 11.

தன்னினை வில்லாத் தலத்தீச னெமன்வந்
தென்னேபு ரிவாரென் றூதுகுழல்
இடர்சுக மோராரென் றூதுகுழல்.

(இ-ள்) தன்னினைவில்லா - தன்னுடையமனம் ஈசன் எமன் வடிவமில்லாத, தலத்து, இடத்தில், ஈசன்-கடவுளும், எமன்-யமனும், வந்து-வந்து என்னேபுரிவார் - என்னசெய்வார் (பயாபயங்கள் தோற்றுவாம்), என்று-என்று, குழலூது; புள்ளாங்குழலூது, இடர்-யமனால் வரும்ப்புக்கம் பனுதிகளும்; சுகம்-கடவுளால்வரும் அபயவீங்காரமும்; ஓரார்-[illegible]-(மனமில்

லாதிஞல்) அறியார்களென்று, குழலூது-புள்ளாங்குழலூது புள்ளாங்குழ லூது. எ-று. 12.

எத்தேச காலமி ராதோநி ஜாங்தஞ்
சத்தேதா ஞகிடி லூதுகுழல்
ஜகசாட்சு யாவரென் றூதுகுழல்.

(இ-ள்) சத்தே - அழியாத அறிவே, தானுகிடில் - தானேயாமானல், நிஜாங்தம்-உண்மையாகிய சந்தோஷம், எத்தேசகாலம்-எத்தேசகாலங்களி லும் (எப்போதும்) இராதோ - இராதோ? இருக்குமென்று குழலூது-புள்ளாங்குழலூது, ஜகசாட்சி-தான் உலகத்திற்குசாட்சியாக, ஆவாரென்று-ஆவாரென்று, குழலூது-புள்ளாங்குழலூது எ-று. 13.

சித்தாகுந் தானிச்ச டத்தாற்சு கம்வேண்டன்
மெத்தவ றிவீன மூதுகுழல்
வெகுநாட்ப ழக்கமென் றூதுகுழல்.

(இ-ள்) சித்தாகும் தான்-அறிவாகியதான், இச்சடத்தால்-இந்த அசத் தாகிய தேகாதி பிரபஞ்சத்தால், சுகம்வேண்டல் - சந்தோஷம் விரும்பல், மெத்த அறிவீனம் என-மிகவும் புத்தியீனமென்று, குழலூது-புள்ளாங்கு ழலூது, வெகுநாள்-அநேகஜனனங்களில்அடைந்த,பழக்கமென்று-வாசனை யென்று, குழலூது-புள்ளாங்குழலூது. எ-று. 14.

ஆதார மாகும றிவுக்கோ ராதாரம்
பேதாய்வி ரும்பாதே யூதுகுழல்
பெரிதெத ஞலோர்வை யூதுகுழல்.

[இ-ள்] பேதாய்-அறிவீனனே, ஆதாரமாகும்-சகல [சகலசராசரவஸ் துக்களுக்கும்] நிலையாகிய, அறிவுக்கு-ஞானத்திற்கு, ஓராதாரம்-ஒருநிலை [வேறு இருப்பதாக] விரும்பாதே [என] ஆசைப்படாதேயென்று, குழ லூது-புள்ளாங்குழலூது, பெரிது - பெரிதாகியதை [அறிவாலல்லாமல்], எதனல் ஓர்வை-[என] எதனல் அறிந்துகொள்வை என்று, குழலூது-புள் ளாங்குழலூது. எ-று. 15

தற்போத மென்பது தானுட லென்றுன்ன
லற்பரே றென்பாரென் றூதுகுழல்
அநுபவ மில்லாரென் றூதுகுழல்.

[இ-ள்] தானுடலென்று-அறிவாகிய தான் தன்சரீரமென்று, உன் னல்-நினைத்தல், தற்போதமென்பது-அகங்காரமென்பது ஆகும், அற்பர்-

மூடர்கள், வேறென்பாரென்று—உடலைவிட்டு அறிவைநானென்பதும் தற்போதமென்பார் என்று, குழலூது — புள்ளாங்குழலூது. அநுபவமில்லரென்று—அறிவே நானெனும் அநுபவமில்லாரென்று குழலூது—புள்ளாங்குழலூது, எ-று. 16

தற்போத நீக்கந் தனைக்கண்ட வாநந்த
சிற்போத நாமென வூதுகுழல்
சிவம்வே றிலையென வூதுகுழல்.

(இ-ள்) தற்போத நீக்கம் — சரீரம் நானென்னும் அகங்காரம் நீக்குதலானது, தனைக்கண்ட ஆநந்தம்—ஆன்மாவாகிய தன்னைக் கண்ட சந்தோஷமாகும், சிற்போதம்—ஞானபோதம், நாமென—நாமென்று குழலூது—புள்ளாங்குழலூது, சிவம்—மங்களகரமான கடவுள். வேறில்லையென — வேறிலையென்று குழலூது—புள்ளாங்குழலூது. எ-று. 17

வாக்குமனதிற்கெட் டாவான்பொருடன்னை
வந்தித்தற் காமோவென் றூதுகுழல்
மௌனம்வி டாதேயென் றூதுகுழல்.

(இ-ள்) வாக்குமனதிற்கு—வாக்கிற்கும் மனதிற்கும், எட்டா—எட்டாத வான்பொருடன்னை—உயர்வாகிய அறிவெனும் வஸ்துவை வந்தித்தற்கு—வணங்குவதற்கு ஆமோவென்று — ஆகுமோ வென்று, குழலூது—புள்ளாங்குழலூது, மௌனம்—(மனம் சத்வகுணமுற்று) மவுனமாயிருத்தலை, விடாதேயென்று—விடாதேயென்று, குழலூது—புள்ளாங்குழலூது, எ-று. 17

இக்கால மக்கால மென்பதி லாமலே
யெக்கால மும்வாழ்வோ மூதுகுழல்
இரண்டற் றறிவாகி லூதுகுழல்.

(இ-ள்) இரண்டற்று — துவைதமில்லாமல், அறிவாகில் — ஏகமான ஞானமயமாகில்; இக்காலம் — இந்தநாள், அக்காலம்—அந்தநாள், என்பது—எனும்பேதம். இலாமலே — இல்லாமலே. எக்காலமும் — எந்நாளும் வாழ்வோ(மென்) — ஞானாநந்தமாய் வாழ்வோமென்று. குழலூது குழலூது — புள்ளாங் குழலூது குழலூது. [எ-று] 19.

மூலிகை யாலேமு யலும்பல் சித்திக்குக்
காலப யமுண்டென் றூதுகுழல்
கலைஞானம் நில்லாதென் றூதுகுழல்

(இ-ள்) மூலிகையாலே — பச்சிலை மூலிகைகளாலே, முயலும் — முயற்சிசெய்யும், பல்சித்திக்கு — பலவகை சித்துகளுக்கு. காலபயம் — மழைக்

காலத்தில் அகப்படும் மூலிகை வெயிற்காலத்தில் அகப்படாதெனும் அச்சமும், வெயிற்காலத்தில் அகப்படும் மூலிகை மழைக்காலத்தில் அகப்படாதே னும் அச்சமும்,) உண்டென்று – உளதென்று, குழலூது-புள்ளாங்குழலூது, கலைஞானம் – சாஸ்திரஞானம், நில்லாதென்று – நிலைக்காதென்று, குழலூது-புள்ளாங்குழலூது. எ-று 20.

ஆக. செய்யுட்கள் 269.

## சீர்பாதவல்லபஞ் செப்பரிதேனல்.

(–)

எல்லாமு நானு யிருந்திடப் பெற்றே
னிரண்டற் றறிவா யிலகிடப் பெற்றேன்
பொல்லாப்பி றவிக ழன்றிடப் பெற்றேன்
புறம்பக மற்ற பூரணத்தை யுற்றே
னில்லாம னதை நிறுத்திடப் பெற்றே
னிறைவுங் குறைவு நினைவாகப் பெற்றேன்
வல்லவ னாதமு னிக்குரு நற்றாள்
வழங்கிய பேறென் வழுத்துக தோழி.

(இ-ள்) எல்லாமும்-எல்லா சராசரப்பொருளிடங்காலங்களும், நானுய் இருந்திட – தன்மயமாகியிருக்க, பெற்றேன்–அடைந்தேன், இரண்டற்று–துவிதநீங்கி, அறிவாய்-ஞானமாய், இலகிடப்பெற்றேன் – பிரகாசிக்கவறிந்தேன், பொல்லாப்பிறவி – ஈனமாகியஜனனம், கழன்றிட – இலாதிருக்க, பெற்றேன்–வறிந்தேன், புறம்பகமற்ற – வெளியுள்ளெனும்பேதம் நீங்கிய, பூரணத்தை–நிறைவை, உற்றேன்–சேர்ந்தேன். நில்லாமனதை–நிலைக்காதலையும் மனதை, நிறுத்திட–நிலைப்படுத்த, பெற்றேன் – அறிந்தேன், நிறைவும்-குறைவும்–பெருகுதலும்-சிறுகுதலும், நினைவாக–எண்ணமாக, பெற்றேன்–அறிந்தேன், தோழி–என்பாங்கியே, வல்லவனாதமுனிக்குரு–சமர்த்தனாகிய நாதமுனியெனும் ஆசிரியரது; நற்றாள்–நல்லபாதங்கள், வழங்கிய பேறு – தந்தசெல்வத்தை, என்வழுத்துக – என்னென்று சொல்வேனடி, எ-று, 1.

சத்தா யுலகசத் தாகவும் பெற்றேன்
ஜகத்துக்க மாயாழி யாவின்ப முற்றேன்
சித்தா யுலகு சடமாகப் பெற்றேன்
சிவஞானத் தோற்ற மயமாக விட்டே

னித்திய னாகி நிஜாநந்த முற்றே
   னிலையா விடய சுகம்யாவு மற்றேன்
றத்தொழி நாதமு னிக்குரு நற்று
டருபே றுரைக்குந் தரமல்ல தோழி.

(இ-ள்) சத்தாய்-நான் அழியாதவனாகவும், உலகு அசத்தாகவும் - உலகை அழிபொருளாகவும், பெற்றேன் - அறிந்தேன், ஜகந்துக்கமாய் - உலகத்தை துக்கசொரூபமாகவும், அழியாவின்பம்-எனைக்கெடாத சுகச்சொரூபமாகவும், உற்றேன்-அடைந்தேன், சித்தாய்-எனை அறியும்ஞானமயமாகவும், உலகுசடமாக-உலகை அறிபடு பொருளாகவும், பெற்றேன் - அறிந்தேன், சிவனாகி-எனை நான் அழியாச்சிவசொரூபனாகி, தோற்றம் - காணும்சராசரப்பொருள்களை, அவமாகவிட்டேன்-பயனில்லாத கனாவிற்காணுந் தோற்றப்பொருளாக வெண்ணினேன், நித்தியனாகி-நான் எப்போது முள்ளவனாகி, நிஜாநந்தமுற்றேன் - உண்மையான சந்தோஷத்தை யடைந்தேன், நிலையா-நிலைபெறாத, விடயசுகம்யாவும்-மண் - பெண் - பொன்னுடலுலகசாத்திரவாசனாவிடயசுகம்எல்லாவற்றையும்,அற்றேன்-நீக்கினேன்,தோழி-என்னிடபாங்கியே, தத்தொழி - பிறவிசங்கடத்திலிருந்து நீக்கின, நாதமுனிக்குரு - நாதமுனியெனும் ஆசிரியரது, நற்றாள் - நல்லபாதங்கள், தருபேறு - கொடுத்த செல்வமானது, உரைக்கும்தரமல்ல - சொல்லுமளவையுடையதல்ல. எ-று. 2.

முக்கால மற்ற முதலாகப் பெற்றேன்
   முடைநா றுடல்யா னெனல்விட்டு விட்டேன்
சிக்கறச் செத்து சாகாமணம் பெற்றேன்
   சிறுமை பெருமை வெறுமைகை விட்டே
னெக்குறை யுந்தீர்ந் தெனின்மோக்க முற்றே
   னெனக்கேன்வை குண்டங் கயிலைகை விட்டேன்
சக்கரு ணாதமு னிதந்த நற்று
   டருபே றுவகைக் கரைணது தோழி.

(இ-ள்) முக்காலமற்ற-இறப்பு-எதிர்வு-நிகழ்வெனும்மூன்றுகாலம் நீங்கின, முதலாகபெற்றேன்-மூதற்காரணவத்துவாக நின்றேன், முடைநாறுடல்-புலால் நாற்றம்வீசும்தேகத்தை, யானெனல் - நானென்று சொல்வதையுங்கொள்வதையும், விட்டுவிட்டேன்-முற்றுறநீக்கினேன், சிக்கறசெத்தும்-களங்கம்நீங்கநாசமாகியும், சாகாமணம்-இறவாதசத்துவசேடமணத்தை, பெற்றேன் - அடைந்தேன், சிறுமைபெருமை - தாழ்வென்பதும் உயர்வென்பதும், வெறுமை-ஒன்றுமில்லாவார்த்தையென், கைவிட்டேன்-விட்டுநீங்கினேன், எக்குறையும்-எவ்விதசிறுமையும், தீர்ந்து-நீங்கி, எனில் - ஆன்மாவாகிய என்னிடத்தில், மோக்கமுற்றேன், மோக்ஷ சுகத்தைப் பெற்றேன்,

வைகுண்டம்—இனிவைகுண்டமும், கயிலை—கைலாயமும், எனக்கேன்—என க்கு என்னத்திற்கு என்று, கைவிட்டேன்—விட்டுநீங்கினேன், தோழி—என் பாங்கியே, சக்கருள்—ஞானக்கண்கொடுத்த, நாதமுனிதந்த — நாதமுனியெ னும் ஆசிரியர்கொடுத்த, நற்றுள்—நல்லபாதங்கள், தருபேருவகைக்கு—கொடு த்தபெரிய சந்தோஷத்திற்கு, அரணேது—எல்லை ஏது. எ-று. 3.

என்னிலே யெல்லா மிருக்கவும் பெற்றே
னெவற்றுள்ளு நானின் றிருக்கவும் பெற்றேன்
பின்னிலன் முன்னில னுகவும் பெற்றேன்
பிறப்புமி றப்புமறப்புங்கை விட்டேன்
றன்னிலே தானு யிருக்கவுங் கற்றேன்
சமாதியி தென்றசங் காநிலை பெற்றேன்
மன்னிய நாதமு னிக்குரு நற்றுள்
வழங்கிய பேற்றுக் கொழிவேது தோழி.

(இ-ள்) என்னிலே—அறிவாகிய என்னிலே, எல்லாமிருக்கவும்—எல்லா சராசரப்பொருள்களிருக்கவும், பெற்றேன் — அறிந்தேன், எவற்றுள்ளும்— எல்லாசராசரப்பொருள்களுள்ளும், நானின்றிருக்கவும்—நானிலைத்து இருக் கவும், பெற்றேன்—அறிந்தேன், பின்னிலன்—பின்னென்பதும், முன்னில னுகவும்—முன்னென்பதும் இல்லாதவனுக, பெற்றேன்—எனை அறிந்தேன், பிறப்பும் — ஜனித்தலும், இறப்பும்—சாதலும், மறப்பும் — தனைமறந்திருத்த லும் பொய்யென, கைவிட்டேன்—உண்டெனும் சத்திராதிகளை ஏற்காதவ னுகிக்கைவிட்டேன், தன்னிலே—அறிவாகிய தன்சொருபத்திலே, தானுயிருக் கவும்—தானாகவே இருக்கவும், கற்றேன்—அறிந்துகொண்டேன், இதுசமாதி யென்று—அப்படிக்கறிதலையேநிருவிகற்பசவிகற்கசமாதிகளென்று, அசங்கா நிலை — சலனமற்றநிலையை, பெற்றேன்—அடைந்தேன், தோழி — என்பாங் கியே, மன்னிய—நிலைமையுற்ற, நாதமுனிக்குரு—நாதமுனியெனும் ஆசிரிய ரது, நற்றுள்—நல்லபாதங்கள், வழங்கிய—கொடுத்த, பேற்றுக்கு—செல்வத்தி ற்கு, ஒழிவேது—தவிர்தலெங்குண்டு. எ-று. 4.

ஆதார மாறுங் கடந்திடப் பெற்றே
னறுசமயங்களை சத்தாகப் பெற்றேன்
பூதாதி ஞாலம்வெண் டேரெனப் பெற்றேன்
பொறிபுல னுதிய திவாகப் பெற்றேன்
வேதாந்த மௌனம் விளங்கிடப் பெற்றேன்
விருப்பு வெறுப்புஞ் சலிப்புங்கை விட்டேன்
முதாவா நாத முனிக்குரு நற்று
டரும்பே றிசைக்கற் கரிதடி தோழி.

(இ-ள்) ஆதாரமாறும்—மூலாதாரமுதலிய ஆறாதாரங்களும் ஆறிந்திரி யங்களும், கடந்திட—தாண்டியறிவுமயமாக, பெற்றேன் — எனையறிந்தேன்,

அறுசமயங்கள்-சைவம்-வைணவமாதி ஆறுட்சமயங்களும் - இவையல்லவாதி புறச்சமயங்களும். அசத்தாக-பொய்க்கற்பனையாக, பெற்றேன்-அறிந்தேன் பூதாதிஞாலம்-பிரிதிவி-அப்புமுதலிய பூதபௌதிகவுலகத்தை, வெண்டேரென-கானற்ஜலம்போலொத்தது என, பெற்றேன்-அறிந்தேன், பொறியுணர்தி-ஞானேந்திரியங்களையும் அவற்றின்விஷயங்களையும், அறிவாக-சொரூபஞானமாக, பெற்றேன்-அறிந்தேன். வேதாந்தமௌனம்-வேதங்களின் முடிவாகக்கூறும் மோனசுபாவமானது, விளங்கிட - தெரிய, பெற்றேன்-அறிந்தேன். விருப்பும்-ஆசையும், வெறுப்பும்-நிராசையும், சலிப்பும்-நிந்தித்துக்கொள்ளுதலும், கைவிட்டேன் - விட்டுநீங்கினேன், தாதாவாம் ஈகையாளனாகிய. நாதமுனிக்குரு-நாதமுனி எனும் ஆசிரியனிட, நற்றாள்-நல்ல பாதங்கள். தருபேறு-கொடுத்த செல்வமானது. இசைத்தற்கு அரிது-இப்பேர்ப்பட்டதென்று சொல்வதற்கு அருமையானது என்பதை, தோழி-எனதுபாங்கியே, அறி-நீ அறிவாயாக. எ-று. 5.

அகம்பிரம மென்றே யறைந்திடப் பெற்றே
　னறிவறி யாமை யகன்றிடப் பெற்றேன்
சுகந்தேடல் விட்டுச் சுகநிறை வுற்றேன்
　சுஜாதிவி ஜாதி சுவகத மற்றேன்
நிகம்பர னாகித் திகழொளி பெற்றேன்
　றிணையைந்து பாலுமூ விடங்கெடப் பெற்றேன்
மகத்தாகு நாத முனிதந்த நற்றாள்
　வழங்கிய பேறு வரம்பற்ற தேதோழீ.

(இ-ள்) அகம் பிரமம் என்றே - நானெனுஞ் சொற்கிலக்கியமே பிரமசொரூபமென்று, அறைந்திட-சொல்ல, பெற்றேன்-அறிந்தேன். அறிவறியாமை-ஞானஞ்ஞான பிரதிபலனசித்துஞ்ஜடங்களும், அகன்றிட-நீங்கிட, பெற்றேன்-அறிந்தேன். சுகந்தேடல் விட்டு - ஆநந்தம் சம்பாதித்தலைநீக்கி, சுகநிறைவு-பூரணாநந்தத்தை, உற்றேன்-சேர்ந்தேன், சுஜாதி - மரத்திற்கு மரம் சொந்தஜாதியா மாறுபோன்றதும், விஜாதி - மரத்திற்கு கல் வேறுஜாதியென்பதையும், சுவகதம்-மரத்தின்வேர்-அடிமரம்-கிளை-இலை-பூ-பிஞ்சு-காய்-பழம் முதலிய பேதம் ஒன்றிலே பிறத்தலென்பதையும் விட்டு, அற்றேன்-இலாதவனாகினேன், நிகம்பரனாகி - நிருவாணியாகி, திகழொளி - விளங்கும்பிரகாசத்தை, பெற்றேன்-அடைந்தேன், திணை-அஃறிணை, உயர்திணையும், ஐந்துபால்-ஆண்-பெண்-பலர்-ஒன்றன்-பலவின் எனும், ஐம்பாலும், மூவிடம்கெட-தன்மை-முன்னிலை-படர்க்கைஎனும் மூன்றிடங்களும் நாசமாகவும், பெற்றேன்-அடைந்தேன், மகத்தாகும்-மகாத்மாவாகிய, நாதமுனிதந்த-நாதமுனியெனும் ஆசிரியர்கொடுத்த, நற்றாள் - நல்லபாதங்கள் வழங்கிய பேறு - கொடுத்த செல்வம், வரம்பற்றதே - எல்லையற்றது தோழீ. எ-று. 6

சரியை கிரியை தவம்யோகம் விட்டேன்
  சதாநிட்ட னாகித் தனினிற்கப் பெற்றத்
துரியபரம்பொரு ளாகவும் பெற்றேன்
  துயர்சுற்றஞ் சொன்மாத் திரமாகப் பெற்றேன்
பெரியார்சிறியாரெ னும்பேத மற்றேன்
  பிரிவுஞ்செறிவுங் குறைவுங்கை விட்டே
னறிவாக நாதமுனிதந்த நற்றா
  ளருளிய பேற்றுக் களவேது தோழி.

(இ-ள்) சரியை கிரியை-நல்லொழுக்கமும்-நற்றொழிலும், தவம்-யோகம்-உபவாசாதிசரீரகஷ்டமும்-இந்திரியாதியடக்கும் அடகருமமும், விட்டேன்-நீக்கினேன், சதாநிட்டனாகி-எப்போதும் மனச்சையோகமற்றிருப்பவனாகி, தனில் நிற்க - ஆத்மாவாகிய தன்னில் நிலைத்திருக்க, பெற்று - அடைந்து. அத்துரிய - அந்தசகலத்திற்கு மாதாரஞானமான, பரம்பொருளாகவும்-மேலான வஸ்துவாகவும், பெற்றேன்-அடைந்தேன்; துயர்சுற்றம் துக்கஞ்செயும் பந்துமித்திர புத்திரகளத்திரங்களை, சொன் மாத்திரமாக சொல்லளவாக, பெற்றேன்-அறிந்தேன், பெரியார் சிறியார்களெனும்-பெரியவர் சிறியவரென்கிற, பேதம்-வித்தியாசத்தி லிருந்து, அற்றேன்-நீங்கினேன், பிரிவும்-நீங்குதலும், செறிவும் - நெருங்குதலும், குறைவும் - சிறுகுதலும், கைவிட்டேன்-விட்டுநீங்கினேன், தோழி - என்பாங்கியே, அறிவாகதந்த- என்னை ஞானமயமாகவருளிச்செய்த, நாதமுனி-நாதமுனி யெனும் ஆசிரியரிட, நற்றாள்-நல்லபாதங்கள், அருளியபேற்றுக்கு - கொடுத்தசெல்வத்திற்கு, அளவேது-கணக்கென்ன? இலக்கமேதோ? அறியேன். எ-று. 7.

அவத்தையோர் மூன்று மகன்றிடப் பெற்றே
  னதீதவ கோசர னாகவும் பெற்றேன்
பவத்தைப்பொய் யாக்கிப் பயங்கெடப் பெற்றேன்
  பதறென் றெமன்கா லதூதரைக் கற்றே
னெவற்றிற்கு மாதார மாயெனைப் பெற்றே
  னெனக்கென்னை யன்றித் துணையறப் பெற்றேன்
தவநிறை நாதமுனிதந்த நற்றா
  டருபேறி தென்முன் றவப்பே றென்னேடீ.

(இ-ள்) அவத்தை ஓர்மூன்றும்-ஜாக்கிர - சொப்பன - சுழுத்தியெனு மவத்தையொருமூன்றும், அகன்றிட-இங்கிதொழிய, பெற்றேன்-அடைந்தேன், அதீதன்-எவர்க்கும் எவற்றிற்குமேலானவனும், அகோசரன்-அறியொணாதவனும், பெற்றேன்-எனை அறிந்தேன், பவத்தை-பிறப்பை, பொய்யாக்கி-அசத்தியமாக்கி, பயங்கெட-ஜனனமரணசுகதுக்கசுவர்க்கநரகாதி பேதபயம் ஒழிய, பெற்றேன்-அறிந்தேன், எமன்காலதூதரை-காலனையும்

யமதூதரையும், பதமென்று — சாசமற்றபொருளொப்பாமென, கற்றேன் — அறிந்தேன், வெற்றிற்கும் — எல்லாசராசரப்பொருளுக்கும், ஆதாரமாம் — காரணமாகிய, எனை — என்னை, பெற்றேனை — அடைந்தேன், எனக்கு — அறிவாகிய எனக்கு, என்னையன்றி — என்னைத்தவிர, துணையற — உதவி இலையாகுமென, பெற்றேன் — அறிந்தேன், தவநிறை — தவத்தைப்பூர்த்திசெய்த, நாதமுனிதந்த — நாதமுனியெனும் ஆசிரியர்கொடுத்த, நற்றாள் — நல்லபாதங்கள், தருபேறு — கொடுத்தசெல்வம், இது — இதானது, என்முன்தவப்பேறு — நான்முன் ஜனனத்தில்செய்த தவத்தின்பயனாகஉணர்கிறேன், என்னடி — என்னென்று சொல்வேனடி, எ-று. 8

இரவும்ப கல்பொய்த் துறவுங்கை விட்டே
  னிடம்பொரு ளேவன் மடங்கெடப் பெற்றேன்
பரமென்னை யன்றி யிலையாகப் பெற்றேன்
  பரதேசி யென்னும்பொய்ப் பாசாங்கை விட்டேன்
சிரமொட்டை தாடி சடைவைத்த லற்றேன்
  சிரமாம றிவைக் குறியாகப் பெற்றே
னரணாக நாத முனிதந்த நற்றா
  ளருளிப் பேறென் னறைவது தோழி.

(இ-ள்) இரவும்பகல் — மறப்பும் நினைப்பும், பொய்த்துறவும் பொய்வேடசந்நியாசமும், கைவிட்டேன் — விட்டுநீங்கினேன், இடம்•மடம்•பொருள் — தவத்திற்குமடமாதி இடமும் - புசிப்பாதிக்குத்தேவையாகிய தனமாதிவத்துக்களும், ஏவல் — சொன்னவேலைசெய்யவடிமைசெய்பவனும், கெடபெற்றேன் — வேண்டியதற்றிருக்க வறிந்துகொண்டேன், பரம் — முதற்பொருள், எனையன்றி — அறிவாகிய என்னைத்தவிர, இலையாக — வேறில்லையாக, பெற்றேன் — அறிந்தேன், பரதேசியென்னும் — மேலான மோக்ஷலோகவாசியென்கிற, பொய்ப்பாசாங்கை — பொய்யாகியமோசவேடச்சொற்களை, விட்டேன் — அறிவாகிய எனையன்றியில்லையெனநீக்கினின்றேன், சிரமொட்டை — தலையைமொட்டையடித்தலும், தாடி சடைவைத்தல் — தாடியும் சடைமுடியும் வைத்தலை, அற்றேன் — நீக்கினேன், சிரமாம் — தலைமையாகிய, அறிவை — ஞானத்தை, குறியாக — இலக்ஷியமாக, பெற்றேன் — அடைந்தேன், தோழி — அன்பாங்கியே, அரணாக — காவலாக, நாதமுனிதந்த — நாதமுனியெனும்ஆசிரியர்கொடுத்த, நற்றாள் — நல்லபாதங்கள், அருளியபேறு — கொடுத்த செல்வத்தை, என்னறைவது — என்னென்றுசொல்வதடி, எ-று. 9

நினைந்தபொ ருளொழி நிற்கவும் பெற்றே
  னினைப்பன்றி வேறொன்று மில்லாமை பெற்றே
னெனையப்பொற்ற தல்லா னினைப்பாக வேறொன்
  றில்லென் றுநானே யிருந்திடப் பெற்றே

னைத்திற்கு மாதார மறிவெனப் பெற்றே
னறிதல றியப் படுபொரு ளற்றே
னெனைத்தந்த நாதமு னிதந்த நற்று
ணிணைதந்த பேறென் னிசைக்கவென் றோழி.

(இ-ள்) நினைத்தபொருள்-நானெ எண்ணினவஸ்துவே, எதிர்நிற்கவும்-என்னெதிரில் தோன்றி நிற்கவும், பெற்றேன்-அறிந்தேன், நினைப்பன்றி-என் எண்ணத்தைத்தவிர, வேறொன்றும்-வேறொருவஸ்துவும், நில்லாமை-நிலைக்காதிருத்தலை, பெற்றேன்-அடைந்தேன், நினைப்பாக-மனமாக, எனை ப்பெற்றது-என்னையே அடைந்தது, அல்லால்-அல்லாமல், வேறொன்று-பின்னொன்று, இலை-இல்லையாம் (அதனால்) என்றும் நானே இருந்திட-நானே எல்லாமாய் அல்லவுமாய் எக்காலத்திலுமிருக்க, பெற்றேன் - அறிந்தேன், அனைத்திற்கும்-எல்லாவற்றிற்கும், ஆதாரம் - களைகண், அறிவென்-ஞானமென்றுசொல்ல பெற்றேன்-அறிந்தேன். அறிதல் - திருசியங்காணு ...மாதி ஆறிந்திரியங்களின்பேதமும், அறியப்படுபொருள் - காணப்படு. க... பதகாலவத்துக்களும். அற்றேன்-நீக்கினேன். என்தோழி - என்பாங்கியே. எனைத்தந்த-அறிவாகிய என்னையெனக்குக்கொடுத்த,நாதமுனிதந்த-நாதமுனியெனும் ஆசிரியர் அளித்த. நற்றுணிணை-இரண்டுநல்லபாதங்கள், தந்தபேறு-கொடுத்தசெல்வம். என்னிசைக்க-என்னென்று சொல்வேனடீ. என்றவாறு. 10

ஆகசெய்யுட்கள். 279,

---

# திருச்சாழல்.

***

முன்னுரைத்த வேதாந்த முழுதுணர்ந்து மோகமறுத்
தின்னல்சமு சாரக்கரை யேறிலரி தென்னேடீ.
தன்னைவிட்டு முன்னிருப்பர் தமைக்கணித்து வலகுநிலை
பின்னமென வழுங்குவரிற் பிரமையுற்றோர் சாழலோ.

(இ-ள்) முன்னுரைத்த-பூர்வாசிரியர்களும்ஆசிரியருமறிவித்த, வேதாந்தம்-வேதங்களின் முடிவான விஷயத்தை, முழுதுணர்ந்தும்-முற்றிலும் அறிந்தும், மோகமறுத்து-ஆசையையொழித்து, இன்னல் - துன்பமாகிய. சமுசாரக்கரை-சமுசாரக்கடலின்கரையாகியமோக்ஷத்தில். ஏறிலர்-ஏறுதவராகிபேதத்தில் ஆசையுடையவர்களாகி காணப்படுகிறார், இது என்னேடீ-இது என்னகாரணந்தோழி. தன்னைவிட்டு-ஆற்றைக்கடந்த பத்துபேர்கள் அக்கரையில் தங்களையெண்ணிப்பார்க்கையில்எண்ணுகிற ஒவ்வொருவனும்

மகாமகோபாத்யாய, டாக்டர்

னைச்சேர்த்தெண்ணாமல்விட்டு, முன்னிருப்பர்தமை — தன்முன்னிருக்கும்ஒன்பதுபேரை கணித்து—கணக்கிட்டு எண்ணி. அல்குலே—மொத்தம் பத்தென்றும்கணக்கில், பின்னமென—ஒருவனைக்காணாமல் குறைவுபடுகிறதென. அழக்குவரில்—துக்கப்படுகிறவர்களைப்போன்று. பிரமை யுற்றோர் — அஞ்ஞான மடைந்தவர் (தன்னைக்காணாமல் எப்படி பிரமைதீர்வார்) சாழலோ—என அசைந்தாடுக தோழி. எ-று. 1,

ஆரணங்க ளாகமங்க ளாருயிருக் கறைந்தபரி
பூரணனே ருருவுகொடு போந்தவித மென்னேடீ
பூரணனே ருருவுகொடு புகலவெளி போந்திலனேற்
சீரணமா மறைப்பொருளுந் தெரியாகாண் சாழலோ,

(இ-ள்) ஆரணங்கள் — வேதங்களையும். ஆகமங்கள் — வைணவசைவாதி ஆகமங்களையும். ஆருயிருக்கு — தேகாதியில் நிறைந்தஜீவர்கட்கு. அறைந்த—சொல்லி வெளிப்படுத்திய. பரிபூரணன்—குறைவறநிறைந்தகடவுள். ஒருருவுகொடு—ஓர் ஆசிரியன்வடிவமுற்று. போந்தவிதம்—வெளிவந்த விதம். என்னடீ—என்னகாரணமடி பூரணன்—எங்கும்நிறைந்த கடவுள். ஒருருவுகொடு—ஓர் ஆசிரியன்வடிவமுற்று. புகல—ஆத்மானுபவத்தைச்சொல்ல, வெளிபோந்திலனேல்—வெளிப்பட்டு வாரானாயின். சீரணமாம்—வேதாகமங்கள் நசித்துப் போய்விடும், மறைப்பொருளும்—வேதாகமங்களில்மறைந்திருக்கும் விஷயங்களும். தெரியாகாண்—ஜீவர்களுக்குத்தெரியாமற்போய்விடும். சாழலோ—என்று சாய்ந்தாடுகதோழி. எ-று. 2.

எப்பொருளுந் தாமாக விருந்துமறை யெவர்தெளியச்
செப்பினரோ வறியேனித் திறமறிய விளம்பேடீ
எப்பொருளுந் தாமாக விருக்கவென் றுமில்லையெனச்
செப்புமறி யாமைவருந் திரிபறுக்கச் சாழலோ,

(இ-ள்) எப்பொருளும்—எந்தவஸ்துவும். தாமாகவிருந்து—தாமாகவேயிருந்தும், மறை—இருக்கு - எஜுர்-சாமம்-அதர்வணமெனும் நான்குவேதங்களை. எவர்தெளிய—கடவுளாகியதனையன்றி வேறு எவரறிய செப்பினரோ சொன்னாரோ அறியேன்—தெரிந்திலேன் இத்திறமறிய—இவ்விதம் தெரிந்துகொள்ள விளம்பேடீ—சொல்லடீ தோழி எப்பொருளும்—எந்தவஸ்துவும் என்றும்—எந்தகாலத்திலும் தாமாகவிருக்க—ஆன்மவடிவாகவேயிருக்க இல்லெனை—அவ்வாறு இல்லையென செப்பும்—சொல்லுகின்ற அறியாமை—அஞ்ஞானத்தால் வரும்திரிபு—மூடருக்குவரும் மாறுபாட்டைஅறுக்கச்சாழலோ நீக்க வேதாகமங்களைச்சொன்னார் என்று அசைந்தாடுகதோழி. எ-று. 3

ஓதிப்பிறர்க் குரைப்பரலா லோத்துணர்ந்து தம்மிலனு
பூதிநிலை பொருந்தியிகப் புகரகலா ரென்னேடீ
ஆதியந்த மாகவொன்றை யாய்ந்தறியா ரிடையிடைசென்
றோதிபுத்தி மருண்டுணவிற் குளறலரூர் சாழலோ.

(இ-ள்) ஓதி-வேதங்களைவாசித்து, பிறர்க்கு-அயலார்க்கு, உரைப்பர்-பாடம்சொல்லுவர், அலால்-அல்லாமல், ஓத்துணர்ந்து-வேதங்களைவாசித்தறிந்து, தம்மில்-தங்களில், அனுபூதிநிலை-ஆத்மானுபவநிலையை, பொருந்தி-அடைந்து, இகப்புகர்-உலகம் உண்டெனும்குற்றத்திலிருந்து, அகலார்-நீங்கார்கள், என்னேடீ-இதுஎன்னகாரணம்தோழி, ஒன்றை - ஒருசாஸ்திரத்தையாவது, ஆதியந்தமாக - முதலிலிருந்து கடைசியாக, ஆய்ந்தறியார்-ஆராய்ந்துதெரிந்துகொள்ளார்கள், இடையிடை-நூல்களின்நடுவில் நடுவில், சென்றோதி-பிரவேசித்துப்படித்துணர்ந்து, புத்திமருண்டு - உண்மையறியாது மதிமயங்கி, உணவிற்கு-பசிப்புக்கு, உளறல் அரூர்-நூலில் ஒன்றிருக்க வேறொன்றாக உளறுவதிலிருந்து நீங்கிலார் ஆயினர்கள், சாழலோ - என்று அசைந்தாடுகதோழி. எ-று. 4.

பேதையரும் பெரியவரும் பிரளயத்தொன் றாகின்மறை
யோதலுரை தெளிதலில்வந் துறுபயனென் னுரையேடீ
பேதையரில் பெரியருமில் பின்னிலைமுன் னிலையுலக
மாதியந்தம் பிரமமெனு மறுதிவரச் சாழலோ.

(இ-ள்) பிரளயத்து-உலகநாசமாகும்முடிவில், பேதையரும்-மூடரும், பெரியவரும்-ஞானிகளும், ஒன்றாகில்-ஒரே இடத்தடங்குபவர்களாவார்களாகில், மறையோதல்-வேதம் வாசிப்பதிலும், உரைதெளிதல்-வேதத்தின் அர்த்தம் தெரிந்துகொள்வதிலும், வந்துறுபயன் - உண்டாகியடையும் பிரயோஜனம், என்உரையேடீ - என்னசொல்லடிதோழி, பேதையரில்-மூடரும் இல்லை, பெரியருமில்-ஞானிகளுமில்லை, பின்னிலை-பிற்காலமென்பதும் இல்லை, முன்னிலை-முற்காலமென்பதும் இல்லை, உலகம்-பலபேதமாகத்தோற்றும் உலகமானது, ஆதியந்தம்-முதலும் முடிவும், பிரமமெனும்-ஆன்மவடிவமென்கிற, அறுதிவர-முடிவு உண்டாக வேதங் குறிப்பிக்கின்றது, சாழலோ-என்றசைந்தாடுகதோழி. எ-று. 5.

எல்லாஞ்சி வன்செயலென் றிசைத்துமறை யிருநிலத்து
நல்லார்போல் லாரெனவே நாட்டல்வகுத் தென்னேடீ
எல்லாம வன்செயலென் றிருக்கநல்லார் செயலிறந்தங்
கல்லாரில் லாயயல்கொண் டழுங்கறப்பிச் சாழலோ.

(இ-ள்) மறை-வேதங்களானவை, எல்லாம்-சராசரத் தோற்றங்களின் பொருள்களும் பொருள்களாதிசெயல்களுமாகிய வெல்லாம், சிவன்செய

லென்று-சிவனது செயலென்று. இசைத்து-சொல்லி, இருநிலத்து-பெரியபூமியில், நல்லார் (என)-சிலரையோக்கியரெனவும், பொல்லாரெனவே-சிலரை அயோக்கியரெனவும், வகுத்துநாட்டல்-வேறுபிரித்துஸ்தாபித்தல், என்னேடீ-என்னகாரணமடீதோழி, இங்கல்லார் - இவ்வுலகில் நல்லவரல்லாததீயர், இல்லாமயல்-இல்லாத தேகாதிபிரபஞ்சம் உண்டென்கிற மயக்கம், கொண்டு-கொண்டு, அழுங்கல்தப்பி-பிறவித்துக்கத்தில் அழுந்திகிடப்பதைவிட்டு தப்பித்துக்கொள்ளவேதம் நல்லார்தீயாரென்று பிரித்துச் சொல்லியது, நல்லார் - நற்குணமுடையவராகி, எல்லாம்-யாவற்றும், அவன்-அக்கடவுளது, செயலென்று-செய்கையென்று, செயலிறந்து - இருவினையின்பயனைக் கருதாது தாங்கள்செயலற்று, இருக்கசாழலோ-இருக்கவென வசைந்தாடீதோழி. எ-று. 6

மனமிறந்த பின்னர்முத்தி மருவுமெனக் கேட்டோதித்
தனைவிடுத்துப் பிறவுருவந் தனையவுன்ன லென்னேடீ
இனையனென விருக்குந்தனை யேட்டிற்பிற ரிசையிலன்றி
மனமறிய வாய்ந்துணரா மறதியினாற் சாழலோ.

(இ-ள்) மனமிறந்த பின்னர்-மனம் நாசமாயபின்பு, முத்தி - மோக்ஷமானது, மருவும் என-கிட்டும் என்ற, கேட்டோதி - பெரியோர்கள்பால் கேள்விகேட்டும் நூல்களில்வாசித்தறிந்திருந்தும், தனைவிடுத்து-ஆன்மாவாகிய தன்னைமறந்து, பிறவுருவந்தனைய - அயல்வடிவமனதிற்பதிய, உன்னல் - விடாதுநினைத்தல், என்னேடீ - என்னகாரணமடீதோழி, இனையனென - இத்தன்மையானவனென, இருக்குந்தனை - சாக்ஷாத்கரித்திருக்கின்ற அறிவாகியதன்னை, ஏட்டில்-புஸ்தகங்களில் படித்தலும், பிறரிசையிலன்றி-அயலார்வார்த்தைகளினால்கேட்டலுமேயல்லாமல், மனமறிய-சந்தேகவிபரீதங்கள் தனதுமனமாற, ஆய்ந்துணரா - ஆராய்ந்துஅறியாத, மறதியினால் சாழலோ - மறதியினால் அப்படிபேதமாய் நினைக்கிறார்களென சாய்ந்தாடீதோழி. எ-று. 7.

யார்க்குமுயி ருடலுணவ வத்தைபய மொன்றாகப்
பார்ப்பானும் பறையனெனப் பகரும்பகுப் பென்னேடீ
பார்ப்பவன்பார்ப் பான்பார்க்கப் படுபொருள்களயலறவோர்த்
தார்ப்பான்வாய்ப் பறைபறைய னறியெனற்குச் சாழலோ.

(இ-ள்) யார்க்கும்-எவருக்கும், உயிர்-ஜீவனும், உடல்-உணவு - தேகமும்-ஆகாரமும், அவத்தை-ஜாக்கிரம்-சொப்பனம்-சுழுத்தி - துரியம்-துரியாதீதம் எனும் பஞ்சாவத்தையும், பயம் - ஜனனமரணாதி அச்சமும், ஒன்றாக-ஒரேவிதமாக விருக்க, பார்ப்பானும் - பிராஹ்மணனெனவும், பறை

யன் என-பறையன் எனவும், பகரும்-பேதித்துச்சொல்லும், பகுப்பு-பிரிவு, என்னேடீ-என்னடீதோழி, பார்க்கப்படு பொருள்கள்-காணப்படுகிறவஸ்துக்கள், அயலற-தனையன்றி வேறு இலையென, பார்ப்பவன்-காணப்பட்டவன்-அறிபவனாகிய, பார்ப்பான்-தனைக்காண்பவனெனவும், ஓத்து-வேதங்களையாசித்து, ஆர்ப்பான்-விக்கிரகங்களின்பின் பாராயணஞ்செய்து திரிபவன், வாய்ப்பறை - வாயையே பறையாகக்கொண்டுமுழக்கி, பறையன்-உடல்வளர்க்கும் நீசனென்று, அறிதற்கு-தெரிந்துகொள்ளுதற்குத்தெரிவித்தற்கெனத்தெளிந்து, சாழலோ-சாய்ந்தாடுவாயாக எ-று. 8.

ஈசனெனச் சீவனென விரண்டுரைத்து முடிவின்மறை
பேசினுமொன் றெனக்கோடல் பிசகலவோ புகலேடீ
யீசனுஞ்சித் துயிர்களுஞ்சித் தென்னிலொரு சித்தினுக்கா
பாசம்வரு மின்றெனிலோ வஜடம்பொறி சாழலோ.

(இ-ள், மறை - வேதங்களானது, ஈசனென - கடவுளென்றும், சீவனென-சீவனென்றும், இரண்டுரைத்து-இரண்டுசைதன்னியங்களுண்டென முதலில் பிரித்துச் சொல்லி, முடிவில்-வேதாந்தத்தில், ஒன்றென-கடவுளும் ஜீவனும் ஒன்றேயென்று, பேசினும்-வேதாந்தங்களிற்கூறினும், கோடல்-அபேதமாகக் கொள்ளுதல், பிசகலவோ - அனுபவவிருத்தமல்லவோ புகலேடீ-சொல்லடீதோழி, ஈசனுஞ்சித்து-கடவுளும்ஞானரூபியே, உயிர்களும்சித்து-ஜீவர்களும் ஞானரூபிகளே, என்னில்-என்று சொன்னால், ஒரு சித்தினுக்கு-இரண்டிலொரு ஞானத்திற்கு, ஆபாசம்வரும் - பிரதிபிம்பத்தன்மையுண்டாகும், இன்றெனிலோ - இல்லையென்றாலோ, பொறி அஜடம் சாழலோ-அந்தக்கரணஞானேந்திரியங்களும் சித்துக்களேயாகவேண்டிவருமென அசைந்தாடுசதோழி. எ-று, 9.

நினைவையன்றித் துக்கசுக நிற்கவிட மறியார்க
டனைச்சுகவான் மாவெனவே தவிப்பகலா ரென்னேடீ
வினைக்குரிய பயனைமறை விதிப்பதுணா ரார்மொழிக
டனைக்குறிகொண் டறுதியெனந் தருக்குறலாற் சாழலோ.

(இ-ள்) நினைவையன்றி-எண்ணத்தைத்தவிர, துக்கசுகம் - துன்பமும் இன்பமும், நிற்க-தங்கி யிருப்பதற்கு, இடமறியார்கள்-வேறிடமிருக்க எவருமறியாதவர்கள் ஆவார்கள் (இங்ஙனமிருக்க), தனை-தங்களை, சுகவான்மா-ஆனந்தசொரூபவாத்மா, எனவே-என்றறிந்தபடியே யிருந்து, தவிப்பு-பிறப்பிறப்பெனும் சங்கடத்திலிருந்து, அகலார்-நீங்காதவர்களாயிருக்கிறார்கள், என்னேடி-இதுஎன்னகாரணமடி தோழி, வினைக்குரிய - செயும் நல்வினை தீவினைக்குத்தகுந்த, பயனை - பிரயோஜனத்தை, மறைவிதிப்பது-வேதஞ்

சொல்கிறதென்று, உணரார்—அறியாதவர்களுடைய, மொழிகள்தனை—வார்த்தைகளை, அறுதியெண—முடிவென்று, குறிகொண்டு — உறுதியாகக்கொண்டு, தருக்குறலால்—அதனோடு தேகோகவகங்காரத்தால் (பிறப்பு சங்கடத்திலிருந்து நீங்காதிருக்கின்றனர்), சாழலோ—என்று அசைந்தாடுகதோழி. (என்றவாறு) 10.

பேசாத நிலையருளும் பெரியரைப்பே ணாதுலக
வாசாரக் கள்ளருக்கா ளாகுவதி தென்னேடீ
வாசாம கோசரனும் வத்துபெற வருந்தவங்கட்
கூசாதி யற்றுகிலாக் கொடுங்குணத்தாற் சாழலோ.

(இ-ள்) பேசாதநிலை—நித்தியமாகிய மவுனநிலையை, அருளும்—கிருபைசெய்கின்ற, பெரியரை — அறிவுடையோரை, பேணாது—விரும்பாது, உலகம்—ஜகத்திற்கற்பித்துக்கொண்ட, ஆசாரம்—பொய்யொழுக்கத்தை மெய்யெனநம்பிச்செயும், கள்ளருக்கு—திருடருக்கு, ஆளாகுவர்—அடிமையாகி காலங்கழிப்பர், இது என்னேடீ—இது என்னகாரணமடீதோழி, வாசாமகோசரனும்—வாக்குமனதிற் கெட்டாதவனாகிய, வத்துபெற — மெய்ப்பொருளானஆன்மாவையடைய, அருந்தவங்கள்—உண்மையாம்மெய்த்தவங்களை, கூசாது—திரிகரணசுத்தியாக, இயற்றுகிலா—செய்யாத, கொடுங்குணத்தால் — கொடுமையானசெய்கையினால் பொய்யருக்குஆளாகின்றனர்களென்று அறிந்து, சாழலோ—அசைந்தாடுகதோழி. எ-று. 11.

ஆக. செய்யுட்கள் 290

## குருசொருபங் கூறல்.

உலகேழு மேழுநிறை பலகோடி கோடியுயி
ருடனாதி பொருளகம் புறமெங்கு மேசோதியெது
பலபேத போதகலை யுணர்வார்க ளொருடார்க்குறிய
பலகான்மு யன்றறித லரிதென் றிடைந்தடியர்
குலமேனி யகமமதை யறவீழ்ந்தி றைஞ்சியுரை
குறிகேட் டுயர்ந்தவர்க ளொருவுண்ட டார்க்கதெது
விலதாகு முலகமெதி ருளதாக தருவதெது
விதும்பாத குருசொருப மெனவோது மருமறையே.

(இ-ள்) உலகேழுமேழு—அதல-விதல-சுதல-தராதல-இரசாதல-மகாதலபாதாளமெனும் கீழேழுலகம், பூலோக-புவர்லோக-சுவர்லோக-சனலோக-

தபோலோக-மகாலோக-சத்தியலோக முதலிய மேலேழுலகம்) ஆகபதி னாலுலகங்களிலும், நிறை-நிறைந்த, பலகோடி கோடி-அநேககோடிகோடி யாகிய, உயிர்-ஜீவாகளிலும். உடலாதி பொருள்-தேகாதிவஸ்துக்களிலும் அகம்புறம் - உள்வெளிகளில். மண்டு-நெருங்கிய, சோதிஎது - பிரகாசமு டையது எதுவாகும், பலபேதம்-காலதேசவஸ்து பேதங்களை. போதகலை- போதிக்கின்ற சாஸ்திரத்தின், உணர்வால்-தேர்ச்சியால், தொடர்ந்து-பின் சென்று, அறிய-கடவுள்சொரூபத்தைத்தெரிந்துகொள்ள, பலகால்முயன்று- அநேகதடவைகளில் பிரயத்தனப்பட்டும், அறிதல் - தெரிந்துகொள்ளுதல், அரிதென்று-கஷ்ட மென்று. இடைந்து-பின்னடைந்து, அடியர்-சிவனடி யார்களது. குலமேவி-இனத்திற் சேர்ந்து, அகமமதை அற-யானெனதெனு ங்கர்வம்நீங்க, வீழ்ந்து - சிவனடியார்காலில்வீழ்ந்து. இறைஞ்சி - வணங்கி, உரை - அச்சிவனடியார்கள்உபதேசிக்கும். குறிகேட்டு - உபாயங்களைக்கே ட்டு, உயர்ந்தவர்கள்-மேன்மையுற்ற ஞானிகளின், உருவுண்டு-உடல் பொ ருள் - ஆவிகளைவிழுங்கி, அடர்ந்தது எது - இடமற எங்கும் நெருங்கியது யாது? (அன்றியும்) இலதாகும்-முக்காலத்திலும் இல்லாததாகிய, உலகம்- பிரபஞ்சத்தை. எதிருளதாக-எதிரிலுள்ள மெய்ப்பொருள்களாக, தருவது எது-கொடுப்பது எதுவாகும்? இது - இப்படிப்பட்ட இலக்கணமுடைய பொருளே, போத-ஞானோபதேசஞ்செய வெழுந்தருளும், குருசொரூப மென - ஆசிரியரின்வடிவமென்று, அருமறை - அருமையானவேதங்கள், ஓதும்-சொல்லும். எ-று. (எ-சுற்றசை) 1.

திருமார்ப கத்தன்வரை தருமாதி டத்தன்கலை  
  திகழ்நாவ கத்தன்மறை யுரைநாவ லத்தர்முனி  
யுருவாமு டற்றிகழு முயர்ஞான சோதியெது  
  வுருகாரு ளத்துநிறை மருளாத பாதியெது  
தரைநீரு மாயுருவ மருவாஞ்ச தாகதியின்  
  டவரோற்று மிருரூப வெளியாகி யலவாகு  
நிறைவாக்க கந்தொடர வரிதாகி லைத்தபெத்து  
  நிஜபோத குருசொருப மெனவோது மருமறையே.

(இ-ள்) திரு-இலக்ஷுமியை, மார்பகத்தன்-மார்பினிடம் வைத்திருக் கும் விஷ்ணுவினுடையவும், வரை-இமாசலபர்வதராஜன், தருமாது-பெற் றபெண்ணாகிய பார்வதியை, இடத்தன்-இடதுபாகத்திலுற்ற சிவபெருமா னுடையவும், கலை-சரஸ்வதியானவள், திகழ்-பிரகாசிக்கின்ற, நாவகத்தன்- நாவையுடைய பிரமதேவனுடையவும், மறை-இருக்கு-எஜுர்-சாமம்அதர்வ ணமெனும் நான்குவேதங்களை, உரை-சொன்ன, நாவலத்தர் - நாவலிமை யுற்ற பண்டிதராகிய, முனி - உடலுலகைவெறுத்த ஞானிகளிடவும், உரு வாம் உடல்-வடிவமாகிய தேகங்களில், திகழ்-விளங்குகின்ற, உயர்ஞான -

மேலான அறிவாகிய. சோதியெது--சுயம்பிரகாசவஸ்து யாது, உருகார்--கடவுளை நினைந்து உடலுருகு தறைபப் பெறுதவர்களின், உளத்து - மனதில், நிறை--நிறைந்துநின்றும், மருளாம்--மயக்கமாகியும், நபாதி-வெளிப்படாமலும் இருக்கிறது, எது--எந்தவஸ்துவோ? அன்றி, உருவ-கடினகோமளமெனும் வடிவமுடைய, தரைநீருமாய்-நிலமும்ஜலமுமாயும், அருவாம்-வடிவில்லாத, சதாகதி-விண்-காற்றும் ஆகாயமுமாயும், தவர் ஏற்றும் - தபசிகள் துதிக்கின்ற, இருரூப-கொழுந்துவிட்டெரிந்துரூபமாகக்காணப்பட்டுவெட்டுகுத்தாதி சிதைவுற, எரியாகி-நெருப்பாகியும், அலவாகும் - இவைகளல்லாததாகியும், நிறைவாக்கு-பூர்ணமானவேதத்தாலும், அகந்தொடர-மனத்தாலும்பின்பற்ற. அரிதாக-கடினசாத்தியமாக,நிலத்ததுஎது-நிலத்துள்ளதுமாயுமிருக்கிறது எதுவாகும்? இப்படிப்பட்ட இலக்கணமுடைய இது, நிஜபோத-உண்மைஞானமாகிய சிவமே, குருசொருபமென-ஆசிரியர் வடிவமென்று, உருமறை - அரிதானவேதங்கள், ஓதும் - சொல்லும். (எ-சற்றசை.) எ-று, 2.

வெளியாதி பூதமெழு வகைபேத பௌதிகமை
விதகோச மோடுபொறி புலன்வாயு நாற்கரண
தலையாற்க ளைத்தயருங் களிசேர வித்தைவரு
தமர்தார வாசைமலி முமலங்கெ டாதவுயி
ரளியாற்க ளைந்திருமை வினைதீர வேண்டியுனு
மதுகாறு மவ்வியக் தமுமாகி நின்றெவையு
மொளியாமெ னக்குரைசெய் பரியாய நாமமென
வொளிர்போத மெதுகுருவி னுருவிதெ னுஞ்சுருதி.

(இ-ள்) வெளியாதிபூதம்-ஆகாயம்-வாயு-அக்கினி-ஜலம் - மண்ணுதிபஞ்சபூதங்களும்; எழுவகை-தேவர்-மனிதர்-மிருகம்-பட்சி-மச்சம்-ஊர்வனம்தாவரமாகிய எழுவித, பேதபௌதிகம் - பின்னசரீரங்களும், ஐவிதகோசமோடு-அன்னமயம்-பிராணமயம்-மனோமயம்-விஞ்ஞானமயம்-ஆனந்தமயமெனும்பஞ்சகுகைகளோடும், பொறி-(மெய்-வாய்-கண்-மூக்கு செவிஎனும் ஐந்து ஞானேந்திரியமும்) (வாக்கு-பாதம்-பாணி-பாயுரு-உபஸ்தம்) எனும் ஐந்து கன்மேந்திரியங்களும், புலன்-(சப்த-பரிச-ரூப-ரச-கந்தமெனும்) ஞானேந்திரிய அறிவைந்தும்-(வசன-கவன-தான-விசர்க்க-ஆநந்தமெனும்) கன்மேந்திரியஅறிவைந்தும், வாயு-பிராணன்-அபானன்-உதானன்-வியானன்-சமானன்-நாகன்-கூர்மன்-கிரிகரன்-தனஞ்செயன்-தேவதத்தனெனும் பத்துகாற்றுகளும், நாற்கரணம் - மனம் - புத்தி-சித்தம் - அகங்காரமெனும் நான்கு அந்தக்கரணங்களுமாகிய, தலையால் - பிரதிபந்தத்தால், களைத்து - இளைப்புற்று, அயருப் வருந்தும், களிசேர்-மயக்கமுடைய, அவித்தைவரு-

அஞ்ஞானத்தால்விளைந்த, தமர்-பந்துக்களிடத்தும், தாரம்-மனைவிபுத்திராதிடத்தும், ஆசைமலி-விருப்பம் நிறைந்து, மும்மலம் - ஆணவ-காமிய மாய்கைஎனும் மும்மலங்களும், கெடாத - நாசமாக்காத, உயிர் ஜீவனானவன், அளியால்-கடவுளிடம் அன்பினால், கரைந்து நிராகாரமாகக்கரைந்து, இருமைவினை-நல்வினை தீவினையெனுமிரண்டும், தீரவேண்டியுனும்-நீங்க விரும்பிநினைக்கும், அதுகாறும் அதுவரையில், அவ்வியக்தமுமாகி - வெளிப்படாததாகி, நின்று-நிலைத்திருந்து, எவையும் - எவ்விதநாமரூபங்களும், ஒளியாமெனக்கு-பிரகாசமயமாகிய எனக்கு, உரைசெய்-சொல்லப்பட்ட. பரியாயநாமம்-ஒருபொருள்குறித்த பலபெயராகும், என-என்று. ஒளிர்போதமெது-பிரகாசிக்கும்ஞானம் எதுவோ, ஈது-இப்படிகூறும்ஞானத்தையே. சுருதி-வேதமானது, குருவினுருவு-ஆசிரியர்திருவுருவம். எனும் - என்று சொல்லும். எ-று. 3

அறமாகி யளவையறு வருளாகி நின்றதெது
 அசலஸ்வ பாவமெது வழியாவ தீதமெது
மறமேம லிந்தகொடு மறவோ ருளத்தொழிவின்
 மருளே நிறைத்தழிவின் மருளற்று யர்ந்ததெது
திறமாகி நின்றதெது திரியாவி யற்கையெது
 திரிகால மாகிபல நிறமாய்ச் சொலிப்பதெது
துறவோ ருளத்துநிறை துரியப்ர போதமெது
 சுயஞான மெதுவமல குருரூப மெனுமறையே.

(இ-ள்) அறமாகி-தருமவடிவமாகியும். அளவையறு-பிரத்யக்ஷமாதியளவைகளுக்கெட்டாத. அருளாகி-கிருபாவடிவமாகியும் - நின்றது எது-நிலைத்தது எதுவாகும்? அசல-அசைவற்ற. ஸ்வபாவம் எது - தன்மையுடையதுஎதுவாகும்? அழியா-கெடாததும். அதீதமெது-மனோவாக்குகாயமாதிகட்கு எட்டாத்தன்மையுடையது எதுவாகும்? மறமே - பாவமே. மலிந்த நிறைந்த. கொடுமறவோர் - கொடுமையானவேடரிட. உளத்து-மனத்தில், ஒழிவில்-நீங்காத, மருளே-மயக்கத்தையே. நிறைத்து - பெருக்கியும். அழிவில்-கெடுதலில்லாது. மருளகற்று-மயக்கம் நீக்கியே. உயர்ந்ததுஎது-மேற்பட்டது எதுவாகும்?. திறமாகி-நிலையுள்ளதாகி, நின்றது எது - உள்ளது எதுவாகும்?. திரியா-மாறுதலில்லாத, இயற்கை எது - சுபாவமுடையது எதுவாகும்?. திரிகாலமாகி-இறப்பு-எதிர்வு-நிகழ்வு எனும் மூன்றுகாலமாகியும், பலநிறமாய்-அநேகவர்ணங்களாய். சொலிப்பது எது- பிரகாசிப்பது எது? துறவோர்-பற்றற்றயோகிகளது. உளத்துநிறை - மனதில் நிறைந்த, துரியப்ரபோதம் எது-சகலத்திற்குமாதாரமான ஞானப்ரபோதம் எதுவாகும்? சுயஞானம்எது - இயற்கையுணர்வாகிய சர்வசாக்ஷி எது? (அதையே) மறை - வேதமானது, அமல-களங்கமற்ற. குருரூபம்எனும்-ஆசிரியர் வடிவம் என்றுசொல்லும் (ஏ-ஈற்றசை) எ-று. 4.

ஆசெய்யுட்கள். 294,

## சொருபாநந்த கொம்மி.

பந்த குணங்கள் பறித்தவனே பவ
பாச மயலைக் குலைத்தவனே யெனை
நொந்து கெடாமற் றடுத்தவனே யாதி
நாங்கறி வோயெனக் கொம்மியடி.

(இ-ள்) பந்தகுணங்கள்-கட்டாகிய ரஜோகுண தமோகுணங்களை, பறித்தவனே-களைந்தவனே. பவபாசம்-பிறப்பாசையாகிய. மயலை - மயக்கத்தை. குலைத்தவனே-கலைத்தவனே எனை-ஆன்மாவாகிய என்னை. நொந்து-(பிறவியால்) வருந்தி. கெடாமல்-இறவாமலும். தடுத்தவனே - (மறுஜனனம் எடுக்காமலும்) தடுத்து ஆட்கொண்டவனே. ஆதிநாங்கறிவோய்-பழயபெருமையுற்ற ஞானியே, என-என்று, கொம்மியடி-அகங்கை விரித்துக்கொட்டடி. (எ-று) 1.

முச்சக மாக்கித் துடைப்பவனே பல
மூர்த்திகள் வேடம் படைப்பவனே யம
னச்சத்தை யோடப் புடைப்பவனே யறி
வாநந்த னேயென்று கொம்மியடி.

(இ-ள்) முச்சகமாக்கி-சொர்க்க மத்திய பாதாளமெனும் மூன்று உலகமாக்கி, துடைப்பவனே-நாசமாக்குபவனே. பலமூர்த்திகள்-அநேகதேகங்களின். வேடம்-கோலம், படைப்பவனே-சிருஷ்டிப்பவனே, யமன்-காலனிட. அச்சத்தை ஓட-பயத்தை ஓட. புடைப்பவனே-அடிப்பவனே. அறிவாநந்தனே-ஞானசந்தோஷனே, என்று-என்று. கொம்மியடி - அகங்கை விரித்துக்கொட்டடி, 2.

பன்மை யொழிக்கும் பராபரனே யேக
பாவங்க ளிக்குங் குணாகரனே மாயை
வன்மை விழுங்குஞ் சுதாகரனே யாதி
வானறி வோயென்று கொம்மியடி.

(இ-ள்) பன்மை-பலவற்றின் தன்மையை, ஒழிக்கும்-நீக்கும். பராபரனே-கடவுளே. ஏகபாவம்-ஒரே தன்மையில். களிக்கும்-சந்தோஷிக்கும். குணாகரனே-சத்குண வடிவனே. மாயைவன்மை - மாயையின் வல்லமையை. விழுங்கும்-விழுங்கும். சுதாகரனே - சந்திரனே. ஆதிவானறிவோய்-பழைய உயர்ந்த ஞானியே. என்று-என்று. கொம்மியடி-அகங்கை விரித்துக் கொட்டடி, (எ-று) 3.

பிறப்பெனும் பேதமை கொன்றவனே ஜீவ
பேத மிறத்தனி நின்றவனே யென்
மறப்பைக் கெடுத்தவிர் மன்றவனே யாதி
மாணறி வோயென்று கொம்மியடி.

(இ-ள்) பிறப்பெனும்-ஜனித்தலென்கிற, பேதமை – அறியாமையை, கொன்றவனே-நாசஞ் செய்தவனே, ஜீவபேதமிற-உயிர்களின் வேற்றுமை நசிக்க, தனிநின்றவனே-ஏக ஆத்மாவாய் நிலைத்தவனே, என்மறப்பை-என் அஞ்ஞானத்தை, கெடுத்து-நாசமாக்கி, அவிர்-பிரகாசிக்கும், மன்றவனே-வெளியானவனே, ஆதிமாணறிவோய் – பழைய பெருமையுற்றஞானியே, என்று-என்று, கொம்மியடி-அகங்கைவிரித்துக்கொட்டடி. (எ-று) 4

எல்லை யிறந்த வருளொளியே விபு
வேகமே வாத்துவி தக்களியே யென்றன்
றொல்லை மறைத்த பர்வெளியே ஞான
சோதியே யென்றுநீ கொம்மியடி.

(இ-ள்) எல்லையிறந்த-அளவற்ற, அருளொளியே – கிருபாவிலாசமே, விபு-பூரணமானவரே, ஏகமே வாத்துவிதக்களியே – இரண்டற்றதனிமையாங்களிப்பே, என்றன்– என்னுடைய, தொல்லை – துக்கத்தை, மறைத்த-மறையச்செய்த, பர்வெளியே-மேலான ஞான ஆகாசமே, ஞானசோதியே-அறிவாகியபிரகாசமே,என்று-என்று. நீ-நீ,கொம்மியடி-அகங்கைவிரித்துக் கொட்டடி. எ-று. 5

சத்துச்சித் தாநந்த நித்தியனே சர்வ
சாட்சிச் சொரூபஞ்ஞ் சத்தியனே யென்ன
வித்தை கெடுத்தொளிர் மத்தியனே ஞான
விண்ணுரு வோயென்று கொம்மியடி.

(இ-ள்) சத்து-சித்து-உள்ளதும் உணர்வதும், ஆநந்த-சுகமுமாயுமிருக்கிற, நித்தியனே-அழிவில்லாதவனே, சர்வம் – எல்லாவற்றையும், சாட்சி – அறிகிற, சொரூபமும்-வடிவமும், சத்தியனே-மெய்யனே,என்னவித்தை-எனது அஞ்ஞானத்தை, கெடுத்து-நாசமாக்கி, ஒளிர்மத்தியனே-பிரகாசிக்கின்ற நடுநிலைமையானவனே, ஞானவிண்ணுருவோய்-சிதாகாயவடிவனே, என்று-என்று, கொம்மியடி-அகங்கைவிரித்துக்கொட்டடி. எ-று. 6

எங்கு நிறைந்திட ரற்றவனே மன
மென்னு மடிமையைப் பெற்றவனே பூ

னங்க மிடமாக வுற்றவனே யறி
வாநந்த னேயென்று கொம்மியடி.

(இ-ள்) எங்கும்-எல்லாவிடங்களிலும். நிறைந்து - சம்பந்தமுற்றிருந்தும், இடர்-துன்பத்திலிருந்து, அற்றவனே-நீங்கினவனே, மனமென்னும் ஸ்மரணையென்கிற, அடிமையை - அடிமையை, பெற்றவனே - அடைந்தவனே, ஊனங்கம்-மாமிச உடலை, இடமாக - வீடாக, உற்றவனே-உடையவனே, அறிவானந்தனே-ஞானாநந்தவடிவனே, என்று-என்று,கொம்மியடி-அகங்கைவிரித்துக் கொட்டடி. எ-று. 7.

காரண காரிய மற்றவனே யாருங்
காணு வருளுருப் பெற்றவனே யெங்கும்
பூரண னாய்நிற்கக் கற்றவனே யாதி
போதனே யென்று நீகொம்மியடி.

(இ-ள்) காரணகாரியம் - எதுப்பொருளும்-பரிணாமவஸ்துவும், அற்றவனே-ஆகாதவனே, யாருங்காணு-ஒருவருமறியாத, அருளுரு-கிருபாசொரூபம், பெற்றவனே-உடையவனே, எங்கும்-எல்லாவிடங்களிலும், பூரணனாய்-நிறைந்தவனாய், நிற்க-நிலைத்திருக்க, கற்றவனே - அறிந்தவனே, ஆதிபோதனே-ஆதாரஞான வடிவனே, என்று, நீ-நீ, கொம்மியடி-அகங்கைவிரித்துக் கொட்டடி. எ-று. 8.

நானெனுஞ் சொற்பொரு ளானவனே ஜக
நாதனெ னப்பெயர் போனவனே யாவு
மானவ னேயல வானவனே சுக
வானவ னேயென்று கொம்மியடி.

(இ-ள்) நானெனுஞ்சொல் - நானென்கிற வார்த்தைக்கு, பொருளானவனே-உரைப்பொருளானவனே, ஜகநாதனென-உலக கர்த்தாவென, பெயர்போனவனே-பேரெடுத்தவனே, யாவு மானவனே-எல்லா மானவனே, அலவானவனே-ஒன்றுமில்லாதவனே, சுகவானவனேயென்று - ஆநந்தாம்பரமானவனேஎன, கொம்மியடி-அகங்கைவிரித்துக்கொட்டடி. எ-று. 9.

சுத்த மசுத்தங் கடந்தவனே யதி
தூராதி தூரமி டைந்தவனே சுக
நித்திய வாரி குடைந்தவனே ஞான
நின்மல னேயென்று கொம்மியடி.

(இ-ள்) சுத்தம் அசுத்தம்-அழுக்கின்மையும் அழுக்குள்ளதும், கடந்தவனே-நீங்கினவனே, அதி தூராதிதூரம்-மிக்கதூரமும் - சமீபமும்விட்டு,

இடைந்தவனே-நீங்கினவனே, சுகநித்திய-நிலையான சந்தோஷ, வாரிகுடைந்தவனே-சமுத்திரத்தில் குளித்தவனே, ஞானநின்மலனே என்று-அறிவெனுங் களங்கமற்றவனே என்று, கொம்மியடி - அகங்கைவிரித்துக் கொட்டடி. எ-று. 10.

முத்தி நிலத்தின் முளைப்பவனே சூழ
மோனநல் வேலி வளைப்பவனே நாளுஞ்
சித்சுக போகம் விளைப்பவனே கன
சின்மய னேயென்று கொம்மியடி.

(இ-ள்) முத்திநிலத்தில்-மோக்ஷபூமியில், முளைப்பவனே - விளங்குபவனே, சூழ-மோக்ஷபூமியைச் சுற்ற, மோனநல்வேலி - மௌனமென்கிற நல்லகாவலை, வளைப்பவனே வளைப்பவனே, நாளும்-எக்காலமும், சித்சுகபோகம்-ஞானசந்தோஷ அனுபவபோகத்தை, விளைப்பவனே-உண்டாக்குபவனே, கனசின்மயனே என்று - ஒன்றாகியஞான வடிவானவனே யென்று, கொம்மியடி-அகங்கைவிரித்துக் கொட்டடி. எ-று. 11,

பேதம பேதமி றந்தவனே வேதம்
பின்னிடத் தேடிக் கரந்தவனே ஞேய
ஞாதுரு ஞானந் துறந்தவனே சுய
ஞானியே யென்றுநீ கொம்மியடி.

(இ-ள்) பேதம் அபேதம்-பின்னம் அபின்னம், இறந்தவனே-இல்லாதவனே, வேதம்தேடி-மறையானது ஆராய்ந்து (காணாமல்) பின்னிட-பின்னிடைய, கரந்தவனே - ஒளித்தவனே, ஞேயம் - காணப்படுபொருளும், ஞாதுரு-காண்பவனும், ஞானம்-இந்திரியங்களும், துறந்தவனே - விட்டவனே, சுயஞானியேஎன்று-இயற்கையறிவானவனேஎன்று, கொம்மியடி-நீ அகங்கைவிரித்துக் கொட்டடி. எ-று. 12.

புண்ணிய பாவம் விளைத்தவனே யுயிர்
பொய்யுட லேறக் கிளைத்தவனே யாவுந்
தன்மய மாக்கித் திளைத்தவனே சிற்
சந்தோதயனே யென்று கொம்மியடி.

(இ-ள்) புண்ணியம்-தருமத்தையும், பாவம்-அதருமத்தையும், விளைத்தவனே-உண்டாக்கினவனே, உயிர்-ஜீவன், பொய்யுடல் - பொய்த் தேகத்தில், ஏற-சம்பந்தப்பட, கிளைத்தவனே-அநேகமானவனே, யாவும்-எல்லாம் தன்மயமாக்கி-தன்சொரூபமாக்கி, திளைத்தவனே-அனுபவித்தவனே, சித்

சதோதயனே-ஞானமாகி என்றும் மறையோதனிறவனே, என்று-என்று கொம்மியடி-அகங்கைவிரித்துக்கொட்டடி. எ-று. 13.

ஜாதிகு லங்க ளிறந்தவனே சுய
ஜாதிவி ஜாதி துறந்தவனே யந்த
மாதியு மாகி நிறைந்தவனே பா
மாநந்த னேயென்று கொம்மியடி.

(இ-ள்) ஜாதி-பிர்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரனுமான நால்வகைஜாதிகளும், குலங்கள்-கூட்டங்களும், இறந்தவனே-இல்லாதவனே, சுயஜாதி-மரத்திற்கு மரம்போலொத்தசொந்தகுலமும், விஜாதி-மரத்திற்கு கல்போலொத்தவேறுகுலமும், துறந்தவனே-நீக்கினவனே, அந்தம்-முடிவும், ஆதியுமாகி-முதலுமாகி, நிறைந்தவனே - பூர்ணப்பட்டவனே, பரமாநந்தனே என்று-குறைவறு சந்தோடவடிவனேயென்று, கொம்மியடி-அகங்கைவிரித்துக் கொட்டடி. எ-று. 14.

நித்திய னாகி நிலைப்பவனே தோற்ற
நிற்கவி டாது கலைப்பவனே யெனைச்
சுத்தனே யாக்கிப் பலிப்பவனே சிற்
சுகோதய னேயென்று கொம்மியடி.

(இ-ள்) நித்தியனாகி-அழியாதவனாகி, நிலைப்பவனே - நிலைத்திருப்பவனே, தோற்றம்-காணப்படு பொருள்கலை, நிற்கவிடாது-நிலைக்கவிடாது, கலைப்பவனே - அழிப்பவனே, எனை-ஆன்மாவாகிய என்னை, சுத்தனேயாக்கி-களங்கமற்றவனாக்கி, பலிப்பவனே-பலிப்பவனே, சிற்சுகோதயனே-ஞானாநந்தமறையப்பெறுதவனே, என்று-என்று, கொம்மியடி-அகங்கைவிரித்துக் கொட்டடி. எ-று. 15.

ஆகசெய்யுட்கள் 309.

---

## அன்னைப்பத்து.

வேதப் பறையர் விரக ருயிருண்ணை
நாத ரநாதிய ரன்னே யெனும்
நாதரே நாதமு னியாகி வந்தெமக்
காதர வீந்தன ரன்னேயெனும்.

(இ-ள்) அன்னே-எனை வளர்த்தெடுத்ததாயே என்னுமணவேற்றுமைக்குக் காரணமயாதெல்லையேல், வேதப்பறையர் - இருக்குமுதலிய நான்கு

வேதங்களையும் வாயாற்சொல்லி நாவால் பறையடித்து தெரிவிக்கின்றவர், விரகர்—மண்-பெண்-பொன்னெனும் மூவாசையுள்ளவரின், உயிருண்ணும்—ஜீவனைப்புசிக்கும், நாதர்—தலைவரும், அநாதியர்—கடவுளர், எனும் — என்று சொல்லுகிறேன், நாதரே—அந்த சகல காரியதோற்றத்திற்கும் காரணபூதரானவரே, நாதமுனியாகி—நாதமுனியெனும் ஆசிரியர்வடிவமாகி, வந்து—என்னெதிரில்தோன்றி, எமக்கு—எனக்கு, ஆதரவு—துணையாகத்தோன்றி, ஈந்தனர் — எனக்கித்துணிவைத்தந்து பந்துக்களை விரும்பாதிருக்கச் செய்தனர், அன்னே—தாயே? எனும்—என்றனக்குச் சொல்லுகிறேன். எ-று. 1.

பக்த்தர் களிக்கும் பதத்தர் தமைவிழை
சித்தர்க் கெளியர்கா ணன்னே யெனும்
சித்தத் திருந்துந் தெரிகிலர் முன்வந்து
முத்தி யளித்தன ரன்னேயெனும்.

(இ-ள்) பத்தர்க்கு—அடியார்களுக்கு, அளிக்கும்பதத்தர்—அவரவர் கோரிக்கையின்படி பதவிகளைக்கொடுப்பவரும், தமைவிழை—ஆன்மாவாகிய தங்களைவிரும்புகிற, சித்தர்க்கு — மனமுடையவர்க்கு, எளியர்காண்—சுலபமாய் அகப்படக் கூடியவர், அன்னே—தாயே? எனும் — என்றனக்குச்சொல்லுகிறேன், சித்தத்திருந்தும்—மனதின்கண் ஈஸ்வரன்வீற்றிருந்தும், தெரிகிலர்—தெரியாதவராகவிருந்து, முன்வந்து—என் முன்வந்து, முத்தியளித்தனர் — மோக்ஷம்கொடுத்தனர், அன்னே—தாயே? எனும்—என்றுசொல்லுகிறேன், என்றவாறு. 2.

என்றும் பிரியா வியல்பினர் யாராலு
மொன்றற் கரியர்கா ணன்னே யெனு
மொன்றற் கரிய குருவாகி யென்னில்யா
னின்றிடச் செய்தன ரன்னேயெனும்.

(இ-ள்) என்றும் பிரியா—எக்காலத்தும் யாரையும் எவற்றையும் விட்டு நீங்காத, இயல்பினர்—சுபாவமுடையவராக விருந்தும், யாராலும் — எவராலும், ஒன்றற்கு—ஒன்றுபடுவதற்கு, அரியர்காண்—அரிதானவர், அன்னே—தாயே? எனும்—என்றுசொல்லுகிறேன், ஒன்றற்கு—அடைவதற்கு, அரியர்—அரிதானவரானாலும், உருவாகி—ஆசிரியர்வடிவமாகிவந்து, என்னில் — அகசப்தார்த்தத்தில், யான்—அறிவாகியயான், நின்றிட—நிலைக்க, செய்தனர்—செய்தார், அன்னே—தாயே?, எனும்—என்றுசொல்லுகிறேன். எ-று 3.

தேடுவர் தேடித் திரியத் திரியாரைக்
கூடிப் பிரிகில ரன்னேயெனுங்

கூடல்பி ரிதலி லர்பல்லு ருத்தோற்ற
வேடிக்கை காட்டலா லன்னையெனும்.

(இ-ள்) தேடுவர்-கடந்தானாகிய தன்னைத்தேடுகிறவர்கள், தேடித்திரிய தன்னிலையிலிருந்துவேறுபட, திரியாரை - அங்ஙனம் வேறுபடாதவரை, கூடி-சேர்ந்தும், பிரிகிலர்-நீங்குதலிலராவர், அன்னை - தாயே? எனும்-என்றுசொல்லுகிறேன், பல்லுருத்தோற்ற - அநேகவடிவக்காட்சிகளாகிய, வேடிக்கை-விநோதபல போதங்களை, காட்டலால்-கூடுவர்போன்று பிரிந்தவர்போன்று கடவுள்காட்டுவதினால், கூடல்-தனையன்றி-இதரவஸ்து இருந்து சேர்தலும், பிரிதல்-தன்னைவிட்டு நீங்குவதும், இலர் - இல்லையாயவர், அன்னை-தாயே, எனும்-என்று சொல்லுகிறேன். எ-று. 4.

மெய்யுரு வொன்றிலர் வேண்டும் பலவிதப்
பொய்யுரு வேற்பரா லன்னையெனும்
பொய்யுரு மெய்யுரு வாக்கிமெய்ப் போதந்தந்
தையம றுத்தன ரன்னையெனும்.

(இ-ள்) மெய்யுரு-உண்மையான வடிவம், ஒன்றிலர் - ஒன்றுமில்லாதவரேயானாலும், வேண்டும்-விரும்பும், பலவிதம்-அநேகவகையுள்ள பொய்யுரு-பொய்வடிவங்களைத் தனக்கு உண்டென, ஏற்பர் - ஏற்றுக் கொள்வர், எனும் - என்றனக்குச் சொல்லுகிறேன், அன்னை - தாயே? பொய்யுரு-பொய்யானவடிவங்களை, மெய்யுருவாக்கி - உண்மை ஞானவடிவங்களாக்கி, மெய்ப்போதந்தந்து-உண்மைஞானசொரூபத்தைக்காட்டிக்கொடுத்து, ஐயமறுத்தனர்-சந்தேகம் நீக்கினர். எனும்-என்றுசொல்லுகிறேன், அன்னை-தாயே, எ-று. 5,

இந்திர ஜால மியற்கையிற் செய்பவர்
மந்திர மோதில ரன்னையெனும்
வந்துல கேக கனவிற் றுயிலிற்செய்
தந்திர மோதில னன்னை யெனும்.

(இ-ள்) இந்திரஜாலம்-அற்புதங்களைக் காட்டும் வித்தையை, இயற்கையில்-சுபாவத்தில், செய்பவர்-செய்யக் கூடியவர், மந்திரம்-மந்திர எழுத்துக்களைநாப்புடைப்பெயரா துச்சரித்தலை, ஓதிலர்-கற்றாரல்லர், எனும்-என்றுசொல்லுகிறேன், அன்னை-தாயே? கனவில்-சாக்கிராவஸ்தையில், உலகம்வந்து-உலகம்தோன்றி, துயிலில்-நித்திராவஸ்தையில், உலகம் ஏக-உலகம்மறைய, செய்தந்திரம்-பண்ணும் உபாயத்தை, ஓதிலன்-சொல்லிலன், எனும்-என்று சொல்லுகிறேன், அன்னை-தாயே. எ-று, 6.

நில்லாத தோற்ற நிலையென் றுணர்வார்க்குப்
பொல்லா மயலீவ ரன்னேயெனும்
பொல்லா மயல்கெட வேண்டி லெமதுரு
வெல்லாமென் றேலென்ப ரன்னேயெனும்.

(இ-ள்) நில்லாத தோற்றம்-நிலைக்காத சராசரப் பிரபஞ்சத்தை, நிலையென்று-நிலையுள்ளதென்று, உணர்வார்க்கு-அறிகிறவர்களுக்கு, பொல்லா மயல்-கெடாதமயக்கத்தை, ஈவர்-கொடுப்பர், எனும் - என்று சொல்லுகிறேன், அன்னே-தாயே, பொல்லா-நீங்காத, மயல்கெட-மயக்கம் நாசமாக, வேண்டில்-விரும்பினால், எல்லாம்-யாவும், எமதுரு என - எமதுவடிவம் என, ஏல் என்று-ஏற்றுக்கொள்வாயாகவென, என்பர்-சொல்வர், எனும்-என்று சொல்லுகிறேன், அன்னே-தாயே, எ-று. 7.

யாரு மறியா வியல்பின ரேயெனைத்
தேரத் தெளித்தார்கா ணன்னேயெனும்
தேரு மனதிற் கறிவாகி நின்றவர்
கோரின செய்தலா லன்னேயெனும்.

(இ-ள்) யாருமறியா-ஒருவரும் தெரிந்து கொள்ளாத, இயல்பினரே-சுபாவமுடையரே, எனை-சர்வாதார ஆன்மாவாகிய என்னை, தேர-தெளிய, தெளித்தார்காண்-அறிவித்தார்காண், எனும்-என்றுசொல்லுகிறேன், அன்னே-தாயே, தேருமனதிற்கு-சத்வ குணமாய்த் தேர்ந்த மனதினிற்கு-அறிவாகி-ஞானமயமாகி, நின்றவர்-நிலைத்தவர், கோரினசெய்தலால்-அடியார் கோரியபடி எவர்க்கும் தனது சுபாவத்தை அறிவிப்பவராகிறார், எனும் - என்றுசொல்லுகிறேன், அன்னே-தாயே. எ-று. 8.

இல்லதை யுள்ள துளதில தாக்கிடும்
வல்லமை யுள்ளவ ரன்னேயெனும்
வல்லவர் நாதமு னியுரு வாய்வடி
வில்லைந மக்கென்று ரன்னேயெனும்.

(இ-ள்) இல்லதை-இல்லாத தேகாதிபிரபஞ்சத்தை, உள்ளது - உள்ள பொருள்களாகவும், உளது-என்றும்உள்ளதாயஞானத்தை, இலதாக்கிடும்-இல்லாதசூனியமாகவும் தோற்றுவிக்கும், வல்லமை-சாமார்த்தியம், உள்ளவர்-உடையவராகிறார், எனும்-என்று சொல்லுகிலேன், அன்னே-தாயே, வல்லவர்-இல்லதையுள்ளதாயும் உள்ளதை இல்லாதாயும் செய்யும் சாமர்த்தியரே, நாதமுனியுருவாய்-நாதமுனியெனும் ஆசிரியர்வடிவாகிவந்தனுக்கிரகஞ்செய்தும், வடிவு-உருவு; நமக்கு - குருசிடராகியநமக்கு, இல்லையென்

றார்-சரீரமென்றுங் கிடையாதெனச்சொன்னார், எனும்-என்று சொல்லுகி றேன் அன்னே-தாயே? எ-று. 9.

எப்பொருள் சுட்டினு மெய்ப்பொரு ளாமிலை
யப்பொரு ளென்பர்கா ணன்னேயெனு
மப்பொரு ளாகிய றிந்தது வாய்நிற்ப
தெப்பொருளே நீயென்றா ரன்னேயெனும்.

(இ-ள்) எப்பொருள்-எந்த தோற்ற வஸ்துவை, சுட்டினும்-குறித்துக் காட்டினாலும், மெய்ப்பொருள்-அத்தோற்றபொருளுக்கு ஆதிகாரணவஸ்து வாம்-அறிவாகியசிமேயல்லாது, அப்பொருள்-அந்த தோற்றவஸ்து, இலை-அறிவன்றி வேறு இல்லை, என்பர்காண் - என்றுசொல்வார்காண். எனும்-என்று சொல்லுகிறேன். அன்னே-தாயே, அப்பொருளாகி-அந்த தோற்ற சராசரவஸ்துக்கள் வடிவாகியும். அறிந்து-அவ்வஸ்துவை தெரிந்து கொள் ளும் தொழிலுமிந்திரியங்களுமாகியும். அதுவாய்நிற்பது - அவ்வஸ்துக்கள் வடிவாகிப்பிரகாசிப்பது. எப்பொருளேயென்றார்-எந்தவஸ்துவோ நீயோ சித்துப்பார்ப்பாயாகவென்றார். எனும்-என்றுசொல்லுகிறேன். அன்னே-தாயே. எ-று. 10,

ஆக, செய்யுட்கள் 319.

## புூர்ணசாரக் கலிவெண்பா.

பொருளா யழியாத போதமாய்ச் சாந்த
வருளே திருமேனி யாளுன்—பெருங்கருணை. 1.

(இ-ள்) அழியாத-கெடாத, பொருளாய்-ஞான வஸ்துவாயும், போத மாய்-அறிவாயும். சாந்தஅருளே-பொறுமையான்கிருபையே, திருமேனி-அழகிய உடல்வடிவமாயும். ஆளுன்-ஆளினவனும்,

சாகரமாய்ச் சூழ்வான் ஜன்ன மரணமெனு
மோகமறு மெய்ஞ்ஞான பூமிகட்குத்—தாகமா. 2,

(இ-ள்) ஜனனம்-பிறப்பு, மரணம்-இறப்பு. எனும்-என்கிற மோகம றும்-ஆசையறக்கும். மெய்ஞ்ஞானபூமிகட்கு-(ஸ்லேச்சை-விசாரணை-தனு மானசி-சத்வாபத்தி சம்சத்தி பதார்த்தபாவனை துரியம்) எனும் உண்மை ஞானபூமிகளேழினுக்கும்.பெருங்கருணை சாகரமாய்-பெரிய கிருபாசமுத் திரமாய், சூழ்வான்-சுற்றியிருப்பவனும்,

அன்பரக மஞ்ஞை யகவவா நந்தநட
மின்பமின்சொற் பெய்ய வெழுமேகந் - துன்பமிகு 3

(இ-ள்) அன்பர்-சிவனடியார்களிட, அகமஞ்ஞை-மனமென்னும் மயிலானது, தாகமாய் - ஆவல்கொண்டு, ஆநந்த நடம் - சந்தோஷக்கூத்தை அகவ-ஆட, இன்பம்-சந்தோஷமான. இன்சொல் - இனியசொல்லாகிய துளிகளை, பெய்ய-பொழிய, எழும்-எழுகின்ற, மேகம்-மேகத்திற்குச்சமானமானவனும்,

மாறாப் பவப்பிணிக்கு மாற்று மருந்தளித்துத்
தேராமுன் கையைவிடாச் சித்தனும்-யாரும் 4

(இ-ள்) துன்பமிகு-துக்கம் அதிகரிக்கச் செய்யும், மாறா - நீங்காத பவப்பிணிக்கு-பிறப்பென்னும் நோய்க்கு. மாற்றும் - தவிர்க்கும், மருந்தளித்து - மருந்தைக்கொடுத்து, தேராமுன் - ஒருவன் குணப்படாமுன், கையைவிடா-சீடனது கையை யிடையில்விடாத, சித்தனும்-சித்திபெற்றவனும்,

பகுத்துணரா வாகாபராபர ஞானந்
தொகுத்து வகுத்துரைக்குஞ் சூரன்-மகத்தென்னுஞ் 5

(இ-ள்) யாரும்-எவரும், பகுத்துணர-பிரித்து அறிய ஆகா-முடியாத பராபரஞானம்-சைதன்னியமும் சடமுமாகிய வஸ்துக்களின் தன்மையை, தொகுத்து-கூட்டியும், வகுத்து-பிரித்தும், உரைக்கும்-சொல்லும், சூரன்-வீரமுடையவனும்,

சொற்குப் பொருளாய்ச் சுகத்திற் கிருப்பிடமா
யற்பமதக்கான் தனக்கு வக்கினியாய்த்-தற்பதத்தைத் 6

(இ-ள்) மகத்தென்னும்-மகாத்மா வென்கிற, சொற்கு-சொல்லுக்கு, பொருளாய்-வஸ்துவாயும், சுகத்திற்கு - ஆன்மானந்த சந்தோஷத்திற்கு, இருப்பிடமாய்-இருப்பிடமாயும், அற்பமதம்-சொல்ப வைஷ்ணவ-சைவ-பௌத்த-சமண-கிறிஸ்தவ-மகம்மதியமுதலிய மதங்களாகிய, கான்தனக்கு-காட்டிற்கு, அக்கினியாய்-எரிக்க நெருப்பானவனும்,

தேராத கள்ளத் திருட்டுக்குருக்கடமை
யாராய்ச்சி சாலை யடையரசன் - பார்மீது 7

(இ-ள்) தற்பதத்தை-உண்மையான பதவியை, தேராத-ஆராய்ந்தறியாத, கள்ளத்திருட்டு-வஞ்சனையாகிய களவுற்ற, குருக்கடமை-ஆசிரியரை, ஆராய்ச்சிசாலை-சாஸ்திர விசாரணைசெய்யும் அறையில், அடையரசன் - அடைக்கும் ராஜனானவனும்,

தத்துவ சங்கத்தின் தலைவனைப் மெஞ்ஞான
வித்தை பயிற்றியின்ப மேவுவிப்பான் - சுத்தபர

(இ-ள்) பார்மீது-உலகத்தின்மேல், தத்துவசங்கத்தின்-உண்மைஞா னைவிசாரிக்கும் கூட்டத்தின், தலைவனைப்-முதன்மையானவனையும், மெய் ஞானம்-உண்மை அறிவாகிய, வித்தைபயிற்றி-கல்வியில் பழக்கி, இன்ப ஆத்மானந்த சந்தோஷத்தை, மேவுவிப்பான்-பொருந்தச் செய்பவனும்,

வத்துவா யெஞ்ஞான்றும் வாசா மகோசரனா
யத்து விதனா யமர்ந்திருக்கும் - வித்தகனை

(இ-ள்) சுத்தபரவத்துவாய் - பரிசுத்தமான மேலான பொருளான னும், எஞ்ஞான்றும்-எக்காலத்திலும், வாசாமகோசரனாய்-வாக்குமனத் கெட்டாதவனானவனும், அத்துவிதனாய-ஏகரூபியானவனுமாய், அமர்ந் ருக்கும்-எங்கும் தங்கியிருக்கின்ற, வித்தகனும்-ஞானவானானவனுமான,

நாதமுனி யென்றிசைக்கு நாமத்தான் றன்பால்யான்
போதல் புரிந்தேனென் புண்ணியத்தால் - வேதன்

(இ-ள்) நாதமுனி-நாதமுனி, என்றிசைக்கும்-என்றுகூறும், நாமத்தா தன்பால்-பேருடையவனிடத்தில், என் புண்ணியத்தால்-என்னிட தவ வசத்தால், யான்போதல் நான்போதலே, புரிந்தேன்-செய்தேன். எ-று.

வருக வருகவென வாய்மலர்ந்தான் மெத்தென்
றுருகுமே யின்றுமதை யுன்னின் - திருகுறுக்கு

(இ-ள்) வேதன்-வேதங்களைச் சொன்னவன், வருகவருகவென - ரும் வாருமென்று, மெத்தென-மிருதுவாக, வாய்மலர்ந்தான்-வாய்விட் சொன்னான், இன்றும்-இப்போதும், அதையுன்னில்-அப்படி அவர்க பிட்டதை நினைத்துப்பார்த்தால், உறுகுமே-என்மனம் கரையுமே. தி கறுக்கும்-குற்றங்களைநீக்கும்,

நெஞ்சத்தான் பண்டிதரே நெடுநா ளாய்க்காணோம்
வஞ்சகனென் றோநீர் வாராதொழிந்தீர் - கிஞ்சந

(இ-ள்) நெஞ்சத்தான் - மனமுடைய எனதாசிரியன், பண்டிதரே (எனைப்பார்த்து) வித்வானே, நெடுநாளாய் - வெகுகாலமாய், காணோம் காணோம், வஞ்சகனென்றோ-(யான்) கபடனென்றோ, நீர்-நீர், வாராது என்முன்வாராமல், ஒழிந்தீர்-நீங்கினீர் (என்றும்); கிஞ்சம்-சிறிது,

தயவுவைத்தா லென்போல்வர் தன்னியரா காரோ
வுயரறிவர்க் கென்னை னுரைப்பன் - செயலறியேன்

(இ-ள்) தயவுவைத்தால்-கிருபைசெய்தால், என்போல்வர் - என் யொத்தவர், தன்னியர்-தனவான்கள், ஆகாரோ-ஆகமாட்டார்களோ, உ

நறிவர்க்கு-மேலான புத்தியுடையவர்க்கு, நான்-(நாதமுனியாகிய) நான், என்னுரைப்பேன் - என்ன சொல்லப் போகிறேன் (என்றும்), செயலறி யேன் - ஈடனே உனக்கு இன்னவிதமரியாதை செய்வதென்று அறியே னென்றும்,

கற்றவரை யேத்துங் கருத்தறியே னென்சிறியேன்
குற்றம் பொறுத்தல் குணமென்று - உற்றசையாச் 14

(இ-ள்) கற்றவரை-உம்மைப்போல் வாசித்தபண்டிதரை, ஏத்தும்-துதி செய்யும், கருத்து-குறிப்பு, அறியேன்-தெரிந்திலனென்றும், குற்றம்-என் தப்பிதத்தை, பொறுத்தல்-சகித்தல், குணம்-நல்லதன்மை (என்றும்), என் றேன்-சொன்னேன். எ-று.

சித்திரம்போ னின்றேன் சிரித்தேனோ நிற்கின்றீர்
சித்தமுற்று வீற்றிருங்கள் சேதிசில - மெத்தநா 15

(இ-ள்) உற்று-அவ்வாறு ஆசிரியர் சொன்னதையறிந்து, அசையா - சலிக்காத, சித்திரம்போல்-சித்திரப்பதுமையைப்போல, நின்றேன்-நிலைத் திருந்தேன், சிரித்து-(நாதமுனியெனும் ஆசிரியர்) நகைத்து, ஏனோ-(எனைப் பார்த்து) என்னத்திற்காக, நிற்கின்றீர்-நிற்கின்றீர், சித்தமுற்று-உள்ளம் அமர்ந்து, வீற்றிருங்கள்-உட்கார்ந்திருங்கள், சிலசேதி - சொஞ்சம் சமாசா ரங்களை,

ளாக வறிய வடியே னினைந்திருந்தே
னேகராய் வந்தீ ரென்பாக்யம் - பாகவத 16

(இ-ள்) மெத்தநாளாக-வெகுகாலமாக, அறிய-(சீடராகிய உம்மிடத் தில்) தெரிந்துகொள்ள. அடியேன்-அடியேன், நினைந்திருந்தேன்-எண்ணி யிருந்தேன், ஏகராய்வந்தீர்-(நீர்) தனிமையாய் வந்தீர், இது என்-இதுஎன் னுடைய. பாக்கியம்--அதிர்ஷ்டம். (ஆம்),

மாதிப் புராண மறைந்த வியாசரிவை
யேதா தரவா லிசைத்தார்காண் - போதமுற்ற 17

(இ-ள்) பாகவதமாதிபுராணம்-பாகவதமுதலிய புராணங்களை, அறைந் தவியாசர்-சொன்ன வியாசபகவானானவர், இவை - இப்பதினெண் புரா ணங்களை, ஏதாதரவால்-எந்த சகாயத்தால், இசைத்தார்காண் - சொன்னார், போதமுற்ற-ஞானத்தினை லடைந்த,

தத்துவத்தைக் காதைசெய்து தந்தனரோ கேட்டவற்றைப்
புத்திகொண்டு பாவாற் புனைந்தனரோ - சத்தியமாய்க் 18

(இ-ள்) தத்துவத்தை-உண்மைகளை, காதைசெய்து-புராணகதைகளா கச்செய்து, தந்தனரோ-கொடுத்தாரோ (அல்லது), கேட்டவற்றை-(வசிட்

டர்-சத்தியர்-பராசர்முதலிய தன்மூதாதைகளாலும் இன்னும் மற்றரிஷிக ளாலும்) கேட்டு அறிந்த விஷயங்களை, புத்திகொண்டு – தம்சொந்த அறிவைக்கொண்டு, பாவால்-பாட்டுகளால், புனைந்தனரோ–அலங்கரித்தனரோ, சத்தியமாய்-நிஜமாய்.

கண்ணாரக் கண்டே கதைக ளெழுதினரோ
விண்ணுஞ்சிற் கண்ணில் விளங்கியதைப் - பண்ணுருவாய்ச் 19

(இ-ள்) கண்ணாரக்கண்டே–(துவாபரயுகம் கடைசியில் பிறந்தவியாசர் முந்தின கிரேதாயுகம் திரேதாயுகங்களில் நடந்த விஷயங்களையும், பிந்தின கலியுகத்தில் நடக்கப்போகிற விஷயங்களையும்) கண்ணிறம்பப் பார்த்தே, கதைகள்–பதினெண் புராணகதைகளை, எழுதினரோ–எழுதினரோ, விண்ணும்–ஆகாச வடிவமாகிய, சிற்கண்ணில்–ஞானக்கண்ணில், விளங்கியதை–தெளிவான விஷயத்தை பண்ணுருவாப்–இசைப்பாட்டு வடிவமாய்,

செய்தனரோ தத்துவத்தைத் தேர்ந்துநங்கை சூத்திரர்க
ளுய்ய வுருவகித் தோதினதாய் - மெய்யுணர்ந்தோர் 20

(இ-ள்) செய்தனரோ–செய்தனரோ, மெய்யுணர்ந்தோர் – உண்மை யறிந்த ஞானிகளானவர்கள், நங்கை–பெண்களும், சூத்திரர்கள் – ஞானங் குறைவான புருஷர்களும், தத்துவத்தை – வேதத்திற்கூறிய உண்மைகளை, தேர்ந்து–புராணங்களின் வாயிலாகத்தெளிந்து, உய்ய – (ஆத்மாதானென் றுணர்ந்து) பிழைக்க, உருவகித்து–(ஆன்மாவின் சாயையேதேகாதி உலக சரித்திரமென்று உருவக அலங்காரப்படி ரூபித்து, ஓதினதாய்–புராணங்க ளிற சொன்னதாயும்,

சொல்லத்தாங் கேட்டதாய்ச் சொல்லுகின்றார் சோதித்த
வல்லவர்க ணீரிதனின் வாய்மைதனை - பல்விதத்துஞ் 21

(இ-ள்) சொல்ல–சொல்ல, சோதித்த வல்லவர்கள்–(வேதாகமஸ்மிரு திகளை) ஆராய்ந்துணர்ந்த சாமர்த்திய புருடர்கள், தாம் கேட்டதாய்–தாங் கள் கேட்டதாயும், சொல்லுகின்றார்–சொல்லுகின்றார்கள், நீர் – நீர், இத னின் – (மெய்புணர்ந்தவர்கூறின) இவ்விஷயத்தின், வாய்மைதனை–உண் மையை, பல்விதத்தும்–பலவகையிலும்,

சங்கையறச் சொல்லிச் சழக்கறுப்பீ ரென்றும்பா
லிங்கிதனைக் கேட்டே னிதுநிற்க - யங்காத 22

(இ-ள்) சங்கையற–என் சந்தேகம்நீங்க, சொல்லி–(வேததாற் பரியமே புராணகதை என்று) சொல்லி, சழக்கறுப்பீர்–(புராணத்திற் கூறுங்கதை குறைத்த கதையேயன்றி யதார்த்தகதை யல்லவென் றுணராதிருக்கும் என்னி–) குற்றத்தை நீக்குவீர், என்று–என்று, இங்கு–இவ்வுலகில், இதனை –

இவ்விஷயத்தை, உம்பால் கேட்டேன்-உம்மிடத்து அறியகேட்டுக்கொண்டேன், இதுநிற்க-இதுநிற்கட்டும், மங்காத-கெடாத,

வேத முபநிடதம் வியனா கமஸ்மிருதி
யாதிநூ லிங்கிருக்க யாதுபற்றி - யோதினரோ 23

(இ-ள்) வேதம்-(இருக்கு-யஜுர்-சாமம்-அதர்வணம் எனும்) நாலுவேதங்களும், உபநிடதம்-(வேதங்களின் பிரிவாகிய பிரமோபநிஷத்-கைவல்யம்) முதலிய 1130-உபநிஷத்துகளும், வியனாகமம்-பெருமைபொருந்திய (காமிகம்-யோகசம்முதலிய இருபத்தெட்டு சிவாகமங்களும்,பாஞ்சராத்திரம்-வைகாநசம் எனும் இரண்டுவைணவாகமங்களும்), ஸ்மிருதி-(வேதாந்தம் வைசேடிகம்-பாட்டம்-பிரபாகரம்-பூர்வமீமாஞ்சை-உத்திர மீமாஞ்சை எனும் ஆறுவைதிக சாஸ்திரங்களும்)[மனு-அத்திரி-ஹரிதம்-விட்டுணு-யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கீரசம், யமம், ஆபத்தம்பம், சம்வர்த்தம் காத்தியாயனம்-பிரகற்பதி பாராசரம்-வியாசம்-சங்கலிதம்-தக்கம் கௌதமம்-சாதாண்மம்-வசிட்டம்-எனும்-18-தருமசாஸ்திரங்களும்]. ஆதிநூல்-முதலியநூல்கள், இங்கிருக்க-இவ்வுலகத்திலிருக்க, யாதுபற்றி - என்னகாரணத்தால், ஓதினரோ-சொன்னரோ,

இப்பதி னெட்டா மிரும்புரா ணங்கடமைச்
செப்புமுன்னர் சூத்திரர்க ளோர்ந்த - இப்புவியில் 24

[இ-ள்] இப்பதினெட்டாம்-[சைவம்-சாந்தம்-இலையங்கம்-கூர்மம்-வாமனம்-வராகம்-பௌடிகம்-மச்சியம்-மார்க்கண்டேயம்-பிரமாண்டம் எனும் பத்து சிவபுராணங்களும், நாரதீயம்-பாகவதம்-காருடம்-வைணவம் எனும் நான்கு விஷ்ணுபுராணங்களும்; பிரமம்-பதுமம் எனும் இரண்டு பிரமபுராணங்களும், பிரமகைவர்த்தமெனும் சூரியபுராணமும், ஆக்னேயம் எனும் அக்கினிபுராணமும்] ஆக இப்பதினெட்டாகிய, இரும்புராணங்கடமை — பெரியபுராணங்களை, செப்புமுன்னர் — வியாசர்சொல்லு முன்னே, சூத்திரர்கள்—பேதமையறிவுடையோர், இப்புவியில்—இந்தப்பூமியில்,தேர்ந்தநூல்—ஆன்மஞானம்பெற்ற சாஸ்திரம்,

யாதோ விலையே லவர்க்கென் றிவர்மறையை
யோதல் வெளியாக வொவ்வுமோ - வீதிருக்க 25

(இ-ள்) யாதோ—வேதாகமஸ்மிருதிகளல்லாது வேறு எதுவோ,இலையேல்--ஸ்திரிசூத்திரர்கள் வேதத்தை வாசித்து மோக்ஷமடையும்படியானவிதம் இல்லையென்பது மெய்யானல், அவர்க்கென்று—அந்த ஸ்திரி சூத்திரர்களுக்கு, இவர்—இவ்வேதவியாசர், மறையை—வேதசாரத்தை, வெளியாக — வெளிப்படையாக, ஓதல்—புராணங்களில் சொல்லுதல், ஒவ்வுமோ—பொருந்துமோ? ஈதிருக்க-இது நிற்க,

ஐங்கணைபூ வாம்வண் டதுநாணும் விற்கரும்பா
மங்கையரே சேனையா மாங்குயில்க - ளெங்கும் 26

[இ-ள்] ஐங்கணை - பஞ்சபாணங்கள், பூவாம் - [முல்லை-அசோகு, நீலோற்பலம்-அல்லி-தாமரையாகிய பூக்களாம்], வண்டது-வண்டானது, நாணும்-[மன்மதன் வில்லிற்பூட்டும்] கயிறும், வில்கரும்பாம்-வில்கரும்புக் கிடைகளாம், மங்கையரே-பெண்களே, சேனையாம்-படைகளாம், மாங்குயில்கள்-மாமரத்தில்-வசிக்கும் குயில்களானது, எங்கும்-எவ்விடங்களிலும்

வரவுரைக்குங் காகளமா வான்றேராந் தென்ற
லிரவிற்கு நாயகனு மிந்து - பரவு 27

[இ-ள்] வரவுரைக்கும்-மன்மதன் வரவைத்தெரிவிக்கும், காகளமாம்-ஊதுங்கொம்புகளாம், தென்றல் - தெற்கிருந்து வீசுங்காற்றானது, வான்தேராம்-உயர்வாகிய இரதமாம், இரவிற்கு-இராத்திரிக்கு, நாயகனும்-[இருள் நீக்கும்] தலைவனாகிய, இந்து-சந்திரன், பரவு-பரந்த,

குடையாங் கிளிபரியாங் கொண்டகொடி மீனு
முடையா னெவர்க்குமய லூட்டி - யடைவே 28

[இ-ள்] குடையாம்-குடையாகும், கிளி-கிளிகளானது, பரியாம் - தென்றல் தேரையிழுக்கும் குதிரைகளாம், கொண்ட-மன்மதன் கைக்கொண்டிருக்கிற, கொடி-துவஜக்கொடி, மீனும் - சேல்கண்டையாம், உடையான்-பஞ்சபாணம் முதலியயாவும் உடையவன், எவர்க்கும்-புருஷர்களாகிய எவர்களுக்கும், மயலூட்டி-காமவெறி உண்டாக்கி, அடைவே-அவ்வழியே,

கடலுலகை வெல்வானுங் காணே மவனைப்
படையாதி யிங்கிருக்கப் பார்ப்போங் - கடிமலரா 29

(இ-ள்) கடலுலகை-சமுத்திரஞ்சூழ்ந்த புவியிலுள்ளஜனங்களை, வெல்வானும்-ஜயிப்பானும், அவனைக்காணேம்-அம்மன் மதனைக்காணேம், படையாதி-அவன்சேனை-ஆயுதம்-கொடி-தேர்-முதலியவைகள், இங்கிருக்க-இப்பூமியிலிருக்க, பார்ப்போம்-கண்டிருக்கிறோம், கடிமலரால்-வாசனையுற்ற முல்லைமுதலிய புஷ்பபாணங்களால்,

லாடவரை யன்றி யரிவையரை யுங்காமன்
சாடன் முறையாமோ தம்படையே - யேடறிந்தோர் 30

[இ-ள்] ஆடவரை-புருஷர்களை, அன்றி-அல்லாமல், அரிவையரையும்-[தமயந்தி-சீதை-அகலிகைமுதலிய] பெண்களையும், காமன்-மன்மதன், தம்படையே-தன்சேனையே யென்றறிந்தும், சாடல் - காமமடைய பாணம்போடல், முறையாமோ-நல்லொழுக்கமாகுமோ, ஏடறிந்தோர்-நூல்களறிந்த பெரியோர்,

திங்கள் குடையாமோ தென்றல் விமானமோ 31
விங்குருவ கஞ்செய்தா ரென்றுரைப்பார் - சங்கையுண்டோ

[இ-ள்] திங்கள்—சந்திரன், குடையாமோ—குடையாகுமா? தென்றல்—தேற்கேயிருந்து வருங்காற்றானது. விமானமோ — தேராகுமோ. (ஆகாது ஆகையால்), இங்கு—இவ்வுலகில், உருவகம் செய்தார் என்று—உவமான உவமேயப்பொருள்களை யொன்றாகவமைத்துக் கூறினார்களென்று, உரைப்பார்—கற்றவர்கள் சொல்லுகிறார்கள், சங்கையுண்டோ—இதில்சந்தேகம் ஏதாவது உண்டோ?

சித்தஜன் சித்தத் துதிப்பவனல் லாலுளனே
புத்திமா னேநீர் புகலுவீர் - இத்தரையோ 32

[இ-ள்] இத்தரையோர்—இவ்வுலகிலுள்ளவர்களுடைய, சித்தத்துதிப்பவன்—உள்ளத்தில்தோன்றுபவன். சித்தஜன்—மன்மதன், அல்லால்—அல்லாமல். உளனே—வேறே இருக்கிறானோ. புத்திமானே—விவேகியே. நீர்—தாங்கள். புகலுவீர்—தயைசெய்து சொல்லுங்கள்,

ரங்கத் துதித்தொடுங்கு மங்கஜனையல்லா
லெங்குணர்ந்தீ ரங்கமிலா வில்லானை - பொங்கொலிநீர் 33

[இ-ள்] அங்கத்து—உலகிலுள்ள எல்லாச் சீவவர்க்கங்களுடைய சரீரங்களில் உதித்து—பிறந்து, ஒடுங்கும் — பிற்காலத்தி லவற்றிலடங்கும், அங்கஜனை—மன்மதனை, அல்லாமல்—அன்றியில். அங்கமிலா — உடலில்லாத. இல்லானை—இல்லாதவனை. எங்குணர்ந்தீர்—எந்தலோகத்தில்தாங்களுணர்ந்தீர்கள். பொங்கொலிநீர்—பொங்கிசப்திக்கும் கடல்சூழ்ந்த;

மூவுலகு முண்டுமிழ்ந்த மூர்த்திக்குப் புத்திரனை
மேவளோ பெற்றாளை யானறியேன் - பாவலரே 24

(இ-ள்) மூவுலகும்—சொர்க்கம்-மத்தியம்-பாதளம் என்கிறமூன்று உலகத்தையும். உண்டு—விழுங்கி. உமிழ்ந்த—வெளிப்படுத்திய. மூர்த்திக்கு—வியாபகஉருவமுடைய விஷ்ணுவிற்கு. புத்திரனும்—மன்மதன் பிள்ளையாம். எவளோபெற்றாளை—மன்மதனைப் பெற்றதாயானவள் எவளோ அவளை. யானறியேன் — யான் எப்புராணத்திலு மெழுதியிருக்கப் பார்த்திலேன். பாவலரே—பாடவல்ல வித்வானே,

மந்தரமே மத்தாக வாசுகித்தாம் பாற்பிணித்துங்
கந்தரத்துத் தேவ ரசுரர்களு - முந்திக் 35

(இ-ள்) இங்கு—இவ்வுலகில். மந்தரமே—மந்தரமலையையே, மத்தாக — மத்தாகநியமித்து. வாசுகி—அஷ்டநாகத்திலொன்றாகிய வாசுகியெனும். தாம்பால்—கயிற்றினால்பிணித்து—அம்மந்திரமலைமத்தைஇறுக்கி. அந்தரத்து—ஆகாசத்திலுள்ள. தேவர்—தேவர்களும். அசுரர்களும்—இராட்சதர்களும்[தலைவால் புறங்களிலிருந்திழுத்து. முந்தி—முற்காலத்தில்,

கடையவரு தெள்ளமுதுங் கஞ்சத்தோர் மாதும்
புடையோ ரிரதியெனும் பெண்ணுங் - குடையான 36

[இ-ள்] [பாற்கடல்] கடைய-பாற்கடலைக்கடைய. வருதெள்ளமுதம்-அப்பாற்கடலிலுண்டாகிய அருமையாகிய தேவாமிர்தமும். கஞ்சத்தோர் மாதும்-செந்தாமரையில்வசிக்கும் ஒப்பற்ற இலட்சுமியையும். புடை-இலட்சுமியின் பக்கத்தில் ஓர் இரதியெனும் பெண்ணும் - ஒப்பற்ற இரதிதேவி யென்கிற பெண்ணையும். குடையான-மன்மதனுக்கு குடையென்று சொல்லுகிற.

சந்திரனே யாதிபொரு டந்ததாம் பாற்கடலின்
றெந்த விடத்தி லிருக்கிறதோ - வந்தோ 37

[இ-ள்] சந்திரனே-சந்திரன். ஆதிபொருள்-முதலாகிய வஸ்துக்களையும் பாற்கடல்-அப்பாற்கடல். தந்ததாம்-கொடுத்ததாம். இன்று - [அந்த பாற்கடல்] இப்பொழுது. எந்தவிடத்தில்-பூமியாகாயமென்னு மிடங்களி லெதில். இருக்கிறதோ-இருக்கிறதோ? அந்தோ-ஐயோ!

திருமாதைத் தந்தை திருமணஞ்செய் கால்பின்
வருமாதை மாரன் மணக்க - விருவரையு 38

[இ-ள்] தந்தை-மன்மதனுக்கு தகப்பனாகிய விஷ்ணுவானவர். திருமாதை-இலட்சுமியை. திருமணஞ்செய் - கலியாணம் செய்துகொள்ள. கால்பின்-இலட்சுமி வந்தவழியில் அவளுக்குப்பிறகே. வருமாதை-வந்த இரதிதேவியை. மாரன்-மன்மதன். மணக்க-கலியாணஞ் செய்துக்கொள்ள, இருவரையும்-விஷ்ணு-மன்மதனாகிய இவ்விருவரையும்.

மெந்தமா ரன்கணைக ளெய்திவரை வென்றானோ
வந்தமா ரன்பிறப்பை யானறியேன் - சந்திரன்முன் 39

[இ-ள்] எந்தமாரன்-வேறே எந்தமன்மதன். கணைகளெய்து - புஷ்பபாணங்களைபபோட்டு. இவரை-இவ்விருவரையும். வென்றானோ - காமமூட்டி ஜயித்தானோ. அந்தமாரன்-அந்த மன்மதன். பிறப்பை-ஜனனத்தை. யானறியேன்-யான் தெரிந்திலன். சந்திரன்-ஆகாயத்திலுள்ள சந்திரனும்.

னில்லையோ செய்யா ளிரதி முதலானோர்
புல்லறிவேற் கீது புகலுவீர் - தொல்பொருளின் 40

[இ-ள்] செய்யாள்-இலட்சுமியும். இரதிமுதலானோர் - இரதிதேவி முதலாயினோரும். முன் இல்லையோ-பாற்கடலில் பிறவாமுன் இவ்வுலகில் இல்லையோ. புல்லறிவேற்கு - அற்ப புத்தியுடைய எனக்கு. ஈதுபுகலுவீர்-புராணிகராகிய நீர் இதைச்சொல்லுவீர். தொல்பொருள் - பழமையாகிய வஸ்து.

றில்லைபோ லும்பூகோ ளப்பரப்பை யிந்நாளில்
வல்லவர்க ளாய்ந்து வழக்கறவே - யெல்லைமை 41

[இ-ள்] இன்று - இக்காலத்தில். இல்லைபோலும் - இல்லைபோலும் காண்கிறது, பூகோளப்பரப்பை-உலக உருண்டையின் விசாலத்தை. இந்நாளில்-இக்காலத்தில். வல்லவர்கள் - அளப்பதில் சாமர்த்திய முள்ளவர்கள். ஆய்ந்து-ஆராய்ந்தறிந்து. வழக்கறவே-சந்தேகம் நீங்கவே, எல்லைமல்-அளவையின்.

நீறைக் குறைய விருபதுகோ டிச்சதுர
நீறென்றார் காணும்பா லென்கடலை - யாரியர்கள் 42

[இ-ள்] ஈறு—முடிவு. ஏறக்குறைய—கிட்டத்தட்ட. இருபதுகோடிச்சதுரம்—இருபதுகோடிச்சதுரம், என்றார்—என்றுசொன்னார்கள், பாலென்கடலை—அவ்வெல்லைக்குள் பாலென்கிற சமுத்திரத்தை. காணும்—பார்த்த இல்லை ஆரியர்கள்—அறிவுடைய வேதவியாசர்முதலிய ஆரியர்கள்,

பொய்யுரைப்ப ரோகாண் பொருளே ழிளகலென
மெய்யே யருளினரிம் மேதினமே - லையமின்றி 43

[இ-ள்] பொய்யுரைப்பரோ காண்—பொய்சொல்வார்களோ, ஏழ்பொருள்—(எல்லாசராசர வஸ்துக்களில் உள்ளடங்கியிருக்கும் பால்-தயிர்-நெய்-உப்பு-கள்-தேன்-நல்ல நீர்முதலிய) ஏழுவஸ்துக்களை, இளகலென—இளகலான கடலென்று, இம்மேதினிமேல்—இப்பூமியின் மீது, மெய்யே—உண்மையாய் உருவகப் படுத்தியே, அருளினர்—(அறிவுளோர்) சொன்னார்கள், ஐயமின்றி—சந்தேகமில்லாமல்,

யெங்கும்பா னெய்தே னிலவணநீர் நன்னீர்க
டங்க வுருவகித்துத் தாமென்பர் - பங்கமென்னே 44

(இ-ள்.) எங்கும்பால்—எல்லா சராசர வஸ்துக்களில் பாலும், நெய்-தேன்—நெய்யும்-தேனும், இலவணநீர்—உப்பு ஜலமும், நன்னீர்கடங்க—நல்லஜலமும் தங்கி யிருப்பதால், உருவகித்து—உருவகப் படுத்தியே, தாமென்பார்—சமுத்திரமென்றார்கள், பங்கமென்ன—குற்றமென்ன? ஒன்றுமில்லை. எ-று.

பாற்கடலை யீசனொரு பாலனுக்கீந் தாரெனல்போல்
யார்க்குங் கொடுத்திருத்த லாரறியார் - பாற்கொண்டே 45

(இ-ள்.) பாற்கடலை—பால் சமுத்திரை, ஈசன்—ருத்திரமூர்த்தி, ஒருபாலனுக்கு—ஒருகுழைந்தைக்கு, ஈந்தார்—கொடுத்தார், எனல்போல்—கொடுத்திருத்தல்—(பெண்கள்புசித்த அன்னத்தை அவர்தேகத்திருக்கும் அக்கினி வடிவானருத்திரன் ஜீரணிக்கச்செய்து பாலாகமாற்றி முலையின் வழிகொடுத்திருத்தலென்லை, ஆர்அறியார்—ஆர் தெரிந்திலார்? எல்லார்க்கும்தெரியும். பாற்கொண்டே—பாலைக் கொண்டே.

யெல்லா வுயிரு மிருநிலத்தில் வாழ்கின்ற
தல்லாமற் காணு மறிந்தவிவை - தொல்கடல்வே 46

(இ-ள்) எல்லா வுயிரும்—எல்லாஜீவர்களும், இருநிலத்தில்—பெரியபூமியில், வாழ்கின்றது—ஜீவிக்கின்றது, அல்லாமல்—அல்லாமல், காணும்—வேறேபாற்கடலிருக்கக்கண்டிலம், அறிந்தவிவை—யாவரும் உணர்ந்தது இவையாகும், தொல்கடல்—பழமையான பாற்கடல்,

றுண்டாயி னெங்குளவோ வோது முவர்க்கடல்போற்
கண்டாரைக் கண்டாரைக் காணயான் - பண்டிதரே 47

(இ-ள்.) வேறுண்டாயின்-பொருள்களைவிட்டு வேறே யிருக்குமாகில், உவர்கடல்போல்-உப்புக் கடலைப்போல், எங்குளவோ-எங்கிருக் கிறதோ? கண்டாரை-பாற்கடலைப் பார்த்தவரை, கண்டாரை-பார்த்தவரை, யான் காண-யான்பார்க்க, ஓதும்-சொல்லும், பண்டிதரே-வித்வான்களே,

தேவ ராக்கர்முனி சித்தர்வித் யாதரர்கள்
பூவுலகிற் காணோமே போனதெங்கே - மேவுந் 48

(இ-ள்.) தேவர்-தேவர்களும், அரக்கர்-இராக்ஷதர்களும், முனிவர்-முனீஸ்வரர்களும், சித்தர்-சித்தர்களும், வித்தியாதரர்களும்-வந்து உலாவுவார்களென்று கற்பனையாய் புராணங்களில் சொன்னபடி இப்போது வரக்காணோமே, போனதெங்கே-எங்கேபோய்மறைந்தார்கள்,மேவும்-யாவரும், விரும்பும்,

கயிலை மகமேரு காணோ மிமய
சயிலத்தே கங்கை ஜனிக்குங் - குயின்பனிக 49

(இ-ள்.) கயிலை-கைலாசபர்வதமும், மகமேரு-பெரியமலையும், காணோம்-பூமியில் காணோம், இமயசயிலத்தே-பனிமலையிலே ருத்திரமூர்த்தியாகிய சூரியனிடகிரணங்களாகிய சடைபட்டு பனிஉருகி, கங்கை-கங்காநதியானது, ஜனிக்கும்-பிறக்கும், குயின்-மேகமும், பனிகள்-பனித்துளிகளும்

ளெல்லாம லாகாய கங்கைவே றுண்டாமோ
வெல்லா முணர்ந்தீரே யீதிசையு - மல்லாமல் 50

(இ-ள்.) அல்லாமல்-தவிர, ஆகாய கங்கை-ஆகாயத்தி லிருந்து இறங்கும்ஜலம், வேறுண்டாமோ-வேறுளதோ, எல்லாமுணர்ந்தீரே-எல்லாமறிந்த வித்வான்களே, ஈதிசையும்-இதையறிந்து சொல்லும், அல்லாமல்-இவைகளல்லாமல்,

வாணியென்பாள் கற்றவர்கள் வாயாங் குளந்தூறும்
பாணிவரு நாக்கமலம் பற்றிநின்று-வேணநூல் 51

(இ-ள்.) வாணியென்பாள்-சரஸ்வதியென்பவள், கற்றவர்கள்-படித்தவரிட, வாயாம்குளத்து-வாயாகியகுளத்தில், உளறும்-சுரக்கின்ற, பாணிவரும்-ஜலம் வரும், நாக்கமலம்-நாவாகிய வெண்டாமரையை, பற்றிநின்று-பிடித்திருந்து, வேணநூல்-அநேகசாஸ்திரங்கள்,

பாடநாம் கேட்போமே பண்டிதர்பால்வேதாவைக்
கூடல் பிரிந்தவிதங் கூறுமையா - வேடகற்றி 52

(இ-ள்.) பாட-பாடுகிறதை, பண்டிதர்பால்-வித்வான்களிடத்தில், நாம்கேட்போமே-நாம்கேட்டிருக்கிறோமே, ஆனபால்)வேதாவை - பிரமனை

கூடல்—கூடியிருந்த விதமும், பிரிந்தவிதம்—பிரமன் நாவை விட்டுப் பிரிந்து வித்வான்களுள்நாவில் வந்துதங்கிய விதத்தையும், ஏடகற்றி—புராணபுத்தகத்தில் காட்டுகிறேனென்பதைவிட்டு, கூறுமையா—சுருதியுத்தியனுபவங்களுக்கு ஒப்பும்படிசொல்லுமையா. எ-று.

மேருவில்லாய் நாணரவாய் வெங்கணைமா லாயிரதம்
பாராக வேதம் பரியாகச் - சாரதியு 53

(இ-ள்.) மேருவில்லாய்—மகம்மேரு வில்லாயும், நாணரவாய்—அவ்வில் விற்பூட்டுங்கயிறு ஆதிசேடனெனும்பாம்பாயும், வெங்கணைமாலாய்—அவ்வில்லிற்றொடுக்கும் கொடியபாணம் விஷ்ணுவாயும், இரதம்பாராக—தேர் பூமியாகவும், வேதம்பரியாக—இருக்குமுதலிய நான்குவேதங்கள் தேரை யிழுக்கும்குதிரைகளாகவும், சாரதியும்—தேர்ஓட்டுகிறவனும்,

நான்முகனே யாக நகையாற் புரமெரித்தான்
கூன்பிறைசேர் கூத்தனென்பர் கூறுதேர் - மானுலக 53

(இ-ள்.) நான்முகனேயாக—நான்குமுகங்களையுடைய பிரமனும்உடையவனும், கூன்பிறைசேர்—வளைந்த மூன்றாம்பிறை சந்திரனைமுடியில் சேர்த்திருப்பவனும், கூத்தன்—யமனை உதைத்தவனுமாகிய சிவபெருமான், நகையால்—சிரிப்பினால், புரமெரித்தான்—சொர்க்கம்-மத்தியம்-பாதாள மெனும் மூன்றுலகங்களையும் எரித்து சாம்பலாக்கினான், என்பார்—என்றுபுராணிகர் சொல்வார்கள். மானுலகம்—உருவமான உலகங்களை, கூறுதேர்—தோராக்கினதாகச் சொல்லப்பட்டது.

மொன்றோ பதினான்கோ வொன்றென்னின் மற்றவற்றை
யன்று சுமந்தவரா ரோயோமே - நின்றவுல 55

(இ-ள்.) ஒன்றோ—ஒருஉலகத்தைதேராக்கினதோ (அல்லது) பதினான்கோ—பதினான்குலகத்தை தேராக்கினதோ, ஒன்றெனனில்—ஒருலகத்தை தேராக்கினதென்றால், மற்றவற்றை—மற்றபதின் மூன்று உலகத்தை, அன்று—ஆதிசேடனைவில்லிற்பூட்டும் கயிறாக்கிக்கொண்ட அப்போது, சுமந்தவர்—தாங்கினவர், ஆர்ஆயோமே—ஆர்விசாரியோமே, நின்றவுலகு—நிலைத்திருக்கும் உலகங்கள்,

கேழேழு மென்னி லிதிலடங்கு முப்புரமும்
பாழாக்க லெங்கே பகருவீர் - வீழா 56

(இ-ள்) ஏழேழும்—பதினாலையும், என்னில்—தோராக்கினாரென்னில், இதில்—இத்தேரில், முப்புரமும்—மூன்றுலகங்களும், அடங்கும்—அடங்கியிருக்கும், எங்கே—தேரையா உலகத்தையா எதை, பாழாக்கல்—நாசஞ்செய்தல், பகருவீர்—சொல்லுவீர், வீழா—வீழுதலிலாத,

வெழுதா மறைபரியா மென்ப துருவகமே
பழுதல்ல வென்பர் பயின்ரோர் - முழுமணிசேர் 57

(இ-ள்.) எழுதா-எழுதாத, மறை-வேதத்தை, பரியா மென்பது-குதிரையாமென்பது, உருவகமே-ஒன்றை மற்றொன்றாக பாவித்துச் சொன்னதே, பயின்ரோர்-தனையறிவுவடிவாக பழகினபெரியோர், பழுதல்ல-உருவமாகச்செய்ததுதப்பிதமல்ல, என்பர்-என்றுசொல்லுவார்கள், முழுமணிசேர்-பருத்தமாணிக்கம் தலையிற்சேர்ந்துள்ள,

சேடன் மகமேரு சென்றழுத்து நாளுலகைச்
சூடிச் சுமந்தவ ரார் தோன்றதே - சேடனென்பான் 58

(இ-ள்.) சேடன்—ஆதிசேஷனானவன், மகம்மேரு—இமயமலையின் சிகரத்தின் துவாரங்களிலிருந்து வாயுபகவான் வெளிப்படாதிருக்க அத்துவாரங்களை, சென்று—தான்போய்தன்படங்களால்மூடி, அழுத்துநாள்—அழுத்துகின்றகாலத்தில், உலகை-பூமியை, சூடி—தலையி லணிந்து, சுமந்தவரார்—தாங்கினவரார், தோன்றதே—காணப் படாதே, சேடனென்பான்—ஆதிசேஷனென்பவன்,

பாற்கடலின் மீது பரந்தாம னுக்கணையாய்
மேற்கிடந்தா லோதமெதன் மேற்கிடக்கும் பாற்கடலோ 59

(இ-ள்) பாற்கடலின்மீது—பால்சமுத்திரத்தின் மேல் படுத்திருக்கும், பரந்தாமனுக்கு—மேலுலக வாசியாகிய நாராயணனுக்கு, அணையாய்—படுக்கையாக, மேற்கிடந்தால்—பாற்கடலின்மீது இருந்தால், ஓதம்—உலகமானது எதன்மேற்கிடக்கும்—எதன்மேல் தாங்கப்பட்டிருக்கும், பாற்கடலோடு- பால்சமுத்திரத்தோடு,

டாலிலையுஞ் சேட னருந்தவமார்க் கண்டன் முதன்
மேலிருந்தால் விண்டு விழுங்கியதென் - பாலுருவச் 60

(இ-ள்,) ஆலிலையும்—ஆலிலையும், சேடன்—ஆதிசேஷனும், அருந்தவம்—அரிதானதபசுடைய, மார்க்கண்டன்—மார்க்கண்டன், முதல்—முதலானதும், மேலிருந்தால்—பூமியின் மீதிருந்தால், விண்டு—விஷ்ணுவானவர், விழுங்கியதென்—உலகத்தை உண்டது என்ன? பாலுருவ—பால்போல் வெள்ளை வடிவமான,

சந்திரனை யீசன் றரித்தாரென் பாரெந்தச்
சந்திரனோ வன்னோர்கண் டன்னையோ - வந்தமிலா 61

(இ-ள்.) சந்திரனை—சந்திரனை, ஈசன்—சிவபெருமான், தரித்தாரென்பார்—தன்சடாமுடியில் அணிந்தாரென்பர், எந்தசந்திரனோ—பாற்கடலில் பிறந்தசந்திரனோ? ஆகாயத்திலுள்ளசந்திரனோ எந்த சந்திரன், அன்னோர்—அச்சிவனோர், கண்டன்னையோ—கண்ணாகியசந்திரனையோ, அந்தமில்லா—முடிவில்லாத

வாதிப பரம னனற் கண்ணா லங்கஜனைப்
பூதியாய்ப் போகப் புரிந்தாற்போன் - மாதேவன் 62

(இ-ள்.) ஆதிப்பரமன்-முதற் பொருளாகிய சிவபெருமான், அனற்கண்ணால்-நெருப்புக்கண்ணால், அங்கஜனை-மன்மதனை. பூதியாய்ப்போக-சாம்பலாகப்போக, புரிந்தாற போல்-செய்தாற் போலவும், மாதேவன்-பெருமையுற்ற சிவபெருமான்,

முப்புரங்க ணீறாக்கி முன்னவையாண் டார்தம்மைத்
தப்பிலாத் தன்னுருவிற் சாத்துதல்போ - லெப்பொழுதும் 63

(இ-ள்.) முப்புரங்கள்-(சொர்க்க-மத்திய-பாதாள மெனும்) மூன்றுலகங்களை. நீறாக்கி-சாம்பலாக்கி, முன்னவையாண்டார்தம்மை-முன்னம் மூவுலகங்களையும் ஆண்டவர்களை. தப்பிலாது-தப்பாமல், தன்னுருவில்-தன் ஞானவடிவில், சாத்துதல்போல்-சேர்த்துக் கொண்டது போலவும்,

போல வெழுந்த மதன் பொய்யுருவா கத்திரிய
ஞாலமேல் விட்டாற்போன் ஞானிகளும் - காலனையும் 64

(இ-ள்.) எப்பொழுதும்போல-எந்நாளும்போல, மதனெழுந்து-சாம்பலானமன்மதன் எழுந்திருந்து. ஞாலமேல்-பூமியின்மேல், பொய்யுருவாகத் திரிய-பொய்வடிவமாக உலாவ, விட்டாற்போல்-விட்டதுபோல, ஞானிகளும்-சிவவடிவமுள்ளஞானிகளும், காலனையும்-யமனையும்,

கொன்றெழுப்பி விட்டிக் குவலயத்தே வாழ்கின்றா
ரென்றுரைப்பர் நல்லோ ரிசையுமோ - வென்றிவை போ 65

(இ-ள்.) கொன்று-சாகச்செய்து, எழுப்பிவிட்டு-எழுப்பிவிட்டு, குவலயத்தே-பூமியிலே, வாழ்கின்றார்-வாழ்கின்றார், என்றுரைப்பார்-என்று சொல்வார்கள், நல்லோர்-நல்லவர்கள், இசையுமோ-பொருந்துமோ, என்று-என்று, இவைபோல்-இவைபோல,

வெண்ணிறந்த கேள்வி யிசைத்தா னவைபகரக்
கண்மணியே யின்றெனக்குக் காலமில்லை - நுண்ணறிவன் 69

(இ-ள்.) எண்ணிறந்த-கணக்கில்லாத, கேள்வி-வினா, இசைத்தான்-சொன்னான். அவைபகர-அவ்வினாக்களுக்கு பதில்சொல்ல, இன்று-இப்போது, கண்மணியே-கண்களுக் குகந்த கருவிழிக்குச் சமான யானவளே, எனக்கு-எனக்கு, காலமில்லை-காலமில்லை,

றன்னை வலங்கொண்டு தாள்பணிந்து புண்ணியர்க
ளின்னவித மாயுரைப்பா ரேனென்றேன் - முன்னோர்கள் 67

(இ-ள்.) நுண்ணறிவன் தன்னை-நுட்பமான புத்தியுடைய நாரதமுனி சுவாமிகளை, வலங்கொண்டு-சுற்றிவந்து, தாட்பணிந்து-பாதங்களை வணங்கி,

புண்ணியர்கள்–அறிவுவடிவான புண்ணியவான்கள், இன்னவிதமாய்–ஆன்ம தத்துவத்தை உருவக அலங்காரமானவகையாய், உரைப்பான்-புராணங்களிற்சொல்வான். ஏனென்றேன்–ஏனென்றுகேட்டேன், (அதற்கவர்சொன்னதாவது) முன்னோர்கள்–பழையஞானிகள்,

தத்துவத்தைக் காதைசெய்து தந்தார்கள் வேறின்று
புத்திமா னாகிற் புகுந்துபா - ரத்தனையும் 68

(இ-ள்) தத்துவத்தை–அறிவின் உண்மையை, காதைசெய்து–புராணக்கதையாகச்செய்து. தந்தார்கள்–கொடுத்தார்கள், வேறின்று–வேறில்லை, புத்திமானாகிற்–அறிவுள்ளவனாகில், புகுந்துபார்–நூல்களை ஆராய்ந்துபார், அத்தனையும்–இதுவரையிற் சொன்ன அவ்வளவையும்,

யோகஞா னங்க ளுணர்ந்தவரைக் கேட்டுணரின்
மோகமற்றார் சொல்லெல்லா முண்மையாம் - தேகநா 69

(இ-ள்) யோகம்– (இயமம்-நியமம்-ஆதனம்-பிராணாயாமம் பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதி) எனும் அஷ்டாங்க யோகங்களையும், ஞானங்கள்–ஆன்மஞானங்களையும், உணர்ந்தவரை – அறிந்தவர்களை, கேட்டுணரில்–கேட்டறிந்தால், மோகமற்றார் – ஆசையற்ற ஞானிகள், சொல்லெல்லாம்–சொன்னவழிகளெல்லாம், உண்மையாம்–மெய்யாகும், தேகநா–நான் தேகவடிவினன்.

னென்றுணருங் காறு மிவற்றின் பொருண் முரணு
மென்றவற்றைக் காட்டியீ டேற்றினே - னொண்டொடியே 70

(இ-ள் என்று – என்று, உணருங்காறும்–அறியும் வரையில், அவற்றின்பொருள்–இவ்வுருவக அலங்காரத்தின் அர்த்தம் முரணும்–விளங்காது, ஈடேற்றினேன்–முடிவான ஞானியாக்கினேன், ஒண்டொடியே–ஒளிபொருந்திய வளையலையணிந்த பெண்ணே?

யுத்தி யநுபவங்க ளொவ்வப் பிரமனுறை
சத்தியலோ கந்தான் றலையென்றும் - மத்தான 71

(இ-ள்) யுத்தி–ஆசிரியர் கூறும்யுத்தியும், அநுபவங்கள்–சீடனிட அநுபவங்களும், ஒவ்வ–ஒத்திருக்க. பிரமனுறை–பிரமன் வசிக்கின்ற, சத்தியலோகந்தான் – மெய்யான பூமிதான், தலையென்றும் – சிரசென்றும், மத்தான–மத்தான,

மந்தரங்கீழ் மூலமென்று மாமேரு மூக்கென்றுஞ்
சந்திரா தித்தர்கள் சட்சுவென்று - மிந்த 72

(இ-ள்) மந்தரம்–மந்திரமலை, கீழ்மூலமென்றும்–கீழுள்ள மூலமென்றும், மாமேரு – பெரியமேருமலை, மூக்கென்றும், சந்திரன் – சந்திரனும்,

ஆதித்தர்கள் — சூரியர்களும், சட்சுவென்றும் — இரண்டு கண்களென்றும், இந்த—இந்த,

விதமாக வேழ்கடலு மேழ்மலைபூ லோகம்
பதினான்குந் தேவர்களும் பாம்பும் - மதிமுதலாங் 73

(இ-ள்) விதமாக—வகையாக. எழ்கடலும்—ஏழுசமுத்திரமும், ஏழ்மலை—(கைலை-இமயம்-மந்தரம்-விந்தம்-நிடதம்-எமகூடம்-நீலகிரி-எனும்) ஏழுமலைகளும், பூலோகம் பதினான்கும்—(பூலோகம்-புவர்லோகம்-சுவர்லோகம்-சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் எனும் ஏழு மேலுலகங்களும், அதல-விதல-சுதல- தராதல-ரசாதல-பாதாளம் எனும் எழு கீழுலகங்களு) மாகியபதினாலு உலகங்களும், தேவர்களும்—(பிரிதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம் - சூரியன் - சந்திரன் - நட்சத்திரங்களெனும் அஷ்டவசுக்களும், ஞானேந்திரியம் 5-கன்மேந்திரியம்—5-ஜீவன் 1—ஆகபதினொரு ருத்திரர்களும், மேகத்தில்தடிக்கிற மின்னலாகிய தேவந்திரனும், துவாதசாதித்தரும, யாகமாகிய பிரமனும்) சேர்ந்த முப்பத்துமுக்கோடி தேவர்களும,பாம்பு—(வாசுகி-அனந்தன்-தக்கன்-சங்கபாலன-குளிகன-பதுமன-மகாபதுமன்-கார்க்கோடகன்) எனும் அஷ்டநாகங்களும், மதிமுதலாம் — சந்திரனமுதலாகிய,

கோளு மரக்கருங் கோத்தபூ தங்களிவை
யாளுமவிண் டீச னயன்முதலோர் - நாளு 74

(இ-ள்) கோளும்—நவக்கிரகங்களும், அரக்கரும்—இராட்சதரும், கோத்தபூதங்கள்—கோவைசெய்த பிரிதிவாதி பஞ்சபூதங்களும், இவையாளும் — இவைகளை அரசாட்சிசெய்யும். விண்டு — விஷ்ணுவும், ஈசன் — சிவனும், அயன்—பிரமனும். முதலோர்—முதலான யாவரும். நாளும் — எக்காலத்திலும்.

முடலுயிராய் நிற்பரென வுண்மை கருட
னடல்விண்டு வைக்கேட்க வன்னோர் - திடமா 75

(இ-ள்) உடலுயிராய்—தேகமும் ஜீவனுமாய். நிற்பர் — நிற்பார்களென்பது. உண்மை என—நிஜமாவென்று. கருடன்—கருடபகவான். அடல்விண்டுவை- வெற்றிபொருந்திய விஷ்ணுவை, கேட்க—கேட்க, அன்னோர் — அவ்விஷ்ணுவானவர். திடமாய்-உறுதியாய்.

யறிய கருடபுரா ணம்ப்ரேத கட்ட
மிருபதெனு மத்தியா யத்து - விரிவாக 76

(இ-ள்) அறிய—தெரிந்து கொள்ளும்படி. கருடபுராணம்—கருட புராணத்தின, பரேதகட்டம்—ப்ரேத கட்டத்திலுள்ள. இருபதெனும் — இருபதென்கிற. அத்தியாயத்து—அத்தியாயத்தில். விரிவாக—விவரமாக.

லோதினா ரென்றுலக ரோர்ந்து மயலறவே
வேதம் விரித்த வியாதனா - ரோதியுள்ளார் 77

(இ-ள்) உலகர்-உலகிலுள்ள ஜனங்கள். ஓர்ந்து-உணர்ந்து. மயலறவே-மயக்கம் நீங்கவே. ஓதினார் என்று - சொன்னார் என்று. வேதம்விரித்த-வேதத்தை விரித்த. வியதனார்-வியாச பகவானானவர். ஓதியுள்ளார்-சொல்லியிருக்கிறார்.

பத்தி விராகம் பரஞானம் யோகமிவை
சித்தமுறச் செய்யவெண்ணித் தேர்ந்தோர்க ளுத்திகொண்டு 78

(இ-ள்) தேர்ந்தோர்கள்-தெளிந்த ஞானிகளானவர். பத்தி - கடவுளிடம் அன்பும். விராகம்-மண்-பெண்-பொன்களிடத்தில் நிராசையும். பரஞானம்-மேலான அறிவும். யோகம்-அஷ்டாங்கயோகமும். இவை-(ஆகிய இவைகளை சித்தமுறச்செய்ய - ஒவ்வொருக்கும் கைகூடும்படி செய்ய எண்ணி-நினைத்து. உத்திகொண்டு-தங்கள் சுயயோஜனையும் கொண்டு.

கற்பனையலங்காரக் காதைகளைச் செப்பியிடை
பற்பலஞா யங்கள் பகர்ந்துளார் - நற்குணங்க 79

(இ-ள்) கற்பனை-பொய்யாகிய. அலங்கார-அலங்காரமுடைய காதைகளை-கதைகளை. செப்பி-பதினெண்புராணங்களில் சொல்லி, இடை-அப்புராணங்களின் நடுவில். பற்பல-பலபலவிதமான. ஞாயங்கள்-நல்விஷயங்களை. பகர்ந்துளார்-சொல்லியிருக்கிறார்கள், நற்குணங்கள்-மனிதர்களுக்கு நல்லகுணங்கள்.

ளெல்லாம்வந் தெய்த விவற்றை யுணராதார்
சொல்வாதமேபுரிந்து சோருகின்றார் - மெல்லியலே 80

(இ-ள்) எல்லாம்-யாவும். வந்தெய்த-வந்துபொருந்த. இவற்றை-இவ்வான்மதத்துவத்தை. உணராதார்-அறியாதவர்கள். சொல்வாதமே - வாக்கால் குதர்க்கமே. புரிந்து-செய்து. சோருகின்றார்-உண்மையறியாது மயங்கிகிறார்கள். மெல்லியலே-மெதுவான நடையையுடைய பெண்ணே.

யெச்செல்லு மாய்த லிடர்துலைந்திங் கஞ்ஞான
வச்சமறற் கன்றோ லறைவதென் - மிச்சமாய்ச் 81

(இ-ள்) எச்சொல்லும்-எந்த வார்த்தையும், ஆய்தல்-ஆராய்தல், இடர்துலைந்து-துக்கம் நீங்கி, இங்கு-இவ்வுலகிலுள்ள, அஞ்ஞான-அறிவீனமாகிய, அச்சமறற்கு-பயம்நீங்குதற்கு, அன்றோ-அல்லவா, என் அறைவது - என்ன சொல்வது, மிச்சமாய்-இன்னும் அதிகமாய்,

சொல்லவெனக் கிச்சையில்லை தொல்மறைமுதலாம்
பல்கலைசொல் லஞ்ஞானப் பற்றறவே - நன்னூ 82

(இ-ள்) சொல்ல-சொல்ல, எனக்கு-எனக்கு, இச்சையில்லை-இஷ்டமில்லை. தொல-பழமையான மறைமுதலாய்-வேதம் முதலாகி, பல்கலை

சொல்-அநேக சாஸ்திரங்களின் சொற்களானது, அஞ்ஞான-மூடமாகிய, பற்றறவே-ஆசைநீங்கவே சொல்லப்பட்டது, நன்னூல்-நல்லபுராண சாஸ்திரங்களை,

உருவகித்துச் சொன்னவைக ளொண்கதைமெய் யேனுந்
தருபொருளைக் கொள்கதைதனைத் தள். 83.

(இ-ள்) உருவாகித்து-உருவாகி அலங்காரமாக, சொன்னவைகள்-சொன்ன விஷயங்களாகிய, ஒண்கதை-ஒளிபொருந்திய கதைகள், மெய்யேனும்-மெய்யாய் நடந்தகதைகளாயிருந்தாலும், தருபொருளை-அக்கதைகளின் சாரமாகிய விஷயங்களை, கொள்-கொள்வீராகவும், கதையை-பொய்க்கதைகளை, தள்-நீக்குவீராகவும் (எ-று)

ஆக செய்யுட்கள் 102.

---

# திருவுந்தி.

---

பாவனாதீதப் பதியமுயலேல்சருவ
பாவநீ யாகிநில் லுந்தீபற
பராபர முனதுருவ முந்தீபற 1.

(இ-ள்) பாவனாதீதம் - நினைப்பற்றதன்மை, பதிய-நிலைக்கவேண்டி முயலேல்-பிரயத்தனஞ் செய்யாதே, சருவபாவம்-எல்லா நினைப்பின் வழிவங்களும், நீயாகி-அறிவாகிய நீயேயாகி, நில்-நிலைத்திரு, உந்தீபற - எந்த இச்சையும் தள்ளிபறந்து விளையாடு, பரம்,அபரம்-ஞானமும் சடவஸ்துக்களும், உனதுருவம்-ஆன்மாவாகிய உனது வடிவம் (என்று),உந்தீபற-எந்த விச்சையும் தள்ளிபறந்து விளையாடு [எ-று]

கடலில்வரு மலைதிவலை நுரைநிலைக ளதுவாங்
கணக்கன்றி வாராம்போ லுந்தீபற
காணிலறி வேநினைவு முந்தீபற. 2,

(இ-ள்) கடலில்வரும்-சமுத்திரத்தி லுண்டாகிற, அலை-அலைகளும். திவலை-துளிகளும், நுரை-நுரைகளும், நிலைகள்-அசைவற்றிருக்கும் தன்மைகளும், அதுவாம்-அச்சமுத்திர ஜலமேயாக. கணக்கன்றி-கணக்கில்லாமல், வாராபோல்-வருவதுபோல, காணில் - ஆராய்ந்தறியில், அறிவே நினைவு-ஞானமே மனமாகுமென்று, உந்தீபற-உந்தீபற - எந்த இச்சையுந் தள்ளி பறந்துவிளையாடு. [எ-று]

சத்துச்சித் தானந்த மோடகண் டக்குணஞ்
சாருமுனில் கண்டமே துந்தீபற
சாற்றலறி யாமயக் குந்தீபற. 3.

(இ-ள்) சத்து-அழியாத்தன்மையும், சித்து-ஞானத்தன்மையும், ஆநந்தமோடு-சந்தோஷத்தன்மையோடு, அகண்டகுணம் - பின்னமில்லாத்தன்மையும், சாரும்-சேர்கின்ற, உனில்-அறிவாகிய உன்னில், கண்டமேது - பின்னமேது? இல்லையென, உந்தீபற-எந்த இச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு, சாற்றல்-பின்னமுளதாய்ச் சொல்லல், அறியாமயக்கு - அஞ்ஞானபிராந்தியாகுமென்று, உந்தீபற-எந்த இச்சையுந்தள்ளிபறந்துவிளையாடு,

கானலிடை நீரில்லை கனவறிவி லுலகமில்லை
கற்பனை நாசமே துந்தீபற
காண்பொருளு நீயாகி லுந்தீபற. 4.

(இ-ள்) கானலிடை-பேய்த்தேரினிடத்தில். நீரில்லை-ஜலமில்லை, கனவறிவில்-பெருமை பொருந்திய ஞானத்தில், உலகமில்லை-தேகாதிபிரபஞ்சமில்லை, காண்பொருளும்-காணப்படும் சராசரவஸ்துக்களும், நீயாகில் - அறிவாகிய நீயானால், கற்பனை (ஏது)-பொய்ப்பொருளென்பதேது, நாசமேது-பொருளிருந்தழிகின்றதென்பதேது? இல்லை என உந்தீபற-உந்தீபற-எந்த விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. [எ-று]

உலகொடுயிர் பரநனவு கனவுதுயில் சாட்சியா
யுறைவதறி வேயென்னி லுந்தீபற
வொழிப்பதெதை போவதே துந்தீபற. 5.

(இ-ள்) உலகொடு - தேகாதி பிரபஞ்சத்தோடு, உயிர் - ஜீவாத்மாவாயும், பரம்-பரமாத்மாவாயும், நனவு-ஜாக்கிராவஸ்தையாயும், கனவு-சொப்பனவஸ்தையாயும், துயில்-நித்திராவஸ்தையாயும், சாட்சியாய்-இவற்றிற்கெல்லாம் சாட்சியாகிறதுரியமாயும், உறைவது-நிலைத்திருப்பது, அறிவே - ஞானமே, என்னில்-என்றால், எதை-எதவஸ்துவை, ஒழிப்பது - நீக்குவது, போவது-அழிவது, ஏது-ஏது? இல்லையாம். உந்தீபற-உந்தீபற-எந்த விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. (எ-று)

தேருமுன் றேர்ந்தபின் றேர்ந்துதே ராப்பொழுதுந்
திகழ்தலது வதுவாக வுந்தீபற
திரஞான சொரூபமென் றுந்தீபற. 6.

(இ-ள்) தேருமுன்-ஆராய்ந்தறிவதற்குமுன்னும், தேர்ந்தபின்-ஆராய்ந்தறிந்த பின்னும், தேர்ந்து தேராப்பொழுதும் - ஆராய்ந்து அறிந்தும் அறியாதகாலத்தும்; திகழ்தல் அது-பிரகாசித்தல் அந்த ஞானவடிவாம், அதுவாக-அந்த ஞானவடிவாகவேயென்று, உந்தீபற-எந்தவிச்சையுந்தள்ளி

பறந்துவிளையாடு, நிரஞ்ஞான அசைவற்ற அறிவு, சொருபமென்று – வடிவமென்று, உந்தீபற–எந்த விச்சையுந்தள்ளி விளையாடு, (எ-று)

அவிரோத வவிகார வான்மாவே நீயென்னி
லடைவதெனை நிட்டையா லுந்தீபற
வறியார்க ளறியார்க ளுந்தீபற. 7.

(இ-ள்) அவிரோதம் – யாதொரு பகையில்லாதவனும், அவிகாரம் – யாதொரு பேதமில்லாதவனுமாகிய, ஆன்மாவே–சிவமே, நீயென்னில்–நீ யென்று வேதஞ்சொல்லுமானால், நிட்டையால்–கண்மூடி ஜபஞ்செய்வதால், எதையடைவது – எதைப்பெறுவது (என்று), உந்தீபற–எந்த விச்சையுந் தள்ளி பறந்துவிளையாடு, அறியார்கள்–மூடர்கள், அறியார்கள் – தெரிந்து கொள்ள மாட்டார் (என்று), உந்தீபற–எந்தவிச்சையுந்தள்ளி பறந்து விளையாடு. (எ-று)

சத்திசிவ கூறாகு மென்புதசை சேருடலின்
முத்திமுத லீயாகு முந்தீபற
முனிபிருங் கியேசாட்சி யுந்தீபற. 8.

(இ-ள்) சத்தி–பின்னும்பின்ன சத்திகளிட, கூறாகும்–பங்காகிற, தசை–மாமிசமும், சிவ(கூறாகும்)–சிவத்தினிடபங்காகிற, என்பு–எலும்பும், சேர் உடலில்–சேர்ந்ததேகத்தில், முத்தி–மோக்ஷத்திற்கு, முதல்–முதற்காரணப் பொருளா யிருக்கிறவன், நீயாகும் – ஆன்மாவாகிய நீயாகுமென்று, உந்தீபற–எந்தவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு, முனிபிருங்கியே – ஆசையெறுத்த பிருங்கிமஹாரிஷியே, சாட்சி–திருஷ்டாந்த மாகுமென்று, உந்தீபற–எந்த விச்சையுந்தள்ளிப் பறந்துவிளையாடு, (எ-று)

ஒன்றுநீ யலைஉன்னை யன்றியொன் றிலையென்ற
குறுதியிற் கனவுங்கரி யுந்தீபற
வொருவரைக் கேட்டலே னுந்தீபற. 9.

(இ-ள்) ஒன்று நீயலை-ஒருவஸ்துவும் நீயல்ல, எனற்கு – என்பதற்கு, உறுதியில்–உன்னிடமுற்ற நூக்கமும், உன்னையன்றி – அறிவாகிய உன்னைத்தவிர, ஒன்றிலை(எனற்கு)–ஒருவஸ்துவுமில்லை என்பதற்கு, கனவும் – சொற்பனமும், கரி (என்று)–சாட்சியாகும்) என்று), உந்தீபற–எந்தவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு, ஒருவரை–உன்னையன்றி மற்றொருவரை, கேட்டல் ஏன்–கேட்பது என்னகாரணம்? கேட்கவேண்டியதில்லையென்று, உந்தீபற–எந்த விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. (எ-று)

தூலசூக் குமகார ணப்புரமெ ரித்தகப
வாலமமர் கண்டனீ யுந்திபற
வதீதவறி வாகையா லுந்திபற. 10

(இ-ள்) தூலம்-சாக்கிராவத்தை வடிவாகிய ஸ்தூலதேகாதி மத்திய உலகமும், சூக்குமம்-சொப்பனவத்தை வடிவாகிய சூட்சுமதேகாதி சொர்க்க உலகமும், காரணம்-சுழுத்தியவத்தா வடிவாகிய காரணதேகாதி பாதாள உலகமும், புரம்-(ஆகிய) முப்புரங்களை, எரித்த - தகனம்செய்த, கபாலம்-சேத்மவடிவான கபமாகிய விஷமானது, அமர்-தங்கியிருக்கிற,கண்டனீ-கழுத்தையுடைய சிவ பெருமான் நீயாகும்(என்று), உந்திபற - எந்த விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு, அதீதம்-மனோவாக்கிற் கதீதமான, அறிவாகையால் - ஞானசொரூபமானகையாலென்று, உந்திபற - எந்தவிச்சையுந் தள்ளி விளையாடு. (எ-று)

முக்குண மனச்சூல மூடமா றானுவ
மத்தகய முனிவுபுலி யுந்திபற
மறிந்தசிவ வறிவுநீ யுந்திபற. 11.

(இ-ள்) முக்குணமனம்-சத்துவ-ரஜஸ-தமஸ எனும் மூன்றுகுண வடிவானமனமே, சூலம்-சூலாயுதமாயும், மூடம்-அஞ்ஞானமே. மானு - மானையும், ஆணவமே-தேகம் நானெனகிற அகங்காரமே, மத்தகஜம்-காம-குரோத-லோபம்-மோகம்-மதம்-மார்ச்சரியம்.இடம்பை-அகங்காரம் ஆகிய அஷ்டமதங்களைப்பொழிகிற ஆனைத்தோலுரியாயும், முனிவு - கோபமே புலி-புலித்தோலுடையாயும் பெற்று, மறிந்தசிவம்-திரிபுரங்களை தகனம் செய்த சிவமெனகிற, அறிவு-ஞானமே, நீ-ஆன்மாவாகியநீயாகும் (என்று) உந்திபற-உந்திபற-எதையும்தள்ளி விளையாடு. (எ-று)

நனவிலுயிர் பஞ்சபூ தமிரவி சசியட்ட
கனமூர்த்த மாயொளிர்வை யுந்திபற
கழிவையுயி லத்தனித் துந்திபற. 12.

(இ-ள்) நனவில்-சாக்கிராவஸ்தையில், உயிர் - ஜீவாத்மாவும், பஞ்சபூதம்-பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம் எனும் ஐந்துபூதங்களும், இரவி - சூரியனும், சசி-சந்திரனும் (ஆகிய), அட்டகனமூர்த்தயாய் - எட்டுபெருமையான வடிவமாய், ஒளிர்வை-பிரகாசிப்பை (என்று), உந்திபற-எந்தவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. துயில்-நித்திரையில், தனித்து - ஏகனாயிருந்து, கழிவை-எல்லாபற்றுகளையும்விட்டு நீங்குவை(என), உந்திபற-எந்தவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. (எ-று)

வாதியுல காமுதலை வன்றேக வபிமான
போதமே யானைநீ யுந்திபற
புகழாதி மூலவறி வுந்திபற, 13.

(இ-ள்) வன்தேகம்-கொடிய உடலின், அபிமானபோதமே - அஞ்ஞானமே, யானை-யானையாகும் (அதற்கு) வாதி-விரோதமாய் வழக்

கிடவோன், உலகாம்முதலை-உலகாகிய முதலையாகும், புகழ்-யாவராலும் சிறப்பிக்கப்பட்ட, ஆதிமூலம்-முதலாகிய மூலப்பொருளானது, அறிவுநீ - அம்முதலையை சங்கரித்த விஷ்ணுவெனும் அறிவாகிய நீயாகும் என, உந்தீபற-உந்தீபற-எந்த விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு, (எ-று)

கனவி லுலகுனி லுநன விலுலக மதிலுனைக்
காண்டலாற் கண்ணனீ யுந்தீபற
சரிவேறு தேடலே னுந்தீபற. 14.

(இ-ள்) கனவில்-சொப்பனவவஸ்தையில், உலகு உனிலும்-உலகமானது உனக்குள்ளும், நனவில்-சாக்கிராவஸ்தையில், உலகமதிலுனை - உலகத்தில் உன்னை (வேறாக), காண்டலால்-ஆன்மாவாகிய நீபார்ப்பதனாலே, கண்ணனீ-கிருஷ்ணன் நீயாகும், சரிவேறு-சாகுதிவேறு, தேடலேன்-விசாரிப்பது என்னகாரணமென்று, உந்தீபற-உந்தீபற-எந்த விச்சையுந்தள்ளி பறந்து விளையாடு. (எ-று)

மூவுலக முத்தேக முயிர்மா வலிமனஞ்
சேவடிக டுரியமா லுந்தீபற
தேவர்நற் குணமென் றுந்தீபற. 15.

(இ-ள்) முத்தேகம்-(சாக்கிரவடிவான தூலதேகமும், சொப்பனவடிவான சூட்சுமதேகமும், சுழுத்திவடிவான காரணதேகமும். மூவுலகம் - முறையே மத்தியலோகம்-சொர்க்கலோகம்-பாதாள லோகங்களாம். உயிர்மாவலி-அம்மூன்றுலகங்களையுமாண்ட ஜீவனே மகாபலிச்சக்கிரவர்த்தியாம், மனம்சேவடிகள்-மனமே ஆன்மவடிவவிஷ்ணுவின் சிவந்ததிருவடிகளாம், துரியம்மால்-ஆன்மவடிவமே வாமனவதாரஞ் செய்தவிஷ்ணுவாம், தேவர் நற்குணமென - தேவர்கள் நல்ல குணங்களென்று, உந்தீபற-உந்தீபற-எந்த விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு (எ-று)

ஆலிலையு மாமையும் வயிறர வுகுண் டலியுணவு
வேலைமார்க் கண்டன்மூச் சுந்தீபற
விண்டுதுரி யப்போத முந்தீபற. 16.

(இ-ள்) ஆலிலையும் - ஆலிலையின் உருவம்போல் பெண்களுக்கும், ஆமையும்-ஆமைமுதுகுபோல் புருஷர்களுக்கும். வயிறு-வயிறு இருக்கிறதாகும் அரவு-ஆதிசேஷனெனுகிய பாம்பு, குண்டலி-தொப்புளாகிய குண்டலினிதானமாகும், வேலை-பாற்கடலானது. உணவு-நின்ற ஆகாரம் ஜீரணமான சாரமாகும், மூச்சு - குண்டலியிலிருந்து எழும்பதினாறு கலையுள்ள காற்றானது, மார்க்கண்டன்-பதினாறுவயதுள்ள மார்க்கண்டனாகும், துரியப்போதம்-ஆன்மாவாகியஞானம், விண்டு-விஷ்ணுவாகுமென்று, உந்தீபற-உந்தீபற-எந்த விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு, (எ-று)

உலகமுண் பாய்துயிலி லுலகளப் பாய்கனவி
லொப்பரிய நனவதனி லுந்தீபற
உன்னையன்றி மாலேதிங் குந்தீபற. 17.

(இ-ள்) துயிலில்-தூக்கத்தில், உலகமுண்பாய்-உலகத்தை விழுங்குவாய், கனவில்-சொப்பனத்திலும், ஒப்பரிய - சமானஞ் சொல்வதற்கரிய, நனவதனில்-சாக்கிரத்திலும், உலகளப்பாய் - உலகத்தை வெளிப்படுத்தியளப்பாய் [ஆகையால்], உன்னையன்றி-ஆன்மாவாகிய உன்னைத்தவிர, இங்கு-இவ்விடத்தில், மாலேது-விஷ்ணுவேறேதென, உந்தீபற-உந்தீபற-என்ற விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. [எ-று]

முற்பகலி லுலகாக்கிப் பிற்பகலி லவைபோக்கிக்
கற்பவரை நிற்கையா லுந்தீபற
கமலாச னனுமாவை யுந்தீபற. 18.

[இ-ள்] முற்பகலில் - ஜாக்கிர-சொப்பனமாகிய முதற்பகலில், உலகாக்கி-உலகங்களைச் சிருஷ்டிசெய்து, பிற்பகலில்-சுழுத்தியாகிய பின்பகலில், அவைபோக்கி-அவ்வுலகங்களை நாசஞ்செய்து, கற்பவரை - உலகம் முடிவுபெறும் வரையில், நிற்கையால்-நிலைத்திருப்பதால், கமலாசனனும்-தாமரையிலுதித்த பிரமதேவனும், ஆவை - ஆன்மாவாகிய நீ ஆகுவையென்று, உந்தீபற-உந்தீபற-என்றவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. [எ-று]

ஆதார மாறுமுக மாகச் சத்துஞ்சித்து
மணையவரு மின்பநீ யுந்தீபற
வயலல்ல சண்முகனு முந்தீபற. 19.

[இ-ள்] ஆதாரம்-[மூலாதாரம்-சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம்-விசுத்தி-ஆக்ஞை எனும் ஆறு ஆதாரமும்], ஆறுமுகமாக-ஆறுமுகங்களாக, சத்தும்-அழியாத்தன்மையும், சித்தும் - ஞானத்தையும், அணையவரும்-சேரவருகின்ற இன்பம் நீ - சந்தோஷவடிவ ஆன்மாவேயாகுமென்று, உந்தீபற-என்றவிச்சையுந்தள்ளி விளையாடு, சண்முகனும் - ஆறுமுகத்தையுடைய முருகனும், அயலல்ல-வேறல்லவென்று, உந்தீபற - என்ற விச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு.

தேவர்முனி பைசாச ருரகர்சித் தர்மனிதர்
தேகிநீ யாகையா லுந்தீபற
திகழ்கண திபனாவை யுந்தீபற. 20.

[இ-ள்] தேவர்-தேவகண உடல்களிலும், முனி-முனிகணவுடல்களிலும், பைசாசம்-பிசாசகண உடல்களிலும், உரகர்-ராக்ஷதகண உடல்களிலும், சித்தர்-சித்தகண உடல்களிலும், மனிதர்-மனிதகண உடல்களிலுமுள்ள, தேகி-ஆன்மாவானவன், நீயாகையால்-அறிவாகிய நீயாகையால்,

திகழ்-விளங்குகின்ற, கணபதியானை-கணபதியானை, உந்தீபற-உந்தீபற-எந்தவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. [எ-று]

தேசமொடு காலவஸ் துப்பரிச்சேதமற
மீசனெவ னவனேநீ யுந்தீபற
விதுதத்வ மசிகருத் துந்தீபற. 21.

[இ-ள்] தேசமோடு-தேசத்தோடு. காலவஸ்து - காலம்பொருள்களினிட, பரிச்சேதம்-வேறுபாடு, அறும்-நீங்கின, ஈசனெவன்-கடவுள் எவனோ, அவனே-அக்கடவுளே, நீ-அறிவாகிய நீயாகும், இது-இவ்விஷயம், தத்-அந்தபரமாத்மாவே. துவம்-ஜீவாத்மாவாகிய நீ, அசி-ஆவையெனும் [சாமவேத மந்திரத்தின்], கருத்தென-கருத்தாகும் என்று, உந்தீபற-உந்தீபற-எந்த விச்சையுந்தள்ளி பறந்து விளையாடு. [எ-று]

தேகநா னென்றுகொண் மோகமகலாதளவு
மேகமெனல் காணதென் றுந்தீபற
விதுவுமறி வலதில்லை யுந்தீபற. 22.

[இ-ள்] தேகம்-உடலை, நானென்று-நானென்று, கொள் - கொண்டிருக்கிற, மோகம்-மயக்கம், அகலாதளவும்-நீங்காதவரையில், ஏகமெனல்-ஒன்றென்கிற கடவுள், காணாது-தெரியாது. என்று-என்று, உந்தீபற - எந்தவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு, இதுவும்-இதுவும், அறிவலது - ஞானமல்லாது, இல்லை என-இல்லையென்று; உந்தீபற - எந்த விச்சையுந் தள்ளி பறந்துவிளையாடு. [எ-று]

ஜீவனா னென்றெணும் பாவமகலாதளவு
யாவதிலை யாவுமொன் றுந்தீபற
வதுவுமய லாகாதென் றுந்தீபற. 23.

[இ-ள்] ஜீவனான்-உயிரே நான், என்றெணும்-என்று நினைக்கும், பாவம்-நினைப்பு, அகலாதளவும்-நீங்காதவரையில், யாவும்-எல்லாதோற்றங்களும், ஒன்று ஆவது-ஒரேதன்மையுள்ள வறிவாவது, இல்லை-இல்லை, அதுவும்-அதுவும், அயலாகாது-வேறாகாது, என்று - என்று. உந்தீபற-உந்தீபற-எந்தவிச்சையுந்தள்ளி விளையாடு.

பிண்டத்தி லுள்ளதே யண்டத்தி லாயாத
பேயர்சொற் கேட்டலே னுந்தீபற
பெருமறையி னந்தமீ துந்தீபற. 24.

[இ-ள்] பிண்டத்தில்-உடலில், உள்ளதே - இருக்கிறதே, அண்டத்தில்-பூமியிலிருக்கிறது, ஆயாத-விசாரியாத, பேயர்சொல்-பயித்தியக்கார

ரிடசொல்லே, கேட்டலேன்-கேட்பது என்னத்திற்கு, பெருமறையின் - பெரிய வேதத்தின், அந்தம் ஈதுஎன்-முடிவு இதுவாகுமென்று, உந்தீபற உந்தீபற-எந்த விச்சையுந் தள்ளி பறந்து விளையாடு. [எ-று]

இல்லையென் றுணையெனை யன்றியோர் பொருளுண்டே
லல்லற்றீர் துயிலிலெங் குந்தீபற
வறிவன்றி யாவும்பொய் யுந்தீபற. 25.

[இ-ள்] எனையன்றி-ஆன்மாவாகிய என்னைத்தவிர, என்றுணை-என்றுணைப்படி, இல்லை-வேறு இல்லையாகும், ஓர் பொருள்-என்னையன்றி ஒரு வஸ்து, உண்டேல்-இருக்குமானால், அல்லல்தீர்-துக்கம்நீங்கின, துயிலில்-தூக்கத்தில், எங்கு-எங்கேயிருக்கிறதென்று, உந்தீபற-எந்தவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு, அறிவன்றி-ஞானத்தைத்தவிர, யாவும்-எல்லாம், பொய் (என)-பொய்யாகும் என்று, உந்தீபற-எந்தவிச்சையுந்தள்ளி பறந்துவிளையாடு. [எ-று]

ஆக செய்யுள் 427.

## நீத்தார்நெறி.

எல்லாமெனை யன்றியி லென்பதுபோ
னில்லாவுல கப்பொரு ணேயமுறா
ரில்லாத்துய ரீனசை யுள்ளமிகல்
வெல்வாரிவர் வீடுணர் புண்ணியரே. 1.

[இ-ள்] எல்லாம்-யாவற்று சராசரப்பொருளும், எனையன்றி - மாவாகிய என்னைத்தவிர, இலையென்பதுபோல்-இல்லையென்றுசொல்வது போல, நில்லா-நிலையில்லாத, உலகப்பொருள்-உலகசராசர வஸ்துக்களிடத்தில், நேயம்-அன்பு, உறார்-பொருந்தார், இல்லாத்துயர்-இல்லாததுக்கமான்ற, ஈநசை-தந்த ஆசையுற்ற, உள்ளம்-மனதினது, இகல்-பகையை, வெல்வார்-ஜயிப்பவராகிய, இவர்-இப்புத்திமான்கள், வீடுணர்-மோட்சம் அறிந்த, புண்ணியர்-தருமவான்களாம். (ஏ-அசை) (எ-று)

அழியாத பரம்பொரு ளாயகில
மொழியாதுணர் வாருரை யற்றுயர்வார்
பழி பாவ மியற்றிலர் பாழ்நசையால்
மொழியாற்றமை மோனிக ளென்கிலரே. 2.

[இ-ள்] அகிலம்-உலகத்தை, அழியாத-கெடாத, பரம் - மேலான, பொருளாய்-ஞானவஸ்துவாய், ஒழியாது-கணமும்விடாது, உணர்வார் - அறிபவர், உரையற்று-பேச்சற்று, உயர்வார்-மேற்படுவோர்கள், பாழ்நசையால்-பாழான ஆசையால், பழி-நிந்தையையும், பாவம் - துர்க்காரியத்தையும், இயற்றிலர்-செய்யார்கள், தமை-தங்களை, மொழியால் - வார்த்தையினாலும், மோனிகள்-மௌனஞானிகள், என்கிலர்-என்று சொல்லார்கள். ([illegible]) (எ-று)

மலமோய மறைப் பொருள் மாநிலமே
லிலராகி யிருந்துரை யேபகர்வார்
நலனோடிழி வெண்ணி நகைக்குடடா
ருலகோரி னொருங்குண ருண்மையரே. 3.

(இ-ள்) மறைப்பொருள்-உண்மைதெரியவொட்டாமல்மறைக்கின்ற அஞ்ஞானவஸ்துவாகிய, மலம்-அழுக்கானது, ஓய-நாசமாகக்கண்ட(ஞானிகள்), மாநிலமேல்-பூமியின்மேல், இலராகி-இல்லாதவராகி, இருந்து-நிலைத்திருந்து, உரையே-வார்த்தையையே, பகர்வார்-சொல்வார், நலனோடு - உயர்வாம்தன்மையோடு, இழிவு எண்ணி-தாழ்வையும் நினைத்து, நகைக்குள்-ஆசைக்குள், அடிபடார்-அகப்படார், உலகோரின்-உலகத்தவரைக்காட்டிலும், ஒருங்குணர்-ஏகமும் அறிவென்று அறிந்த, உண்மையர்-மெய்ஞ்ஞானிகளாவார். ([illegible]) (எ-று)

தன்னால்விளை யுஞ்சக சீவபர
மென்றுவறி வாரெவ ரெப்பொருளு
முன்னாரொழி யாரவ னென்னனவே
பன்னார்பழ வாதனை பாழ்படவே. 4.

(இ-ள்) தன்னால்-அறிவாகிய தன்னால், சகம்-உலகமும், ஜீவன் - உயிரும், பரம்-கடவுளும், விளையும்-உண்டாகும், என்று-என்று, அறிவார் - தெரிந்துகொள்வோர்கள், எவர்-எவர்களோ? அவர், எப்பொருளும்-எந்த வஸ்துக்களையும், உன்னார்-தனக்குவேண்டுமெனநினையார், ஒழியார்-அதைவிட்டும் நீங்கார், பழவாதனை-பழையவாசனை, பாழ்படவே - நாசமாகும்பொருட்டு, அவன்-அவன்-அவள்-அவர் - அது - அவை எனவும், நான் எனவே-நான்-நாம்-நாங்கள் என்னும் பேதமொழிகளையும், பன்னார்-பிரித்துப்பேசார். [எ-று]

பொறியோடு புலன்கரு மேந்திரியந்
தறிபோன்முடல் வளிகர ணந்தரைநீ
ரெரிவாயுவெ ளிப்பல வீறில்வடி
வறிவாக வடக்கி யடங்குவரே. 5.

(இ-ள்) பொறியோடு — மெய்-வாய்-கண்-மூக்கு-செவி எனும் ஐந்து இந்திரியங்களோடும், புலன் — சத்த-பரிச-ரூப-ரச-கந்தமெனும் ஐந்தறிவுகளும், கருமேந்திரியம்—வாக்கு-பாதம்-பாணி-பாயுரு-உபஸ்தம் எனும் ஐந்து கருமேந்திரியங்களும், தறிபோல்—கட்டையைப்போலொத்த, உடல் — சரீரமும், வளி—மூச்சும், கரணம்—மனம்-புத்தி-சித்தம்-அகங்காரமெனும் அந்தக்கரணங்களும், தரை—பூமியும், நீர்—ஜலமும், எரி—நெருப்பும், வாயு-காற்றும், வெளி—ஆகாசமும் (தவிர), பல—இன்னும் அநேக, ஈறில்வடிவு — முடிவில்லாத உருவங்களும், அறிவாக—ஞானமயமாக, அடக்கி — அழுத்தி, அடங்குவர்—தன்னில் அழுந்துவர். (எ-று)

இன்னனிது விவைநீ நானெனவே
உன்னுகெடல் விட்டொ ரவத்தையள
வென்றறி வுற்றிக சாலமுணர்ந்
தெந்நாளு மிறும்பூ தெய்துவரே. 6.

(இ-ள்) இன்னன்—இவன் இன்ன ஜாதியானெனவும், இது — இப்பொருளும், இவை—இப்பொருள்களும், நீநானெனவே — நீநானும் இன்ன ஜாதியெனவுமே, உன்னுகெடல்—நினைத்துக்கெடுவதை, விட்டு-விட்டுநீங்கி, ஓரவத்தை—நனவாகிய ஒரு அவஸ்தையின், அளவென்று—அளவே இப்பேதங்களென்று, அறிவுற்று—ஞானமடைந்து, இகசாலம்—இவ்வுலகமாயையை, உணர்ந்து—அறிந்து, எந்நாளும்—எக்காலத்திலும், இறும்பூது—அதிசயத்தை, எய்துவர்—அடைவர். (ஏ-ஈற்றசை) (எ-று)

துன்பின்பிள மையிகன் மூப்பெளிமை
வென்றிநிறை பொறைமா னமழுக்கா
றென்றிங்குரை யெண்ணில்கு ணங்குணியா
மொன்றிற்கெட வுன்னுவர் யோகியரே. 7.

(இ-ள்) யோகியர்—ஆத்மநியான பராயணரான யோகீஸ்வரர், துன்பும்—துக்கமும், இன்பும்—சுகமும், இளமை — பாலியமும், இகல்—பகையும், மூப்பு—கிழத்தனமும், எளிமை—அறியாமையும், வென்றி—ஜபமும், நிறை — பூர்ணமும், பொறை — சாந்தமும், மானம் — பெருமையும், அழுக்காறு—பொறாமையும், என்று—என்று, இங்குரை—இப்படிசொல்லுகிற, எண்ணில்குணம்—கணக்கில்லாத தன்மைகளும், குணியாம் — முதன்மையான, ஒன்றில்—ஒரு வஸ்துவாகிய தன்னில், கெடவுன்னுவர்—அழிய நினைப்பார்கள். (ஏ-ஈற்றசை) (எ-று)

பிறவாவிற வாதபெருஞ்சுடராய்
மறவாநினை யாதுமனங்கெடவே
றமயாவுமி யானென நிற்பர்பிறர்க்
கறமன்றி மறஞ்செய லறிவர்களோ. 8.

(இ-ள்) மனம்-மனமானது, மறவாது-ஒருபொருளை மறக்காமலும், நினையாது-ஒருபொருளை நினையாமலும், கெடவே-நாசமாகவே, யாவுமறவும்-எல்லாமேதோற்றங்களும் நாசமாகவும், பிறவாத-ஜனிக்காத, இறவாத-சாகாத, பெருஞ்சுடராய்-பெரிய ஞானசோதியாகி, யானென-அந்தஞானமேயானென்று, நிற்பர்-நிற்கப்பட்டவர், பிறர்க்கு-அயலாருக்கு, அறமன்றி-தருமஞ்செய்வார்களேயல்லாமல், மறஞ்செய-பாவஞ்செய, அறிவர்களோ-தெரியவர்களோ? தெரியார். (எ-று)

விபுவாம்விமலப்பொருடாமெனவே
சபலங்கெட ஸபலமுறப்பெரியோ
ரபயம்பெற வருளுவதன்றிபிறர்க்
குபயந்தரு மொழிசொல வுன்னிலரே. 9.

(இ-ள்) விபுவாம்-கர்த்தாவாகிய, விமலப்பொருள்-களங்கமற்றவஸ்து, தாமெனவே-அறிவாகிய தாமென்றே, சபலங்கெட-துக்கம் நீங்கவும், ஸபலமுறவும்-சுகம் அடையவும்பெற்ற, பெரியோர்-பெரியவர்,பிறர்க்கு-அயலார்க்கு, அபயம்-அச்சமில்லாத மோக்ஷத்தன்மையை, பெற-அடைய, அருளுவதன்றி-கிருபைசெய்வதல்லாது, பயந்தரும்-பிறப்பெனும் அச்சத்தைக்கொடுக்கும், மொழிசொல-வார்த்தையைச்சொல்ல, உன்னிலர்-நினையார். (உ-கருத்தை) (எ-று).

இருள்சேரிருவினைகெட வெற்றினர்பின்
மருள்சேர்மொழி மாநிலமேற்பகரா
ரருள்சேர்குந ரன்றியி லவர்தமொழி
பொருள்சேர்கரை யென்கிலர் பூரியரே. 10.

(இ-ள்) இருள்சேர் - அஞ்ஞானத்தைச்சேர்ந்த, இருவினை - நல்வினை தீவினைகளாகிய இரண்டு வினைகளை, கெட-நாசமாகும்படி, எற்றினர்-நீக்கினவர், பின்-பிறகு, மருள்சேர்-அஞ்ஞானம் சேர்ந்த, மொழி-வார்த்தைகளை, மாநிலமேல்-பெரியபூமியின்மேல், பகரார்-சொல்லார், அருள்-கிருபாவடிவில், சேர்குநரன்றி-சேர்வார்களேயல்லாமல், இல் - வேறுவழியில் சேர்வாரிலர், அவர்தம் மொழி-அவரிடவார்த்தை, பொருள்சேர்-ஞானவஸ்துவில் சேர்ந்த, கரையென்கிலர் - மோக்ஷகரையெனும் முடிவென்கிலர், பூரியரே இவ்வாறு கூறுவர் மூடர்களே. (எ-று)

ஆக செய்யுட்கள் 437.

# கடைக்கணித்தமைகூறல்

முன்னொருநா ணாதமுநி முன்னேக வவனென்றன்
 முகக்குறிப்பா
லென்னையான் மறந்திடத்தி லிருந்தாலு மிலாவறுமை
 யெய்தலாலே
யின்னல்வடி வாய்த்திகழ்வே னென்செய்வே னிதையொழித்தற்
 கென்றான் கேட்டு
என்னையான் மறந்திவன்பால் வரலெனச்சூழ்ந் தேன்சிரித்தா
 னிடைந்திட்டேனே.

(இ-ள்) முன்னொருநாள்-முன்னொரு காலத்தில், நாதமுனிமுன்-எனதாசிரியராகிய நாதமுனிசுவாமிகள் முன்னே, ஏக-நான் போயிருக்க, அவன்-அந்நாதமுனிசுவாமி, என்றன்-என்னுடைய, முகக்குறிப்பால்-முகம்வாடியிருக்கும் அடையாளத்தால், என்னையான்-ஆன்மாவாகிய என்னையான்-மறந்திடத்தில்-மறந்தஸ்தானத்தில், இருந்தாலும்-நானிருந்தாலும், இலாவறுமை-இல்லாத தரித்திரத்தன்மை, எய்தலாலே-அடைதலாலே, இன்னல்வடிவாய்-துன்பவடிவாய், திகழ்வேன்-பிரகாசிப்பேன், இதையொழித்தற்கு-இதை நீக்குவதற்கு, என்செய்வேன்-என்னசெய்வேன், என்றான்-என்று எனதாசிரியன் சொன்னான், கேட்டு-அவ்வாக்கியங்களையான் கேட்டு. என்னை-ஆன்மாவாகிய என்னை, யான்மறந்து-யான்மறந்து, இவன்பால்-இவ்வாசிரியனிடத்து, வரலென்-என் வரவேணுமென்று, சூழ்ந்தேன்-ஆலோசித்தேன். சிரித்தான்-நான் என்னையறிந்ததையுணர்ந்து எனதாசிரியன்நகைத்தான். இடைந்திட்டேன்-விலகிப்போய்விட்டேன். (ஏ-ஈற்றசை) (எ-று) 1.

முத்திபெற நற்கருமமுயலுமொரு முமுட்சுவினேர்
 முன்போய் நின்றான்
சத்தியமே யிக்கருமம் பிறவிதந்து நசித்தேகுந்
 தாமே யென்றான்
சித்தமேநீ யென்றான்மெய் யெனைமறந்து பின்றேடும்
 பிராந்த னென்றான்
புத்திகொண்டு சற்றுரையா திருந்தவன்மை யென்றுதன்மயம்
 புறங்கண் டானே.

(இ-ள்) முத்திபெற-மோக்ஷமடைய, நற்கருமம்-நல்லவேலைகளை, முயலும்-பிரயத்தன பூர்வகமாகச்செய்யும், ஒருமுமுட்சுவின் - ஒருமோக்ஷஅபேக்ஷை யுடையவனிடம், நேர்முன்போய்-நேராகமுன்னேபோய் நின்

றான்-(நாதமுனியெனு மெனதாசிரியன்) நின்றான், இக்கருமம்-நீ செய்யும் இப்புண்ணியகருமம், சத்தியமே - உண்மையானதே (ஆனால்), பிறவிதந்து-புண்ணியபலனை அனுபவைக்கும்படியான இந்திரபிரமாதி ஜனனங்களைக்கொடுத்து, நசித்து-புண்ணியங்களைந்ததே நாசமாகி, வரும்-பூலோகத்தில் தாழ்ந்தஜன்மம் எடுக்கும், சாரேல்-கருமங்களைச் செய்யச்சேராதே என்றான்-என்று நாதமுனிசுவாமி சொன்னான், நீபித்தனே-ஓய்நாதமுனியே நீபைத்தியக்காரனே, என்றான்-என்று கருமஞ்செய்பவன் சொன்னான், மெய்-நீசொன்னது உண்மை, எனைமறந்து-எங்குமுள அறிவாகிய என்னைமறந்து, பின்தேடும்-வேறேகடவுளுளதாகப்பின்னேவிசாரிக்கின்ற, பிராந்தனென்றான்-அஞ்ஞானியென்றான், புத்திகொண்டு-அக்கருமி தன் புத்தியைக்கொண்டு ஆராய்ந்து, சற்றசையாது-கொஞ்சம் மனமசையாமல், இருந்து அறிவாகிய தன்னில் நிலைத்திருந்து, உண்மையென்று-நாதமுனிசுவாமிகள் சொன்னது நிஜமென்று. கன்மம்-புண்ணிய கருமங்களை, புறங்கண்டான்-நீக்கினான் (வ-சற்றசை) (எ-று) 2.

ஆலயத்திற் புகுந்தொருநா ளருச்சகரை வந்தனஞ்செய்
    தடிகாளிந்த
வாலயத்தா ரிருப்பதென்றான் சம்புவென்றா ரெங்கென்றா
    னதோகா ணென்றார்
காலைமுதன் மாலைவரை யன்றிதுயில் வந்திடினீர்
    காணீ ரென்றான்
மேலருள்வீ ரெனத்தூக்க மேலென்றான் சுயம்புகண்டேன்
    மெய்யென் றாரே.

(இ-ள்) ஒருநாள்-ஒருகாலத்தில், ஆலயத்தில்-சிவன்கோயிலில், புகுந்து-(நாதமுனி) நுழைந்து, அருச்சகரை-பூசைசெய்யும் குருக்களை, வந்தனஞ்செய்து - வணங்கிக்கும்பிட்டு, அடிகாள்-சிவனடியாரே? இந்த ஆலயத்து-இந்த கோவிலில், ஆர் இருப்பது-ஆர் இருக்கிறது, என்றான்-என்றுகேட்டான், சம்புவென்றார்-அக்குருக்கள் சுயம்பாகியசிவம் இவ்வாலயத்துள் இருக்கிறது என்றார், எங்கென்றார்-(நாதமுனிகள்) எங்கேயிருக்கிறதென்றார், அதோ-அதோ அந்தமூலஸ்தானத்தில், காணென்றார்-பார்த்து தெரிந்துகொள்ளென்று குருக்கள்சொன்னார், காலைமுதல் - உதையகாலமுதல், மாலைவரை-அஸ்தமானம் வரையில், அன்றி - கல்லாலமைத்த சிவலிங்கத்தை பார்ப்பதல்லாமல், துயில்வந்திடில் - நித்திரை வருமானால், காணீர்-குருக்களாகிய நீர் உம்மிட தூக்கத்தில் அந்தக்கல் லிங்கத்தைப்பாரீர், என்றான்-என்று நாதமுனிசொன்னான். மேலருள்வீர் 'என-அக்குருக்கள் தூக்கத்திற்கு மேலிருப்பதை கிருபைசெய்வீரென்றுகேட்க, தூக்கமேலென்றான்-தூக்கத்திற்குமேல் துரியசிவமென்று நாதமுனிசொன்னான், சுயம்புகண்டேன்-குருக்கள் அறிவாகிய சுயம்புலிங்கத்தை தரிசித்தேனென்

றார், மெய்யென்றார் — நாதமுனிகள் உண்மையென்று சொன்னார்; (ஏ-சற்றசை) (எ-று) 3.

விண்டுவுறை யாலயத்திற் புகுந்தடியே னென்றாங்கு
    வீற்றிருந்தே
யண்டமுண்ட திருவாயா னமர்பள்ளி யெங்கென்று
    னதோகா ணென்றார்
கண்டதின்றோ நீர்துயிலுங் காலத்தி லண்டமுண்ட
    கதைநீ ரென்றான்
நன்றலநீர் சொல்வதென்றா ராய்ந்தோய்ந்தாற் றெரியுமென்று
    நகைத்திட் டானே.

(இ-ள்) விண்டுவுறை-விஷ்ணுவசிக்கிற, ஆலயத்தில்-கோயிலில், புகுந்து-(நாதமுனிசுவாமி) பிரவேசித்து, அடியேனென்று-அடியேனென்று சொல்லிக்கொண்டு, ஆங்கு-அவ்வாலயத்தில், வீற்றிருந்தே-தனியே உட்கார்ந்து இருந்து, அண்டமுண்ட-ஐயாபட்டரே உலகைவிழுங்கின, திருவாயான்-அழகிய வாயையுடைய விஷ்ணுவானவன், அமர்பள்ளி-பொருந்திய படுக்கை, எங்கென்றான்-எங்கிருக்கிறது என்றுகேட்டான், அதோ காண்-அதோ மூலஸ்தானத்தில் விஷ்ணுவானவர் விக்கிரக ரூபமாய்படுத்துக்கொண்டிருப்பதை பார், என்றார்-என்று பட்டாசாரியருரைத்தார்; நீர் துயிலுங்காலத்தில், நாதமுனியானவன் பட்டரைப்பார்த்து, ஓய்! பட்டரே நீர் தூங்குங்காலத்தில் நீர் அண்டமுண்டகதை-நீர் உலகைவிழுங்கின கதையை, கண்டதின்றோ-நீர் காணகிலேயோ, என்றான்-என்று கேட்டான், நீர்சொல்வது-(அதற்கு பட்டர் ஓய்! நாதமுனியே விஷ்ணுவைப்போல் நான் என் தூக்கத்தில் உலகம்விழுங்கினதாக) நீர்சொல்வது, நன்றல என்றார்-நல்லதல்லவென்று சொனனார், ஆய்ந்து ஓய்ந்தால்-ஓய்! பட்டரே வேதங்களைகுருமுகமாய் விசாரித்தறிந்து மனம் சத்துவமாய்ச்சேடித்து அடங்கினால், தெரியுமென்று-நீர் உலகம்விழுங்கினகதை தெரியுமென்று நகைத்திட்டான்-(நாதமுனியானவன்) சிரித்தான். (ஏ-அசை) (எ-று) 4.

கற்றவர்க ளிடையொருசத் விவேகிசில புராணங்கள்
    கழறக் கேட்டாங்
குற்றதனை யெதுவாக்க முயல்கின்றீ ரெனப்பிறவிக்
    குறைகடந்து
சிற்சொருபந் தனைச்சீவன் சேவென்றார் பிரிந்ததுண்டேற்
    சேரா தென்றான்
நற்கரும மெதற்கென்றா ரிதற்கென்றான் பணிந்துய்ந்தே
    னெனென் றாரே.

(இ-ள்) ஒருசத்விவேகி-நல்ல அறிவாளி ஒருவர், கற்றவர்களிடை-வாசித்தவர்களின் நடுவில் (உட்கார்ந்து), சிலபுராணங்கள் — சிலபுராணங்

கனை கூறக்கேட்டு-சொல்ல நாதமுனி எனும் ஆசிரியன்கேட்டு, ஆங்குற்று-அப்புராணஞ்சொல்லும் புராணிகரிடஞ்சேர்ந்து, எதனை எதுவாக-ஐய், புராணிகரே எதனை எதுவாகமாற்ற. முயல்கின்றீர் என - பிரயத்தனப்படுகின்றீர் என்று கேட்டான், பிறவிக்குறைகள்-ஜனிக்கும் துன்பங்கள், தீர்ந்து-நீங்கி, சீவன்-உயிரானது, சிற்சொரூபந்தனை-ஞானவடிவான பரமாத்மாவை, சேரவென்றார்-சேருவதற்காக புராணஞ் சொல்லுகிறேனென்று புராணிகர் சொன்னார், பிரிந்ததுண்டேல்-அதற்கு நாதமுனி என்பவன் சிற்சொருபத்தைவிட்டு ஜீவன்பிரிந்தது உண்டானால், சேரதென்றான்-சேராது என்று சொன்னான், நற்கருமம்-புராணிகரானவர் ஐய! நாதமுனியே புண்ணிய கருமங்கள்செய்வது, எதற்கென்றார்-எதற்காகவென்று கேட்டார், இதற்கென்றான்-(அதற்கு நாதமுனிசொன்னதாவது புண்ணியகருமஞ் செய்துகொண்டு வரும்போது அவ்விடம் வரும் பெரியவர் சிவனைவிட்டு சீவன்பிரியவில்லையென்று தெரிவிப்பார்கள்) இதற்குத்தான் என்றான், பணிந்து-அப்புராணிகர் நாதமுனியையவணங்கி, நான் உய்ந்தேன்-நான் இன்று ஆத்மானந்தமுற்று பிழைத்தேன், என்றார்-என்று புராணிகர் சொன்னார். (ப-ஆசை) (எ-று) 5.

பெத்தமுத்தி யறியாது பெருங்காப்பி யம்பயிற்றும்
பெரியான் முன்னின்
றித்தரைமேற் போதிப்ப தென்னென்றான் வித்தையென்
றெதனுக் கோதீர்
புத்திகொண்டு சொலுமென்றா னவித்தைக்கென் றார்சிரித்தான்
வித்தைக்கென்றார்
வித்தைக்கேன் வித்தையென்றான் மறந்தேனென் றாநகைத்து
விடைகொண்டானே.

(இ-ள்) பெத்தமுத்தி-இன்னது பந்தம் இன்னது மோக்ஷம்(என்று), அறியாது-தெரிந்துகொள்ளாது, பெருங்காப்பியம் - பெரியகாவியங்களை, பயிற்றும்-படித்து பிரசங்கிக்கும், பெரியான்முன்-பெரியவனுமுன்னே, நின்று-(நாதமுனி என்பவன்போய்) நின்று, இத்தரைமேல்-ஐயா! காவியமோதுவோரே இந்தப்பூமியின்மேல், போதிப்பது-ஜனங்களுக்கு நீர்போதனைசெய்வது, என்னென்றான்-என்னவென்று கேட்டான், வித்தை-ஐயா! நாதமுனிகளே நான் ஜனங்களுக்கு அறிவிப்பது ஞானம், என்றார் - என்று காவியக்காரர்சொன்னார், நீர் எதனுக்கு-ஐயா! காவியக்காரரே நீர் எதனுக்கு ஞானம்போதிக்கிறீர், புத்திகொண்டு-உம்முடைய அறிவைக்கொண்டு ஆய்ந்து, சொலுமென்றான்-சொல்லுமென்று நாதமுனிகேட்டான், அவித்தைக்கு-அஞ்ஞானத்திற்கு, என்றார்-ஞானம்போதிக்கிறேன்

என்று காவியக்காரர் சொன்னார், சிரித்தான்-சடமாகிய அஞ்ஞானம் ஞானத்தை யறியுமாவென்று நாதமுனி நகைத்தான், வித்தைக்கென்றார்-காவியக்காரர் நாதமுனி பரிகாசஞ்செய்ததை தெரிந்துகொண்டு ஞானத்திற்குதான் ஞானம்போதிக்கிறேனென்றார், வித்தைக்கு-ஞானத்திற்கு, வித்தை-ஞானத்தைபோதிப்பது, ஏன் என்றான்-என்னகாரணம் என்று நாதமுனிகேட்டான், மறந்தேன்-என்றும் அஞ்ஞானமின்றிஞானமேயிருப்பதைமறந்து சொன்னேன், என்றார்-என்று காவியக்காரர்சொன்னார். நகைத்து-காவியக்காரர் உண்மைதெரிந்து கொண்டதற்காக சிரித்து, விடைகொண்டான்-காவியக்காரரிடம் நாதமுனி உத்திரவுபெற்றுபோனான், (நாதமுனி தோற்றமை) (எ-று) 6,

ஆக செய்யுள் 443.

---

## இயற்கை நிலைகூறல்.

---

அந்த முதலாத்த மில்லா வென்னை
யான்மறந் தேயோ ருடல்வடி வாகி
நொந்து பிறப்பிறப் புற்றேன் போல
நொய்யக் கனவுகண் டேனறி தோழி.

(இ-ள்) தோழி-எனதன்புள்ள பாங்கியே, அந்தம்-முடிவும், முதல் - முதலும், ஆத்தம்-நடுவும், இல்லாவென்னை-இல்லாத ஆன்மாவாகிய என்னை, யான்மறந்தே - நான்மறந்தே, ஓருடல்வடிவாகி-நான் ஒருதேகவடிவாகி' நொந்து ஈடணைகளால் வருந்தி, பிறப்பிறப்பு-ஜனனம் மரணமென்பதை, உற்றேன்-அடைந்தேன், போல-போல, நொய்யகனவு-அற்பமாகியசொப்பனத்தை, கண்டேன் - பார்த்தேன், அறி-[இதை நீ] தெரிந்துகொள்வாயாக. [எ-று] 1.

வாக்குமனந்தொட ராதவென்னை
வஞ்சகி மாயைது ணைசெயக் காலன்
வீக்கி யொறுத்திட நொந்தேன் போல
வெய்ய கனவுகண் டேனறி தோழி.

[இ-ள்] தோழி-எனதன்புள்ள பாங்கியே, வாக்குமனம்-வாக்காலும் மனத்தாலும், தொடராத-தீண்டப்படாத, என்னை-அறிவாகிய என்னை, வஞ்சகி-கபடியாகிய, மாயை - [இல்லாத்தன்மையுற்ற] மாயையானவள், துணைசெய-எனக்கு சகாயஞ்செய்ய, காலன்-யமன், வீக்கி-[யமபடாளை

மகாமஹோபாத்யாய, டாக்

கொண்டு பாசக்கயிற்றால்] கட்டி, ஒறுத்திட—வருத்திட, நொந்தேன்போல்—வருந்தினவன்போல், வெய்யகனவு—கொடிய சொப்பனத்தை, கண்டேன்—பார்த்தேன், அறி—[இதைநீ] தெரிந்துகொள்வாயாக. [எ-று] 2.

ஆதார மாகு மறிவா மென்னை
யான்மறந் தோருயி ராக நினைந்தே
வேதா முதலோரை யேத்தி யேத்தி
வீண்பாடு பட்டக னாக்கண்டேன் றோழி.

(இ-ள்) தோழி—எனது பாங்கியே, ஆதாரமாகும்—சகலசராசரத்தோற்றங்களுக்கும் முதற்காரணமாகிய, அறிவாமென்னை—ஞானமாகிய என்னை, யான்மறந்து—நான்மறந்து, ஒருயிராக—என்னை ஒருஜீவனாக, நினைந்தே—நான் எண்ணியே, வேதாமுதலோரை—பிர்மா-விஷ்ணு-ருத்திரன் முதலியோரை, ஏத்தி ஏத்தி—துதிசெய்து துதிசெய்து, வீண்பாடுபட்ட—விருதாவானகஷ்டம் அடைந்த, கனா—சொப்பனம், கண்டேன்—பார்த்தேன். (எ-று.

எல்லா மறியு மறிவா மென்னை
யானறி யேனென் றிருமறை யாதி
சொல்லாய்ந் தறிந்தின்ப முற்றேன் போலத்
தூயக னவுகண் டேனறி தோழி.

(இ-ள்) தோழி—எனதுபாங்கியே, எல்லாம்—யாவற்று தோற்றங்களையும், அறியும்—தெரிந்துகொள்ளுகிற, அறிவாமென்னை—ஆன்மாவாகிய என்னை, யானறியேன்—நான் தெரிந்திலேன், என்று—என்று நினைத்து, இருமறையாதி—பெரியவேதங்கள் ஸ்மிருதிகள் புராணேதிகாசங்கள் முதலியவற்றின், சொல்லாய்ந்து—சொற்களை ஆராய்ந்து, அறிந்து—ஆன்மாவன்றி திரணமும் வேறில்லையென்று அறிந்து, இன்பமுற்றேன்போல்—ஆத்மானந்த மடைந்தவன்போல, தூயகனவு—பரிசுத்தமான சொப்பனத்தை, கண்டேன்—பார்த்தேன், அறி—இதைநீ அறிந்துக்கொள்வாய். (எ-று) 4

இருந்தப டியிருப் பேனை மறந்
தென்னி லுலகுயி ராக்கி யழிக்கும்
பெருந்துய ருக்கிட மாகு மாயை
பெற்றொழிந் தேன்போற் கனாக்கண்டேன் றோழி.

(இ-ள்) தோழி—பாங்கியே, இருந்தபடி என்றும் உள்ளபடி, இருப்பேனை—இருக்கின்ற என்னை, மறந்து—நான்மறந்து, என்னில்—சிவனாகிய என்னிடத்தில், உலகுயிர் ஆக்கி—உலகையும் ஜீவனையும் உண்டாக்கி அழிக்கும்—என்னிடமாகவே உலகுயிரை அழிக்கின்ற, பெருந்துயருக்கு—பெரியதுக்கத்திற்கு, இடமாகும—இடந்தருகிற, மாயை—(இல்லாத் தன்மையுள்ள) மாயையை, பெற்று—அடைந்து, ஒழிந்தேன்போல்—அம்மாயையை விட்டு நீங்கினேன்போன்ற, கனா—சொப்பனத்தை, கண்டேன் — பார்த்தேன். (எ-று) 5

என்றும் விளங்கி விளக்கு மெனை
யான்மறந் தெங்கெங்குந் தேடி யலைந்த
பொன்றுக் குரவ னருளா லின்ப
போத முணர்ந்த கனாக்கண்டேன் றோழி.

(இ-ள்) தோழி—என்பாங்கியே, என்றும்—இறப்பு - எதிர்வு நிகழ்வெனும் எக்காலத்திலும், விளங்கி—தனக்குத்தானே பிரகாசித்து, விளக்கும்—சராசரப்பொருளாய் விளக்குகின்ற, எனை—அறிவாகிய என்னை, யான்மறந்து—நான்மறந்து, எங்கெங்குந்தேடி — எவ்வெவ்விடங்களிலும் என்னை விசாரித்துங்காணமல், அலைந்த—கஷ்டப்பட்டுத்திரிந்தே.பொன்று—சாகத, குரவன்—ஆசிரியனிட, அருளால்—கிருபையால். இன்பபோதம் — சுகஞான வடிவாகிய என்னை, உணர்ந்த—நான் அறிந்துகொண்ட, கனா—சொப்பனத்தை, கண்டேன்—பார்த்தேன். (எ-று)

மூடந் தெளிவுல காதி காணு
மொய்யறி வென்னை மறந்தவை தீரக்
காடா தியிற்றவ மெய்தி பொய்
கழிந்துய்ந் தேன்போலக் கனாக்கண்டேன் றோழி.

(இ-ள்) தோழி—என்பாங்கியே, மூடம்—அஞ்ஞானமாகவும், தெளிவு—ஞானமாகவும், உலகாதிகாணும்—உலகாதியாகவுங்காணப்பட்ட, மொய்யறிவென்னை—நெருங்கிய அறிவாகியஎன்னை, மறந்து—நான்மறந்து, அவைதீர—மூடந்தெளிவெனும் பேதமாதியவைகள் நீங்க, காடாதியில்—காடுமலை முதலியவைகளில், தவம் எய்தி—தபசுசெய்து, பொய்கழிந்து—மூடந்தெளிவாதி ற்பனையிலிருந்து நீங்கி, உய்ந்தேன்போல்—பிழைத்தேன்போல, கனா—சொப்பனத்தை, கண்டேன்—பார்த்தேன். (எ-று) 7.

என்று மெனையன்றி வேறோர் பொரு
ளில்லா திருக்கவுண் டென்று நினைவா
னன்றுதீ தின்பதுன் பங்கள் வந்து
நாச மடையக் கனாக்கண்டேன் றோழி.

(இ-ள்) தோழி — என்பாங்கியே, என்றும் — எக்காலத்திலும், எனையன்றி—ஆன்மாவாகிய என்னைத்தவிர, வேறு—அன்னியமாக, ஓர்பொருள்—ஒருவஸ்துவும், இல்லாதிருக்க — இல்லாதிருக்க, உண்டென்னும் — உண்டென்கிற, நினைவால் — எண்ணத்தினால், நன்றுதீது — நன்மை தீமைகள்; இன்ப துன்பம் — சுகதுக்கங்கள், வந்து — என்னிடம் உண்டாகி, நாசமடைய — அழியுந் தன்மையான, கனா — சொப்பனத்தை, கண்டேன்—பார்த்தேன். (எ-று) ௮

என்றும் பிரியாத வென்னைப் பிரிந்
தின்ப மிழந்தவ னென்னாய் விளங்கி

றுன்றிகழ் பொய்ப்பொருளாய்ந்தே யின்ப
முற்றுரு வான கனாக்கண்டேன் றோழி.

(இ-ள்) தோழி – என் பாங்கியே, என்றும் – எக்காலத்திலும், பிரியாத – வேறு வேறாகப் பிரியுந்தன்மையில்லாத, என்னை – ஆன்மாவாகிய என்னை விட்டு, பிரிந்து – வேறாகப் பிரிந்து, இன்பம் – ஆன்மசுகத்தை, இழந்தவன் – போக்கடித்தவள், எனை – என்னை, விளங்கி – பிரகாசித்து முன்திகழ் – முன்னே பிரகாசிக்கிற, பொய்ப்பொருள் – பொய்யாகிய சராசரவஸ்துக்களை, ஆய்ந்தே – விசாரித்தே, இன்பமுற்றுருவான – நான் சந்தோஷமுற்ற முழுவடிவானவனென்கிற, கனா–சொப்பனத்தை, கண்டேன் – பார்த்தேன், (எ–று) ௯

என்னினை யென்னில டங்கும் வித
மென்று மியல்பா யிருந்தல் மறந்தே
பன்னெறி யாலதை மாய்க்கப் பாடு
பட்டொழிந் தேன்போற் கனாக்கண்டேன் றோழி.

(இ-ள்) தோழி – என் பாங்கியே, என்னினைவு – என்னிடவெண்ணம் என்னில் – ஆன்மாவாகிய என்னில், அடங்கும் – அடங்குகிற, விதம்–மாதிரி, என்றும் – எக்காலத்திலும், இயல்பாய் – சுபாவமாய், இருத்தல்–இருத்தல், மறந்தே – மறந்தே, பன்னெறியால் – அட்டமாசித்திகளும், சண்முகியாதி முத்திரைகளுமாகிய பலவழியால், அதைமாய்க்க – அம்மனதை நாசஞ்செய்ய, பாடுபட்டு – கஷ்டப்பட்டு, ஒழிந்தேன்போல் – மனோநாசஞ்செய்தவள்போல், கனா – சொப்பனம். கண்டேன் – பார்த்தேன் (எ-று) 10

ஆக செய்யுட்கள் 453.

---

## நான்முடிபுகூறல்.

---

### ஸ்ரீ சடகோபாழ்வார் திருவாக்கு.

“சித்தின் வயிற்றிற் சிறிதுபிறந் தாலதுமற்
றெத்தைத்தின் றெங்கே யிருக்குமென்றாற்-சத்தைத்தின்
றங்கே யிருக்கு”மென்ற வாழ்வார் திருவாக்குக்
கிங்குரையா யிந்நூலென் றெண்.

(இ-ள்) சித்தின் வயிற்றின் – ஞானத்தினிடத்தில், சிறிது – சங்கல்பமானது, பிறந்தால் – உண்டானால், அது – அந்த சங்கல்பமானது, மற்று – பிறகு, எதைத்தின்று – எதைப்புசித்து, எங்கே – எவ்விடத்தில், இருக்கு

மென்றுரைக்கு — இருக்குமென்றவுரைக்கு, அக்கரைக்கண் [illegible] ஞ்ஞா
ஞானத்தைப் புசித்து அங்கே யிருக்கும் — அச்சங்கல்பம் அங்கு ஞான
மாகவேயிருக்கும், என்ற ஆழ்வார் — என்றுபதேசித்த சடகோபாழ்வா
ரிதுவானுக்கு — அழியவார்க்குக்கு, இந்நூல் — இவ்வநுபவானந்த தீபி
யெனும் சாஸ்த்திரமானது, இங்குள்ளாயாம் — இங்குபொருத்தமான
தம் காரத்தக்கதாம், என்று என் — என்று நினைப்பாயாக (எ-று)

திருவள்ளுவ தேவர் திருவாக்கு.

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்"தெனலை-யையமறக்
காட்டுந் தனதிடத்தே கண்டவர்க ளானந்த
நாட்டமக லார்வாழ்க நன்கு.

(இ-ள்) ஐயத்தின் — சந்தேகத்திலிருந்து, நீங்கி — நீங்கி, தெளி
ந்தார்க்கு — தெளிந்தவர்க்கு, வையத்தின் — உலகத்தைக்காட்டிலும், வான
மோக்ஷலோகமானது, நணியது — மிகவும் நெருக்கமாய், உடைத்து—உ
யது, எனலை — என்று சொல்வதை, தனதிடத்தே — ஆன்மாவாகிய தன
டத்திலேயே, ஐயமற — சந்தேகம் நீங்க, காட்டும் — தாண்பிக்கும், க
வர்கள் — தன்னையறிந்தவர்கள், ஆனந்த நாட்டம் — ஆநந்தாட்டத்திலிரு
அகலார் — நீங்கார், நன்கு — சுகமாகவாழ்க — வாழ்ககடவர். (எ

முற்றிற்று

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.